பொம்முவின்
"கலியுக காதல்"

srikala blog

முன்னோட்டம் 1

அன்று திங்கட்கிழமை வைஷ்ணவி நன்றாக தூங்கி கொண்டிருந்தாள். கார்த்திக்கின் பெண் வடிவம் அவள். அதில் கீர்த்தனா மட்டும் சுறுசுறுப்பானவள். "வைஷு எந்திரிடி

இண்டைக்கு நம்ம புது எம்.டி இரண்டு பெரும் வரப்போறாங்க. புது எம்.டி ரொம்ப மோசமாம் என்று நம்ம காவ்யா அக்கா சொன்னாங்க. time கு போகாட்டி அவ்வளவுதான்..நானும் இவளவு நேரமா கத்திட்டு இருக்கன்.. தூங்கிறத பாரு தூங்கு மூஞ்சி " என்ற திட்டியவாறே தண்ணி எடுத்து வைஷ்ணவி மேல ஊற்றி விட்டாள்.

வைஷ்ணவி " கீது என்னடி இதெல்லாம் ? கொஞ்சம் தூங்க விடேண்டி " என்று சிணுங்கியவாறே கண்ணை மூடியபடி bathroom க்குள் நுழைந்தாள்.

கீர்த்தனா மனதுக்குள் சிரித்தபடி "நீ குழந்தை தாண்டி" என்று முணுமுணுத்தாள். திடீரென்று கார்த்திக் நினைவு வர "கும்பகர்ணன் எழும்பிட்டானோ தெரியல" என்று முணுமுணுத்த படி கார்த்திக்கின் number க்கு அழைத்தாள். கார்த்திக் அழகாக உடுத்தி ரெடி ஆக இருந்தான், எல்லாம் புது எம்.டி க்கு ஐஸ் வைக்க தான். கீர்த்தனா அழைத்ததும் "I am ready" என்ற வாறே கீர்த்தனா வீடு இருக்கும் தளத்திட்க்கு lift

இல் வந்து சேர்ந்தான். அப்போது தான் வைஷ்ணவி பல் துலக்கி கொண்டு இருந்தாள். கீர்த்தனா கதவில் தட்டியபடி வைஷ்ணவிக்கு வசை பாடி கொண்டிருந்தாள். கார்த்திக் வந்ததும் முன்னுக்கு sofa இல் phone ஐ நொண்டியபடி அமர்ந்து விட்டான். ஒருவாறு வைஷ்ணவி குளித்து முடித்து ரெடி ஆகி வந்தாள். நீல நிற டெனிம் ஜீன்ஸ் உம் முழங்கை வரை மடிக்க பட்ட சிவப்பு நிற செக் ஷர்ட் உம் kaajal மட்டுமே கண்ணனுக்கு தீட்டி வேற எந்த makeup உம் இல்லாமல் கழுத்து வரை வெட்டி கலர் செய்யப்பட முடியை சேர்த்து wool போட்டவாறே lift ஐ நோக்கி நடந்து வந்தாள். வழக்கம் போல கீர்த்தனா பச்சை நிற சாறி கட்டி பூ வைத்து பொட்டு வைத்து மிதமான makeup போட்டிருந்தாள். கார்த்திக்கின் கண்கள் வழக்கம் போல கீர்த்தனாவை அளவிட்டது. கீர்த்தனா அருகில் வைஷ்ணவி நிற வேறுபாட்டினால் ரொம்ப சுமாராகவே தெரிந்தாள். அதற்றக்காக அவள் வருத்தப்பட்டது கிடையாது. உடம்பு விஷயத்தில் மட்டும் கொஞ்சம் அக்கறை எடுத்து

கொள்ளுவாள். மாடர்ன் உடை போடுவதட்காகவே சாப்பாட்டில் கட்டுப்பாடாக இருப்பாள். கார்த்திக்கின் சிவந்த நிறத்துக்கு முழங்கை வரை மடிக்கப்பட்ட கருப்பு ஷர்ட் ரொம்ப பொருத்தமாக இருந்தது. மூவரும் ஏறியதும் கார்த்திக் காரை கிளப்பி கொண்டு ஆபீஸ் க்கு விரைந்தான்.

முன்னோட்டம் 2

அன்று வைஷ்ணவியின் intercom க்கு ஆத்ரேயன் அழைத்து "Idiot come to my cabin quickly"என்றான். "ரைட்டு சனியன் சைக்கிள் ல வருது " என்று மனதில் நினைத்தவாறே ஆத்ரேயனின் room க்கு சென்றாள். அங்கு ஆத்ரேயன் மேசையில் கடைசியாக வைஷ்ணவி வரைந்த படம் விரிக்கப்பட்டிருந்தது. வைஷ்ணவியை கூர்ந்து நோக்கியவாறே "explain " என்றான். "இந்த நெட்டையனுக்கு இது விளங்கலையா ... சரியான tubelight" என்று மனதில் நினைத்தவாறே விளக்கம் கொடுக்க தொடங்கினாள்.

அனாமிகா க்கு எதுவும் விளங்கிய போல் தெரியவில்லை. இடையிடையில் பல கேள்விகளை கேட்டு துளைத்தெடுத்துவிட்டாள். வைஷ்ணவி பேசுவதை கேட்காமல் ஆத்ரேயன் கோப்புக்களை எடுத்து படிக்க தொடங்கிவிட்டான். வைஷ்ணவிக்கு அது பெரும் அவமானமாக இருந்தது. எல்லாம் முடிந்ததும், "Miss or Mrs" என்று கேட்டான் ஒற்றை புருவத்தை தூக்கியபடி. வைஷ்ணவியும் தட்டு தடுமாறி " Miss.வைஷ்ணவி மலர்வேந்தன்" என்றாள்.

"ok , Miss. வைஷ்ணவி நீங்க உண்மையாவே இன்ஜினியரிங் படிச்சீங்களா?" என்றான் ஒரு நக்கலான தொனியில். அவனது நக்கல் விளங்கியதால் அதுக்கு அவள் பதிலளிக்க முற்றப்படவில்லை. தலையை குனிந்தவாறே நின்றிருந்தாள். அனாமிகாவுக்கு முன்னால் அவள் தன்மானம் பெரிதும் அடிவாங்கியது. "நீயெல்லாம் இந்த கம்பெனியை கூட்டுவதட்கு கூட தகுதி இல்லாதவள். உன்னை எல்லாம் யார் தான் வேலைக்கு எடுத்தார்களோ " என்றபடி

அவளின் டிசைனை கிழித்து குப்பை கூடைக்குள் எறிந்தான். அதனை அவள் கையாலாக தனத்துடன் கண்ணீர் மல்க பார்த்திருந்தாள். அவள் முகத்தில் கண்ட வலியில் ஆத்ரேயனுக்கு ஒரு திருப்தி உண்டானது. கேலி புன்னகை ஒன்றை முகத்தில் தவளவிட்டவரே "உன்னோட cabin க்கு போகலாம் வா" என்றான். புரியாத பார்வை ஒன்றை அவனை நோக்கி செலுத்தியவர் " இவன் எதுக்கு நம்ம cabin கு வர போறான்? எல்லாருக்கும் முன்னுக்கும் அவமானப்படுத்தப்போறான் போல.... உண்மையாவே கூடுவதற்கு விட்டிருவானோ" என்று மனதுக்குள் ஒரு பட்டிமன்றம் நடத்தியபடி மனம் நிறைய பாரத்துடன் அவன் பின்னால் நடந்தாள்.

"எடு நீ வரைந்த file ஐ" என்றவுடன் அவள் அந்த folder ஐ காட்டினாள். அவளை நோக்கி வசீகர புன்னகையை சிந்திவிட்டு அவளை பார்த்தபடியே அந்த folder ஐ நிரந்தரமாக அழித்துவிட்டான். "sir" என்ற படி வைஷ்ணவி அதிந்தாள். அவள் கண்ணை நேராக பார்த்தபடி

"redo.. i need it today night 9 o clock" இதை கேட்டதும் வைஷ்ணவிக்கு யாரோ பெரிய கல்லை தூக்கி தலையில் போட்டது போல் இருந்தது. 10 நாட்கள் செலவழித்து கீறிய design ஐ வெறும் 9 மணி நேரத்தில் வரைவது முடியாத காரியம் தானே. அவன் அவள் பதிலை எதிர் பார்க்காமல் தனது அறை நோக்கி நடந்தான்.

அவளும் தன்னுணர்வு அடைந்து sir என்று அழைத்தவாறே பின்னால் ஓடினாள். ஸ்டைல் ஆக திரும்பி "வாட்?" என்றான் புருவத்தை தூக்கியபடி. " என்ன பிழை என்று சொன்ன correct பண்ணி கொள்வேன் sir " என்றாள். ஒரு இகழ்ச்சி புன்னகையை சிந்தியபடி " idiot நீயே கண்டுபிடி " என்றவாறே ரூமுக்குள் நுழைந்துவிட்டான். "இஞ்சி தின்ற குரங்கு .. F***** B*******" என்று மனதுக்குள் கெட்ட வார்த்தையில் திட்டியவளுக்கு ஓ என்று அழவேண்டும் போல இருந்தது. எல்லாவற்றையும் கவனித்து கொண்டிருந்த கார்த்திக்கும் கீர்த்தனாகும் அவளை நினைத்து பெரும் கவலை மூண்டது. உதவி செய்ய முடியாத நிலையை நினைத்து

வருந்தி கொண்டிருந்தனர். இவர்கள் கவலையுடன் பார்த்ததை அந்த த்ரீ ரோசெஸ் சந்தோஷத்துடன் பார்த்து சிரித்து கொண்டனர். லஞ்ச் கு கூட செல்லாமல் வைஷ்ணவி வேலையில் மூழ்கி போனாள். அவளை ஆத்ரேயன் ஒரு விஷம புன்னகையுடன் கடந்து சென்றான். அவளின் வலி இவனுக்கு ஒரு இனம் புரியாத திருப்தியை கொடுத்தது. அதற்கு காரணம் யாருக்கும் தெரியவில்லை.

யுகம்-1

சிங்கபூர்!!! பார்ப்பவர்கள் மயங்கி கிடக்கும் சொர்க்க பூமி. வானுயர்ந்த கட்டிடங்கள், படுத்து உறங்க கூடிய சுத்தமான பாதைகள் என கண்ணுக்கு விருந்தளிக்கும் நாடு அது. அங்கே தான் அர்ஜூன் குரூப் ஒப் கொம்பனிஸ் என்ற High Tech பெயர் பலகையுடன் வானை தொட்டு நிக்கும் கட்டிடத்தில் டிசைன் என்ஜினீயர் ஆக பணிபுரிகிறாள் வைஷ்ணவி.

வைஷ்ணவி ஒரு அல்ட்ரா மாடர்ன் பெண். பொது

நிறமும் மெல்லிய வனப்பான உடலமைப்பும் பேசும் கண்களும் கொண்ட சாதாரண அழகுள்ள கவர்ச்சியான பெண். எப்போதும் உடலுக்கேற்றவாறு மாடர்ன் ஆக ஆபாசம் இன்றி உடை அணிவதில் அவளை மிஞ்ச ஆளில்லை. பெரிதாக யாருடனும் பேசமாட்டாள். ஆனால் பேச்சுக்கும் கிண்டலுக்கும் மறு பேச்சு பேசுவதில் வல்லவள். கோவப்பட வேண்டிய இடங்களில் கோவப்படும் நேர்மையானவள். அவளுக்கென அங்கு இரு உயிர் நண்பர்கள் இருக்கிறார்கள். கார்த்திக் மற்றும் கீர்த்தனா.

அவள் வேலை செய்யும் கம்பெனி இந்திய உரிமையாளரின் நிறுவனமாதலால் , அங்கு வேலை செய்யும் 80% ஆன தொழிலாளர்கள் தமிழ் பேசுபவர்கள். கீர்த்தனா அழகான குடும்ப பாங்கான பெண். சிவந்த நிறமும் பளிங்கு கண்களும் கூரான நாசியும் என அழகு தேவதை போல இருப்பாள். அங்கே வேலை செய்யும் ஆண்களின் கனவுக்கன்னி அவள்தான். சாறி அணிந்து பூ வைத்து வேலைக்கு வரும் அழகை பார்க்கவே அங்கு இருப்பவர்களுக்கு தெகிட்டாது.

அவர்களிடமிருந்து கீர்த்தனாவை காப்பது வைஷ்ணவி தான். ஆனால் அவர்களின் எந்த பார்வையையும் கீர்த்தனா சட்டை செய்வதில்லை. அவளுக்கென்று உள்ளம் கவர்ந்த யாரும் இதுவரையில் இல்லை.அவளது குடும்ப பொறுப்புகளும் காதலுக்கு வழி விட்டதில்லை. எல்லாரும் வீட்டை விட்டு உழைப்புக்காக சிங்கப்பூர் வந்திருப்பதால் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தனர். கீர்த்தனாவும் வைஷ்ணவியும் ஒரு flat இல் வீடு எடுத்து தங்கி இருக்க அதே flat இல் மேல் தட்டில் கார்த்திக் தன் அக்கா குடும்பத்துடன் தங்கி இருந்தான். இப்படி தான் இவர்களுக்குள் ஒரு பிணைப்பு உருவானது.

கீர்த்தனாவுக்கு அப்பா இல்லை, சின்ன வயதிலேயே ஹார்ட் அட்டாக் இல் இறந்துவிட்டார். இரு தங்கைகள், இருவரையும் கரை சேர்க்க வேண்டிய பொறுப்பு அவளுடையது. அதனாலேயே இன்ஜினியரிங் படித்து முடித்ததும் சிங்கப்பூர் வந்து உழைக்க தொடங்கி விட்டாள். அவள் சிங்கப்பூரில் காலடி

வைத்து 3 வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில் அவளது வீட்டு நிலைமை முன்னேறி விட்டது.

கார்த்திக் அழகான பையன். கொஞ்சம் பூசின போல உடல்வாகு உள்ளவன். ஆனால் ரொம்ப சோம்பேறி. கொஞ்சம் துடுக்குத்தனமும் கேலி கிண்டலும் உள்ளவன். அவனுக்கு எப்போதும் வெள்ளை மனது. எதையும் உளறி கொட்டி விடுவான். அவனுக்கென்று எந்த பொறுப்புகளும் இல்லை. அக்கா கல்யாணம் முடித்து சிங்கப்பூர் இல் செட்டில் ஆகி விட்டார். அப்பா இந்தியாவில் பெரிய தொழில் அதிபர். அப்பாவின் தொழிலில் ஈடுபாடு இல்லாமல் தான் படித்த இன்ஜினியரிங் படிப்பை பயன்படுத்துவதற்கும் வாழ்க்கையை அனுபவிப்பதுக்கும் சிங்கப்பூர் வந்துவிட்டான். வைஷ்ணவிக்கு ஒரு அக்கா திருமணம் முடித்துவிட்டார். பணக்கார குடும்பம், அப்படி இருந்தும் இந்தியாவில் வாசிக்க பிடிக்காமல் இங்கு வந்து வேலை பார்க்க தொடங்கி விட்டாள். ரொம்ப அழுத்தக்காரி. மூவரும் ஒன்றாக வேலைக்கு செல்வதும் வருவதுமாக அவர்கள் வாழ்க்கை சென்றது. சனி ஞாயிறு தினங்களில்

ஊர் சுற்றுவதும் ஏதும் கோர்ஸ் செய்யவதுமாக நிம்மதியாக இருந்தனர். அந்த நிம்மதி அவர்கள் புது எம்.டி வரும் வரைக்கும் தான் என்று யாருக்கும் தெரியவில்லை. அர்ஜுனிடம் இருந்து 70% shares ஐ இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் கொடி கட்டி பறக்கும் இளம்தொழில் அதிபன் ஆத்ரேயன் வாங்கி இருந்தான் இரு நாட்களுக்கு முதல்.

ஆதித்யன் மிகவும் அன்பான பண்பான குணமுள்ளவன். மற்ற ஏற்றுமதி இறக்குமதி தொழில்களில் ஜாம்பவானாக திகழ்ந்தாலும் கட்டுமான தொழிலை நடத்த முடியாமல் திணறி வருகிறான். இதனை அவதானித்த அவன் தந்தை அந்த shares ஐ விற்று அதனை ஏற்றுமதி இறக்குமதி துறையில் முதலிடுவதற்கான ஐடியாவை கொடுத்தார். shares ஐ முழுமையாக விற்க மனமில்லாமல் 70% மட்டும் விற்பதற்கு முடிவெடுத்தார். 30 வருடங்களாக அவர் கட்டி வளர்த்த தொழில் சிங்கப்பூரின் மிக பெரிய நிறுவனமாக வளர்ந்து நின்றது. எனினும் சில மாதங்களாக அர்ஜுனின் அசமந்த போக்கால் சில அடிகளை ஆத்ரேயன் Constructionனிடம் வாங்கி

இருந்தது. தலைக்கு மேல் வெள்ளம் போக கூடாது என்று நினைத்த அர்ஜுன் இன் தந்தை தர்மேந்திரன் 70% shares ஐ ஆத்ரேயன் கான்ஸ்டருக்ஷன்னுக்கு விலை பேசி விட்டார். அர்ஜுனுக்கு இது அவமானமாக இருந்தாலும் தந்தை பேச்சின் நியாயம் விளங்கியதும் தந்தையின் முடிவிற்கு சம்மதித்தான். உடல் நிலை காரணமாக தர்மேந்திரனால் தொழிலை கவனிக்க முடியவில்லை. 30% shares காக கம்பனிக்கு செல்ல அர்ஜுன்க்கும் விருப்பமில்லை. சிவில் இன்ஜினியரிங் படித்து முடித்து வேலைக்கு செல்லாமல் வீட்டிலிருக்கும் செல்ல தங்கை அனாமிகாக்கு அவன் அந்த வாய்ப்பை அளித்தான். அனாமிகா திமிரும் கோவமும் உடைய அழகான பெண். நினைத்ததை அடைய துடிக்கும் மனம் கொண்டவள்.

புது எம்.டி யின் வருகையை கேள்விப்பட்ட தொழிலாளர்கள் எல்லாரும் கவலையில் இருந்தனர். ஏனெனில் அவர்கள் ஆத்ரேயனை பற்றி நல்ல விதமாக கேள்விப்படவில்லை.

அவனுக்கு கீழ் வேலை செய்வதும் அடி மாடாக போவதும் ஒன்று என்று அறிந்து கொண்டனர்.

அன்று திங்கட்கிழமை வைஷ்ணவி நன்றாக தூங்கி கொண்டிருந்தாள். கார்த்திக்கின் பெண் வடிவம் அவள். அதில் கீர்த்தனா மட்டும் சுறுசுறுப்பானவள். "வைஷு எந்திரிடி இண்டைக்கு நம்ம புது எம்.டி இரண்டு பெரும் வரப்போறாங்க. புது எம்.டி ரொம்ப மோசமாம் என்று நம்ம காவ்யா அக்கா சொன்னாங்க. time கு போகாட்டி அவ்வளவுதான்..நானும் இவளவு நேரமா கத்திட்டு இருக்கன்.. தூங்கிறத பாரு தூங்கு மூஞ்சி " என்ற திட்டியவாறே தண்ணி எடுத்து வைஷ்ணவி மேல ஊற்றி விட்டாள்.

வைஷ்ணவி " கீது என்னடி இதெல்லாம் ? கொஞ்சம் தூங்க விடேண்டி " என்று சிணுங்கியவாறே கண்ணை மூடியபடி bathroom க்குள் நுழைந்தாள்.

கீர்த்தனா மனதுக்குள் சிரித்தபடி "நீ குழந்தை தாண்டி" என்று முணுமுணுத்தாள். திடீரென்று

கார்த்திக் நினைவு வர "கும்பகர்ணன் எழும்பிட்டானோ தெரியல" என்று முணுமுணுத்த படி கார்த்திக்கின் number க்கு அழைத்தாள். கார்த்திக் அழகாக உடுத்தி ரெடி ஆக இருந்தான், எல்லாம் புது எம்.டி க்கு ஐஸ் வைக்க தான். கீர்த்தனா அழைத்ததும் "I am ready" என்ற வாறே கீர்த்தனா வீடு இருக்கும் தளத்திட்க்கு lift இல் வந்து சேர்ந்தான். அப்போது தான் வைஷ்ணவி பல் துலக்கி கொண்டு இருந்தாள். கீர்த்தனா கதவில் தட்டியபடி வைஷ்ணவிக்கு வசை பாடி கொண்டிருந்தாள். கார்த்திக் வந்ததும் முன்னுக்கு sofa இல் phone ஐ நொண்டியபடி அமர்ந்து விட்டான். ஒருவாறு வைஷ்ணவி குளித்து முடித்து ரெடி ஆகி வந்தாள். நீல நிற டெனிம் ஜீன்ஸ் உம் முழங்கை வரை மடிக்க பட்ட சிவப்பு நிற செக் ஷர்ட் உம் kaajal மட்டுமே கண்ணனுக்கு தீட்டி வேற எந்த makeup உம் இல்லாமல் கழுத்து வரை வெட்டி கலர் செய்யப்பட முடியை சேர்த்து wool போட்டவாறே lift ஐ நோக்கி நடந்து வந்தாள். வழக்கம் போல கீர்த்தனா பச்சை நிற சாறி கட்டி பூ வைத்து

பொட்டு வைத்து மிதமான makeup போட்டிருந்தாள். கார்த்திக்கின் கண்கள் வழக்கம் போல கீர்த்தனாவை அளவிட்டது. கீர்த்தனா அருகில் வைஷ்ணவி நிற வேறுபாட்டினால் ரொம்ப சுமாராகவே தெரிந்தாள். அதற்றக்காக அவள் வருத்தப்பட்டது கிடையாது. உடம்பு விஷயத்தில் மட்டும் கொஞ்சம் அக்கறை எடுத்து கொள்ளுவாள். மாடர்ன் உடை போடுவதட்காகவே சாப்பாட்டில் கட்டுப்பாடாக இருப்பாள். கார்த்திக்கின் சிவந்த நிறத்துக்கு முழங்கை வரை மடிக்கப்பட்ட கருப்பு ஷர்ட் ரொம்ப பொருத்தமாக இருந்தது. மூவரும் ஏறியதும் கார்த்திக் காரை கிளப்பி கொண்டு ஆபீஸ் க்கு விரைந்தான்.

அங்கு இருக்கும் கான்டீன் தான் மூவருக்கும் விருப்பமான இடம். கார்த்திக் வழமை போல் சிக்கன் உம் கீர்த்தனா sandwich உம் சாப்பிட வைஷ்ணவி fruits and green tea ஐ ஆர்டர் பண்ணி சாப்பிட தொடங்கினாள். அப்போது தான் அங்கு வந்து சேர்ந்தான் விக்ரம் பூங்கோத்துடன் ,

அதனை கீர்த்தனாவிடம் நீட்டி " you are looking so beautiful I think I am in love with you" என்றான்.

இதெல்லாம் சகஜமப்பா என்ற தோரணையில் கீர்த்தனா அதனை சட்டை செய்ததாகவே தெரியவில்லை. இதற்கெல்லாம் முடிவுகட்ட நினைத்த வைஷ்ணவி உடனே " இங்க பாரு விக்கி you are not lucky because you are looking spooky "என்றவள் மேலும் தொடந்து "உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டா " என்றபடி அவன் காது நோக்கி குனிந்தாள் "அவ ஒரு ஆம்பிளை.... ஆபரேஷன் பண்ணி பெண்ணாகி இருக்கா.... உனக்கு அது பரவாயில்லை என்றாள் நீ அவளை கட்டிக்கோ" என்றாள் காதில் ரகசியமாய். கீர்த்தனாவும் கார்த்திக்கும் எவ்வளவோ ஒட்டு கேட்டும் அவள் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை.விக்ரமோ அவளை நம்பாத பார்வை பார்த்தான். உடனே அவள் " இங்கே வா!" என்று அவனை கீர்த்தனா அருகில் இழுத்து, அவன் காதுக்குள் மிக ரகசியமாக " கொஞ்சம் உற்று பார், அவள்.... sorry sorry.... அவன் மீசை இன்னும் உதிரவில்லை" என்றாள் . பெண்களுக்கு

ஹோர்மோன் பிரச்சனையானால் சிறிதாக மீசை அரும்புவது இயல்பு என்ற உண்மை தெரியாத விக்ரம் ஒரு கணம் ஆடி போனான்.

இதை கேட்டு அதிர்ச்சி அடைந்தவன் , கீர்த்தனாவை விசித்திரமாக பார்த்துவிட்டு " சாரி சிஸ் ..... ப்ரோ.... நான் சொன்னதை மறந்துருங்க" என்று பிதற்றியவாறு அங்கிருந்து விறுவிறு என்று நடந்துவிட்டான். கீர்த்தனா ஒன்றும் புரியாமல் "அப்பிடி என்னடி சொன்ன ?" என்றாள் வைஷணவியிடம். "உண்மையை சொன்னன்" என்று கெத்தாக சொன்னவள் கையை மடித்து விட்டு கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து கேன்டீனுக்குள் நுழைந்த விக்ரமின் நண்பர்கள் கீர்த்தனாவை ஆச்சரியமாக பார்த்து பக்கத்தில் இருந்தவர்களிடம் கிசு கிசுத்து கொண்டிருந்தனர். கீர்த்தனாக்கு உடனே விளங்கி விட்டது " இந்த வானரம் எதோ எசகு பிசகா சொல்லியிருக்கு" என்று மனதில் நினைத்தவள், கீர்த்தனாவை நோக்கி அனல் பார்வை வீசி " இப்போ நீ என்ன

சொன்னாய் என்று சொல்லல எண்டா உன்ன கொன்னு போட்டிருவன் " என்றாள் குரலில் கோபத்தை தேக்கி. உயிர் நண்பியின் கோபம் மனதை நெருட " கூல் பேபி கூல், உனக்கு இனி இந்த தொந்தரவு வர கூடாது என்ற நல்லெண்ணத்தில் நீ ஒரு ஆம்பிளை ஆபரேஷன் பண்ணி பொண்ணா மாறியிருக்கா என்றேன்... அவ்வளவுதான் " என்றால் அசால்டாக. கீர்த்தனா நண்பியை பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் தலையில் அடித்து கொண்டாள்.

உடனே கார்த்திக் "நீ ஆம்பிளைய இருந்தா கூட நான் உன்ன கல்யாணம் பண்ணுவேண்டி...எனக்கு தேவை உன் மனசுதான்" என்று யோசித்தவன் "சீ என்ன இது தறி கேட்ட யோசனை" என்று தன்னை தானே மனதுக்குள் கடிந்த படி " கிளம்பலாமா ?" என்றான். எழுந்தவனின் கைகள் தவறுதலாக கீர்த்தனாவின் கைகளில் உரசி கொண்டது. அந்த தொடுகையில் கொஞ்சம் தடம் மாறி இதயம் துடித்தது. இந்த தடுமாற்றம் கிட்ட தட்ட 100

தடவையாவது நடந்திருக்கும். அப்படியிருந்தும் அவன் தன் காதலை இதுவரை சொல்லாமல் பொத்தி பாதுகாத்து வைத்திருந்தான். எங்கே அவள் நிராகரித்தால் நட்பை இழந்துவிடுவமோ என்று பயத்தினால்.

வெளியில் சிரித்தாலும் புது எம்.டி என்றதும் எல்லாருக்கும் உள்ளுக்குள் ஒரு உதறல் இருந்தது. புது டிஜிட்டல் பெயர் பலகையில் ஆத்ரேயன் கான்ஸ்டருக்ஷன்ஸ் என்று பொறிக்கப்பட்டிருந்தது.

மணி 9.00 ஆனதும் எல்லாரும் வாசலில் குழுமி இருந்தனர். வெள்ளை நிற பென்ஸ் இல் அனாமிகா வெள்ளை நிற ஸ்கிர்ட் and வெள்ளை நிற கோர்ட் அணிந்து ஒய்யாரமாக இறங்கினாள். 24 வயது பெண்ணை கண்டதும் யார் முகத்திலும் ஈ ஆடவில்லை. கடமையின் நிமித்தம் வரவேற்று உபசரித்தார்கள். சிறு பெண் கீழே வேலை செய்ய வேண்டுமா என்ற ஈகோ எல்லாரிடமும் காணப்பட்டது. நிஷாவிடம் இருந்து பூங்கோத்தை பெற்ற அனாமிகா தனது

புது அறையில் நுழைந்தாள். அவளுக்கோ எந்த அனுபவமும் இல்லை. அவள் தங்கி இருப்பதோ ஆத்ரேயனின் வழி நடத்தலுக்காக.

எல்லாரும் வேலையில் மூழ்கி இருந்த நேரம் 11.30 போல அலுவலகத்துக்கு அழைத்து இன்னும் 5 நிமி டங்களில் வருவதாகவும் 12.00 கு அனைவருக்கும் மீட்டிங் arrange பண்ணும் படியும் கூறி இருந்தான். அவனை வர வேற்பதற்காக ஏற்பாடுகள் மேட்கொள்ளப்பட்டன.

அதில் பூச்செண்டு கொடுப்பதில் முறுகல் உருவாக, கடைசியில் அனாமிகா தலையிட்டு தானே கொடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது. சொன்ன நேரத்துக்கு அதாவது 11.35 கு கருப்பு நிற ஜாகுவார் கார் கட்டட வாசலில் சீறி கொண்டு வந்து நின்றது. டிரைவர் seat இலிருந்து ஆத்ரேயன் கம்பீரமாக இறங்கினான். 30 வயசு வாலிபன் அவன். 6 அடி உயரமும் நன்கு சிவந்த நிறமும், அலை அலையென கேசமும் பெரிய கண்களும் கூரான நாசியும் ட்ரிம் செய்யப்பட தாடி மீசைக்கிடையில் செதுக்கிய உதடுகளும்

என ஆணழகனாகவே இருந்தான். கருப்பு நிற ஜீன்ஸ் உம் வெள்ளை நிற ஷர்ட் உம் கருப்பு நிற கோர்ட் உம் என கம்பீரமாகவே இருந்தவன் புஜங்களில் முறுக்கேறிய தசை கோலங்கள் கோர்ட் ஐ மீறி வெளியே தெரிந்ததிலே குழுமி இருந்த எல்லா பெண்களும் ஆர்வத்துடன் நோக்கினர். அனாமிகாவை சொல்லவே தேவையில்லை. வாயை பிளந்து பார்த்து கொண்டிருந்தாள். சின்ன பெண் அல்லவா.?

"ஹலோ மிஸ் அனாமிகா" என்று சொடக்கு போட்டதும் தான் அவள் தன்னிலை அடைந்தாள். கையில் இருந்த பூச்செண்டை பெற்று கொண்டு sun glass ஐ கழட்டி ஒரு வசீகர சிரிப்பை அவளிடம் சிந்தினான். அதில் அவள் மூர்ச்சையாகாத குறை தான்.

சொன்ன நேரம் போல 12.00 கு மீட்டிங் தொடங்கியது. கோர்ட் ஐ கழட்டிவிட்டு முழங்கை வரை மடிக்கப்பட்ட ஷர்ட் உடன் வருகை தந்த ஆத்ரேயனை பார்த்து கீர்த்தனா " He is so hot" என்று மற்ற இருவரிடமும்

முணுமுணுத்தாள். அதை கேட்ட வைஷ்ணவியும் கார்த்திக்கும் அவளை விசித்திரமாக பார்த்தனர். கீர்த்தனா வாயிலிருந்து இப்படி ஒரு வார்த்தையா? என்றபடி .

அது ஆத்ரேயன் காதிலும் தெளிவாகவே விழுந்தது. உடனே அவன் கீர்த்தனாவை பார்த்து " you are also looking so beautiful in this saree " என்று கூறி சினேகமாக சிரித்தான் . அதனை கேட்டதும் கீர்த்தனாக்கு ஆகாயத்தில் பறப்பது போல இருந்தது என்றால் கார்த்திக்கிற்கு இனம் புரியாத பயம் உருவானது. விக்ரம் தன் சகாக்களிடம் "கிழிஞ்சுது.. பாஸ் க்கு உண்மை தெரியல போல,.... நம்மள போல அவரும் ஏமாந்துட்டார் பாவம்..." என்றான் ரகசியமாக. ஆனால் அந்த ரகசியம் கீர்த்தனாக்கும் வைஷ்ணவிக்கும் தெளிவாகவே விழுந்தது. அதை கேட்டதும் வைஷ்ணவி தன் சிரிப்பை அடக்க பெரும் பாடு பட்டாள். அடக்க முடியாமல் ஒரு கட்டத்தில் சத்தமாக சிரித்து விட்டாள். கீர்த்தனவோ வைஷ்ணவியை முறைத்து கொண்டிருந்தாள்.

"சாரிடி,,, என்னால முடியல" என்று வாயில் காய் வைத்து சிரித்தவள் ஆத்ரேயனை மறந்து போனாள்.

ஆத்ரேயன் கைகள் இரண்டையும் கட்டி கொண்டு அவளை கூர்மையாக நோக்கினான். தன்னை சட்டை செய்யாமல் , அவள் தொடர்ந்து சிரித்ததை பார்த்து கடுப்பானவன் , சத்தமாக "will you please shut up and get out". என்றான் அவன் பார்வையை விளக்காதவாறு. அவன் சத்தம் கேட்டு பயத்தில் உறைந்தவள், தான் செய்த தவறை நினைத்து நாக்கை கடித்து கொண்டாள். முதல் மீட்டிங் லேயே வெளியே செல்வது நெருடலாக இருக்க " சார், கட்டாயம் போகணுமா?" என்று கேட்டுவிட்டு தலையை குனிந்து கொண்டாள். அவளுக்கு தெரியும் ஏதோ பெரிய டோஸ் விழா பொகுது என்று. "Definitely" என்றவன் மற்ற அனைவரையும் பார்த்து " இந்த stupid ஒரு நிமிஷம் இங்க இருந்தா கூட நான் வெளிய போயிருவேன்.. decision is yours " என்றபடி கையை கட்டிய படி.

எல்லாரும் வைஷ்ணவியை நோக்கி " please, கொஞ்சம் வெளியே போ வைஷ்ணவி" என்றனர் இறைஞ்சுதலாக. கீர்த்தனாவும் கார்த்திக்கும் அவளை பாவமாக பார்த்துக்கொண்டிருந்தனர். notebook ஐ எடுத்தவள் தலையை குனிந்தபடி board room ஐ விட்டு வெளியேறினாள். எல்லாரையும் வைத்து தன்னை வெளியே அனுப்பியவன் செயலால் அவளுக்கு ஆத்திரம் அதிகரித்தது. கண்களில் அவமானம் தாங்காமல் நீர் கோர்த்திருந்தது.

காதல் மலரும்.....

<u>யுகம்-2</u>

வெளியில் வந்தவள் வேலை செய்ய மனம் கேட்காமல் தன் இருக்கையில் சாய்ந்தபடி தொலைபேசியில் game விளையாட தொடங்கினாள். மனதிலுள்ள சோகத்தை நீக்க அவள் கையாளும் யுக்தி இது.

மீட்டிங் தொடங்கியதும் தான் ஆத்ரேயனின் மிரட்டலான முடிவுகளை கேட்டு

அனைவருக்கும் உதறல் எடுத்து. அப்போது தான் புரிந்தது அவன் முகத்தில் இருக்கும் மென்மை அவன் அகத்தில் கொஞ்சம் கூட இல்லை என்று.

" Good morning everyone. Hope you all are fine but not anymore" என்று அவன் தொடங்கியதே அனைவர்க்கும் கிலியை உருவாக்கியது. "சொன்ன வேலையை சொன்ன நேரத்துக்குள் முடிக்கவிட்டால் சம்பளத்தில் குறிப்பிட்ட வீதம் தண்டமாக அறவிடப்படும். அனைவரினதும் தனி தனி வேலைகள் அதற்குரிய dead line , முடிக்கப்பட்ட வீதம் அனைத்தும் கணனியில் பதியப்பட்டு மாத இறுதியில் மோசமான புள்ளியை பெற்றவர்களுக்கு விசாரணை மேற்றக்கொள்ளப்படும். அவர்களின் பதில்கள் திருப்தி அளிக்காவிட்டால் உடனடியாக அவர்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். லஞ்ச் டைம் தவிர்ந்த மற்றய நேரங்களில் வெளியில் செல்ல அனுமதியில்லை." என்றவன் மேலும் "சோம்பேறிகளும் திறமை இல்லாதவர்களும் என் கம்பெனியில் இருக்க வேண்டிய

அவசியமில்லை. " என்று கம்பீரமாக உரைத்துவிட்டு அனைவரையும் நோட்டமிட்டான். குண்டூசி விழுந்தால் கூட சத்தம் கேட்கும் நிலையில் அங்கு நிசப்தம் நிலவியது. எல்லாரும் ஒருவரை ஒருவர் சோகமாக பார்த்துக்கொண்டனர். அனாமிகா அனைத்தையும் கவனித்தாலோ இல்லையோ ஆத்ரேயனை கண்களால் பருகி கொண்டிருந்தாள். அதையும் கடைக்கண்களால் நோட்டமிட்டவன் “எல்லாம் பருவக்கோளாறு” என்று முணுமுணுத்தபடி மீட்டிங்கை தொடர்ந்தான்.

கடைசியாக யாருக்கு என்ன வேலை என்று தான் தயாரித்த பட்டியலை மேசையில் தூக்கி போட்டவன். "Do it as instructed " என்றவாறே மேலும் சில அறிவுரைகளை வழங்கியபின், தொழில் ஒப்பந்தத்தில் எல்லோரிடமும் கையெழுத்து வாங்குமாறு தனது பி.எ டேவிட்டை பணித்து விட்டு தனது மற்றைய நிறுவனத்துக்கு செல்வதற்காக புயலென வெளியேறினான்.

கார் சாவியை எடுக்க ஆபீஸ் அறைக்குள் நுழைந்தவனின் கண்களில் குனிந்தவாறு தனது தொலைபேசியில் கண்களை பதித்திருந்த வைஷ்ணவி தட்டுப்பட்டாள். ஆபீஸில் ஆத்ரேயனுக்கும் அனாமிகாகும் மாத்திரம் மூடிய தனி யாரையும் மற்ற அனைவருக்கும் கண்ணாடியினாலான பிரிப்புகளுடனான அறைகளும் வழங்கப்பட்டிருந்தன. கண்ணாடி என்பதால் எல்லாருடைய அசைவையும் இலகுவாக கண்காணிக்க கூடியதாக இருந்தது.

வைஷ்ணவியை அவதானித்தவன் அவள் அறைக்குள் வந்து கைகளை கைகளை கட்டியவாறு அவள் விளையாடுவதை அனல் பறக்க பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பார்ப்பதை அறியாதவள் சுழல் நாற்காலியில் அமர்ந்தவாறு விளையாடி கொண்டிருந்தாள். விளையாட்டில் வென்றதும் "yes ,,," என்று சிரித்தபடி கைகளை தூக்கியவளின் முகம் அப்படியே பேய் அறைந்தது போலானது.

"ஐயோ இந்த நெட்டையன் பார்த்து விட்டானே. வைஷு இண்டைக்கு நீ செத்த போ... " என்று மனதுக்குள் நினைத்தவாறே முகம் வெளுக்க அவனை நோக்கியபடி எழுந்து நின்றாள்.

"இது உன் அப்பன் வீட்டு கம்பெனி என்று நினைச்சியா?" என்று சீறியவன். " phone " என்றான் வலக்கையை அவள் முன் நீட்டியபடி. "சார்...." என்று இழுத்தவளை பார்த்து " உனக்கு எதுவும் ஒரு தரம் சொன்னால் புரியாதா? " என்று கர்ஜித்தவன் வெடுக்கென்று அவளின் தொலைபேசியை பிடுங்கி பாக்கெட்டில் போட்டுகொண்டு விறு விறுவென தனது அறையை நோக்கி சென்றான்.

சிறிது வினாடிகள் கழித்து அதிர்ச்சியிலிருந்து வெளிவந்தவள் phone க்கு lock active பண்ணாததை நினைத்து தன்னை தானே கடிந்து கொண்டாள் . தொலைபேசி இல்லாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாமல் ஓடி சென்று அவன் அறை முன் பாந்தமாக நின்றபடி உள்ளே போவமா வேணாமா என்று மனதுக்குள் பட்டிமன்றம்

நடத்தி கொண்டிருந்தாள். கோட்டை போட்டு சாவியையும் எடுத்து கொண்டு வெளியேறியவன், வாசலில் நின்றவளை பார்த்து தன் ஒற்றை புருவத்தை தூக்கி "என்ன" என்று வினவினான்.

" என்ன மன்னிச்சுருங்க சார், இனி நான் ஆபீஸ்ல விளையாடமாட்டேன், என் போனை கொடுத்துருங்க ப்ளீஸ்" என்று மிகவும் தாழ்வான குரலில் கெஞ்சினாள் தனது தொலைபேசிக்காக.

"வெட்கமில்லாமல் இப்படி கெஞ்சி கொண்டு நிக்கதே பார்க்க சகிக்கவில்லை" என்று முகத்தை சுளித்தபடி விறுவிறுவென வெளியேறினான்.

அவமானம் தாங்காமல் முகத்தை தொங்கப்போட்டு கொண்டு இருக்கையில் அமர்ந்து தன் விதியை நினைத்து நொந்துகொண்டாள். பசி வேறு வயிற்றை கிள்ளியது. "இந்த கார்த்திக்கும் கீர்த்தனாவும் எப்போ வந்து சேரப்போறாங்களோ தெரியலையேப்பா" என்றபடி நாடியில் காய்

வைத்தபடி அமர்ந்திருந்தாள் எதையும் தாங்கும் இதயம் கொண்ட வைஷ்ணவி .

அனைத்து வேலையும் முடித்தவர்கள் சாவகாசமாக வந்து சேர்ந்தனர். வருவதை கவனித்தவள் கீர்த்தனாவின் அறைக்கு சென்று " ஏண்டி இவ்வளவு நேரம்.. அந்த நெட்டையன் என்ன சொன்னான்?" என்று கோவமாக வினவினாள். "மெதுவா பேசுடி யார்டயும் காதுல விழுந்து தொலைக்க போகுது" என்றபடி நடந்ததை விவரித்தாள். வைஷ்ணவியும் தன் சோக கதையை சொல்லி முடித்தாள் . "நீ ஏண்டி ஆபீஸ் நேரத்துல விளையாடினாய்?" என்று தோழியை கடிந்தாள்.

கீர்த்தனாவை முறைத்தவள் " ஒரு நாள் பார்த்த உன் ஆளுக்காக உன் உயிர் தோழிக்கு திட்டுகிறாய் என" என்றாள் உதட்டை சுளித்து கொண்டு. அதற்கு அவளோ " என் ஆளா ? லூசா நீ? அம்மா சொல்ற பையன தான் நான் கல்யாணம் பண்ணுவன் எனக்கு இந்த love எல்லாம் செட் ஆகாதுப்பா" என்றாள் சலித்தபடி.

அப்போது அவளை அழைத்த டேவிட் அவளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்தையும் வாங்கி அவளுக்கான வெலைக்குரிய கோப்பையும் கொடுத்தான். " கொஞ்ச நேரம் சும்மா இருக்க விடமாட்டாங்க " என்று முணுமுணுத்தபடி எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டவள் நண்பர்களுடன் சாப்பிட புறப்பட்டாள்.

வேலை நேரம் முடிந்து செல்லும் போது அவளை அழைத்த கார்த்திக் அவள் தொலைபேசியை அவளிடம் கொடுத்தான். "இதைப்பிடி உன்னிடம் வந்தது?" என்று ஆச்சரியமாக கெட்டவளை நோக்கி " வேலை முடிந்து செல்லும் போது உன்னிடம் கொடுக்க சொல்லி sir தந்துட்டு போனார்" என்றான். " you too Brutus " என்றவளுக்கு அப்போது தான் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

எதிர் நோக்கிய நாட்களை , வேலைப்பளு காரணமாக சற்று கடினமாகவே எல்லோரும்

உணர்ந்தனர். ஆத்ரேயன் வருகை தரும் நாட்கள் வைஷ்ணவிக்கு நெருப்பின் மேல் நிற்பது போன்று இருந்தது. மாத கடைசியில் எல்லாரும் கொடுத்த வேலைகளை கச்சிதமாக முடித்து ஆத்ரேயனின் கையெழுத்துக்காக சமர்ப்பித்திருந்தனர். இப்புள்ளி முறை வேலையில் எல்லாருக்கும் ஒரு வித ஆர்வத்தை உருவாக்கி இருந்தது. வைஷ்ணவியின் design ஐ பார்த்தவன் அவளின் திறமையை மனதுக்குள் மெச்சினான். எனினும் அவளை பாராட்டி அவள் தலைக்கனத்தை ஏற்ற விரும்பாதவன், அவளை காயப்படுத்துவதிலேயே குறியாக இருந்தான்.

அன்று வைஷ்ணவியின் intercom க்கு ஆத்ரேயன் அழைத்து "Idiot come to my room quickly"என்றான். "ரைட்டு சனியன் சைக்கிள் ல வருது " என்று மனதில் நினைத்தவாறே ஆத்ரேயனின் room க்கு சென்றாள். அங்கு ஆத்ரேயன் மேசையில் கடைசியாக வைஷ்ணவி வரைந்த படம் விரிக்கப்பட்டிருந்தது. வைஷ்ணவியை கூர்ந்து நோக்கியவாறே "explain " என்றான். "இந்த நெட்டையனுக்கு இது விளங்கலையா ... சரியான

tubelight" என்று மனதில் நினைத்தவாறே விளக்கம் கொடுக்க தொடங்கினாள்.

அனாமிகா க்கு எதுவும் விளங்கிய போல் தெரியவில்லை. இடையிடையில் பல கேள்விகளை கேட்டு துளைத்தெடுத்துவிட்டாள். வைஷ்ணவி பேசுவதை கேட்காமல் ஆத்ரேயன் கோப்புக்களை எடுத்து படிக்க தொடங்கிவிட்டான். வைஷ்ணவிக்கு அது பெரும் அவமானமாக இருந்தது. எல்லாம் முடிந்ததும், "Miss or Mrs" என்று கேட்டான் ஒற்றை புருவத்தை தூக்கியபடி. வைஷ்ணவியும் தட்டு தடுமாறி " Miss.வைஷ்ணவி மலர்வேந்தன்" என்றாள்.

"ok , Miss. வைஷ்ணவி நீங்க உண்மையாவே இன்ஜினியரிங் படிச்சீங்களா?" என்றான் ஒரு நக்கலான தொனியில். அவனது நக்கல் விளங்கியதால் அதுக்கு அவள் பதிலளிக்க முற்றப்படவில்லை. தலையை குனிந்தவாறே நின்றிருந்தாள். அனாமிகாவுக்கு முன்னால் அவள் தன்மானம் பெரிதும் அடிவாங்கியது.

"நீயெல்லாம் இந்த கம்பெனியை கூட்டுவதற்கு கூட தகுதி இல்லாதவள். உன்னை எல்லாம் யார் தான் வேலைக்கு எடுத்தார்களோ " என்றபடி அவளின் டிசைனை கிழித்து குப்பை கூடைக்குள் எறிந்தான். அதனை அவள் கையாலாகா தனத்துடன் கண்ணீர் மல்க பார்த்திருந்தாள். அவள் முகத்தில் கண்ட வலியில் ஆத்ரேயனுக்கு ஒரு திருப்தி உண்டானது. கேலி புன்னகை ஒன்றை முகத்தில் தவழ விட்டவாறே "உன்னோட cabin க்கு போகலாம் வா" என்றான். புரியாத பார்வை ஒன்றை அவனை நோக்கி செலுத்தியவள் " இவன் எதுக்கு நம்ம cabin கு வர போறான்? எல்லாருக்கும் முன்னுக்கும் அவமானப்படுத்தப்போறான் போல.... உண்மையாவே கூடுவதற்கு விட்டிருவானோ" என்று மனதுக்குள் ஒரு பட்டிமன்றம் நடத்தியபடி மனம் நிறைய பாரத்துடன் அவன் பின்னால் நடந்தாள்.

அவள் கணணியை நோக்கி கையை காட்டியவன், "எடு நீ வரைந்த file ஐ" என்றவுடன் அவள் அந்த folder ஐ காட்டினாள். அவளை நோக்கி வசீகர

புன்னகையை சிந்திவிட்டு அவளை பார்த்தபடியே அந்த folder ஐ நிரந்தரமாக அழித்துவிட்டான். "sir" என்ற படி வைஷ்ணவி அதிந்தாள். அவள் கண்ணை நேராக பார்த்தபடி "redo.. i need it today night 9 o clock" இதை கேட்டதும் வைஷ்ணவிக்கு யாரோ பெரிய கல்லை தூக்கி தலையில் போட்டது போல் இருந்தது. 10 நாட்கள் செலவழித்து கீறிய design ஐ வெறும் 9 மணி நேரத்தில் வரைவது முடியாத காரியம் தானே. அவன் அவள் பதிலை எதிர் பார்க்காமல் தனது அறை நோக்கி நடந்தான்.

அவளும் தன்னுணர்வு அடைந்து "sir..." என்று அழைத்தவாறே பின்னால் ஓடினாள். ஸ்டைல் ஆக திரும்பி "வாட்?" என்றான் புருவத்தை தூக்கியபடி. " என்ன பிழை என்று சொன்ன correct பண்ணி கொள்வேன் sir " என்றாள்.

ஒரு இகழ்ச்சி புன்னகையை அவளை நோக்கி சிந்தியபடி " idiot நீயே கண்டுபிடி" என்றவாறே ரூமுக்குள் நுழைந்துவிட்டான். "இஞ்சி தின்ற குரங்கு .. F***** B*******" என்று மனதுக்குள்

கெட்ட வார்த்தையில் திட்டியவளுக்கு ஓ என்று அழவேண்டும் போல இருந்தது.
எல்லாவற்றையும் கவனித்து கொண்டிருந்த கார்த்திக்கும் கீர்த்தனாகும் அவளை நினைத்து பெரும் கவலை மூண்டது. உதவி செய்ய முடியாத நிலையை நினைத்து வருந்தி கொண்டிருந்தனர். லஞ்சுக்கு கூட செல்லாமல் வைஷ்ணவி வேலையில் மூழ்கி போனாள். அவளை ஆத்ரேயன் ஒரு விஷம புன்னகையுடன் கடந்து சென்றான். அவளின் வலி இவனுக்கு ஒரு இனம் புரியாத திருப்தியை கொடுத்தது. அதற்கு காரணம் யாருக்கும் தெரியவில்லை.

மாலை 6 மணிக்கு எல்லாரும் வீட்டுக்கு செல்ல ஆயத்தமானர். கார்த்திக்கும் கீர்த்தனாவும் வைஷ்ணவிக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தனர். வெளியில் வந்த ஆத்ரேயனுக்கு அவர்கள் நட்பை பார்த்து பொறாமை எழாமல் இல்லை. ஒரு கோவமான பார்வையை கார்த்திக் மீதும் வசீகர புன்னகையை கீர்த்தனாவை நோக்கியும் உதித்தவன், இருவரையும் வீட்டுக்கு போக உத்தரவு இட்டான். அவர்களால் அதனை

தட்ட முடியாமல் வீட்டுக்கு செல்ல ஆயத்தமானார்கள் வைஷ்ணவியை பாவமாக பார்த்தபடி.. டிரைவர் seat இல் கார்த்திக் அமர பக்கத்து seat இல் கீர்த்தனா அமர்ந்தாள். மயில் நிற புடவையில் இருந்தவளை பார்க்க கார்த்திக்கினால் தன்னை கட்டுப்படுத்த முடியவில்லை. அவளது சிவந்த உதடுகள் தன்னை சுவைக்க சொல்லி அழைப்பு விடுத்தது. இதனை விட்டால் தன் காதலை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் அமையாது என்று நினைத்த கார்த்திக் ஸ்டேரிங் wheel இனை பார்த்தபடி அமர்ந்திருந்தான். கீர்த்தனா மீது ஆத்ரேயனின் கனிவு அவனுக்கு பயத்தை அளித்தது. அவளை எப்படியாச்சும் தக்க வைத்து கொள்ள வேண்டும் என்ற வெறி அவனிடம் உருவானது. வைஷ்ணவியிடம் கீர்த்தனா தன் திருமணத்தை பற்றி சொன்னதை கேட்டிருந்தால் இந்த சந்தேகம் வந்திருக்காதோ என்னமோ. ஏறி இவ்வளவு நேரமாகியும் கார் புறப்படாததை உணர்ந்த கீர்த்தனா "கார்த்திக் என்ன ஆச்சு" என்றபடி அவன் கையை பிடித்து உலுக்கினாள்.

இதுதான் சந்தர்ப்பம் என்று உணர்ந்தவன் அவளை இழுத்து வெற்றிடையில் கை பதித்து அவள் மெல்லிய உதடுகளை தன் வலிய உதடுகளால் அழுந்த மூடினான் . இதனை எதிர்பாராத கீர்த்தனா அவனை தள்ளுவதற்காக திமிறினாள். அவளை தன் கைகளால் அடக்கியவன் அவள் அதரங்களில் தேன் பருகுவதை நிறுத்தவில்லை.

கீர்த்தனாவின் கண்ணீரின் சுவையை அறிந்ததும் தான் திடுக்கிட்டு அவளை விடுவித்தான். அவளோ ருத்ரமூர்த்தியாக மாறி இருந்தாள். அவள் கைகள் அவன் கன்னங்களை நன்றாக பதம் பார்த்தது. அவனை உறுத்து விழித்துவிட்டு முகத்தை மூடி குலுங்கி குலுங்கி அழ தொடங்கினாள். அதன் பிறகு தான் தனது விபரீத செயலின் தாக்கம் அவனுக்கு புரிந்தது.

அவளை சமாதான படுத்தும் வழி தெரியாது காரை கிளப்பிக்கொண்டு flat ஐ அடைந்தான். lift இல் கூட பெருத்த மௌனமே நிலவியது. வீட்டை அடைந்ததும் கீர்த்தனா வெடித்து

அழுதாள். அவளை சமாதான படுத்த கூட யாரும் அருகில் இருக்கவில்லை. கார்த்திக் குற்ற உணர்வுடன் சாப்பிடாமல் படுக்க சென்றான்.

காதல் மலரும்.....

<u>யுகம்-3</u>

வைஷ்ணவி ஓரளவுக்கு வேலையை முடித்திருந்தாள். சாப்பிடாமல் இருந்ததால் கொஞ்சம் தலை சுற்றாக இருந்தது.. காலை சாப்பிட்ட fruit salad and green tea இவ்வளவு நேரம் தாக்குபிடித்ததே பெரிய விஷயம். "ரொம்ப பசிக்குதே... சாப்பிடாம உனக்கு என்ன வேலை வேண்டி கிடக்கு" என்று தன்னை தானே திட்டியவாறு CEO வின் ரூமுக்குள் நுழைந்தாள் . சென்றதும் தான் அவளின் பசி பல மடங்கு பெருகியது.

ஆத்ரேயன் KFC chicken order பண்ணி அதனை சாப்பிட்டு கொண்டிருந்தான். அவன் சாப்பிடுவதை பார்த்தவளுக்கு வாயில் எச்சில் ஊறியது . அவன் சாப்பிடுவதை கண் வெட்டாமல்

பார்த்து கொண்டிருந்ததை கவனித்த ஆத்ரேயன் " என்னுடைய சாப்பாட்டில் கண் வைத்தது காணும் வந்த விஷயத்தை சொல்" என்றான் அப்போது தான் அவளுக்கு தான் வாய் பார்த்து கொண்டு இருந்ததை நினைத்து வெட்கம் பிடுங்கி தின்றது.உடனே சுதாகரித்து கொண்டு தன்னுடைய டிசைன் ஐ காட்டினாள். உடனே அவன் நேரத்தை பார்த்தான்.

மணி 9 ஐ காட்டியது. "not bad மேசையில் வைத்து விட்டு போ" என்றபடி சாப்பிட தொடங்கினான். தனது design ஐ அவன் பார்க்கவில்லை என்றதும் கோவம் சுர் என்று அவளுக்கு எகிறியது. " sir நான் கஷ்டப்பட்டு செய்திருக்கன்.. நீங்க இப்பிடி நடத்துகிறது நல்லா இல்லை" என்றாள்.

அவன் அப்போது தான் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்து பார்த்தான். "so what?" என்றவன் ஒரு நொடி தாமதிக்காது டிசைன் ஐ பிடுங்கி கிழித்து எறிந்து "redo " என்றான். அவளுக்கு அதுக்கு மேல் பொறுமை காற்றில் பறந்து போய் விட்டது. கண்ணில் கண்ணீர் வழிய

ருத்ரமூர்த்தியாக நின்று இருந்தவளை பார்த்து அவனுக்கே ஒரு நொடி பயம் வந்து போனது. " லூசா நீ எவ்வளவு கஷ்டப்பட்டு நான் இதை கீறினேன் தெரியுமா?" என்று கட்டுப்படுத்த முடியாத கோபத்துடன் பொரிந்து தள்ளினாள். CEO என்ற மரியாதையை அவன் ஒரு நொடியில் இழந்தான்.

மேலும் இவனுக்கு கீழ் வேலை பார்ப்பதை விட பிச்சை எடுப்பது மேல் என்று நினைத்தவளால் அவன் மரியாதை அதழ பாதாளத்துக்குள் சென்றது. வேலை போனாலும் பரவாயில்லை இவனை நாக்கை புடுங்குவது போல் நான்கு கேள்வி கேட்டுவிட்டு ராஜினாமா கடிதத்தை கொடுக்கணும் என்று நினைத்தவளின் வாய் மேலும் பெரிய தொடங்கியது. "நான் தப்பு பண்ணினத்துக்கு என்ன தண்டிக்கிறத நான் ஏற்று கொள்ளுவேன்.. செய்யாத தப்புக்கு நான் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும். நீயெல்லாம் மனுஷன் இல்ல ராட்சசன்." என்று திட்டி விட்டு நின்று கொண்டே மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியவளை அதிர்ச்சியுடன் இமைக்காது

பார்த்தான்.

ஆத்ரேயன் கோபக்காரன் தான் ஆனால் கோபத்தை கூட நிதானமாக காட்டுபவன். சாப்பிட்ட சாப்பாட்டை கீழே வைத்தவன், மேசையிலிருந்த tissue paper இனால் கைகளை துடைத்துவிட்டு அழுத்தமான காலடிகளுடன் அவளை நோக்கி வந்தவனை " ரொம்பதான் ஓவரா பேசிட்டமோ " என்று மனதில் நினைத்தவாறு கண்களில் மிரட்சியுடன் பார்த்தாள்.

அருகில் நெருங்கி வந்தவன் அவள் கண்களில் வழிந்த கண்ணீரை தன் வலது பெருவிரலால் துடைத்தபடி, "இப்போ எதுக்கு அழுகிறாய்... இப்போ பேசினத்துக்கு இனி தான் நீ அழ வேண்டி வரும்" என்று சிரித்தவாறே உரைத்தவன். கைகள் இரண்டையும் மார்புக்கு குறுக்கே கட்டியபடி நின்று முகத்தை கடினமாக்கி " நீங்க resign பண்ணலாம் என்ற தைரியத்தில் தானே இப்பிடியெல்லாம் கதைக்கிங்க madam ... உனக்கு கொஞ்சம் கூட அறிவில்லையா? நீ resign

பண்ணினாலும் உனக்கு service letter நான் தான் sign பண்ண தரணும். நான் எழுதப்போறத வச்சு தான் உனக்கு அடுத்த வேலை கிடைக்கும். அது கூட தெரியாத முட்டளா நீ?.... உன் முட்டாள் தனமான பேச்சை வேற யார்கிட்டயும் வச்சுக்கோ... நான் நினைத்தால் உன் எதிர் காலத்தையே அழித்து விட முடியும்... வாய போத்திட்டு இருக்க முடியுமென்றால் இங்கே இரு இல்லாட்டி இப்போவே வெளியில் போ... ஆனால் அதுதான் நீ வேலைக்கு செல்லும் கடைசி நாளாக இருக்கும்.. " என்றவன் ஆங்கிலத்தில் சில கெட்ட வார்த்தைகளையும் அவளை நோக்கி சொன்னான் அவளை பதிலுக்கு காயப்படுத்தி விடும் நோக்கத்தில்.

அவன் பேசுவதை கெட்டவளின் மூளை வேலை நிறுத்தம் செய்தது. "இந்த ராட்சசனுக்கு கீழேவா நான் வேலை செய்ய வேண்டும்?... என்னை பார்த்து என்ன வார்த்தை சொல்லி விட்டான்" என்று வலியுடன் நினைத்தவளின் கண்களிலும் அந்த வலி பிரதிபலித்தது. அவளும் கெட்ட வார்த்தையில் மனதுக்குள் திட்டுவாள் தான்

அனால் இப்படி யாரையும் நோகடிக்கும் நோக்கத்துடன் திட்டியதில்லை. தன்னை விறைத்து கண் வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தவளின் முன்னே சொடக்கு போட்டு அவளை சுய நினைவுக்கு கொண்டு வந்தான்.

"சார்... " என்றபடி கண் கலங்க பார்த்தவளுக்கு அடுத்த வார்த்தை வராமல் தொண்டையில் சிக்கி கொண்டது...

பலமாக சிரித்தபடி... " இப்போ தான் நான் உனக்கு sir ஆக தெரியுறேனா? " என்றவனின் மேல் அவள் மயக்கமுற்று தோய்ந்து விழுந்தாள். சாப்பிடாமல் இருந்ததாலும் அதிர்ச்சியான விஷயங்களை கேட்டதாலும் அவள் கண் சொருக மயக்கமுற்றிருந்தாள் அவள் மயக்கத்தில் அவனும் சற்று ஆடி தான் போனான். தோள்களில் கைகளை வைத்து அவளை நிலைபடுத்தியவன், அவளை அணைத்தபடி தூக்கி கொண்டு அங்கிருந்த sofa வில் படுக்க வைத்தான். " என்ன ரொம்ப படுத்துறேடி நீ" என்று

மனதுக்குள் நினைத்தவன், " இவளெல்லாம் வேலை செய்யல என்று யாரழுதா ? " என முணுமுணுத்துவிட்டு, "வைஷ்ணவி... வைஷ்ணவி.." என்று கன்னத்தில் தட்டினான். அவள் எழவில்லை என்றதும் தன்னுடைய தண்ணீர் போத்தலை மேசையிலிருந்து எடுத்து வந்தவன், அவள் முகத்தில் தெளித்தான்.

கண் திறந்து பார்த்தவள் கண்ணில் வலி அப்பட்டமாய் தெரிந்தது. முதல் முறை அவளின் வலி அவனுக்கும் வலியை உருவாக்கியது. " சாப்பிட்டு வேலை பார்க்க வேண்டியது தானே... இது மட்டும் தான் இருக்கு சாப்பிடு ." என்றவன் தான் கடித்த chicken piece ஐ அவள் முன் நீட்டினான். அவள் தயங்கியபடி பார்க்க "ஒரு நாள் சாப்பிட்டா ஒன்றும் நீ குண்டாகிடமாட்டாய்" என்றான்.

அவள் மீண்டும் தயங்கி " அது நீங்க சாப்பிட்டது சார்..... " என்றாள். அவள் சொல்லுவதை உணர்ச்சிகள் துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தவன். அவள் கையில்

சிக்கன் பீஸை திணித்து அனல் பறக்கும் முகத்துடன் "ரொம்ப படம் காட்டாதே... என் எச்சில் உனக்கென்ன புதுசா....." என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவன் வார்த்தைகளை முழுங்கிவிட்டு விறு விறுவென்று அறையை விட்டு வெளியேறினான்.

அவனுக்கு அவனை சமப்படுத்த நேரம் தேவைப்பட்டது. வாசலில் வந்து நின்றவன் சிகரெட்டை எடுத்து ஒரு கையால் புகைத்தபடி ஒற்றை கையை பாண்ட் பாக்கெட்டுக்குள் விட்டு தன் கோபங்களை கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தான். அவனின் வார்த்தைகள் அவளுக்கும் கோபத்தை தூண்டியது போலும், தன் கோபம் முழுவதையும் சாப்பாட்டை சாப்பிடும் வேகத்தில் காட்டினாள். விரைவாக சாப்பிட்டவள், தண்ணீரை அருந்திவிட்டு sofa விலேயே சற்று நேரம் கண் மூடி அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரம் கழித்து அறைக்கு வந்தவன் அவள் கண் மூடி படுத்திருப்பதை பார்த்து சொடக்கு

போட்டு அவளை எழுப்பினான். "இது என்ன உன் வீடா ? இங்கயே தூங்கி விட முடிவெடுத்து விட்டாயா? " என்றுரைத்தவன் வைத்த கண் வாங்காமல் அவளை கூர்ந்து நோக்கினான்.

"மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிட்டு போல... ஆஞ்சநேயா எனக்கேன் இந்த சோதனை" என்று மனதுக்குள் மறுக்கியவள். "இல்ல sir தனியா தூரம் போகணும்" என்றவாறே கைகளை பிசைந்து கொண்டிருந்தாள்.

இருந்த படியே பேசியவளை கண்டவன் " உனக்கு மரியாதை என்றாலே என்ன வென்று தெரியாதா? நீ பேசிய பேச்சுக்கு நான் உன்ன drop பண்ணனும் என்ற நினைப்பு வேற இருக்கு.. எல்லாம் என் தலைவிதி." என்று தலையில் அடித்து கொண்டவன். " சரி வந்து தொலை" என்றவாறு முன்னோக்கி நடந்தான்.

அப்போது தான் இருந்தபடி அவனிடம் கதைத்து வைஷ்ணவிக்கு உறைத்தது. "சரியான லூசுடி நீ...." என்று தன்னை தானே கடிந்தவள் handbag ஐ

தனது அறைக்குள் சென்று எடுத்தபடி அவன் பின்னால் ஓடினாள். வண்டியை எடுத்து கொண்டு வந்ததும் அதிலே பின்னல் ஏறி அமர்ந்தவள் . "அம்மணிக்கு நான் driver ஆக இருக்க வேண்டும் என்று ஆச வேற இருக்கா?" என்று கேட்டான்.

உடனே முன்னுக்கு வந்து எறியவளை பார்த்து.... "ஓஹோ எனக்கு ஜோடியாக பக்கத்துல இருக்க ரொம்ப ஆசை போல " என்றான் அவளை சீண்டுவதற்காக... லூசா நீ என்ற போல் அவனை பார்த்து, "அப்போ நான் டிக்கியில் இருக்கவா? " என்று கேட்டாள் . அதனை கேட்டு பெரு மூச்சு ஒன்றை விட்டவன், " என் கார் டிக்கியில் உட்கார கூட உனக்கு தகுதி இல்லை " என்றான் அவளை காயப்படுத்துவதற்காக , ஆனால் அவளோ அதை சட்டை செய்யாது, "உங்க கார் டிக்கியில் உட்கார என்ன qualification இருக்கணும் சார்? " என்று பாவமாக வினவினாள். "நான் பேசுறது இவளுக்கு உண்மையாவே புரியலையா?இல்லை புரியாத போல நடிக்கிறாளா ?" என்று அவன் சிந்திக்க. முடிந்தால் என்னை அழ வைத்துப்பார் என்ற தோரணையில் அவள் அவனை

பார்த்துக்கொண்டிருந்தாள்

அவள் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்தவன் " கொழுப்புடி உனக்கு உடம்பெல்லாம் கொழுப்பு.... உன் வாயை கொஞ்சம் மூடிட்டு வாரியா?" என்று எரிச்சலாக மொழிந்தான். "OK சார்....." என்று தாழ்மையாக உரைத்தவள் இருகைகளாலும் வாயை பொத்தியபடி வந்தாள் . இதை பார்த்தவனுக்கு எங்கேயாவது தலையை முட்டி கொள்ளலாம் போலிருந்தது

" நீ எத்தனை கிலோ?" என்று கேட்டான் அங்கிருக்கும் மௌனத்தை கலைக்கும் பொருட்டு . அதற்கு அவள் பதில் சொல்லாமல் வாயை பொத்தியபடி இருந்தாள். அவளுக்கு தான் யார் மேலும் பயமில்லையே... தனக்கு பிடித்ததை செய்யும் சுதந்திரமான பெண்ணவள். அவன் கேட்டதற்கு சைகையால் ஏதோ காட்டினாள். பொறுமை இழந்தவன் "வாய்க்குள்ள என்ன கொழுக்கட்டையா? வாய துறந்தா உன் பல்லு கொட்டிருமோ?" என்று கோபத்தில் சீறினான்.

"நீங்க தானே வாயை மூடிட்டு வர சொன்னிங்க.. வாயை துறந்தாலும் குற்றம் வாயை துறக்கவிட்டாலும் குற்றமா? பெருமாளே எனக்கேன் இப்படி ஒரு சோதனை? உங்களை புரிந்து கொள்ளவே முடியவில்லை சார்" என்றாள்.
" உன்னை போல இருப்பவர்களுக்கு எதுவும் புரியாது" என்றான் குரல்களில் வருத்தத்தை தேக்கி.

அதில் ஒரு கணம் மௌனம் காத்தவள் உடனே சுதாகரித்து " என்னை போல என்று எதனை mean பண்ணி சொல்றிங்க sir ? " என்றாள் . "உன்னட்ட இப்போ கதைச்சுக்கொண்டிருக்கன் பாரு என்ன செருப்பால அடிக்கணும்.. " என்று கோபமாக உரைத்தவன் அதற்கு பிறகு மறந்தும் வாயை திறக்கவில்லை. அவள் தங்கி இருக்கும் இடத்தை பற்றி ஒரு கேள்வி கூட கேட்காமல் அவள் flat முன்னாடி கார் நின்றது.

"என் flat உங்களுக்கெப்படி தெரியும் sir ?" என்றாள்

கண்களில் கேள்வியுடன்.... "உனக்கு கேள்வி கேக்காமலே இருக்க முடியாதா ? அப்பப்பா என்ன வாய் உனக்கு.... நீ பேசும் அந்த வாயை எப்படி அடைப்பது என்று எனக்கு தெரியல..." என்றவனின் பார்வை ஒரு கணம் அவள் உதட்டில் நிலைத்து நின்றது. "ஓகே sir நான் கிளம்புறேன். thank you for your help " என்று ஓட வெளிக்கிட்டவளை நோக்கி "கொஞ்சம் பொறு car ஐ பார்க் பண்ணிட்டு வாறன் " என்றவன் அவள் ஏதோ சொல்ல முயலும் முன் காரை கிளப்பி இருந்தான்.

காரை பார்க் பண்ணி விட்டு கையில் திறப்பை சுழற்றியபடி அவளை நோக்கி வந்தவன் " வா போகலாம்" என்றான். " sir என்ன பண்ணிட்டு வந்திருக்கிங்க.,.. இது இங்கே இருப்பவர்கள் பார்க் பண்ணும் இடம்... நீங்க இப்படி பார்க் பண்ணினா எங்களை தான் கேள்வி கேட்பாங்க.. நான் ஒன்றும் குழந்தை இல்லை .... எனக்கு போக தெரியும் ... சொன்னா கேளுங்க எதுக்கு இப்படி என் பின்னால் வந்து உயிரை எடுக்கிறிங்க?" என்று மூச்சு விடாமல் கதைத்தவளை

கூர்மையாக பார்த்தவன் "பேசாம வாயை மூடிட்டு வாடி.." என்றபடி முன்னோக்கி தாவி நடந்தான். அவன் நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின்னால் ஓடி வந்தவள் " இப்போ எதுக்கு சார் முன்னால வாரிங்க? யாரும் பார்த்தா உங்களை கேள்வி கேக்கமாட்டாங்க எங்களை தான் கேட்பாங்க... நாங்க இங்கே மானம் மரியாதையோட இருக்கிறோம் சார்... நீங்க என்னோட இந்த நேரத்தில என் flat கு வாறது சரி இல்ல sir" என்று புலம்பியபடி அவனுடன் lift இல் நுழைந்தாள். "sir இப்போ வெளியே போகப்போறிங்களா இல்லையா " என்றவனுக்கு பொறுமை காற்றில் பறந்தது. " வேணும்னா நீ வெளியே போடி" என்று கர்ஜித்தவன் அவளை வெளியில் தள்ளினான். எதிர் பார்க்காத தாக்குதலில் வெளியில் விழுந்தவள் அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள் . அவளை சட்டை செய்யாமல் விசிலடித்தபடி லி.ப்டை மூடினான். கண்களில் கோர்த்திருந்த நீர் கண்ணால் வழிய அவள் நிக்கும் பொது லிப்ட் திறந்தது. "come in" என்றான் .

" நான் வரமாட்டேன்" என்று விம்மியபடி குழந்தை போலெ நின்றவளை பார்த்து லி்ப்டை hold இல் போட்டு விட்டு கைகளை பாக்கெட்டுக்குள் வைத்தபடி " your wish .. but நான் ஒன்றும் உன்னை கொண்டு விடுவதத்திற்கு இங்கே வரல... அதற்கு நீ worth உம் இல்லை. I have my own flat here ... உன் வீட்டுக்கு இரு வீடுகள் தள்ளி 3D ல தான் நான் இருக்கிறேன்.. ஓவராக கற்பனை பண்ணாமல் வேலையை பாரு... என்றாலும் உனக்கு over confidence தான்..." என்றபடி lift ஐ மூடி புறப்பட்டான் தனது தளத்தை நோக்கி.

அவளுக்கு ஒரு பக்கம் அவமானமாகவும் வேதனையாகவும் இருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. கீர்த்தனா பார்த்தால் கேள்வி கேட்டு குடைவாள் என்ற பயத்தில் tissue paper இனால் கண்களை துடைத்தவள் மனசுமையுடன் தன் அறையை நோக்கி நடந்தாள்.

ஆத்ரேயன் மனம் வேதனையில் உழன்று

கொண்டிருந்தது. தான் ஏன் அவளை காயப்படுத்துகிறோம் என்று அவனுக்கு விளங்கவில்லை. இனி அவளுடன் கதைப்பதில்லை என்று முடிவெடுத்தபடி கோட்டை கழட்டி sofa வில் போட்டவன் உடை மாற்றாமல் அப்படியே கட்டிலில் தொப்பென்று விழுந்து உறங்கிவிட்டான்.

வீட்டுக்கு வந்ததும் தான்வைஷ்ணவி கவனித்தாள் கீர்த்தனா இருட்டில் அமர்ந்திருந்ததை. light ஐ போட்டு பார்த்ததும் தான் விளங்கியது கீர்த்தனாவின் அழுத முகம். "நம்மக்கு போட்டியா அழுத்திருக்கிறாள் போல" என்று வைஷ்ணவியின் குறும்பு மனம் நினைத்துக்கொண்டது. "என்னடி ஆச்சு? ஏன் இப்படி முகம் வீங்கி இருக்கு அழுதியா?" என்று கேட்டதுக்கு கீர்த்தனா "please leave me alone" என்று கத்தியபடிகட்டிலில் விழுந்து படுத்துவிட்டாள். "எனக்கு இண்டைக்கு நாளே சரி இல்லை.. அவங்கவங்க பிரச்சனைக்கு நம்ம தல உருளுது " என்று புலம்பியபடி குளிக்க சென்றாள்.

எதனையும் இலகுவாக எடுத்து கொண்டும் உடனே இயல்புக்கு திரும்பி விடும் வைஷ்ணவிக்கே இன்று எல்லாம் யோசித்து கொஞ்சம் தலை வலிப்பது போல் இருந்தது. மாத்திரையை போட்டவள் game விளையாடி கொண்டு படுக்கையில் சரிந்தாள்.

அடுத்தநாள் எல்லாருக்கும் பாரமான மனதுடன் விடிந்தது. கார்த்திக்குக்கு தயக்கமாக இருந்தது கீர்த்தனாவின் முகத்தில் முழிப்பதற்கு. கீர்த்தனாவுக்கு கார்த்திக்குடன் செல்வது பிடிக்கவே இல்லை. நண்பியிடம் சொன்னால் துருவி துருவி கேட்பாள் என்ற காரணத்துக்காக எதுவும் சொல்லாமல் இருந்தாள். அவள் முகம் சந்தோஷத்தை தொலைத்திருந்தது..

அடுத்த நாள் காலையில் கார்த்திக் தயக்கத்துடன் வைஷ்ணவி மற்றும் கீர்த்தனாவின் வாசலில் நின்றிருந்தான். அவனுக்கு தெரியும் calling bell அடித்தால் திறக்க போவது கீர்த்தனா தான் என்று. அதனால் சத்தம் போடாமல் கதவுப்பக்கம் முதுகு காட்டிதொலைபேசியை நொண்டியபடி

நின்றிருந்தான். கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் மனது தாறுமாறாக அடித்து கொண்டது.

இயல்பு நிலைக்கு மாறிய வைஷ்ணவி தனது குறும்புத்தனத்தை தொடங்கிவிட்டாள். முதுகு காட்டியபடியே முன்னால் உள்ள lift ஐ நோக்கி நடந்தவனை பார்த்து " என்ன sir முதுகு பாபா போல நாங்க உங்க முதுகை தான் பார்த்திட்டு நடக்கணுமா ? " என்றபடி கலகல வென சிரித்தாள். யாரும் சிரிக்காததை கண்டு " ரொம்ப மொக்கையா ஜோக் சொல்லிடமோ ?" என்று தனக்கு தானே யோசித்துக்கொண்டிருந்தாள்.

lift காக காத்திருக்கும் போது தான் ஆத்ரேயனும் அவ்விடத்தை அடைந்தான். அவனை கண்ட கார்த்திக் " சார் இங்கேயா நீங்க இருக்கிறீங்க?" என்று கேட்டான். "yes " என்று சினேகமாக கீர்த்தனாவையும் கார்திக்கையும் பார்த்து புன்னகைத்தவன். வைஷ்ணவி இருப்பதை கண்டுக்கவே இல்லை. "என்ன கொடுமைடா இது? நாம யார் கண்ணுக்கும் தெரியிரமும் இல்லை நாம பேசினால் யாருக்கும் கேக்குதும்

இல்லை" என்று சலித்தபடி லிப்ட் க்குள் ஏறினாள்.

லி்ட்டில் ஏற்கனவே ஆட்கள் இருந்ததால் இடம் கொஞ்சம் நெருக்கடியாக இருந்தது. கீர்த்தனாவும் கார்த்திக்கும் நெருங்கி நிற்க வேண்டி ஏற்பட்டது. நேருக்கு நேர் நின்றபோதும் கூட அவன் முகத்தை பார்க்காமல் தலை குனிந்தபடி நின்றவளின் நெற்றியில் பட்ட அவன் மூச்சுக்காற்று முதல் நாள் நடந்ததை நினைவுபடுத்தியது. பதறியபடி மற்றப்பக்கம் திரும்பி நின்றாள். அவனும் அதே தான் நினைத்தானோ தெரியவில்லை அவனும் மற்றைய பக்கம் திரும்பினான்.

திரும்பியதும் தான் கவனித்தான் தனக்கு மிக நெருக்கத்தில் ஆத்ரேயன் முகம் இருந்ததை. "இதென்ன கஷ்டகாலமப்பா.." என்று முணுமுணுத்தவாறே தலையை லிப்ட் ஐ நோக்கி சுழற்றினான். "என்ன கார்த்திக் இன்று தான் lift ஐ புதுசா பார்க்கிங்க போல" என்று கிண்டலடித்தவாறே ஆத்ரேயன் லி்ட்டில் இருந்து வெளியேறினான். "ஹி ஹி .."

என்றவாறு கார்த்திக்கும் சிரித்தவாறே சமாளித்தான். "இந்த நெட்டையனின் மொக்கை ஜோக்குக்கு மட்டும் பல்லை காட்டுறதை பாரு" என்று மனதுக்குள் கார்த்திக்கை திட்டி தீர்த்தாள் வைஷ்ணவி . அவள் ஜோக்குக்கு அவன் சிரிக்கவில்லை என்ற ஆதங்கம் அவளுக்கு.

வழமையாக முன்னுக்கு ஏறும் கீர்த்தனா பின்னுக்கு ஏறினாள். வைஷ்ணவியும் எதுவும் கேட்காமல் முன்னுக்கு ஏறினாள். "ஏண்டி உனக்கு என் மேல கொஞ்சமாவது அக்கறை இருக்கா?" என்றவாறு திரும்பி கீர்த்தனாவை பார்த்தவள் "கீத்து என்ன இது? உதட்டில் காயமா இருக்கு? என்னாச்சு? யாரவது கடிச்சிட்டாங்களா?" என்று கேலியும் அக்கறையும் கலந்து வினவினாள். காரை start பண்ண போன கார்த்திக்கின் கைகள் அப்படியே அந்தரத்தில் நின்றது. கண்ணாடி மூலம் அவளுதட்டை பார்த்தவன் மிருகத்தனமான தன் செயலை நினைத்து தன்னை தானே கடிந்து கொண்டான்.

கண்ணாடி ஊடாக முறைத்த கீர்த்தனாவினை பார்த்து பயந்து தலையை குனிந்து கொண்டான். "இந்த வைஷ்ணவிக்கு எப்போ என்ன பேசுறதென்றே தெரியல..... புதுசு புதுசா தலையிடியை கொண்டு வருகிறாள்" என்று மனதுக்குள் கடிந்தவாறே car ஐ ஓட்ட தொடங்கினான். நடந்ததை சரியாக கணித்த தோழியை வெற்று பார்வை பார்த்தவள் " ஆமாடி கரப்பான் கடித்துவிட்டது" என்றால் சிரிக்காமல். " என்னை பார்த்தால் கரப்பான் போலவா இருக்கு" என்று வெளியில் கேட்கமுடியாத கேள்வியை மனதுக்குள் கேட்டு கொண்டான் கார்த்திக். "என்னவோ போ" என்று சலித்தபடி வைஷ்ணவி தொலைபேசியை நோண்ட தொடங்கிவிட்டாள்.

காதல் மலரும்.....

<u>யுகம்-4</u>

எல்லாரும் வெவ்வேறு விதமான மனோ நிலையுடன் ஆபீஸ்க்கு சென்றனர். கீர்த்தனாவும் கார்த்திக்கும் ஒருவரை ஒருவர் பார்த்து

கொள்ளவில்லை. பேசிக்கொள்ளவில்லை ஆத்ரேயன் அதன் பிறகு வைஷ்ணவியிடம் பேசுவதை தவிர்த்திருந்தான்.

அலுவலகத்துக்கு வந்தவர்கள் அவரவர் வேலைகளை பார்க்க தொடங்கினர். அப்போது தான் அனாமிகா வைஷ்ணவியை கூப்பிட்டு அனுப்பினாள். வைஷ்ணவியுடனான பேச்சை தவிர்ப்பதற்றக்காகவே அவள் சம்பந்தமான எல்லா வேலைகளையும் அனாமிகாவை மேற்பார்வை செய்ய சொல்லி இருந்தான். "may I come in " என்றவாறே உள்ளே சென்றாள் அனாமிகா. "மிஸ்.வைஷ்ணவி உங்க performance இந்த மாசம் ரொம்ப மோசமாயிருக்கு" என்றபடி ஒரு கடிதத்தை அவள் முன் வைத்தவள் "உங்களுக்கான warning letter இது. hope you will improve yourself" என்றவாறே அடுத்து அவள் முடிக்க வேண்டிய வேலைக்கான file ஐ நீட்டினாள். "ஓகே மேடம்" என்றவாறே அதை பெற்றுக்கொண்டவளுக்கு ஆத்ரேயனின் ஒதுக்கம் ஒரு நெருடலாய் இருந்தது.

அதன் பிறகு மேற்கொண்ட மீட்டிங்கிலும் ஆத்ரேயன் மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை. "இப்போ நான் என்ன பண்ணிட்டேன் என்று இந்த நெட்டையனுக்கு என் மேல் கோபம்? அவன் பேசிய பேச்சுக்கு நான் தான் கோபப்படணும்..... வர வர யாருமே சரி இல்லை... இந்த கீர்த்தனாக்கும் கார்த்திக்குக்கும் என்னவாச்சு? " என்று மனதுக்குள் அவனையும் தன் இரு நண்பர்களையும் அர்ச்சித்தவாறே மௌனமாக நடப்பதை கவனித்தாள்.

வீட்டுக்கு வந்தவள் அப்போதும் கீர்த்தனா அமைதியாக கட்டிலில் குப்பற படுத்து இருப்பதை பார்த்து மனம் நொந்து போனாள். இதுக்கு மேல் சும்மா இருந்தால் வேலைக்காகாது என்றவாறே அவள் திட்டினாலும் பரவாயில்லை என்றபடி "கீர்த்து எந்திரிடி" என்று உலுக்கினாள். "சும்மா இருடி" என்று முகத்தை நிமிர்த்தாமல் சொன்னவளின் குரலில் அவள் அழுதிருப்பது அப்பட்டமாக தெரிந்தது. அவளை சமாதான படுத்தி விடும் நோக்கில் அவள் தலையை வருடியவள் "என்ன என்றாலும் என்கிட்டே

சொல்லுடி... மன பாரம் குறையும்." என்று அவளை பின்னாலிருந்து அணைத்து கொண்டாள். அன்பை அள்ளி வழங்குவதிலும் வெறுப்பை காரி உமிழ்வதிலும் அவளுக்கு நிகர் அவள் தான்.

அரவணைப்புக்காக ஏங்கிய கீர்த்தனா உடனே எழுந்து வைஷ்ணவியை அணைத்துக்கொண்டு குலுங்கி குலுங்கி அழுதாள். விம்மி விம்மி அழுத்தவாறே நடந்ததை சொல்லி முடித்தாள். அதை கேட்டவளுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. சிரித்தால் கீர்த்தனாக்கு கோபம் வரும் என்பதால் அடக்கி கொண்டிருந்தாள். "கொஞ்சம் பொறு" என்றவள் எழுந்து சென்றவள் தண்ணீரை எடுத்து கொண்டு வந்து கொடுத்தாள். அப்போதும் அவள் விம்மல் நிக்கவில்லை. அழுததால் அவர் கூர் நாசியும் பட்டு கன்னங்களும் சிவந்து பொய் இருந்தது. அவளின் அழகை ரசித்தபடி " இதுக்கெல்லாமா அழுவாங்க" என்று கேட்டவள் கீர்த்தனா முறைக்கவும் உடனே தன் முகத்தை கடினமாக்கி கொண்டு " பச்சை பிள்ளை போல இருந்துட்டு பண்ற வேலைய பாரு... நீ

கவலைப்படாதே கீது நான் அவனை நாக்கை புடுங்கிற போல நாலு கேள்வி கேட்கிறேன்" என்று வீராப்பாக உரைத்தாள், மனதுக்குள் “எப்படியெல்லாம் performance கொடுக்க வேண்டி இருக்கு" என்று சலித்துக்கொண்டாள்.

நான் கேக்கிறேன் என்று கோபிக்காதே " அப்போ நீ சொன்ன கரப்பான் பூச்சி அவன்தானா? " என்று கேலியாய் கேட்டாள். கேட்டுவிட்டு வாயை பொத்தி கொண்டாள். நண்பியின் செய்கையை பார்த்து முறைக்க முயன்றவளுக்கு அது முடியாமல் போக சிரித்துவிட்டாள். " அவன் மேல ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தேன். இப்படி என் நம்பிக்கையை நாசமாகிவிட்டான். " என்று உண்மையான வருத்தத்துடன் கூறினாள் .

"அப்போ உனக்கு அவன் கிஸ் பண்ணினது பிரச்சனை இல்ல.. உன் நம்பிக்கையை குலைச்சது தான் பிரச்சனையா ? do you love him?" என்று கேட்டாள்.

"லூசு போல பேசாதடி .... எனக்கு அவன் மேலே

நிறைய மரியாதை இருக்கு... கண்ணியமானவன் கட்டுப்பாடானவன் என்று எப்போவும் நினைப்பேன்... ஆனால் அவனும் எல்லோரையும் போல சாதாரண ஆம்பிளை என்று நிரூபிச்சிட்டான். வலுக்கட்டாயமாக பெண்களை அடைய நினைக்கும் அவன் மேலே எப்போவும் எனக்கு காதல் வரவே வராது" என்று கண்டிப்புடன் பேசியவளை பிரம்மிப்புடன் பார்த்தாள் .

"இப்படி பண்ணாமல் எல்லாரையும் போல அவன் காதலை சொல்லி இருந்தா அத accept பண்ணி இருப்பாயா?" என்று கேட்டவளை நோக்கி "கண்டிப்பா யோசிச்சிருப்பன் " என்றாள். "அவசரபட்டிட்டியே கார்த்திக்" என்று வைஷ்ணவியால் அவனை மனதுக்குள் திட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் மனதுக்குள் இருவரையும் சேர்த்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் வர சந்தோஷமாக சிரித்துக்கொண்டாள். அப்போது தான் கதவு தட்டும் சத்தம் கேட்டது. உடனே

வைஷ்ணவி கதவை திறந்தவளுக்கு கார்த்திக்கை கண்டதும் சிரிப்பு சிரிப்பாக வந்தது. "வைஷு இன்று அக்காவின் மகனுக்கு 2nd birthday நீயும் கீர்த்தனாவும் மறக்காமல் வந்துருங்க" என்றவாறு வெளியேற முற்பட்டவனை "நீயே உள்ளே வந்து கீர்த்தனாவிடம் சொல்லு" என்றபடி அவனின் கையை பிடித்து இழுத்து உள்ளே சென்றாள்

"இல்லடி... நீயே சொல்லு...." என்று சொன்னவனை பொருட்படுத்தாது கீர்த்தனா முன்னால் அவனை கொண்டு நிற்பாட்டினாள். "இவளுக்கு அறிவே கிடையாதா?" என்று மனதுக்குள் இருவரும் அவளை திட்டி கொண்டிருந்தனர். முகம் பார்க்காமல் முழங்காலில் கைகளை காட்டியபடி இருந்தவளை நோக்கியவன் கண்களில் அவள் நாசியின் சிவந்த நிறம் சொல்லாமல் சொல்லியது அவள் அழுத்தத்தத்திற்கான அடையாளத்தை.

வேலை விட்டு வந்து உடை மாற்றாமல்

களைப்பாக இருந்த போது கூட அவளின் அழகு அவனை போதை கொள்ள செய்தது.. அவளின் அழகை இமைக்க மறந்தவனை நோக்கிய வைஷ்ணவி "அடேய் கரப்பான் பூச்சி.... சைட் அடிச்சது காணும் வந்த விஷயத்தை சொல்லுடா"என்றாள். அவள் சொன்னதை கேட்டவன் "உளறிட்டாளா?? " என்று மனதுக்குள் நினைத்தபடி... "கீர்த்தனா நைட் க்கு வாங்க" என்று தட்டு தடுமாறி சொன்னவன் விறு விறுவென்று வெளியேறினான்... " என்ன கார்த்திக் பொண்டாட்டிய ரூமுக்கு கூப்பிடுற போல கூப்பிடுற" என்று சத்தமாக உரைத்த வைஷ்ணவி கலகல வென சிரித்தாள். அது கார்த்திக்கின் காதிலும் விழுந்தது... "உன்ன போல ஒருத்தி காணும்படி என் வாழ்க்கைய பிரட்டி போடுறதுக்கு " என்று நினைத்து மானசீகமாக தலையில் அடித்துக்கொண்டான்

"உன்னட்டை பொய் சொன்னான் பாரு" என்றபடி கீர்த்தனா குளிக்க போய்விட்டாள். அனைவரும் சென்றதும் வந்த தனிமை வைஷ்ணவியை ஏதோ செய்ய "பச்..... போனிலும் சார்ஜ் இல்லை"

என்று முணுமுணுத்தபடி போவதற்கு வேண்டிய உடையை எடுத்தாள்.

கீர்த்தனாவும் வைஷ்ணவியும் ஒரே மாதிரி சுடிதார் அணிந்து செல்ல ஆயத்தமானர். கீர்த்தனா வெள்ளை சுடிதாருக்கு ஏற்றபடி தனது நீள முடியை பின்னி... பொருத்தமான நகைகள் அணிந்து பார்க்க தேவதை போல காட்சியளித்தாள்... வைஷ்ணவியோ தன் குட்டை முடியை போனி டைல் போட்டவள் காதில் தோடை தவிர எந்த மேக்கப்பும் இல்லை.. நேரமாகியும் வராத தோழியை பார்த்து... " புகுந்த வீட்டுக்கு போறதுக்கு மேக்கப்பை பாரு " என்று கலாய்க்க . " நான் ஒன்னும் மேக்கப் பண்ணல கொஞ்சம் லிப்ஸ்டிக் தான் போட்டுகிட்டேன்" என்றபடி போக ஆயத்தமானாள்.

lift ஐ அடைந்ததும் அதே நேரத்தில் ஆத்ரேயன் t-shirt and denim jeans அணிந்து முடியை spike விட்டு கட்டுமஸ்தான உடலும் கூர்மையான நாசியும் என பாலிவுட் ஹீரோ போல வந்து சேர்ந்தான்.. போர்மல் உடையில் பார்த்ததை விட ஐந்து வயது

குறைந்து இளம் பையன் போல் நின்றவனை மலைப்பாக பார்த்தாள் கீர்த்தனா. " you are looking so handsome and young sir" என்றவளை பார்த்து வசீகரமாக சிரித்தவன் "you also looking gorgeous in this sharwar" என்றபடி lift இல் ஏறினான். " இதுகள் ரெண்டுக்கும் வேற வேலை யில்லை மாறி மாறி beautiful என்றதும் handsome என்றதும்... சை ..."...என்று மனதுக்குள் திட்டியபடி இருந்தாள் வைஷ்ணவி... அவனும் dinner க்கு தான் வருகிறான் என்று யூகித்தவர்கள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.. கார்த்திக் வீட்டுக்கு சென்றவர்களை வரவேற்றவனின் கண்கள் அழகு தேவதையாக ஜொலித்த கீர்த்தனாவினை ஒரு முறை அளவிட்டது... அவள் பார்க்கும் போது சடாரென வைஷ்ணவியை பார்த்தவன்... " வெள்ளை சுட்டியில் தேவதை போல சூப்பரா இருக்கா வைஷு." என்று உளறி கொட்டினான்... அதை கேட்ட ஆத்ரேயனின் விழிகள் ஒரு கணம் எட்டி வைஷ்ணவியை பார்த்தது... உடனே வைஷ்ணவி.. " சும்மா சொல்லி மானத்தை வாங்காம வாடா. " என்றவாறு வீட்டுக்குள்

சென்றாள்.

கீர்த்தனாவினதும் கார்த்திக்கினதும் மௌனம் வைஷ்ணவிக்கு கவலையை கொடுத்தது.. சாப்பிடும் போது கூட கீர்த்தனாவும் ஆத்ரேயனும் பேசிக்கொண்டிருந்தனர். உடனே வைஷ்ணவி தனியாக இருந்த கார்த்திக்கிடம் வந்து... " கார்த்திக் நீ கீத்துவ லவ் பண்றியா??" என்று கேட்டாள்... ஏற்கனவே கீர்த்தனா தன்னை கண்டுகொள்ளாமல் ஆத்ரேயனுடன் பேசியதில் கோபத்தில் இருந்தவன் " காதலிக்காமல் பெண்களுக்கு முத்தமிட நான் ஒன்றும் தரம் தாழ்ந்து போகவில்லை" என்றாள் கூடாக... " Hey ரிலாக்ஸ் கார்த்திக்... எதுக்கு இப்படி டென்ஷன் ஆகிறா???" என்று கேட்டாள்..

" பின்ன என்னடி நான் ஒருத்தன் இருக்கன் என்ன கண்டுக்காம எல்லாரோடையும் கதைக்கிறாள் ..." என்று ஆத்ரேயனையும் கீர்த்தனாவையும் சுட்டி காட்டினான். மேலும் "எங்க அவள் என்னை விட்டு போய்விடுவாளோ என்று பயத்தில் தான்

அன்று kiss பன்னினேன்... மூன்று வருஷ காதலடி" என்றவனை பார்க்க வைஷ்ணவிக்கு பாவமாக இருந்தது.

இழுத்து மூச்செடுத்தவள் " நீ அவசரப்பட்டுவிட்டாய் கார்த்திக் " என்று தொடங்கி கீர்த்தனாவின் மனநிலையை கூறிமுடித்தாள்.. " ஐயோ உண்மையவாடி சொல்றா.?" என்று அவனுக்கும் அது அதிர்ச்சியாக இருந்தது... " இது உனக்கு தேவையா" என்று தன்னை தானே சுட்டி காட்டி வடிவேல் பாணியில் கதைத்தவனை பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாள்... அவள் மனசுக்குள் இருக்கும் காதலை கொண்டுவர ஒரே ஒரு வழி தான் இருக்கு என்று யோசித்தவள் தன் திட்டத்தை கார்த்திக்குக்கு தெரிவித்தாள்.. " என்னது??? " என்று அதிர்ச்சியடைந்தவன் மேலும் " பிள்ளையார் பிடிக்க பொய் குரங்கை மாறினா என்னடி பண்றது??" என்றான் பாவமாக...

"நல்லதே நடக்கும்" என்றவள் திட்டத்தை செயல்படுத்த தொடங்கினாள். அவர்களுக்கு

தெரியவில்லை அவர்களின் திட்டம் தூங்கி கொண்டிருந்த சிங்கத்தை தட்டி எழுப்ப போகிறது என்று...

பேசிக்கொண்டிருந்தவர்கருகில் வந்த வைஷ்ணவி கீர்த்தனாவின் காதில் ரகசியமாக " இந்த நெட்டையனோட உனக்கென்ன பேச்சு வேண்டி கிடக்கு பேசாம எழுந்து வாடி " என்றாள். ஆனால் அது தெளிவாக ஆத்ரேயனுக்கு விளங்கியது... அதை கேட்டு சங்கடப்பட்ட கீர்த்தனா " sorry sir , have to go.. excuse me " என்றாள்.. " no problem you carry on " என்றவாறு தலையை மற்ற பக்கம் திரும்பியவன் மறந்தும் வைஷ்ணவியை பார்க்கவில்லை... அவளும் அதனை சட்டை செய்யாமல் கீர்த்தனாவை இழுத்து கொண்டு போனாள்.

" கொஞ்சம் கூட உனக்கு manners இல்லையாடி ??? அவர் என்ன நினைச்சிருப்பார்?? " என்று புலம்பியவாறே பின்னால் சென்றாள். "உன் அவர்

என்ன நினைச்சாலும் எனக்கு கவலை இல்லை.... உன் கூட personal ஆக கொஞ்சம் பேசணும்" என்றவள் அவளை balcony க்கு கூட்டி வந்தாள். " இப்போ சொல்லு உனக்கு கார்த்திக்கை பிடிக்கலையா?? " என்று கேட்டவளை பார்த்து... " நான் அப்போ சொன்னதை தான் இப்போவும் சொல்றன்.. இனி இந்த கதை கதைப்பது என்றாள் என்னோட கதைக்காதே." என்றாள் கடுமையாக... " So உனக்கு பிடிக்கல அப்படித்தானே.. " என்றவளிடம் " நீ என்ன செவிடா?? " என்றாள்.

"அப்போ நான் கார்த்திக்கை love பண்ணலாம் என்று இருக்கன்.. அவனுக்கு உன்னால கொஞ்சம் depression ஆக இருக்கு... already எனக்கு அவன் மேல one side love இருக்கு.. அவனை இந்த நிலையில சத்தியமா பார்க்கமுடியல" என்று குனிந்தபடி வராத கண்ணீரை துடைத்தவளை , நம்புவதா வேணாமா என்று சந்தேகமாக பார்த்தாள்.

அவளின் சேட்டைகள் தெரிந்தவள் தான் கீர்த்தனா, ஆனால் அவள் எப்போதும் இவ்வாறு

கவலைப்பட்டு கதைத்ததில்லை. "எப்படி இருந்தாலும் உண்மை வெளியில் வர தானே வேணும்" என்று நினைத்தவள். "all the best " என்றபடி அவளை விட்டு விலகி ஹாலுக்குள் சென்றாள்... அவள் கண்ணில் கண பொழுதில் தெரிந்த வலி தான் வைஷ்ணவிக்கு துருப்பு சீட்டானது. ஒரு பெருமூச்சை விட்டவள் " உனக்கு treatment தரணும்டி" என்றபடி கார்த்திக்கிடம் சென்று இருவரும் தங்கள் அடுத்த திட்டத்தை போட்டனர்.

எல்லாம் முடிந்து வீடு செல்லும் பொது கூட கீர்த்தனா கார்த்திக்கிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. " ஏதோ rape பண்ணின போல ரொம்ப தான் சீன் போடுறாள்" என்று கார்த்திக் மனதுக்குள் அவளை அர்ச்சித்து கொண்டிருந்தாள்.. அன்று நடந்த நினைவு அவனை கொள்ளாமல் கொன்றது... அவள் இதழை மீண்டும் சுவைக்க தோன்றிய ஆர்வத்தை கட்டுப்படுத்தியவாறு ceiling ஐ பார்த்தான்,

" என்ன கார்த்திக் இப்போ தான் உங்க வீட்டை சுற்றி பார்க்கிறீர்கள் போல " என்று கிண்டலடித்த ஆத்ரேயன் அவனிடம் கை குலுக்கி விடை பெற்றான்... " எல்லாம் உன்னால தாண்டா பாவி." என்று மனதுக்குள் அர்ச்சித்தவன் .... " Thanks for coming sir " என்றபடி சினேகமாக புன்னகைத்து lift ஐ நோக்கி அவர்களுடன் நடந்தான்

அப்போது வைஷ்ணவி யாரும் எதிர் பார்க்காத விதமாக " bye கார்த்திக்.. "I miss you " என்றபடி அவனை அணைத்தாள் . இதனை கீர்த்தனா ஆச்சரியமாகவும் ஆத்ரேயன் நெற்றியை சுருக்கியும் பார்த்தனர். கார்த்திக்கும் பதிலுக்கு அணைத்துவிட்டு அவள் கன்னத்தோடு தன் கன்னத்தை உரசியவன் கடைக்கண்ணால் கீர்த்தனாவை நோட்டமிட்டான். அவள் கண்களில் என்ன தெரிந்தது என்று அவனால் ஊகிக்க முடியவில்லை "டேய் அங்கே பார்த்தது காணும் என்ன விடுடா. என்று அவனுக்கு கேட்கும் குரலில் மட்டும் கூறினாள். சிரித்துக்கொண்டே அவளை விட்டவன். "bye

வைஷு குட்டி" என்றபடி தன் வீட்டை நோக்கி நடந்தான். கீர்த்தனாக்கு ஏதோ ஒன்று உடைந்தது போல இருந்தது. அவளுக்கு தெரியும் கார்த்திக் இவ்வாறு விளையாட கூடியவனல்ல என்று.

கார்த்திக் அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து உரசியதையும் குழைந்து பேசியதையும் கண்ட ஆத்ரேயன் சினத்தின் உச்சத்தில் இருந்தான். வீட்டுக்கு வந்தவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. கதவை திறந்து கொண்டு வைஷ்ணவியிடம் பேச வேண்டும் என்ற வெறியில் அவள் வீட்டை நோக்கி சென்றான்.

அவன் வீட்டருகில் சென்றதும் வராந்தாவில் கீர்த்தனாவும் வைஷ்ணவியும் கதைத்தது தெளிவாக விளங்கியது. கீர்த்தனா அவளை நோக்கி " உன் பெயரை கெடுத்து கொள்ளாதே." என்று உரைத்தாள். " ஆஹா பொறாமை start ஆகிடுச்சே... கீது I want more emotion " என்று மனதுக்குள் நக்கலடித்தவள் முகத்தை சீரியஸ் ஆக வைத்து கொண்டு." காதலனை கட்டிப்பிடிக்கிறது தப்பிலேயே" என்றாள்.

சொல்லி விட்டு தான் நிமிர்ந்தாள், கைகளை கட்டியபடி வாசலில் ருத்ரமூர்த்தியாக ஆத்ரேயன் கீர்த்தனாக்கு பின்னால் நின்று கொண்டிருப்பதை. அவளின் அதிர்ச்சியை பார்த்து திரும்பிய கீர்த்தனாவும் அதிர்ந்து நின்றாள். வாயை பிளந்து நின்றவர்கள் முன்னாடி சொடக்கிட்டவன், "இது வராந்தா யாரும் பார்ப்பாங்க... lets go inside " என்று அவர்களின் கதவை நோக்கி கை காட்டினான்.

கையிலிருந்த திறப்பினால் கதவை திறந்து உள்ளே சென்ற கீர்த்தனா "உள்ளே வாங்க சார்," என்றாள். உள்ளே சென்றவன் திரும்பி "உனக்கு மட்டும் தனியா சொல்லணுவாமா? உள்ளே வா " என்றான் வைஷ்ணவியை நோக்கி. அவளும் " உன் பாடு இன்று திண்டாட்டம் தான் வைஷு" என்று முனகியபடி உள்ளே வந்தாள். கதவை சாத்தியவன் கதவில் ஒரு காலை முட்டு கொடுத்து இரு கைகளையும் கட்டி கொண்டு வைஷ்ணவியை கூர்ந்து பார்த்தான். அவன் பார்வை வீச்சை தாங்காமல் ஒரு கணம்

குனிந்தவள், "நீ எதற்கு பயப்படணும்..நீ தான் ஒரு தப்பும் செய்யவில்லையே" என்று மனசாட்சி கேள்வி கேட்க நிமிர்ந்து அவன் பார்வை வீச்சை தாங்கி நின்றாள்.

"நீ கார்த்திக்கை love பண்றியா?" என்று நேரடியாக கேட்டான். பக்கத்தில் இருந்த கீர்த்தனாவை பார்த்தவள் "எங்கே வந்து என்ன கேள்வி கேக்குது பாரு." என்று அவனை மானசீகமாக கடிந்தவள். வெண்ணை திரண்டு வரும் பொது தாழியை உடைக்க விருப்பமில்லாமல், "yes I love him" என்றால் நெஞ்சை நிமிர்த்தியபடி.

அவளின் திமிர் அவனின் கோபத்தை பன்மடங்காகியது. அவளை காயப்படுத்த வேண்டும் என்ற வெறி மீண்டும் உருவாக்கியது.

“so physically you need some support… right?” என்றவாறு ஒற்றை புருவத்தை தூக்கியவனை வெறி கொண்டு பார்த்தவள்,“yes definitely, காதலில் அதுவும் உள்ளடக்கம் தானே..... moreover உங்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய

அவசியமில்லை. இது உங்க ஆபீஸ் இல்லை இப்படி தடாலடியாக வந்து கேள்வி கேட்பதற்கு.... எனக்கும் என் காதலனுக்கும் ஆயிரம் இருக்கும் அது உங்களுக்கு அவசியமில்லாதது. so please get out of my house" என்று அனல் பறக்க பேசியவளை கண்டு ஆத்ரேயனின் பொறுமை காற்றில் பறந்தது.

அவள் பேசி முடிக்க முன் அவனின் வலது கரம் அவளின் இடது கன்னத்தை பதம் பார்த்திருந்து. எல்லாவற்றையும் அதிர்ச்சியுடன் பார்த்த கீர்த்தனா "சார்" என்றபடி வைஷ்ணவி அருகில் வர முற்பட்டவள், அவனின் சினம் கொண்ட பார்வையையும் வரவேண்டாம் என்ற தோரணையில் காட்டிய கையசைவையும் கண்டு ஒரு கணம் விக்கித்து நின்றாள். கையால் கன்னத்தை பொதியபடி கோர்த்திருந்த கண்ணீர் கீழே விழாமல் இருக்க அரும்பாடு பட்டாள். " இவன் முன்னாலே அழாதே" என்று மனதுக்கு கடிவாளமிட்டு கொண்டிருந்தாள்.

அப்படியும் கோபம் குறையாதவன் அவளின்

கழுத்தை பிடித்து அவளை சுவரில் ஒண்ட வைத்தவன் கோபம் கொப்பளிக்க "அவன் உனக்கு காதலன் இல்லடி கள்ள காதலன். இப்பவும் நீ Mrs வைஷ்ணவி ஆத்ரேயன் தான்..." என்று உறுமியவாறு அவளை சுவருடன் சாய்த்து அவள் உதடுகளை தன் உதடுகளால் அழுந்த மூடினான். தன் கோபத்தை தணிக்க அவனுக்கு அந்த இதழொற்றல் தேவையாக இருந்தது. கண நேரத்துக்கு பின் அவள் உதடுகளை கடித்துவிட்டு அவளை உதறி தள்ளியவன் தன்னை சமநிலைப்படுத்தும் பொருட்டு ஜன்னல் அருகே வந்து ஜன்னலை திறந்துவிட்டு பாக்கெட்டில் இருந்த சிகெரெட்டை வாயில் பற்றவைத்தவன் அதனை புகைக்க தொடங்கினான்.

கீர்த்தனாக்கு பேரிடியாகவும் தர்மசங்கடமாவும் இருந்ததோடு மட்டுமில்லாமல் வைஷ்ணவிக்கும் அது அதிர்ச்சியாக இருந்தது. அவன் அறைந்ததை தாங்கிகொண்டவாளால் அவனின் முத்த தாக்குதலை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளின் மூளை வேலை நிறுத்தம் செய்தது. அவள் கையை மீறி கண

நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்திருந்தது. கொஞ்ச நேரம் அங்கு மௌனம் நிலவியது.

கீர்த்தனா மனதுக்குள் " அடிப்பாவி..... நீயும் எனக்கு உண்மையா இருக்கவில்லையா?" என்று வைஷ்ணவி மீது அர்ச்சனையை தூவி கொண்டிருந்தாள். இப்படியொரு பெரிய விடயத்தை தன்னிடமிருந்து மறைத்து தனது நட்புக்கே களங்கமேற்படுத்திவிட்டாள் என்ற ஆதங்கத்தை தாங்க முடியாமல் அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது.

வைஷ்ணவிக்கும் அதே நினைப்புதான். தோழி தன்னை தப்பாக நினைத்திருப்பாள் என்ற எண்ணமே அவளுக்கு மேலோங்கி இருந்தது. நிதானத்துக்கு வந்தவள் ஆத்ரேயனின் முதுகை நோக்கி "விவாகரத்து ஆன பிறகு கணவனின் பெயர் சொல்லி அழைப்பது இல்லை Mr ஆத்ரேயன்.... நான் இப்போதும் Miss,வைஷ்ணவி மலர்வேந்தன் தான்,,,, எனக்கு இன்னொருவரை காதலிக்கவும் கரம் பிடிக்கவும் முழு உரிமை இருக்கிறது.. என்னில் உங்களுக்கு எந்த

உரிமையும் அதிகாரமும் இல்லை." என்றாள் கடிக்கப்பட்ட தன் உதடுகளை தடவியவாறு.

அதனை கேட்டு சத்தமாக சிரித்தவன், திரும்பி அவளை நெருங்கி நின்று கைகளை மார்புக்கு குறுக்காக கட்டியபடி " விவாகரத்து ஆகி இருந்தால் நான் ஏன் உன்னை Mrs வைஷ்ணவி ஆத்ரேயன் என்று அழைக்கப்போகிறேன்?" என்றான் ஒற்றை புருவத்தை உயர்த்தி. "இதெப்படி சாத்தியம்" என்று மனதுக்குள் நினைத்தவள் அதனை கேட்கப்போக கையை காட்டி அவள் பேசுவதை நிறுத்தியவன்.

"விவாகரத்து எடுத்து விட்டு நீ என்ன வேணும் என்றாலும் பண்ணிகொள். நான் கண்ணசைத்தால் ஆயிரம் பெண்கள் என் பின்னால் வருவார்கள். எனக்கு உன்னை போல தகுதி இல்லாதவளுடன் வாழ விருப்பமில்லை. என் அழகுக்கும் அறிவுக்கும் நீ கால் தூசு...good bye" என்று இறுகிய முகத்துடன் கதவை திறந்து வெளியேறினான்.

அவனின் காயப்படுத்தும் பேச்சில் தன்னை மறந்து நின்றவள், அவனின் எந்த செயலையும் கவனிக்கவில்லை. அவளின் முழு மனதும் :"அதெப்படி விவாகரத்து ஆகாமல் இருக்கும்?" என்று யோசித்து கொண்டே இருந்தது. கீர்த்தனாவை பார்க்க சங்கடப்பட்டுக்கொண்டு குளியறையில் சென்று கதவை சாத்தி கொண்டாள். கதவில் சாய்ந்து நின்று "கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்த சோதனை.. எனக்கு வாழ்க்கையில் நிம்மதியே இல்லையா?" என்று புலம்பியவளின் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது.

தன் வீட்டுக்கு சென்ற ஆத்ரேயனோ, ஏன் அவளை முத்தமிட்டோம் ஏன் அவளை காயப்படுத்துகிறோம் என்று புரியாமல் தடுமாறியபடி பிரிட்ஜ் இல் இருந்த மதுபானத்தை எடுத்து அருந்தியவன் அப்படியே கட்டிலில் சரிந்தான்.

எல்லாவற்றையும் பார்த்த கீர்த்தனா அதிர்ச்சியுடன் sofa வில் அமர்ந்தாள். நண்பியின்

வாழ்க்கைக்காக கவலைப்படுவதா அல்லது அவளின் அவள் தனக்கு செய்த துரோகத்தை நினைத்து கோபப்படுவதா என்று புரியாமல் கலவையான உணர்ச்சிகளில் இருந்தாள். ஆத்ரேயனை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. "வைஷ்ணவி தேவையில்லை என்றால் விலகி செல்ல வேண்டியது தானே..ஏன் அவளை முத்தமிட வேண்டும்?" என்று ஒரே கேள்வியை திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டாள்,அதற்கு விடை தேடும் பொருட்டு.

காதல் மலரும்.....

<u>யுகம்-5</u>

குளியறையில் வெம்மை தீர குளித்து விட்டு வெளியே வந்தவள், கீர்த்தனா உறங்கி இருப்பதை பார்த்து நிம்மதியாக பெருமூச்சு ஒன்றை விட்டாள். கீர்த்தனாவும் தனது நண்பிக்கு தர்மசங்கடத்தை அளிக்க கூடாது என்ற நல்லெண்ணத்தில் தூங்குவதற்கு

சென்றிருந்தாள். கட்டிலில் படுத்தவளுக்கு தூக்கம் வரவில்லை. அவனின் முத்தம் அவள் சிறுக சிறுக உணர்ச்சிகளை அடக்கி கட்டிவைத்திருந்த அரணை ஒரு நொடியில் உடைத்தெறிந்தது. விட்டத்தை பார்த்தது போல படுத்தவள் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மீட்ட தொடங்கினாள்.

****

Principal office க்குள் ஒரே களேபரமாக இருந்தது. வாயிலிருந்து ரத்தம் வடிந்தபடி அந்த 15 வயது சிறுவன் ஆத்ரேயன் கண் நிறைய கோபத்துடன் நின்றிருந்தான், பக்கத்தில் ஒரு கண் வீங்கிய நிலையில் பருத்த உடலுடன் 12 வயது சிறுமி வைஷ்ணவி அவனை முறைத்து கொண்டு நின்றிருந்தாள். இருவரையும் கூர்மையான பார்வை பார்த்த அதிபர் அங்கு நின்ற காவலாளியிடம் இவர்கள் இருவரினதும் சகோதரர்களை வர சொல் என்று கூறினார். சிறிது நேரத்தில் அவ்விடத்தை அடைந்தனர் ஆத்ரேயனின் அண்ணா ஆதித்யனும்

வைஷ்ணவியின் அக்கா வர்ஷினியும்.

ஆத்ரேயன் அருகில் வந்த ஆதி "என்னடா பண்ணி வச்சு இருக்க?" என்று அடக்கிய கோபத்துடன் ரகசியமாக கேட்டான். அவனுக்கு பதிலளிக்காமல் அவன் அப்போதும் வைஷ்ணவியை முறைத்து கொண்டு நின்றிருந்தான். ஆனால் கண் வீங்கிய வைஷுவை கண்டா வர்ஷினியோ "அம்மு என்னாச்சுடா? கண் இப்படி வீங்கி இருக்கு?" என்று உண்மையான பரிவுடன் அவள் கண்ணை ஆராய்ந்தாள். அவளுக்கு நன்கு தெரியும் எப்படியும் தன் தங்கை சண்டைக்கு போகமாட்டாள் வந்த சண்டையை விடமாட்டாள் என்று. அதற்கு வைஷ்ணவியோ "இவன் தான் அக்கா என்னை குண்டு குண்டு என்று கூப்பிட்டவன் . அப்படி கூப்பிடாதடா என்று சொல்லியும் கூப்பிட்டான் .எனக்கு வந்த கோபத்துக்கு நான் அவன் வாயிலேயே குத்து விட்டேன், படுபாவிப்பய என் கண்ணில குத்தி போட்டான். கிண்டல் பண்ணினது அவன் தப்பு தானே அக்கா:?" என்றவள் அவன் வாயில்

குத்தியதத்திற்க்கான காரணம் அவன் கெட்ட வார்த்தையில் தன்னை அசிங்கமாக திட்டியது என்பதனை மறைத்துவிட்டாள். அதனை சொன்னால் அவன் பாடு திண்டாட்டம் என்று பாவப்பட்டு தான் அதனை மறைத்ததே. "ரொம்ப வலிக்குதாடா?" என்று பரிவுடன் அவளை தடவியவள் ஆதித்யனை நோக்கி ஒரு சோகமான பார்வையை பார்த்தாள். ஆதித்யனும் அவளை தான் பார்த்து கொண்டிருந்தான். "டேய்.. நான் உன் தம்பி வாய் உடைஞ்சு போய் இருக்கிறேன்.. உனக்கு ரொமான்ஸ் கேக்குதா?" என்று ரகசியமாக கர்ஜித்தவனை பார்த்து அடக்கி வாசித்தான். ஆதித்யனுக்கு ஆத்ரேயனை விட இரு வயதுகள் அதிகம்.. ஆனால் மென்மையான சுபாவம் கொண்டவன். ஆத்ரேயனின் கோபம் என்றால் வீட்டில் எல்லாருக்கும் ஒரு வித பயமிருக்கும் ஆதியையும் சேர்த்து.

அதிபர், வந்தவர்கள் இருவரையும் நோக்கி "இவங்களை sick room க்கு கொண்டு போய் first aid கொடுங்க.. உங்கப்பா இருவரையும் வர சொல்லி இருக்கிறேன். அவங்களிடம் பேசி கொள்ளலாம்."

என்றார். அதற்கு அதிர்ந்தவர்கள் பெரியவர்கள் மட்டுமே. சின்னவர்கள் இருவரும் சாதாரணமாக இருந்தனர். சிறிது நேரம் கழித்து ஒரே காரில் வந்து இறங்கினர் மலர்வேந்தனும் கார்த்திகேயனும்.

அதிபர் இருவரையும் நோக்கி நடந்ததை விவரித்தார். "இது உங்க பசங்களுக்கு last warning இனி இந்த பிரச்சனை வராமல் நீங்க தான் பார்த்துக்கொள்ள வேண்டும். என்றார் "ok sir " என்றவர்கள் பசங்களை பார்க்க சென்றனர்.

அங்கு நின்ற வர்ஷினியையும் ஆதியையும் பார்த்து "உங்க ரெண்டு பேருக்கும் உங்க தம்பி தங்கச்சியை ஒழுங்கா பார்த்துக்க தெரியாதா?" என்று திட்டியபடி மலர்வேந்தன் ஆத்ரேயனிடமும் கார்த்திகேயன் வைஷ்ணவியிடமும் சென்றனர். இதை பார்த்த ஆதி "ஆமா உங்க பசங்க குழந்தைங்க பாருங்க.." என்று வெளியில் திட்ட முடியாததை மனதுக்குள் திட்டி முடித்தான்.

ஆத்ரேயனின் தலையை வருடியவர் "வலிக்குதப்பா?" என்று குரலில் அக்கறையுடன் வினவினார். ஆண் குழந்தை இல்லாத மலர்வேந்தனுக்கு ஆத்ரேயன் மேலே தனி பாசம். யார் சொன்னாலும் கேட்காத ஆத்ரேயன் அவன் அன்புக்கு மட்டும் அடிமை. தன் சின்ன மகள் மேல் கொள்ளை பிரியம் இருந்தாலும் ஆத்ரேயனை அவளுக்கு முன்னாள் விட்டு கொடுக்க மலர்வேந்தனுக்கு விருப்பமில்லை. அவருக்கு எப்போதும் ஆத்ரேயனின் ஆளுமை மேல் ஒரு பிரம்மிப்பு இருக்கும். கார்த்திகேயனும் மலர்வேந்தனும் ஒரே கட்டுமான துறை கொம்பனியில் பார்ட்னர்ஸ் ஆக இருந்தனர். அவர்களின் கம்பெனி இந்தியா முழுதும் பரந்து கிடந்தது. சிங்கப்பூரிலும் ஆரம்பிக்க அடித்தளமிட்டனர். தன் சின்ன மகனை எப்போதும் கடிந்து கொண்டிருக்கும் கார்த்திகேயனிடம் மலர்வேந்தன் கூறுவார் "அவன் நீ எதிர்பார்க்காத எட்டாத உயரத்துக்கு வருவான் பாரு" என்று.... "உன் சின்ன மருமகனை நீ தான் புகழ வேண்டும்" என்று

அவரும் பதிலுரைப்பார். அதே போல் துறு துறுவென பேசி கொண்டு சிரித்து விளையாடும் வைஷ்ணவி என்றால் கார்த்திகேயனுக்கு உயிர். "அந்த ராஸ்கல் என்ன சொன்னாலும் காதில வங்கிக்காதம்மா. குண்டா இருந்தா தான் அழகே.... அந்த மடயனுக்கு அதெல்லாம் விளங்காது." என்று மகனுக்கு திட்டியபடி வைஷ்ணவியை வருடி கொடுத்தார். ஏற்கனவே கோபத்திலிருந்த ஆத்ரேயனின் முகம் கோரமாகி இருந்தது. இதனை கவனித்த ஆதி "ஆகா,..அப்பா....சனியனுக்கு தந்தி அடிச்சுட்டாரே... இண்டைக்கு யார் யார் தலை உருளப்போகுதோ?" என்று மனதுக்குள் யோசித்து கொண்டிருந்தான்.

மலர்வேந்தனும் கார்த்திகேயனும் நெருங்கிய நண்பர்கள் மட்டுமல்ல தூரத்து உறவினர்களும் கூட. மாலதியின் ஒன்று விட்ட அண்ணன் தான் மலர்வேந்தன். மலர்வேந்தன் கோகிலா தம்பதியினருக்கு இரு பெண் குழந்தைகள் வர்ஷினி மற்றும் வைஷ்ணவி. வர்ஷினி அவள் தாயின் ஜாடை, சிவந்த நிறமும் கூரான நாசியும்

மெல்லிய உடல்வாகு உடைய அழகியவள். வைஷ்ணவி தந்தையை போல மங்கிய நிறமும் குண்டான உடல் வாகு என இருப்பாள்.. இருவரையும் சகோதரிகள் என்று நம்புவது கடினம். அனால் கார்த்திகேயனின் இரு புதல்வர்களான ஆதித்யன், ஆத்ரேயன் இருவரும் நல்ல உயரமும் சிவந்த நிறமும் என கட்டுமஸ்ற்கு தான ஆண்கள். பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருப்பார்கள். சின்ன வயதிலிருந்தே ஒன்றாக விளையாடிய நான்கு பேருக்குள்ளும் வைஷ்ணவி வித்தியாசமாக தெரிவாள். சாப்பாடும் தூக்கமும் தான் அவள் அன்றாட கடமைகள். ஒன்றாக வளர்ந்த ஆதியும் வர்ஷியும் கண்களால் காதலிக்க தொடங்கி விட்டனர்.

ஆத்ரேயனுக்கு வைஷ்ணவி எப்போதும் எதிரி தான். சின்னவர்களான வைஷ்ணவியும் ஆத்ரேயனும் எப்போதும் எலியும் பூனையுமாக இருப்பார்கள். வைஷ்ணவியை அவள் தோற்றத்தை வைத்து எப்போதும் கிண்டல் செய்வது ஆத்ரேயனின் வழக்கம்.

வைஷ்ணவியும் அதனை சட்டை செய்ய மாட்டாள். ஆனால் இன்று அவன் தன்னை பார்த்து சொன்ன கெட்ட வார்த்தையை அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை.

ஆத்ரேயன் எப்போதும் தன் பிழையை உணராதவன். ego அதிகம் உள்ளவன். தன் அழகில் கர்வம் உள்ளவன். பதின் வயதிலேயே உடம்பை முருகேற்றுவதற்கு gym செல்ல தொடங்கி இருந்தான். தனக்கு பிடித்தவர்களுக்கு உயிரை கொடுப்பதிலும் பிடிக்காதவர்களின் உயிரை எடுப்பதிலும் வல்லவன்.

வைஷ்ணவி குறும்பு காரி.. எதையுமே அவ்விடத்தில் மறந்து விட்டு வாழ்க்கையை அனுபவிக்கும் சுதந்திர பறவை. மனசுக்குள் எதையும் போட்டு குழப்ப மாட்டாள். திட்டினால் கூட அடுத்த கணம் அணைத்து கொள்ளும் பாசக்காரி. அதனால் வைஷ்ணவி எல்லாருக்கும் செல்லம் அதனாலேயே ஆத்ரேயனுக்கு அவள் மேல் வெறுப்புண்டானது. அவள் தோற்றமும் அவனுக்கு வெறுப்பை உண்டாக்கியது. அந்த

வெறுப்பை தணிப்பதற்காகவே ஆத்ரேயன் மேல் அளவு கடந்த பாசத்தை காட்டினார் மலர்வேந்தன். அவ்வெறுப்பு நிரந்தர பகையாக மாறியது மூன்று மாதங்கள் முன் நடந்த சம்பவதால்.

இப்படி தான் மூன்று மாதங்கள் முன்பு, தனக்கு தேவையான புத்தகத்தை கேட்டு கார்த்திகேயனின் வீட்டுக்கு வைஷ்ணவி வந்திருந்தாள். " ஆதி அத்தான் எனக்கு உங்க வரலாறு புத்தகத்தை தர முடியுமா?" என்றபடி வந்தவள், "ஐ, குலாபிஜாமுன்" என்றபடி ஆத்ரேயனின் தட்டிலிருந்த குலாபிஜாமூனை எடுத்து வாய்க்குள் போட்டாள். அதிலேயே சினம் கொண்ட சிங்கமாக சிலிர்த்து நின்றவனை சட்டை செய்யாது மாலதியை நோக்கி "ரொம்ப நல்லா இருக்கு அத்தை..... புத்தகம் எங்கே இருக்கு என்று சொல்லுங்க அத்தான் நான் போய் எடுத்துக்கிறேன். நீங்க சாப்பிடுங்க" என்று பரிவாக கூறியவளை நோக்கி. "நேற்று ஆத்ரியின் ரூமில் வச்சுதான் படிச்சேன்.அவன் மேசையில் இருக்கும் எடுத்துக்கோம்மா"

என்றான். சிரித்துவிட்டே சிட்டாய் மாடிக்கு பறந்து போனாள் வைஷ்ணவி.

தன் அனுமதி இல்லாமல் தன் அறைக்கு செல்ல அனுமதி அளித்த ஆதியை முறைக்க ஆத்ரேயன் தவறவில்லை. அவனுக்கு தந்தை என்றால் மட்டும் கொஞ்சம் பயம். அதனாலேயே அமைதி காத்தான். தமயனின் பார்வையின் அர்த்தத்தை புரிந்தவன் தலையை குனிந்தபடி சாப்பிட தொடங்கினான்.

அறைக்கு வந்த சுட்டிப்பொண்ணு வைஷ்ணவி அழகாகவும் சுத்தமாகவும் அலங்காரப்படுத்தப்பட்ட அறையை பார்த்து வியந்தாள். இன்று தான் முதல் முறை உள்ளுக்குள் வந்திருக்கிறாள். ஆத்ரேயனுக்கு எதிலும் நேர்த்தி சுத்தம் வேண்டும். Shirt இல் ஒரு சின்ன கசங்கள் இருந்தால்கூட அதனை அணியமாட்டான். ரூம் துப்பரவாக இல்லாவிட்டால் அவன் அம்மாவின் பாடு திண்டாட்டம் தான். தன் தாய்க்கும் தமயனுக்கும் மட்டுமே அங்கு அனுமதி. வேலைக்காரர்களுக்கு

அங்கு அனுமதி இல்லை. தன் தாய் தான் சுத்த படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பான் . அவரும் மகனுக்காக அதை செய்ய தவறுவதில்லை. "சின்னத்தான் இந்த ரூமுக்குள் அப்படி என்ன தான் பண்ணுவார்? எப்போ பார்த்தாலும் இங்கே பூட்டிட்டு இருப்பது தான் அவர் வேலை போல" என்று முணு முணுத்தபடி தனக்கு தேவையான பாட புத்தகத்தை தேட தொடங்கினாள். பாடபுத்தகங்களுக்கு நடுவில் அரை குறை ஆடை. அணிந்த பெண்களின் படங்கள் அடங்கிய ஒரு புத்தகம் அவள் கையில் வந்து சேர்ந்தது. அதை பார்த்தவள் முகத்தை சுளித்து "சிக்... என்ன கருமம்டா இது" என்று நினைத்தவாறே அதனை கார்திகேயனிடம் காட்ட விறு விறுவென்று கீழே ஓடி வந்தாள். துப்பரவு செய்யும் போது பல தடவை மாலதி கையிலும் அது சிக்கி இருக்கிறது. விடலை பையனிடம் கேட்க சங்கோஜப்பட்டுக்கொண்டு கணவனுக்கும் தெரியாமல் அதனை மறைத்துவிடுவாள். ஆதிக்கு அது பெரிய விஷயமில்லை. அதனை தன் தம்பிக்கு விநியோகிப்பதே அவன் தான்.

கீழே ஓடி வந்தவள் "மாமா இங்கே பாருங்க..... அசிங்கமான புத்தகம் ஒன்று ஆத்ரி அத்தான் அறையில் இருந்திச்சு" என்றபடி அதனை அவரிடம் கொடுத்தாள். சாப்பிட்டு கொண்டிருந்த ஆத்ரேயனுக்கும் ஆதிக்கும் புரையேறியது என்றால் மாலதி மனதுக்குள் "ஐயோ... வைஷ்ணவி ஏனம்மா இப்படி பணினாய்?" மானசீகமாக தலையில் அடித்து கொண்டார்.. ஆதியின் கண்கள் பயத்தில் கலங்கிவிட்டது. ஆத்ரேயனுக்கு தர்மசங்கடமாகவும் சற்று பயமாகவும் இருந்தது. " அடியேய் குள்ளச்சி... இப்படி என்னை மாட்டி விட்டதுக்கு உன்னை சும்மா விடமாட்டேண்டி" என்று மனதுக்குள் அவளை அர்ச்சித்தபடி இருந்தான். புத்தகத்தை பார்த்து கண் சிவக்க கோபம் கொப்பளிக்க நின்ற கார்த்திகேயனின் கைகள் அவன் கன்னத்தை பதம் பார்த்தது. இதனை யாரும் எதிர்பார்க்கவில்லை வைஷ்ணவி உட்பட. "யாரடா? இந்த புத்தகத்தை உனக்கு தந்தது?" என்று ருத்ரமூர்த்தியாக மாறி இருந்தவரை பார்த்த ஆதியின் கண்களிலிருந்து பயத்தில் இரு

சொட்டு கண்ணீர் கீழே சிந்தியது. ஆதி கண்களால் கெஞ்சியதை பார்த்து பழியை தான் ஏற்றுக்கொண்டான். "நான் தான் வாங்கினேன். இந்த வயதில் நீங்களும் இப்படி தானே இருந்திருப்பீர்கள்.இது பருவக்கோளாறு " என்றான் தோள்களை உலுக்கி. அவனுக்கு தவறை ஒத்து கொள்ளும் பழக்கம் எப்போதும் இல்லை. தவறை நியாயப்படுத்துவதே அவனின் சுபாவம்.

அதை கேட்டு அதிர்ந்த ஆதி மனதுக்குள் " பரதேசி வாய கொஞ்சம் மூடிட்டு இருக்க மாட்டியாடா? உனக்கு வாயில சனி " என்று திட்டி கொண்டிருந்தான்.

ஏற்கனவே கோபத்தில் இருந்தவரை அவனின் பேச்சு ஆத்திரத்தை கிண்டிவிட இடுப்பில் இருந்த belt ஐ கையில் எடுத்து எழுந்து நின்றவர் சாப்பிட்ட கையாலேயே கதிரையில் இருந்தவனுக்கு விட்டார் ஒரு அடி . இடுப்பில் belt ஐ கழட்டும் போது கொஞ்சம் பயந்து நடுங்கியவன் அவர் அடியை தாங்கி நின்றான்.

சளைக்காமல் தனக்கு நெஞ்சை நிமிர்த்தி கொண்டிருந்தவனை பார்த்தவருக்கு கண நேரத்தில் அவனில் ஒரு பிரம்மிப்பு ஏற்றப்பட்டது உண்மை. அதனை மறைத்தவர் அடுத்தடுத்த அடிகளை அவனுக்கு கொடுத்தார். அவன் கெஞ்சி இருந்தால் கூட ஒரு அடியுடன் விட்டிருப்பார்.. ஆனால் அவனின் அந்த திமிர் அவரின் கோபத்தை பன்மடங்காகியது.

அதில் நிலை தடுமாறி கீழே விழுந்தவனின் பார்வை மட்டும் வைஷ்ணவியை விட்டு அகலவில்லை. அந்த பார்வையில் அவள் உறைந்து போனாள் .கீழே விழுந்தவனாயும் பொருற்றப்படுத்தாமல் அவர் அவனுக்கு சரமாரியாக தாக்கினார். அவரை தடுக்க வந்த மாலதிக்கும் ஆதிக்கும் கூட அடி விழுந்தது.

தனது வேலையால் தான் ஆத்ரேயன் அடிவாங்குகிறான் என்று உணர்ந்த வைஷ்ணவி ஓடி சென்று அவருக்கும் அவனுக்கும் இடையில் இரு கைகளையும் சமாந்தரமாக நீட்டியபடி அவனை காத்து நின்றிருந்தாள். ஓங்கிய அவர்

கை அப்படியே அந்தரத்தில் நின்றுவிட்டது. "அத்தான் பாவம் மாமா அவருக்கு வலிக்கும்,... அடிக்கவேணாம் ப்ளீஸ் " என்று கெஞ்சியவளின் கண்களில் இருந்து இரு கண்ணீர் துளிகள் உருண்டு விழுந்தது. இந்த சின்ன வயதில் அவள் தன் மகன் மீது அவள் அன்பை பார்த்தவருக்கு நெகிழ்ச்சி ஏற்றப்பட்டது. "சரியம்மா...உனக்காக நான் அடிக்க மாட்டேன்" என்று அவளை அணைத்து கொண்டவர் ஆத்ரேயனை நோக்கி "இவளால் நீ தப்பினாய்" என்று கூறி முறைத்தபடி கைகழுவ சென்றார். அவள் தன்னை காத்தது அவனுக்கு அவமானமாக இருந்தது உடனே வாயை திறந்து "அவளால் தானே அடிவாங்கினேன்..அவளுக்காக ஒன்றும் என்னை அடிக்காமல் இருக்க தேவையில்லை" என்று மேலும் ஏதோ கூற வந்தவனை நோக்கி வந்த ஆதி அவனின் வாயை பொத்தி இருந்தான். கைகழுவிவிட்டு வாசலுக்கு சென்றவர் அவனை திரும்பி பார்த்து ஏதோ கூற வந்தவர் மனைவியின் கண்களிலும் பெரியவன் கண்களிலும் தெரிந்த கெஞ்சல்களை கண்டு பெரு

மூச்சு விட்டு கொண்டு வெளியேறிவிட்டார்.

அவர் சென்றதும் " கண்ணா..." என்று மகன் அருகில் ஓடி வந்த மாலதியை கண்களால் எட்ட நிறுத்தியவன், தன்னை எழுப்பி விட்ட தமையனின் கைகளை உதறிவிட்டு கண்களில் கண்ணீருடன் நின்றிருந்த வைஷ்ணவிக்கு அருகில் வந்தான். அவர் அடித்துக்காக அவன் ஒரு சொட்டு கண்ணீர் விடாதது அவனின் மன உறுதியை காட்டியது. உடல் முழுதும் கன்றி சிவந்த காயங்களுடன் அவளை நோக்கி கெந்தி கெந்தி நடந்து வந்தவன், அவளை வெறுப்புடன் நோக்கி "நடிக்காதடி, இதற்கு நீ வாழ்க்கை முழுதும் அனுபவிப்பாய்,,, அனுபவிக்க வைப்பேன்" என்று சீற்றத்துடன் உரைத்துவிட்டு கஷ்டப்பட்டு மாடி ஏறினான்.

மாலதி மூலம் நடந்ததை கேள்விப்பட்ட மலர்வேந்தன் தான் மனமுடைந்து போனார். கார்த்திகேயனை நேரில் சென்று சந்தித்தவர் "தோளுக்கு மேல் வளந்தவனுக்கு இப்படி தான் அடிப்பாயா?" என்று வாங்கு வாங்கு என்று

வாங்கிவிட்டார். அடித்து விட்டு அலுவலகத்துக்கு வந்தவருக்கும் மகனின் நினைப்பாக இருந்தது. கலங்கிய கண்களுடன் "அவனை திருத்த வேற வழி தெரியலடா" என்றார். " அதெல்லாம் ஒரு குற்றமாடா? அது பருவக்கோளாறு.... போக போக சரியாகிவிடும் நீயும் அந்த வயசில் இப்படி தான் இருந்தாய் மறந்து விட்டாயா?" என்று தன் மகன் சொன்னதையே சொன்ன மலர்வேந்தனை பார்த்தவர் "அதுவும் சரிதான்" என்று சொல்லியது மட்டுமல்லாமல் இனி மகனின் மேல் கை வைக்கமாட்டேன் என்று நண்பனிடம் சத்தியம் செய்து கொடுத்தார்.

மகனின் கோபம் தணியும் வரை பொறுத்திருந்து விட்டு கன்றியிருந்த காயங்களுக்கு மருந்து போட வந்த மாலதி கட்டிலில் வெற்று மார்புடன் படுத்திருந்தவனின் காயங்களை பார்த்து கண்ணீர் விட்டாள். காயத்தை மெதுவாக வருடியவள் அதில் மருந்தை அழுதபடி தடவினாள் . " கண்ணா ஏண்டா இப்படி இருக்கிறாய்?" என்று விம்மினாள்.

"நீங்க எதுக்கும்மா அழுகிறீங்க? செய்த தப்புக்கு தானே அப்பா அடித்தார்.பரவாயில்லை விடுங்க" என்று சொன்னவனால் வைஷ்ணவியை மட்டும் மன்னிக்க முடியவில்லை. மேலும் அவரிடம் "அந்த குள்ளச்சியை பழிவாங்காமல் விடமாட்டேன் அம்மா... அவ கண்டிப்பா அனுபவிப்பா.." என்றவனின் கண்களில் பழி வெறி தெரிந்ததை கண்ட மாலதி அதிர்ந்து நின்றாள். இப்போது அவனிடம் பேசினால் பிரச்சனை பெரிதாகும் என்று நினைத்தவர் வாயை மூடி கொண்டார். ஆனால் மனதுக்குள் "அப்பாவுக்கு தப்பாமல் பிறந்திருக்காடா.." என்று முணுமுணுத்தார்.

அந்த நேரம் அங்கு வந்த ஆதியை பார்த்து "இதெல்லாம் நீ வாங்க வேண்டிய அடிடா" என்று சிரித்தபடி கூறியவனை பாசத்தோடு அணைத்துக்கொண்டான். அண்ணனுக்காக அடி வாங்கிய மகனை பூரிப்புடன் பார்த்தவர் பெரியவனை பார்த்து முறைக்கவும் தவறவில்லை. தன் அன்னையின் பார்வை

வீச்சை தாங்க முடியாமல் வெட்கத்தில் தலை குனிந்து நின்றான்.

வீட்டுக்கு வந்த மலர்வேந்தன் மகளிடம் " ஆத்ரி அத்தான் பாவமம்மா உன்னால் தானே பாரு எவ்வளவு அடி .... அவன் என்ன தப்பு செய்தாலும் அதனை பொறுத்துக்கொண்டு திருத்தப்பார். இப்படி எல்லாரிடமும் சொல்லி அவனை அவமானப்படுத்தாதேயம்மா.." என்று அன்புடன் எடுத்துரைத்தார் அதனை கேட்ட மலர்விழியும் சரியப்பா என்று தலையசைத்தவாறே சென்றுவிட்டாள்..

அதன் பிறகு ஆத்ரேயனுக்கு வைஷ்ணவியிடம் எப்போதும் வம்பிழுப்பதும் அவளை வார்த்தைகளால் காயப்படுத்துவதும் தான் வேலை. தந்தையின் சொல்லுக்காக பொறுமை காத்தவள். இன்று அவனின் வார்த்தைகளால் பொறுமை காற்றில் பறந்துவிட அவனின் வாயில் ஓங்கி ஒரு குத்து விட்டாள். வைஷ்ணவி தன் வாயில் குத்தியதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் அவளிடம் கை

நீட்டினான். அவனின் பதில் தாக்குதலை அவள் எதிர்பார்க்கவில்லை.

வீட்டுக்கு காயத்துடன் வந்த மக்களை பார்த்த மாலதிக்கும் கோகிலாவுக்கும் தெரிந்துவிட்டது இது ஆத்ரேயனினதும் வைஷ்ணவியினதும் கைவண்ணம் என்று. வீட்டுக்கு வந்த ஆத்ரேயன் பெயருகேற்றபடி தனது வீட்டிலுள்ள தொலைக்காட்சி பெட்டியை போட்டுடைத்தான். "அம்மா அந்தாளிட்ட சொல்லி வைங்க என் பிரச்சனைல தலையிட வேணாம் என்று" என கர்ஜித்தவனின் கன்னத்தை மாலதியின் கைகள் பதம் பார்த்தது.

"என்னடா அப்பாக்கு மரியாதை இல்லாம பேசிகிட்டு... இன்னோரு தரம் வார்த்தையை விட்டால் அடுத்த கன்னமும் பழுக்கும்" என்றவளை முறைத்து விட்டு விறு விறுவென மாடி ஏறினான். "எப்போதும் அடிக்காத அம்மா எனக்கு அடிச்சதுக்கு நீ தாண்டி காரணம் ,... உன்னை பழிவாங்காமல் விடமாட்டேன் " என்று காரணமில்லாமல் வைஷ்ணவி மேல அவனே

பகையை தானே வளர்த்துக்கொண்டான்.

ஆனால் வைஷ்ணவியோ "அவசரப்பட்டு அத்தானுக்கு குத்தி விட்டேனம்மா " என்று கவலையுடன் கோகிலாவிடம் கதைத்து கொண்டிருந்தாள். அவளின் பாசத்தில் நெகிழ்ந்த கோகிலா அவளை அணைத்துக்கொண்டாள்.

யுகம்-6

சிறுவர்களின் மோதல்களை பார்த்தவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசவோ கிண்டலிடிக்கவோ கூடாது என இருவருக்கும் எச்சரிக்கை இட்டனர். அதன் பிறகு இருவரும் பேசிக்கொள்வதில்லை. ஆனால் அவர்களின் சகோதரர்கள் கண்களால் பேசி பேசியே காதலை வளர்த்து கொண்டனர்.

வர்ஷினி படிப்பில் பின்தங்கியவள் ஆனால் கை வேலைகளில் கை தேர்ந்தவள். பாடசாலை கல்வியை முடித்ததும் beautician கோர்ஸ் செய்தவளுக்கு மலர்வேந்தன் பெரியதாக ஒரு beauty parlor திறந்து கொடுத்தார். பிள்ளைகள்

பிடித்ததை செய்ய வேண்டும் என்று மனநிலை உடையவர் அவர். ஆதி சிவில் இன்ஜினியரிங் படிப்பதற்காக வெளியூர் செல்ல ஆயத்தமானான். பக்கத்திலிருந்தே பார்த்து வளர்ந்த ஆதியின் பிரிவு வர்ஷினிக்கு பெரிய இடியாக இருந்தது. அங்கு போய் யாரையும் காதலித்து விடுவானோ என்ற பயமும் அவளை தூங்க விடவில்லை. போவதற்கு முதல் நாள் காதலை வெளிப்படுத்த நினைத்தவள் மாலதியின் வீட்டுக்கு வந்திருந்தாள். தம்பி belt ஆல் அடிவாங்கியதை பார்த்த ஆதிக்கு தன் காதலை வர்ஷினியிடன் சொல்வதற்கு பயமாக இருந்தது. "அவளுக்கு என்னை பிடிக்குமா பிடிக்காதா என்று தெரியவில்லை. போய் அப்பாவிடம் சொன்னால் நம்ம பாடு திண்டாட்டம் தான்" என்று யோசித்தவன் தன் காதலை மனதுக்குள் பூட்டியே வைத்தபடி போவதற்கு தேவையான உடமைகளை அடுக்கி கொண்டிருந்தான்.

மாலதியிடம் சிறிது நேரம் உரையாடியவள் "பெரிய அத்தானை பார்த்து விட்டு வாறன் அத்தை " என்றவள் அவர் பதிலை எதிர்

பார்க்காமல் மாடிக்கு ஏறினாள். மாலதியும் நெற்றி சுருங்க அவளின் நடவடிக்கையை பார்த்தவள் சமையல் வேலையை பார்க்க போய் விட்டாள். இளந்தாரி பையன் அறைக்கு இளம்பெண் செல்வது அவருக்கு சரியாக படவில்லை.

அறைக்கு சென்றவள் shorts and t shirt உடன் தன் துணிகளை மடித்து வைத்துக்கொண்டிருந்த ஆதியின் முதுகை வெறித்தவள் "க்கும் க்கும் ,....." என்று செருமினாள். திரும்பி பார்த்த ஆதிக்கு தன் கண்ணையே தன்னால் நம்பமுடியவில்லை. தன் தேவதை தன் அறையில் இருப்பதை பார்த்தவன் "ஒரு வேளை கனவா இருக்குமோ ?" என்று கண்ணை கசக்கி பார்த்தபடி "சொல்லு வர்ஷினி" என்று என்றான்.

" அத்தான் எப்போ பயணம் ? என்று கேட்டவளை நோக்கி சிரித்தவன் "ஏன் உனக்கு தெரியாதா?" என்றபடி தன் வேலையை செய்ய தொடங்கினான்.

"மண்டு ,..... மண்டு...." என்று தன்னை தானே கடிந்தபடி "all the best நல்லா படிங்க " என்றவளை நோக்கி "படிக்கிறதை பற்றி நீ எனக்கு சொல்லி தரும் நிலைமையில் நான் இருக்கிறேன்" என்று கலகல வென சிரித்தான். "அண்ணனுக்கும் தம்பிக்கும் கிண்டலுக்கு மட்டும் குறைச்சல் இல்லை " என்று மனதுக்குள் சொல்லி கொண்டவள். "அப்போ நான் சென்று வரவா?" என்று கேட்டாள்.

"இதுக்கு நீ வராமலே இருந்திருக்கலாம்" என்று மனதுக்குள் நினைத்தவன். "see you soon" என்று கைகளை நீட்டினான். கைகுலுக்க கைகளை நீட்டியவளுக்கு அவனின் ஸ்பரிசம் பட்டதால் 1000 volt மின்சாரம் உடலில் பாய்ந்தது போல் உணர்ந்தாள். வெடுக்கென்று கையை விலக்கி விட்டு போக எத்தனித்தவளை கூர்ந்து நோக்கியவன் எங்கே சொல்ல போகும் விஷயத்தை கேட்டு அவள் தன்னை அடித்து விடுவாளோ என்று பயந்து அவள் புறம் முதுகை காட்டியபடி திரும்பி நின்று " வர்ஷி உன் முன்னாள் உள்ள மேசையில் ஒரு டைரி

இருக்கும் அதனை உனக்காக தான் எழுதினேன்...." என்று சொன்னதை கேட்டவள் ஓடி சென்று டைரியை பார்த்தாள். அதில் அவன் காதலை எழுத்து வடிவில் செதுக்கி இருந்தான். மனதில் ஒரு வித சிலிர்ப்பு ஏற்பட டைரியை முழுசாக வாசிக்கும் ஆர்வத்தோடு வெளியேற போனாள். அங்கே தங்கையை பார்த்ததும் வெட்கப்பட்டு கொண்டே வெளியேறினாள்.

அக்காவை தேடி வந்த வைஷ்ணவி "இவ ஏன் என்ன பார்த்து இப்படி வெட்கப்படுறாள்?" என்று முணு முணுத்தவாறே உள்ளே எட்டி பார்த்தாள். அங்கே ஆதி வர்ஷினி சென்றதை அறியாமல் முதுகை காட்டியவாறு ஏதேதோ பேசி கொண்டிருந்தான். அவன் பேசியது அவளுக்கு சரியாக கேட்கவில்லை . உடனே உள்ளே சென்று அவன் பின்னால் கைகட்டி நின்றவாறே அவன் பேசியதை கேட்டு கொண்டிருந்தாள். அந்த நேரம் பார்த்து அறையை விட்டு வெளியே வந்த ஆத்ரேயன் "இவ எதுக்கு ஆதி ரூமுக்கு போறா?" என்று யோசித்தவாறே அவளுக்கு தெரியாமல் அவள் பின்னால் வந்து நின்றான்.

அந்நேரம் பார்த்து ஆதி " உன் சின்ன வயசிலே இருந்தே உன்ன ரொம்ப பிடிக்கும்படி... நீ அவ்வளவு அழகு....உன் கொடியிடையை பார்த்து நான் எத்தனை தரம் மயங்கி இருக்கேன் தெரியுமா?" என்று கவிதை வாசித்தான். அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த ஆத்ரேயன் மனதுக்குள் "என்னது? இது கொடியிடையா? உன் கண்ணில தீயை வைக்க..... காதலுக்கு தானேடா கண்ணில்லை..உனக்குமா கண்ணில்லை... காதலென்றாலும் ஒரு நியாய தர்மம் வேணாமாடா ?அடப்பாவி நீ அவ அக்காக்கு ரூட் போடுறா என்று நினைச்சன். நீ ரூட் போட்டது இவளுக்கா ? இவ என் அண்ணியா? ஏன்டா உன் ரசனை இவ்வளவு மட்டமா இருக்கு? உன் காதலுக்கு முதல் எதிரி நான்தாண்டா " என்று மனதுக்குள் ஆதியை திட்டி தீர்த்தான்.

வர்ஷினியின் காதலை பற்றி ஏற்கனவே அறிந்த வைஷ்ணவி "ஆஹா அத்தான் எவ்வளவு அழகா propose பண்ணுறார். அது தெரியாம அந்த மண்டு ஓடிடுச்சு .அவளுக்கு சம்மதம் என்று சொல்லி

ஆகணுமே " என்று மனதில் நினைத்தவாறே. "அத்தான் உங்க அழகிக்கும் உங்க கூட விருப்பம்தான்" என்றாள். இதை கேட்டு கொதித்தெழுந்த ஆத்ரேயன் மனதுக்குள் "என்னது? உனக்கும் விருப்பமா? உன்னை நீயே அழகி என்று சொல்றியா? கண்ணாடியில் உன் உருவத்தை நீ பாத்துருக்கியா இல்லையா? உன் மூஞ்சுக்கு என் அண்ணன் கேக்குதா? அவன் அழகென்ன உன் அழகென்ன.. வெள்ளை தோலை பார்த்ததும் மயங்கிட்டியா? இவ்வளவு நாள் உன்னை சும்மா விட்டு வைத்ததே தப்பு. விளக்குமாத்துக்கு பட்டு குஞ்சம் கேக்குதா? என் அண்ணா ஆணழகண்டி .....உன்ன விடமாட்டேண்டி ,,,, உங்க ரெண்டு பேரையும் பிரிக்காம விடமாட்டேன்" என்று மனதுக்குள் கருவினான்.

வைஷ்ணவியின் குரலை கேட்டு அதிர்ச்சியுடன் திரும்பிய ஆதி. வைஷ்ணவிக்கு பின்னால் ஆத்ரேயன் நின்றதை பார்த்து "நீ எங்கடா இங்கே?" என்று நெற்றியை சுருக்கி வினவினான். "ஏன் நான் நிக்கிறது உங்க ரெண்டு பேருக்கும்

இடைஞ்சலா இருக்கா " என்று கோபமாக கேட்டுவிட்டு வெளியேறினான். இவன் என்ன லூசா என்று வைஷ்ணவியும் ஆதியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

அவன் சென்றதும் வைஷ்ணவி வெட்கப்பட்டு கொண்டே வர்ஷினி மனதிலிருந்ததை கூறினாள். அதை கேட்ட ஆதி சந்தோஷத்தில் மிதந்தான். மேசையில் டைரி இல்லாததை பார்த்தவனுக்கு தலை கால் புரியவில்லை இப்படியொரு இன்ப அதிர்ச்சியை அவன் எதிர்பார்க்கவில்லை. " thank u வைஷு thank u " என்றவன் அவள் தோளை பிடித்து குலுக்கினான்.

ரூமுக்குள் சென்ற ஆத்ரேயனுக்கு தலை வலிக்க தொடங்கியது.. கீழே தைலம் எடுக்க ஆதியின் அறையை தாண்டி சென்றவன் திறந்திருந்த அறைக்குள் தன் பார்வையை கட்டுப்படுத்த முடியாமல் செலுத்தினான். அவள் தோளை பிடித்தபடி முகம் நிறைய சந்தோஷத்துடன் நின்றவனை பார்த்தவனுக்கு கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. "இன்னும் நல்லா கட்டி

பிடிச்சு கொஞ்சிக்கலாமே " என்று மனதுக்குள் வன்மமாய் உரைத்தவன் விறு விறுவென்று கீழே இறங்கினான்.

சிறிது நேரம் கழித்து வைஷ்ணவியை கீழே கூடி வந்த ஆதி "அம்மா உனக்கு பிடித்த குலாபிஜாமூன் செஞ்சிருக்காங்க சாப்பிடுறியா?" என்று கேட்டான். சாப்பாடு என்றால் தான் அவளுக்கு இம்மையும் தெரியாது மறுமையும் தெரியாது. "ஆமா அத்தான் ரொம்ப பசிக்குது.." என்றவளை அவ்விடத்தில் தலையை பிடித்தபடி இருந்த ஆத்ரேயன் அவளை பார்த்து உதட்டை சுளித்தபடி "உன் கொடியிடை காதலிக்கு இனிப்பு கொடுக்க போறியா?" என்று ஆதியிடம் கேட்டான்.

ஆதியோ தான் வர்ஷினிக்கு குலாஜாமூன் கொடுத்து அனுப்ப நினைத்ததை கண்டுபிடித்துவிட்டான் என்று யூகித்து "ஆமாடா இத இப்போதைக்கு அம்மா அப்பாட்ட சொல்லாதே படிச்சு முடிச்சதும் நானே சொல்லி கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்றான்.

இதெல்லாம் கவனிக்காமல் வைஷ்ணவியோ குலாபிஜாமூனை முடிப்பதில் கவனமாக இருந்தாள்.

அவள் சாப்பிடுவதை பார்த்த ஆத்ரேயன் "உன் விதி " என்று கூறி கை இரண்டையும் வானத்தை நோக்கி காட்டிவிட்டு தலையிடி தைலத்தை எடுத்தபடி தன்னறைக்கு சென்றான்.

ஆதிக்கோ தன்னை காதலிக்கும் வர்ஷினியை பார்க்க ஆவலாக இருந்தது. "அம்மா நான் கோகிலா அத்தைக்கு குலாபிஜாமூன் கொடுத்து விட்டு அப்படியே ஆசீர்வாதம் வாங்கி வருகிறேன் " என்று வைஷ்ணவியுடன் நடையை கட்டியவனை விசித்திரமாக பார்த்தாள் மாலதி...

கோகிலா அமைதியான சுபாவம் உடையவள்... யாருடனும் நெருங்கி பழகியது கிடையாது... மகன்களின் நெருக்கம் மலர்வேந்தனுடன் முடிந்துவிடும். "என்னடா அத்தை மேலே பாசம் பொங்குது" என்று கேட்ட மாலதிக்கு புன்னகையை விடையாக கொடுத்துவிட்டு

கிளம்பிவிட்டான்.

வீட்டுக்கு சென்ற வர்ஷினி அவனின் டயரியை பிரித்தவள் அதில் அவன் தன்னை வர்ணித்ததை பார்த்து வெட்கம் வந்து அவள் கன்னங்களில் குடி கொண்டது..

மயில் பாவை நீயோ

மாசிலா வாசம் நீயோ...

வான்முகில் வண்ணம் நீயோ...

வாளிப்பான செழுமை நீயோ...

என்று சென்று கொண்டிருந்த கவிதையை வாசித்தவள் வெட்கப்பட்டு சிரித்து கொண்டாள்.

வர்ஷினி வீட்டை வந்தடைந்தவன் கோகிலாவிடம் குலாபிஜாமூனை

கொடுத்துவிட்டு காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினான். "அத்தான் ரொம்ப ஓவரா தான் performance கொடுக்கிறார்" என்று மனதுக்குள் சிரித்து கொண்டாள் வைஷ்ணவி.

தைரியத்தை வரவழைத்து கொண்டு "வர்ஷினி எங்கே அத்தை சொல்லிவிட்டு செல்கிறேன்" என்றவனை விசித்திரமாக பார்த்தவர்.. " இப்போ தானே உங்களை பார்க்க வந்தவள் " என்றாள். " மாட்டிக்கிட்டியேடா ஆதி " என்று தன்னை தானே கடிந்தவன் " இல்லை அத்தை ... அது வந்து..." என்று தடுமாறினான்.

அவனை பார்க்க வைஷ்ணவிக்கு பாவமாக இருந்தது போலும். உடனே அன்னையிடம் " அத்தான் வெளியில் சென்று இப்போ தான் வந்தவர்" என்றாள். "ஓ ... நில்லுங்க வர சொல்லுறன்" என்றவரிடம் " இல்லை அத்தை நான் பொய் பார்த்துகிறேன்" என்று மாடி ஏற

போனவனை தடுத்து நிறுத்தினாள். " உங்களுக்கெதுக்கு சிரமம்.. இதோ வந்து விடுவாள் " என்றபடி மகளை அழைக்க மாடி ஏறி விட்டார். அவருக்கும் வயசு பையனை மகளின் அறைக்கு அனுப்ப விருப்பமில்லை போலும்.

இதை பார்த்தவன் வைஷ்ணவியின் காதில் " உங்கம்மா தான் எனக்கு நந்தி" என்றான்.வைஷ்ணவியும் சிரித்து விட்டு அவன் கொண்டுவந்து கொடுத்த குலாபிஜாமூனை வாய்க்குள் போட்டாள்.அவள் சாப்பிடுவதை ஆச்சரியமாக பார்த்தவன். அவளை " சாப்பாடு ராமி" என்று மனதில் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவன் நினைவுக்கு தடை போடுபவளாக வெட்கத்தில் சிவந்த முகத்துடன் வர்ஷினி மாடியிலிருந்து இறங்கி வந்தாள். அவளை பார்த்தவனுக்கு கற்பனைகள் தறி கேட்டு ஓட ஆரம்பித்தன. அவைகளுக்கு கடிவாளமிட்டவன் அப்போதும் விலகி செல்லாத கோகிலா

அத்தையிடம் " அத்தை தண்ணி கிடைக்குமா?? " என்றான்.

அவர் தண்ணி எடுக்க போன நேரம் பார்த்து தன்னை அடக்க முடியாதவன் அருகில் அவசரமாக நெருங்கி அவள் கன்னத்தில் தன் முதல் முத்தத்தை பதித்து.. " நான் நாளைக்கு போறேன் வர்ஷி... என்ன மறந்துடாதே" என்றான். அவன் முத்தத்தில் முதலில் திகைத்தவள் தன்னை சுதாகரித்துக்கொண்டு " நான் மறக்க மாட்டேன் நீங்க மறக்காம இருந்தால் சரி " என்றாள் அவன் கண்களை ஊடுருவ பார்த்தவாறு.

அவனும் அவள் கண்களுடன் தன் கண்களை கலந்தவன், அவள் விழியில் தெரிந்த காதலை கண்டு சொக்கி போய் விட்டான். கோகிலா வரும் அரவம் கேட்டு விலகி நின்றவனுக்கு அப்போது தான் வைஷ்ணவியின் நினைவு வந்தது. அவளை சடாரென திரும்பி பார்த்தான். அவளோ நடந்தது எதையும் கவனிக்காமல் குலாபிஜாமூனை வாய்க்குள் தள்ளுவதில்

மும்முரமாக இருந்தாள்.

அவள் தனது செய்கையை பார்க்கவில்லை என்று திருத்தியடைந்தவன் தண்ணீரை வாங்கி குடித்து விட்டு "நன்றி அத்தை" என்றவாறு தனது வீடு நோக்கி நடந்தான்.

தன் அறைக்குள் சென்றதும் அலுப்பாக இருந்தது ஆத்ரேயனுக்கு. அவனுக்கு இருப்பும் கொள்ளவில்லை. என்ன நடக்கிறது என்று பார்க்க மறுபடி இறங்கி வந்தவனிடம் தாய் சொல்ல செய்தி அவ்வளவு உவப்பாக இல்லை. "இவன் எதுக்கு ஒரே நாளில் இவ்வளவு performance கொடுக்கிறான்? இங்கே பண்ணின ரொமான்ஸ் காணாதா அவனுக்கு?" என்று முணுமுத்தபடி அவனுக்காக காத்திருந்தான். வீட்டுக்கு வந்த ஆதி ஹாலில் சோபாவில் காலை நீட்டி படுத்து இருந்த ஆத்ரேயனை நோக்கி வெட்கப்பட்டு சிரித்தான்.

" தயவு செய்து இப்படி சிரிக்காதே சகிக்கல. " என்றவன் மேலும் " உன் ரொமான்ஸ் எல்லாம்

முடிஞ்சா" என்று கேட்டான். அவனை பார்த்து கண்ணை சிமிட்டியவன் தன்னறைக்குள் புகுந்துவிட்டான். தலையில் அடித்து கொண்ட ஆத்ரேயன் "இந்த கண்றாவியெல்லாம் பார்க்க வேண்டிய தலையெழுத்து " என்றபடி அவன் அறைக்குள் தஞ்சம் புகுந்தான்.

அடுத்தநாள் கல்லூரிக்கு செல்ல புறப்பட்ட ஆதியும் வர்ஷினியும் கண்களால் கதைத்து விடைபெற்றனர். ஆதியை கட்டியணைத்த ஆத்ரேயன் வைஷ்ணவியை நோக்கினான். கண் கலங்க நின்றவளை பார்த்தவன் "நீ பெரிய நடிகைடி " என்று மனதுக்குள் அவளை அர்ச்சித்தான்.

அண்ணனின் காதலை பிரிக்க முதலில் எண்ணியவன் அதன் பின்னர் வைஷுவின் குணத்தை பற்றி சற்று நடுநிலையாக சிந்தித்து பார்த்தான். வைஷ்ணவி தனக்கு தான் எதிரி என்றாலும் அடுத்தவர்களுக்கு அவள் நல்லவள் பாசமானவள். குணத்தில் ஆதிக்கு பொருத்தமானவள் என்று தீர்மானித்தவன்

ஆதிக்கு தன்னால் எந்த மன கஷ்டமும் வரக்கூடாது என்று முடிவெடுத்து அவளுடன் எந்த வம்பும் வைக்கவில்லை. அவளை பார்க்கும் போது சினேகமாக புன்னகைக்க வேற செய்தான். அவளுக்கும் அது புதிதாக இருந்தது. ஆனால் அவள் யாரிடமும் கோபம் பாராட்டாதவள் என்பதால் அவளும் சினேகமாக புன்னகைத்து வைத்தாள்.

அதன் பிறகு வைஷ்ணவியும் ஆத்ரேயனும் கதைத்து கொள்ளவில்லை. ஆனால் விதி யாரை விட்டது? அங்கு சென்று அடுத்த வருடம் ஆதி காதலர் தினத்துக்கு முதல் நாள் ஆத்ரேனுக்கு call எடுத்தவன், "உன் அண்ணிக்கு காதலர் தினத்துக்கு எதுவும் வாங்கவில்லைடா.. தயவு செய்து ஒரு ரோஜாபூங்கோத்தும், சாக்கலேட்டும், ஒரு card உம் வாங்கி நான் அனுப்பியதாக சொல்லி கொடுத்து விடு ப்ளீஸ் டா.. அவ ரொம்ப எதிர்பார்ப்பா " என்று கெஞ்சியவனை பார்த்து கோபம் வந்தாலும் "செய்து தொலைக்கிறேன் " என்றவன் " குண்டச்சிக்கு எதிர் பார்ப்பு வேறயா?" என்று மனதுக்குள் முணுமுணுத்தபடி கடைக்கு

சென்று அவன் சொன்னதெல்லாம் வாங்கி கொண்டு போய் கொடுப்பதற்கு ஆயத்தமானான்.

காதல் மலரும்.....

யுகம்-7

பரிசுகளை கொண்டு வைஷ்ணவி வீட்டுக்கு செல்ல முடியாது என்று அறிந்து கொண்டவன், அடுத்தநாள் வைஷ்ணவிக்கு call பண்ணி "வைஷ்ணவி கொஞ்சம் வீட்டுக்கு பின்னால் இருக்கும் parkக்கு வரமுடியுமா?" என்று கேட்டான். அண்ணி என்ற முறையில் அவளுக்கு மரியாதை அளிக்க வேண்டிய கட்டாயம் அவனுக்கு.

"இவன் எதுக்கு என்னை கூப்பிடுறான்?" என்று மனதில் நினைத்தவள் அரை மணி நேரத்தில் பூங்காவை அடைந்தாள். வசீகரமாக சிரித்தபடி வந்தவன் "happy valentines day" என்றபடி தன் கையிலிருந்த பூங்கொத்தையும் card மற்றும் chocolate அடங்கிய பையையும் அவளிடம் கொடுத்தான். பெற்றுக்கொண்டவள் மனம்

படபடவென அடித்துக்கொண்டது. "இவன் நம்மள love பண்ணுகிறானா ? நம்பமுடியவில்லையே..." என்று மூளையை போட்டு குடைந்தவள் அதிர்ச்சியுடன் அவனை பார்த்தபடி நின்றிருந்தாள்.

அவள் முகத்துக்கு நேரே சொடக்கு போட்டவன் "என்ன பகல் கனவா? சரி நான் கிளம்புறேன்" என்றபடி வீட்டை நோக்கி நடக்க தொடங்கினான். சொடக்கு போட்டதில் தன்னிலை அடைந்தவள்.

"அத்தான்" என்றபடி பின்னால் ஓடினாள். திரும்பியவன் புருவத்தை தூக்கி "என்ன?" என்றான், அப்போது தான் அவனின் அழகு அவள் கண்ணில் பட்டது. மனதை கட்டுப்படுத்தியவள் அவனை நோக்கி "அத்தான் உங்க feelings புரியுது... ஆனால் படிக்கும் போது இதெல்லாம் சரிவராது.. எனக்கும் சிவில் என்ஜினீயர் ஆகணும் என்று பெரிய கனவு எல்லாம் இருக்கு. நான் படிச்சு முடிஞ்சதும் வீட்டுக்கு வந்து பேசி சம்மதம் வாங்குங்க. இந்த காதல் கல்யாணம் எல்லாம் இப்போதைக்கு வேணாம்" என்றாள் தலையை

குனிந்தபடி.

“நான் ஏன் இவ வீட்ட போய் பேசணும்” என்று நினைத்தவனுக்கு பொறி தட்டியது. சற்று அதிர்ந்தவன் கோபம் கொப்பளிக்க "உனக்கு அண்ணாவும் வேணும் தமபியும் வேணுமா? என்ன characterடி நீ? உன் மூஞ்சிக்கு எங்கண்ணா கிடைச்சதுக்கே நீ பெரிய புண்ணியம் பண்ணி இருக்கனும். அதுக்குள்ள நான் வேற உனக்கு வேணுமா? சிக்,.. உன்னை போய் நல்லவள் என்று நினைச்சன் பாரு.. உன் மனசு இவ்வளவு அழுக்கா? அந்த மடையன் call பண்ணி சொல்லுறான் நீ கவலைப்படுவியாம் உனக்கு valentines day gift வாங்கி கொடுக்கட்டாம் என்று. ஆனா நீ எனக்கு area போடுறியா? உன் முகத்தை கண்ணாடியில் பார்த்துருக்கியா ? அது சரி உன்ன பார்க்க கண்ணாடி இனி செய்து தான் எடுக்கணும்.." என்று பரபரவென்று பொரிந்தவனை விறைத்து போய் பார்த்தவளின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. "இப்போ எதுக்குடி அழுகிறா ? உன் நடிப்பை தொடங்கிட்டியா? உன்ன

காதலித்ததுக்கு ஆதி தான் அழணும். உன்னை விட அந்த விபச்சாரிகள் எவ்வளவோ மேல்" என்றவனின் கன்னங்களை அவள் கைகள் பதம் பார்த்தது.

பொறுமையின் சிகரம் அவள். ஆனால் செய்யாத தப்புக்கு தன்னை கீழ்த்தரமாக குற்றம் சாட்டுவதை அவளால் பொறுத்து கொள்ள முடியவில்லை. அவனின் வார்த்தைகளின் வீரியத்தில் தன் பொறுமையை தொலைத்தவள். அவன் தந்த அனைத்து பரிசுகளையும் கீழே போட்டு விட்டு அவன் கன்னம் பழுக்க முழு பலத்துடன் அறைந்திருந்தாள்.

"ஏய்... " என்று தன் கையை உயர்த்தியவன் பொது இடம் என்பதால் தன்னை கட்டுப்படுத்தி இருந்தான். "ஆம்பிளையவே அடிக்கிறியா? உன்ன சும்மா விடமாட்டேண்டி" என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளை கடித்து துப்பியவன் . அங்கு நிக்காமல் விறு விறுவென வீட்டை நோக்கி சென்றுவிட்டான்.

அவன் முதுகை வெறித்தபடி அவ்விடத்திலேயே தோய்ந்து அமர்ந்தவளின் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை. அவள்
அறைந்ததை பார்த்த சிலர் "இந்த பொண்ணுக்கு ரொம்ப திமிர் தான்... காதலை சொன்னால் இப்படி தானா எல்லோர் முன்னாடியும் ஆம்பிளைக்கு கை நீட்டி அறைவது? ஹீரோ போல இருக்கான். இவளுக்கு அவன் கிடைச்சதே பெரியவிஷயம். பிடிக்காட்டி பண்பாக சொல்லி இருக்கலாம் தானே" என்று அவள் காதுப்படவே பேசினர். மேலும் இங்கு இருந்தால் காட்சி பொருளாகி விடுவோம் என்ற பயத்தில் விறு விறு வென அழுதபடி வீடு நோக்கி நடந்தாள்.

வீட்டுக்கு வந்தவள் நேரே அறைக்கு சென்று கட்டிலில் விழுந்து கதறி அழ தொடங்கினாள். அவள் கண்ணில் கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.

வீட்டுக்கு வந்த ஆத்ரேயனுக்கு மனம் உலையாக கொதித்தது. கோபத்தை கட்டுப்படுத்தும் வழி

தெரியாமல் குட்டி போட்ட பூனை போல் அங்கும் இங்கும் நடந்தான். அப்போதும் கோபம் மட்டுப்படாமல் வீட்டிலேயே உள்ள gym அறைக்கு சென்றவன் cardio வை on பண்ணி விட்டு உயர் வேகத்தில் ஓட தொடங்கினான், 1 மணி நேரமாக ஓடியவனால் கோபத்தை கொஞ்சம் கூட கட்டுப்படுத்த முடியாமல் போனது கண்ணாடியில் தெரிந்த அவன் முகத்தை பார்த்த காரணத்தினால்.

செக்க சிவந்த நிறமுடையவனின் shave செய்யப்பட்ட கன்னத்தில் அவள் கைதடம் அழுத்தமாக பதிந்து இருந்தது. அவன் போட்டிருந்த ட்ஷிர்ட் முழுவதும் நனைந்து குளித்தது போல இருந்தான். கோபம் குறையாததால் குளியலறைக்கு சென்று கை இரண்டையும் சுவரில் குத்தியவாறு தலையை குனிந்தபடி அரை மணி நேரம் shower இன் கீழ் நின்றான். அவனின் முறுக்கேறிய தோள்பட்டையில் பட்டு தெறிக்கும் நீர்துளிகளை போல அவன் மனமும் தத்தளித்து கொண்டது.

கோபம் தணிந்ததும் வந்தவன் உடனடியாக தொலைபேசியை பார்த்தான். அதில் ஆதி 20 அழைப்புகளை எடுத்திருந்தான் . "இவனின் காதலால் நான் கண்டவகிட்ட எல்லாம் அடி வாங்க வேண்டி கிடக்கு" என்று புலம்பியபடி ஆதிக்கு call பண்ணினான்.

மறு முனையில் ஆதி " gift ஐ கொடுக்க போக வேணாம்டா ... வர்ஷினி அவ அம்மாவோட பாட்டி வீட்டுக்கு காலையிலேயே போய்ட்டாளாம்.. அத சொல்ல தான் call எடுத்தேன். எங்கடா போய் தொலைந்தாய் ? அம்மாக்கு எடுத்தால் அவரும் மாதர் சங்க கூட்டத்தில் நிற்கிறாராம். யாருக்கும் வீட்டில் இருக்கும் எண்ணமில்லையா?" என்று வினவினான். "வர்ஷினி " என்ற அழைப்பில் ஆத்ரேயனின் இதயம் நின்று துடித்தது. கலவையான உணர்வுகள் மனதில் தோன்றி அவனை ஆட்டி படைக்க தன் முட்டாள்தனத்தை அவனிடம் சொல்ல விரும்பாதவன். "ஓகே ஆதி எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு அப்புறம் கூப்பிடுறேன்" என்று தொலைபேசியை

அணைத்து விட்டு தலையில் கை வைத்தபடி கொஞ்ச நேரம் உட்கார்ந்தான்.

"அவளும் தானே அடித்தாள். என்னை அவ வீட்டுக்கு பொண்ணு வேற கேட்க வர சொன்னா... அப்படி பட்டவளுக்கு நான் பேசிய பேச்சு தவறில்லை" என்று அவனின் மூளை விவாதிட்டு அவனை நியாயப்படுத்தி கொண்டது. தன்னை சமநிலைப்படுத்தியவன் தனது வேலைகளை தொடர்ந்தான் .

ஆனால் பதின் வயது இளம் பாவையினால் தன்னை நிலை கொள்ள செய்ய முடியவில்லை. கட்டிலில் படுத்தபடியே அழுது கரைந்தவள் விம்மியபடி எழுந்து குளிக்க சென்றாள். குளித்து முடித்து வெளியே வந்தவளுக்கு மனமும் உடலும் சேர்ந்து பாரமாக இருந்தது. அடிவயிற்றில் சுரீரென்ற வலி உடல் முழுதும் பரவ "அம்மா.... " என்று கத்தியபடி சுருண்டு விழுந்தாள். தாங்க முடியாத வயிற்றுவலியினால் நிலத்திலே புரண்ட படி துடி

துடித்து போனாள். அவளின் கஷ்டகாலத்துக்கு வேலைக்காரி கூட அன்று விடுப்பெடுத்து இருந்தாள்.

கீழே விழுந்தவள் கையை நீட்டி கட்டில் மேல் அடித்துக்கொண்டிருந்த தொலைபேசியை எடுக்க போனவளால் அதனை எடுக்க கூட முடியவில்லை. நிறைய தடவைகள் தொடர்பு கொண்டும் அவள் தொலைபேசியை எடுக்கவில்லை என்றதும் வர்ஷினிக்கும் கோகிலாவுக்கும் படபடப்பானது. மலர்வேந்தனும் கார்த்திகேயனும் கூட தொழில் விஷயமாக வெளியிடம் சென்றிருந்தனர்.

1 மணி நேரத்துக்கு மேல் முயன்றவர்கள் அவள் call receive பண்ணவில்லை என்றதும் அவர்களின் பயம் எகிற தொடங்கியது. கோகிலாவுக்கு தலை சுற்றுவது போலிருந்தது . "அண்ணிக்கு call எடு" என்றவரின் கண்களில் பயம் அப்பட்டமாக தெரிந்தது. "காமாட்சி அம்மாளே, என் பொண்ணுக்கு எதுவும் ஆக கூடாது" என்று

கடவுளை கண்ணீருடன் வேண்ட தொடங்கினார். கோகிலாவும் வெளியிடத்தில் நிற்பதாக கேள்விப்பட "எங்க போயிருப்பா ?" என்று பதற தொடங்கிவிட்டார் கோகிலா . "நீங்க அழாதீங்கம்மா" என்ற வர்ஷினி வேறு வழி தெரியாமல் ஆத்ரேயனுக்கு அழைத்தாள். தன் தாயை ஆறுதல் படுத்தியவளுக்கும் கண்ணீர் நிக்காமல் வழிந்து கொண்டிருந்தது.

"ஆத்ரேயன், வைஷ்ணவிக்கு ஒரு மணி நேரமாக call எடுக்கிறேன் receive பண்ணுகிறாள் இல்லை. வீட்டில் தனியாக தான் இருக்கிறாள். கொஞ்சம் போய் பார்க்க முடியுமா?" என்று தயக்கத்துடன் கேட்டாள். எல்லாவற்றையும் கேட்ட ஆத்ரேயனுக்கு நெஞ்சம் பட படவென அடித்து கொண்டது. தன்னால் ஏதும் தற்கொலை முயற்சி பண்ணி இருப்பாளோ என்று மனம் தறி கெட்டு யோசிக்க ஆரம்பித்தது . "நான் பாத்துக்கிறேன் , நீங்க பயப்படவேணாம்" என்றபடி அணிந்திருந்த tshirt மற்றும் காற்சட்டையுடன் வைஷ்ணவி வீட்டை நோக்கி ஓடினான்.

வைஷ்ணவியின் அறை தெரியாததால் " வைஷ்ணவி வைஷ்ணவி" என்று அழைத்தபடி அனைத்து அறையிலும் தேடியவன்.. கடைசியில் அவள் அறையை கண்டுபிடித்து உள்ளே நுழைந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனின் இரும்பு மனதையும் அசைத்து பார்த்தது.. ரத்த வெள்ளத்தில் வயிற்றை பொத்தியபடி அரை மயக்கத்தில் விழுந்து கிடந்தாள் வைஷ்ணவி . அவன் மூளை வேலை செய்ய மறுத்தது. அருகில் ஓடி வந்தவன், அவள் சுருண்டு விழுந்ததினால் அவிழ்ந்த துண்டை அவள் கண்ணை பார்த்தபடியே அவள் மார்பில் கட்டிவிட்டான். "எந்த பெண்ணுக்கும் இந்த நிலை வரகூடாது" என்று மனதில் நினைத்தவளின் கண்களில் "என்னை காப்பாற்று" என்ற இறைஞ்சலை ஆத்ரேயன் உணர்ந்தான். அவன் முகத்தை பார்த்தபடியே கண்ணை மூடி சுய நினைவின்றி போனாள். ”வைஷ்ணவி வைஷ்ணவி" என்று கன்னத்தில் தட்டினான். அவள் எழும்பவில்லை ஆனாள் மூச்சு இருந்தது. நிறைய ரத்த இழப்பு ஏற்பட்டதால் அவள் மயங்கி

இருந்தாள். எங்கிருந்து ரத்தம் வருகிறது என்று தெரியாதளவுக்கு இடம் முழுதும் இரத்தத்தால் நிரம்பி இருந்தது.

என்ன செய்வது என்று கொஞ்ச நேரம் குழம்பியவன் தனது tshirt ஐ கழட்டி அவளுக்கு அணிவித்து விட்டு அவளை தூக்கி கொண்டு மாடியிலிருந்து இறங்கினான். அவளின் 70kg நிறையை கூட உணரமுடியதளவுக்கு ஸ்தம்பித்து போய் இருந்தான். அவளை காப்பாற்ற வேண்டுமென்பதே அவனின் முதல் எண்ணமாக இருந்தது. அவள் கண்கள் அவனிடம் தன்னை காப்பாற்ற சொல்லி இறைஞ்சியது மட்டுமே அவன் நினைவிலிருந்தது. அவன் யார் என்பதை மறந்தான். சற்று முன் நடந்த சண்டைகளை மறந்தான்.

மாலதியும் கூட்டத்தில் இருக்க மனமற்று வைஷ்ணவியை பார்க்க வீட்டுக்கு விரைந்திருந்தார். வைஷ்ணவியின் வீட்டு வாசலில் வெற்று மார்புடன் வைஷ்ணவியை தூக்கியவாறு இருவரின் உடல் முழுதும் ரத்தம்

வழிய நடந்து வந்த ஆத்ரேயனை பார்த்து ஒரு கணம் அதிர்ந்தவர். அவனருகில் ஓடி வந்து "என்னாச்சுடா?" என்றார். "எனக்கும் தெரியலம்மா பயமா இருக்கும்மா hospital போவம் வாங்க" என்று கண்களில் வலியுடன் கூறியவன் அவருக்கும் புதியவனே. வாழ்க்கையில் அவன் முதல் முறை கலங்கி கண்டிருக்கிறார். வைஷ்ணவியை பார்த்தவர் அவள் தனது மகனின் சட்டையை அணிந்திருப்பதை நோட்டமிட்டார். பின் வைஷ்ணவி கட்டியிருந்த ரத்தம் தோய்ந்த வெள்ளை துண்டு அவருக்கு நடந்ததை பறைசாற்றியது. பெண்ணான அவருக்கு புரிந்து போனது "over bleeding போல அதான் மயங்கி இருக்கிறாள். பயப்பட ஒன்றுமில்லை வா வந்து வண்டியிலேற்று" என்று மகனை சமாதானம் செய்தவாறு முன்னோக்கி தனது வீட்டுக்கு சென்றவருக்கு இந்த ரத்தப்போக்கு சாதாரணமான விஷயமல்ல என்று நன்கு புரிந்தது. கையில் ஒரு tshirt உடன் வெளியில்
வந்தவர் "இதை போட்டுக்கோ" என்றார். tshirt ஐ

போட்டவன் அவள் தலையை தூக்கி மடியில் வைத்த படி பின்னால் அமர்ந்து அவளை இறுக அணைத்திருந்தான். அந்த அணைப்பு "என்னை விட்டு செல்ல உன்னை விடமாட்டேன்" என்பது போலிருந்தது. அவனின் செயல்களனைத்தும் மாலதிக்கே விசித்திரமாக தோன்றியது.

ஹொஸ்பிடலை நோக்கி வண்டியை செலுத்தினார். அங்கே சென்றதும் அவளுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. வெளியே வந்த டாக்டர் நிறைய ரத்த இழப்பு ஏற்றப்பட்டிருப்பதாகவும் உடனடியாக O+ ரத்தம் அவசரமாக தேவை என்றார். ஆத்ரேயன் பதறியடித்தபடி "என்னுடையது O+ தான் டாக்டர். நான் தாறன்" என்று சொல்லியபடி டாக்டர் காட்டிய வழியில் அவசரமாக இரத்த தான பிரிவுக்கு சென்றவனை பார்த்த மாலதிக்கு தன் கண்ணையே நம்ப முடியவில்லை. அனைத்து சிகிச்சைகள் முடியும் வரையும் அவன் தன் அன்னையின் அருகில் ரத்த கறையுடன் அமர்ந்திருந்தான். எதிலும் சுத்தம் பார்க்கும் மகன் இவ்வாறு ரத்த கரையுடன் அமர்ந்திருப்பது

மாலதிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சிகிச்சை முடிந்து வெளியில் வந்த வைத்தியர் அதிக உடல் எடை காரணமாக fibroid கட்டிகள் கர்ப்பப்பையில் இருப்பதாகவும் அதனால் தான் அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதாகவும், கொஞ்சம் தாமதித்திருந்தால் கூட ரத்த போக்கால் உயிருக்கு ஆபத்து ஏற்றப்பட்டிருக்கும் என்றவர், அதனால் தான் தாங்க முடியாத வயிற்றுவலி ஏற்றப்பட்டதாகவும் கூறினார். கட்டிகளை கரைக்க சிகிச்சை செய்ய வேண்டும் என்றவர் மேலும் வைஷ்ணவி கண்டிப்பாக உடல் எடையை குறைக்க வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கினார். அவள் உடல்நிலை சீராகும் வரைக்கும் வைத்தியசாலையில் இருக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

அனைத்தையும் வெளியில் சோபாவில் குனிந்து இருந்தபடியே இரு கைகளை முழங்காலில் முட்டு கொடுத்தவாறு கேட்டவனுக்கு கண்களில் இருந்து கண்ணீர் உருண்டோடியது. அக்கா தங்கையுடன் பிறக்காததால் அவனால் இந்த

சம்பவத்தை ஏற்று கொள்ள முடியவில்லை. வாழ்க்கையில் சந்தோஷத்தை மட்டும் பார்த்து வளர்ந்தவனுக்கு இது தான் அவன் சந்தித்த முதல் நெகிழ்ச்சியான சம்பவம். அவனின் இளகிய இதயத்தை வெளியில் கொண்டு வந்திருந்தது. மகனின் மாற்றம் மனதுக்கு நிம்மதியளித்தது. ஆனால் அவருக்கு தெரியவில்லை இந்த தற்கலிகமானது தான் என்று.

மன ஆறுதலுக்காக தாயின் மடியில் படுத்தவன் அப்படியே உறங்கி போனான். தூங்கி எழும்பியவன் நடந்தது அனைத்தையும் மீட்டி பார்த்தான். நானா இப்படி நடந்தேன் என்று அவனாலேயே நம்ப முடியவில்லை. தலையை கோதி, "இவ்வளவு நேரமும் இந்த ரத்த கரையுடனே இருந்திருக்கிறேனே" என்று மனதுக்குள் யோசித்தவனுக்கு தாயை பார்க்க சங்கடமாக இருந்தது.

"அம்மா நான் பொய் முதலில் குளிக்கணும் கார் key ஐ தாங்க" என்று கேட்டதும் car key ஐ

கொடுத்தார். போக வெளிக்கிட்டவன் திரும்பி வந்து "நான் இப்படி நடந்துகிட்டத யார் கிட்டயும் சொல்லவேணாம், நீங்களே கொண்டு வந்து admit பண்ணியதா சொல்லுங்க " என்று முகத்தை கடினமாக வைத்து கொண்டு உரைத்தான். "இப்போ தானேடா நல்லா இருந்த? அவளை நான் தூக்கி வந்தேன் என்று சொன்னா கூட யாரும் நம்பமாட்டாங்கடா " என்று மனதில் நினைத்தவாறே அவனின் இறுகிய முகத்தை நோக்கி அதிர்ச்சியுடன் "சரி" என்றார்.

வீட்டுக்கு வந்தவன் ரத்த கறை போக நன்கு குளித்தான். அந்த சிறிய நேரத்துக்குள் தனக்கு என்ன ஆனது அவனுக்கும் புரியவில்லை. அவனின் இந்த இயல்பு அவனுக்கே வியப்பாக இருந்தது. மனிதாபிமானத்தின் தான் அவளை காப்பாற்றினான் என்று மனதை சமாதானப்படுத்தினாலும் ஏன் அவளை அணைத்துக்கொண்டு காரில் இருந்தான் என்று அவனுக்கு புரியவில்லை.அனைத்தையும் நினைக்க அவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. மாலதி வைத்தியசாலையிலிருந்து

கோகிலாவுக்கும் மலர்வேந்தனுக்கும் தான் கொண்டுவந்து அனுமதித்ததாக கூறியவள் மறந்தும் மகன் பற்றி வாய் திறக்கவில்லை.

வைத்தியசாலையில் கண் விழித்த வைஷ்ணவிக்கு , நினைவு முழுதும் ஆத்ரேயனே இருந்தான். ஏற்கனவே அவன் மேல் வெறுப்பில் இருந்தவளுக்கு அவன் முன் இப்படி ஒரு நிலையில் தான் இருக்க வேண்டி வந்துவிட்டதே என்று மனம் பாரமாகவே இருந்தது.

அவள் நிலைமை கேள்விப்பட்டதும் அனைவரும் வைத்தியசாலைக்கு வந்திருந்தனர் ஆத்ரேயனை தவிர. ஆத்ரேயனிடம் வர்ஷினி சொல்லியும் அவன் செல்லவில்லை என்று கோகிலா மூலமாக அறிந்தவர் , ஒரு உயிரை காப்பாற்றுமளவுக்கு தன் மகன் மனிதாபிமானம் இல்லாதவனா? மாலதி வரும் வரை என்ன செய்துகொண்டிருந்தான்? என்ற பல கேள்விகள் அவர் மனதில் உதித்தன. ஆத்ரேயனின் செயல் மலர்வேந்தனுக்கும் உவப்பாக இல்லை. ஆத்ரேயனை நினைத்தவருக்கு மனதில்

வெறுமை குடிகொண்டது. "இவ்வளவு திமிர் அவனுக்கு ஆகாது" என்று மனதில் நினைத்து கொண்டார். வர்ஷினியும் ஆதிக்கு எடுத்து ஆத்ரேயனின் செயலை பற்றி சொல்லி பொங்கிவிட்டாள்.

ஆத்ரேயனை தொடர்பு கொண்ட ஆதி நடந்ததை விசாரிக்க "என்னிடம் இதை பற்றி பேசாதே" என்று கூறி தொலைபேசியை அணைத்திருந்தான். மனம் பொறுக்காத கார்த்திகேயன் அவனிடம் விசாரித்தே ஆகவேண்டும் என்று முடிவெடுத்து ஆத்ரேயனுக்கு அழைத்தவர், "நீ உடனே ஹாஸ்பிடலுக்கு வா " என்று கூறினார் . அவரின் குரலிலிருந்த சினம் புரிந்தவன்,"போய் தான் பார்ப்போமே" என்று முடிவெடுத்து வைத்தியசாலையை நோக்கி சென்றான் அஞ்சா நெஞ்சதுடன்.

வைத்தியசாலையை அடைந்தவன் வைஷ்ணவியை admit பண்ணி இருந்த அறைக்கு செல்ல சங்கடப்பட்டான். கொஞ்சம் தைரியத்தை

ஏற்றுக்கொண்டு உள்ளே நுழைந்தவன் மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை. அவ்வளவு நேரமும் நினைவுக்கு வராதவையெல்லாம் அப்பொழுது தான் நினைவுக்கு வந்தன . கஷ்டப்பட்டு மனதை அடக்கியவன், சிங்கம் போல் சிலிர்த்துக்கொண்டிருந்த கார்த்திகேயனை நோக்கி "என்ன விஷயம் " என்று கேட்டான் நெஞ்சை நிமிர்த்தியபடி.

எதற்கும் அசராத ஆத்ரேயனை பார்த்து அனைவரும் பிரமித்தனர் வைஷ்ணவி உட்பட. அவன் தன்புறம் திரும்பாதது கொஞ்சம் நிம்மதியளிக்க நடப்பதை கட்டிலில் சாய்ந்து இருந்தபடி வேடிக்கை பார்க்க தொடங்கினாள் படபடப்பான மனதுடன்.

காதல் மலரும்.....

<u>யுகம்-8</u>

" மாலதி வரும்வரை வைஷ்ணவியை பார்க்க போகாமல் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்? கொஞ்சம் கூட மனிதபிமானம் இல்லாத

மிருகமா நீ? உன்னை பெற்றதுக்கு நான் உன்னை பெறாமலே இருந்திருக்கலாம்" என்று சினந்த முகத்துடன் சீறினார். அவர் கூறியதை சட்டை செய்யாமல் அவன் சுவரில் மாட்டி இருந்த போஸ்டர்களை பார்த்து கொண்டிருந்தான். அவர் சொன்னதை கேட்டு திடுக்கிட்ட மாலதி "என்னங்க" என்று ஏதோ சொல்ல வந்தவர் ஆத்ரேயனின் முறைப்பில் அமைதியாகி விட்டார். மனம் கேட்காத வைஷ்ணவியும் " மாமா... " என்று வாயை திறக்க. அவள் சொல்ல வருவதை தடுக்க நினைத்தவன் சற்று குரலை உயர்த்தி " இவ இருந்தா என்ன செத்த எனக்கென்ன? I dont care " என்றவனின் சட்டையை பிடித்திருந்தது கோகிலாவின் கை.. இதனை அவன் எதிர்பார்க்கவில்லை... " என் பொண்ணு உயிர் உனக்கு அவ்வளவு சாதாரணமா போச்சா??? " என்று கதறியவரை இழுத்து அணைத்து கொண்டார் மலர்வேந்தன்.

அந்நேரம் பார்த்து அறைக்குள் வருகை தந்த டாக்டர் " ஹாய் Mr.ஆத்ரேயன் எங்க போனீர்கள்? Mr மலர்வேந்தன் உங்க பொண்ணு பிழைக்க

இவர் தான் காரணம். இவர் மட்டும் அவங்க அம்மாவோட சரியான நேரத்துக்கு கொண்டு வராவிட்டால் வைஷ்ணவி பிழைத்திருக்கவே முடியாது. அவரின் ரத்தத்தை கொடுத்து உங்க மகளை காப்பாற்றி இருக்கிறார் " என்று wards ரவுண்டு பார்த்துவிட்டு அவர் கிளம்பி சென்றார். அம்மாவையும் வைஷ்ணவியையும் அடக்க தெரிந்தவனுக்கு இவரை எப்படி அடக்குவது என்று தெரியாமல் முழித்தான். "இப்போ என்ன appreciate பண்ணாட்டி குறைஞ்சு போயிருவாரா? அடேய் மொட்டை கொஞ்சம் வாய மூட மாட்டியா?" என்று அந்த வைத்தியருக்கு அவன் மனதில் அர்ச்சனை விழுந்து கொண்டிருந்தது. "ஐயோ இப்போ என்ன பண்ணுவேன் ? என்னை பெரிய கடவுள் போல இப்போ எல்லாரும் treat பண்ண போறாங்களே.. அழுதழுதே performance கொடுக்க போறாங்களே" என்று அவன் மனம் புலம்பியது. "எல்லாரும் நம்மள சுற்றி வளைக்க முதல் கிளம்பிறனும்" என்று நினைத்தபடி வாசலை நோக்கி நடந்தான்.

"ஆத்ரேயன்" என்று மலர்வேந்தனின் குரல்

அவனை அழைத்து. "ஆத்ரேயா நீ மாடினாடா " என்று மனதுக்குள் நினைத்தபடி அவரை பார்த்து நின்றான். இதே நேரம் வேற யாரும் கூப்பிட்டிருந்தால் அவன் சட்டைசெய்யாமல் வெளியேறியிருப்பான். கூப்பிட்டது மலர்வேந்தனாதலால் தான் அவன் நிக்க வேண்டி ஏற்றப்பட்டது. "ரொம்ப நன்றியப்பா"என்று அவனின் கையை பிடித்து வேண்டினார். "பரவாயில்லை மாமா " என்றவன் நிக்காமலே வெளியேறிவிட்டான்.
ஏன் அவன் இவ்வாறு நடந்துகொள்கிறான் என்று யாருக்கும் புரியவில்லை. உலகத்தில் எல்லாரும் தீமை செய்து நல்லவர்கள் போல் நடிக்கும் போது இவன் மட்டும் நல்லது செய்துவிட்டு கெட்டவன் போல நடிப்பது அனைவருக்கும் வியப்பாக இருந்தது.

அவன் பேசுவதத்திற்கும் நடந்து கொண்டதற்கும் சம்பந்தம் இல்லாததை நினைத்த வைஷ்ணவிக்கு குழப்பமாகவே இருந்தது. எந்த இடத்திலும் தனது பலவீனத்தை காட்டி கொள்ள விரும்பாத மகனின் குணம் நன்கு அறிந்தவர்

மாலதி. ஆத்ரேயனுக்கு தெரியவில்லை அன்பு பலவீனமல்ல பலம் என்பது.]

வெளியில் வந்தவனுக்கு அப்போது தான் மூச்சு விட முடிந்தது. யாருக்கும் பயப்படாதவன் முதன் முதலில் பயந்தது வைஷ்ணவியின் கண்களை நோக்குவதற்கு. ஆத்ரேயனை புரிந்து கொள்ள முடியாமல் வைஷ்ணவியும் குழம்பி போனாள். இன்று தன்னை விபசாரி என்று திட்டியவனுக்கும் எந்த தப்பான பார்வையும் பார்க்காமல் தன் கண்ணை பார்த்தபடி அவிழ்ந்த துண்டை கண்ணியமாக கட்டி விட்டவனுக்கும் மலையளவு வித்தியாசம் தெரிந்தது.

இவன் நல்லவனா கெட்டவனா என்று புரியாமல் குழம்பி இருந்தவள் மருந்தின் வீரியத்தால் கண்ணயர்ந்து தூங்க தொடங்கினாள்..வீட்டுக்கு வந்தவன் இனி வைஷ்ணவி இருக்கும் பக்கத்துக்கு தலை வைத்தே படுக்க கூடாது என்று முடிவெடுத்தவனாய் தன் படிப்பில் மூழ்கினான். அவளை தன் பலவீனமாக கருதினான்.

ஆத்ரேயன் வெளியில் கோபக்காரனாய் இருந்தாலும் தன் மனம் கவர்ந்தவர்களுக்காக உயிரையும் கொடுக்க தயங்காதவன். அவனின் இயல்ப்பை இதுவரை புரிந்து கொண்டவர்கள் ஆதி,மாலதி மற்றும் மலர்வேந்தன். எந்த இடத்திலும் தான் கீழிறங்க கூடாது என்ற எண்ணமுடையவன். கெட்ட பெயர் எடுத்தாலும் பரவயில்லை தன் பலவீனம் யாருக்கும் தெரிய கூடாது என்பதில் உறுதியாக இருப்பவன். யாரும் தன்னை பரிதாபமாக பார்ப்பதை அடியோடு வெறுப்பவன். கண்ணீரையும் பாசத்தையும் தன்னை கட்டுப்படுத்தும் சக்தியாக நினைப்பவனுக்கு கண்ணீர் விடுபவர்களை அறவே பிடிக்காது தன் அன்னையை தவிர. அப்படிப்பட்டவனுக்கு தான் வைஷ்ணவியுடன் நடந்து கொண்டது விசித்திரமாக இருக்க தலையை உலுக்கி சமன் செய்தவன் வைஷ்ணவியின் எந்த வித நினைப்பும் வராமல் இருக்க சிரமப்பட்டான்.

அவனுக்கு கொஞ்சம் நிம்மதி கொடுக்கும் விதமாக ஆத்ரேயனுக்கும் தமயனின் அதே

கல்லூரியில் இடம்கிடைத்திருந்தது. இது வைஷ்ணவிக்கும் நிம்மதியை கொடுத்தது. அவனை பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் வராது, சங்கடமான சூழ்நிலைகள் வராது என்று நிம்மதியாக இருந்தாள்.

அதன் பிறகு ஆத்ரேயன் வைஷ்ணவியை பார்க்கவே இல்லை.. எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இரு வருடங்கள் கழித்து வர்ஷினியின் 21வது பிறந்த நாள் வந்து சேர்ந்தது. அதற்காக விடுப்பு எடுத்து கொண்டு ஆதியும் ஆத்ரேயனும் வந்திருந்தனர் . ஆத்ரேயனை கூட்டி கொண்டு கடைக்கு சென்ற ஆதி வர்ஷினிக்கு பார்த்து பார்த்து நிறைய பரிசுகள் வாங்கி குவித்தான். "சென்டிமென்டல் இடியட்ஸ்" என்று மனதுக்குள் திட்டியபடி அவனுடன் சேர்ந்து நடந்தான் ஆத்ரேயன் . மாலதியும் ஆதியும் எவ்வளவோ கெஞ்சியும் பிறந்த நாளுக்கு வர முடியாது என்று சொன்னான்
பிறந்த நாளுக்கு சென்ற ஆதி, வெண்ணிற கல் வேலைபாடுடைய சில்க் புடைவையுடனும்

அதற்கு பொருத்தமான வெண்ணிற தோடும் நெக்லசும் போட்டு, பிறை போன்ற நெற்றியில் கல் வேலைபாடுடைய பொட்டும் வைத்து வைர மூக்குத்தி மின்ன தேவதை போல ஜொலித்த வர்ஷினியின் அழகில் மெய் மறந்து போனான். வைஷ்ணவி வெட்டிய கேக்கை எடுத்து வர்ஷினியின் வாய்க்குள் திணித்து விட்டாள். அதை பார்த்த ஆதிக்கு அந்த கேக்கை சுவைக்க வேண்டுமென்ற தாபம் எழுந்தது. கஷ்டப்பட்டு மனதை அடக்கியவன் "Happy Birthday " என்றபடி தான் பார்த்து பார்த்து வாங்கிய பரிசுகளை அளித்துவிட்டு இரவு சாப்பாட்டுக்காக சென்று விட்டான். பிறந்தநாள் கோலாகலமாக முடியும் வரை வர்ஷினியுடன் கண்களாலேயே பேசி கொண்டிருந்தான். அனைவரும் புறப்பட்டதும் அங்கு மலர்வேந்தனின் குடும்பத்தினரும் கார்த்திகேயனின் குடும்பத்தினரும் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

ஆத்ரேயன் ஏன் வரவில்லை?? " என மலர்வேந்தன் கேட்டதற்குமாலதி " அவனுக்கு கொஞ்சம் சுகமில்லை அண்ணா " என்று

சமாளித்து வைத்தார்.

அதற்கிடையில் எப்படி வர்ஷினியை தனியாக சந்திப்பது என்று யோசனையாகவே இருந்தது ஆதிக்கு. அப்போதுதான் வர்ஷினி உடை மாற்றுவதற்காக தனது அறைக்கு சென்றிருந்தாள் . அதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்த ஆதி " வைஷு ரொம்ப மெலிஞ்சிட்ட போல என்ன சாப்பாடு cut ஆ? " என்று பேச்சு கொடுத்தான். அவளும் "ஆமா அத்தான் அம்மாவும் அப்பாவும் இப்போ சாப்பாட்டுல ரொம்ப ஸ்ட்ரிக்ட்.நினைச்சதை சாப்பிடவே முடியல" என்று கவலையுடன் மெலிந்த தன் உடலை பார்த்தபடி கூறினாள். சிறிது நேரம் அமைதி காத்தவன் "ஒரே அலுப்பாக இருக்கிறது வீட்டை சுற்றி பார்ப்போமா ??? என்றான். "ஏன் இந்த வீட்டை நீங்கள் முன்ன பின்ன சுத்தி பார்த்ததில்லையா?" என்று கேட்டாள் வெகுளியாக . "இவ வேற நேரம் காலம் தெரியாம" என்று மனதுக்குள் கடிந்தவன். "அப்படியில்லம்மா சும்மா இருக்க அலுப்பாவே இருக்கு" என்றான் கைகளை தூக்கி சோம்பல்

முறித்தபடி.

"வாங்க அத்தான் " என்றபடி அவனை கீழ் தளத்திலுள்ள சமயலறைக்கு முதலில் கூட்டி சென்றாள் . "முதலில் எங்க கூட்டி வருது பாரு... இவளை திருத்தவே முடியாது. இத பார்த்து நான் என்ன சமைக்கவா போகிறேன் " என்று மனதுக்குள் வைஷ்ணவியை கடிந்தான். கீழ் தளத்தை முழுவதும் சுற்றி காட்டியவள் "அவ்வளவு தான் அத்தான் " என்று சொன்னதும் " ஐயோ ஐயோ " என்று மானசீகமாக தலையில் அடித்து கொண்டான்.

பின்பு தைரியம் வர பெற்றவனாக " மேலே போய் பார்ப்போமா வைஷு " என்ற படி விறு விறுவென மேலே ஏறினான். கதை சுவரசியத்திலிருந்த கார்த்திகேயனும் மலர்வேந்தனும் இதனை கவனிக்கவில்லை. பின்னால் இழுபட்டு வந்த வைஷ்ணவியை எப்படி கழட்டி விடுவது என்று பலமான யோசனையில் ஆழ்ந்தவனுக்கு ஆத்ரேயன் துருப்பு சீட்டாக வந்து சேர்ந்தான். " வைஷு ஆத்ரேயன் அத்தான் எதுவும்

சாப்பிடவில்லை... சாப்பாட்டை கொண்டு கொடுத்து விட்டு வாரியா??? " என்றபடி ஆத்ரேயனுக்காக கையில் கட்டி வைத்திருந்த பார்சலை நீட்டினான்.

" என்னது ஆத்ரேயன் அத்தனிடமா?? " என்று ஒரு கணம் தயங்கியவள் பார்சலை பெற்று கொண்டு நடந்தாள். அப்பாடா என்றபடி வர்ஷினியின் அறையை அடைந்தவன் குளித்து விட்டு இரவு உடைக்கு மாறிய வர்ஷினியை பார்த்து உணர்ச்சிகள் பெருக்கெடுத்து ஓட தொடங்கின. "குட்டிமா" என்றபடி அவளை அணைத்து கொண்டவன் இதயம் படபடவென அடித்து கொண்டது. அவன் தேகம் பட்டதில் வர்ஷினி உடல் சிலிர்த்தது.. அந்த சிலிர்ப்பை அனுபவித்தவனாக நெற்றியில் முத்தமிட்டான். பிறகு நாசியில் முத்தமிட்டவனின் உதடுகள் வெட்கத்தில் சிவந்திருந்த பட்டு கன்னங்களை அடைந்தது. கன்னங்கள் இரண்டிலும் தன் முத்திரையை பதித்தபடி துடிக்கும் அதரங்களில் தேன் எடுக்க வேட்கை கொண்டான். அவள் உதடுகளை நெருங்கியதும், அவன் மூச்சு காற்று

அவளின் உணர்வுகளை தூண்டிவிட பாவையவள் வெட்கத்தில் கண்களை மூடி கொண்டாள், அதனை பார்த்து மனதுக்குள் சிரித்துக்கொண்டான் ஆதி. இரு உதடுகளுக்கும் நூலளவு இடைவெளியில் அவள் உதட்டை சுவைக்க போனவனின் செயல் " ஆதி .... " என்ற கர்ஜனை கேட்டு ஸ்தம்பித்து நின்றது. உடனே அவளை விட்டு விலகி நின்றவனின் உயிர் உறைந்து போனது பத்ரகாளியாக நின்ற தனது தாய் மாலதியை பார்த்ததும்.

சற்று நேரத்துக்கு முன் நடந்தது.....
யோசனையுடன் இருந்த வைஷ்ணவி ஆத்ரேயனை சந்திக்க சங்கடப்பட்டு கொண்டு பார்சலுடன் மாலதி முன் போய் நின்றாள். " அத்தை இதனை ஆத்ரேயன் அத்தானிடம் கொடுக்க சொல்லி ஆதி அத்தான் கொடுத்தார். நீங்களே கொடுத்து விடுறிங்களா ப்ளீஸ்" என்று கேட்டாள். " ஆதி எங்கே ? " என்று சந்தேகமாக கேட்ட மாலதிக்கு அவன் மாடிக்கு சென்றது நல்லதாக தோன்றாமல் " அதை கொடு " என்று பார்சலை வாங்கி கொண்டு மாடி ஏறினார்.

அப்போது தான் ஆதியும் வர்ஷினியும் பின்னி பிணைந்து கொண்டதை பார்த்து கொதிப்படைந்தார். அவர் காதலுக்கு எதிரியல்ல ஆனால் இது போல செயல்களை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் தான் அவன் எல்லை மீற முதல் அவன் பெயரை அழைத்திருந்தார்.

அவரின் குரல் கேட்டு அனைவரும் மேலே ஓடி வந்திருந்தனர். பயத்தில் ஒடுங்கிய வர்ஷினி ஆதியின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

" என்ன ஆச்சு??? ஏன் இப்படி கத்தினாய் ?? " என்றபடி வந்த கார்த்திகேயனிடம் விஷயத்தை சொல்லுவோமா வேண்டாமா என்று யோசித்தவருக்கு ஆத்ரேயன் வாங்கிய அடி நினைவு வந்தது. " அவன் தங்குவான் இவன் தங்கமாட்டானே " என்று மூத்த மகனை பற்றி நன்கு யோசித்தவர், கார்த்திகேயனை மட்டும் இழுத்து கொண்டு சற்று தூரமாக சென்றார்.

" ஆதிக்கு வர்ஷினியை பிடித்திருக்கு போல

இருவருக்கும் கல்யாணம் பண்ணி வைப்போமா ??? நல்ல பொண்ணு அவள் " என்றார், அவன் முத்தமிட சென்ற விஷயத்தை மறைத்து கொண்டு.அவருக்கு தெரியும் எப்படி கார்த்திகேயனை சம்மதிக்க வைக்க வேண்டுமென்று. தாடையை தடவியபடி யோசித்த கார்த்திகேயன் " எனக்கொன்றும் பிரச்சனையில்லை.. எனக்கு சந்தோசம் தான் ஆனால் இதுக்கு மலர்வேந்தன் சம்மதிப்பானா ???" என்றார்.

" நம்ம ஆதிக்கு என்ன குறைச்சல்??? நான் அண்ணாவிடம் பேசுறேன்.ஆதி ஒரு கிழமை நிப்பானாம் போக முதல் நிச்சயம் பண்ணி விடுவோம், ஆதியின் படிப்பு முடிய கல்யாணம் பண்ணி வைப்போம் " என்றார். அவருக்கு ஆதி மேல் நம்பிக்கையில்லை. கல்யாணத்துக்கு முதல் ஏதும் தப்பு தாண்டா பண்ணி விடுவானோ என்று பயமாக இருந்தது. " உன் அண்ணாவிடம் பேசி முதல் அவர் சம்மதத்தை பெறு " என்றார். கணவன் சம்மதித்ததில் சந்தோஷமடைந்தவர், தள்ளி இருந்து நடந்ததை அறியாமல் குழம்பி

கொண்டிருந்த கோகிலாவையும் மலர்வேந்தனையும் நோக்கி வந்தார் . " அண்ணா உங்க மூத்த பெண்ணை என் வீடு மருமகளாக்க ஆசைப்படுகிறேன்.. உங்களுக்கு சம்மதமா?? என்று கேட்டார்.

மலர்வேந்தனுக்கு இது ஆச்சரியமாக இருந்தாலும் பூரிப்பாக இருந்தது.. கோகிலாவுக்கு ஆத்ரேயன் மேல் தான் நல்ல அபிப்ராயம் இல்லை ஆதி மேல் அவருக்கு எப்போதும் மரியாதையை இருந்தது. அதனாலேயே " ரொம்ப சந்தோஷமம்மா " என்றார் மலர்வேந்தன்.

என்ன நடக்க போகுதோ என்று பயந்து கொண்டிருந்த ஆதிக்கும் வர்ஷினிக்கும் ஆகாயத்தில் பறப்பது போல இருந்தது. ஆதியின் பின்னால் ஒளிந்து இருந்தவள் யாருக்கும் தெரியாமல் அவனின் இடுப்பை கிள்ளினாள்.

"ஆ... " என்று அலற வாயெடுத்தவன் குரல் அனைவருமிருந்ததால் நலிந்து ஒலித்தது.. இந்த வாரம் நிச்சயதார்த்தம் என்ற செய்தி கேட்டு

அவர்களின் சந்தோசம் ரெட்டிப்பானது.. வைஷ்ணவிக்கோ சந்தோசம் தாங்க முடியவில்லை ." ஐ... அக்காக்கு கல்யாணம்.. புது உடுப்பு வங்கனும். " என்று சொன்னபடி கீழே ஓடினாள். எல்லாரும் கீழே சென்றதும் ஆதியிடமும் வர்ஷினியிடமும் வந்த மாலதி " ரெண்டு பெரும் வாலை சுருட்டி கொண்டு கல்யாணம் முடியும் வரை சும்மா இருக்கனும். " என்று கேலியாக மிரட்டி மருமகள் நெற்றியில் முத்தமிட்டாள். "சரி அத்தை.. இனி இவர் பக்கத்தில் வந்தாலே நான் எட்டடி ஓடி விடுவேன்" என்றாள் சிரித்தபடி. " அத்தையும் மருமகளும் ஒன்று கூடிட்டாங்கப்பா . " என்றபடி வர்ஷினியை பார்த்து கண்ணடித்து விட்டு கீழே சென்றான். " நான் இருக்கிறேன் என்ற மரியாதையை கொஞ்சமாச்சும் இருக்கா அவனுக்கு " என்று மருமகளிடம் புலம்பியபடி மாலதியும் கீழே சென்றார்.

வீட்டுக்கு வந்த ஆதிக்கு சந்தோசம் தாங்கவில்லை. தமயன் அறைக்கு நேரே வந்து படுத்து கொண்டிருந்த ஆத்ரேயன் மேல் விழுந்து

கட்டி புரண்டான். " டேய் என்னடா பண்ணுற?? நான் வர்ஷினி இல்ல. விடுடா." என்று கத்தியவனை ஆதி சட்டை செய்யவே இல்லை.. " டேய் நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன்டா " என்று தொடங்கியவன் நடந்ததை எல்லாம் கூறினான்.. " வாவ்... அப்போ நம்ம வீடு கல்யாண களை கட்டி விட்டது... " என்றவனை " ஆமாடா.. என்று அவன் கன்னத்தில் முத்தம் கொடுத்துவிட்டு ஆதி தன் அறைக்குள் புகுந்து கொண்டான். கன்னத்தை துடைத்தபடியே " காஞ்ச மாடு கம்புல விழுற போல என் மேலயே பாயுறான் அந்த பிள்ளை என்ன பாடு படப்போகுதோ " என்று முணுமுணுத்தான். சனிக்கிழமை நிச்சயதார்த்தம் என்று ஐயரிடம் நேரம் குறித்து வரப்பட்டது.. இன்னும் 3 நாட்களே இருந்த நிலையில் இருவரின் வீடுகளும் களை காட்டியது.

அடுத்தநாளே உடுப்பெடுக்க அனைவரும் கடைக்கு சென்றனர். அண்ணனின் நிச்சயதார்த்தம் என்பதால் ஆத்ரேயனும் சென்றான் அரை மனதுடன். அவனுக்கு மனம்

முழுதும் வைஷ்ணவியை பார்க்கவே கூடாது என்ற எண்ணமே ஓங்கி இருந்தது. நீண்ட நாட்கள் கழித்து மெலிந்த உடலுடன் வைஷ்ணவியை பார்த்தவன் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான். பின் சுதாகரித்து கொண்டு வண்டியை எடுத்தான். வைஷ்ணவியை சொல்லவே தேவையில்லை ஒரு நடுக்கத்துடனேயே வானில் உட்காந்திருந்தாள்.

வர்ஷினி கோகிலா மற்றும் மாலதி சாறி section இல் உடை தெரிந்து கொண்டிருந்தனர். வைஷ்ணவியோ சுடிதாரை பார்த்து கொண்டிருந்தாள் வேற section க்கு சென்று. அப்போது அங்கு வந்த ஒரு salesman வைஷ்ணவியிடம் எப்படியான உடை வேணும் என்று கதையளந்து கொண்டிருந்தான். உடல் மெலிந்திருந்த வைஷ்ணவியின் அழகு சற்று கூடி காணப்பட்டது. வைஷ்ணவியும் தனது எதிர்பார்ப்புகளை salesman இடம் சொல்லி கொண்டிருந்தாள். அவனும் புது புது உடைகளை எடுத்து அவள் மேல் வைத்து காட்டினான். வைக்கும் போது அவன் கைகள் அவள் மேல்

உரசி சென்றது. உடைகளின் அழகில் லயித்திருந்தவள் இதனை கவனித்து கொள்ளவில்லை. உடை எடுப்பதில் ஆர்வமில்லாமல் தனித்து இருந்த ஆத்ரேயனுக்கு salesman மீதும் அதனை அனுமதிக்கும் வைஷ்ணவி மீதும் கோபம் வந்தது. நிறைய நேரம் அவதானித்தவன், salesman இன் பார்வையும் தீண்டலும் எல்லை மீறுவதை உணர்ந்து தன் இருக்கையிலிருந்து எழுந்து விறு விறுவென அவ்விடத்திற்கு சென்றான்.

வைஷ்ணவிக்கு பின்னாலிருந்து salesman ஐ முறைத்தவாறு போக சொல்லி தலையால் சைகை செய்தான். ஆத்ரேயனின் அனல் காக்கும் பார்வையில் பயந்தபடி அவ்விடத்தை விட்டு நழுவினான் அவன். உடைகளை காட்டி கொண்டிருந்தவன் விலகி சென்றதை விசித்திரமாக பார்த்தாள் . உடனே " இடையில் விட்டு விட்டு எங்கே போறீங்க அண்ணா ? " என்று கேட்டவளை கவனிக்காதவாறு அவன் வேறு section க்கு சென்று இருந்தான். " என்னாச்சு இவருக்கு??? " என்று யோசித்தபடி திரும்பியவள்

பின்னால் அனல் காக்கும் பார்வையுடன் நின்ற ஆத்ரேயனை பார்த்து ஸ்தம்பித்து போனாள் " இவன் எதுக்கு நம்மள இப்படி முறைக்கிறான்?? " என்று யோசித்தபடி விரித்திருந்த உடைகளை பார்த்தாள் " உடுப்பு எடுத்தாச்சா?? " என்று சிம்ம குரலில் கர்ஜித்தவனை பார்த்து நடுக்கம் ஏற்பட்டாலும் கொஞ்சம் சுத்தகரித்தவள் " இன்னும் எடுக்கல அதுக்குள்ள அவர் போய்ட்டார்." ..: என்றாள். அவர் என்ற மரியாதையான விளிம்பில் அவன் BP மேலும் எகிறியது.

" ஓ.... அவரா??? அந்த தடியனுக்கு மரியாதையை வேறயா?? அவன் அங்க தொடுறான் இங்க தொடுறான் நீயும் காட்டிட்டு நிக்குற?? கொஞ்சம் கூட பொம்பிளை பிள்ளையா அடக்க ஒடுக்கமா இருக்கனும் என்று அறிவில்லையா??? உனக்கு இந்த வயதில ஆம்பிள்ளைங்க தேவைப்படுகுது என ??" என்று தன்னால் முடியும் வரை அவளை அசிங்கப்படுத்தினான்..
அவனின் வார்த்தைகள் அவளிதயத்தை முள்ளால் தைப்பது போலிருந்தது. கண்ணில் நீர்

கோர்க்க அவனை பார்த்தாள். " பச் இப்போ எதுக்கு அழுகிற ??? எப்போ பார்த்தாலும் அழுதழுது நாடகம் மட்டும் உனக்கு போட நல்லா தெரியுது.. " என்றான் மேலும் அவளை காயப்படுத்துவதற்காக.

இனி இவனுக்கு பேச்சிலேயே பதிலடி கொடுக்கவேண்டுமென்று நினைத்தவள் " நான் என்ன செய்தா உங்களுக்கென்ன?? உங்க அண்ணா தான் என் அக்காவை கட்டிக்க போறார்.. அதை மீறி உங்களுக்கு எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்று பதிலடி கொடுத்தவள். மேலும் இருந்தால், அவனின் கூரான வார்த்தைகளை கேட்க வேண்டி வரும் என்று யோசித்து கையில் பட்ட சுடிதாரை எடுத்துக்கொண்டு உடை மாற்றும் அறைக்கு செல்ல முற்றப்பட்டாள். அவள் கையை பிடித்தவன் " என்னடி சம்பந்தமில்லை? என் ரத்தம் தான் உன் உடம்பில ஓடுது. உனக்கு அவன் கூட உரசனுமா? சொல்லு உரசனுமா?" என்று கேட்க அதில் அதிர்ந்தவள் "என்ன வார்த்தை கேட்டு விட்டான்.கடவுள் இவன் நாக்கை

கத்தியுடனேயே படைத்து விட்டார்" என்று மனதில் நினைத்தவள், முழு பலம் கொண்டு கையை உதறிவிட்டு நடக்க தொடங்கினாள். அவள் தன்னுடன் இந்தளவுக்கு பேசி இன்று தான் கேட்டிருக்கிறான். அவனின் முன் மறு பேச்சு பேச அவன் அண்ணாவும் அன்னையும் பயப்படும் பொது இவளுக்கு என்ன தைரியமும் திமிரும் என்று யோசித்தவன் தாவி சென்று அவள் உடை மாற்றும் அறைக்குள்ளே அவனும் அவளுடன் புகுந்து தாளிட்டு கொண்டான்.

அவனின் செய்கையில் முதலில் திகைத்தவள் "வெளிய போங்க " என்று சீறினாள். அவள் சீறலில் அவன் ரத்தம் கொதிக்க தொடங்கியது வலது கையால் அவள் வாயை பொதி மறுபுறம் திரும்பியவன் இடது கையால் அவளின் இடது கையை இறுக்கி பிடித்து பின்னால் மடித்து அவள் உடலை தன்னுடலால் விசை பிரயோகித்து நிலைக்கண்ணாடியுடன் அழுத்தியவன் அவள் காதுக்குள் “ஏதோ உன்னை rape பண்ண போற போல கத்துறா.உன்னை பார்க்க கூடாத நிலையில் பார்த்தே ஒன்றும் செய்யாதவன் நான்

இப்போ மட்டும் என்ன செய்ய போறன்?" என்று உறுமியபடி கையை முறுக்கினான்.. உடல் வலி மன வலி இரண்டும் தாங்க முடியாமல் அவள் கண்களில் கண்ணீர் உருண்டோடியது. அவன் எதற்காக தன்னை வதைக்கிறான் என்று அவளுக்கு புரியவில்லை உதவி கேட்பதற்கு வாயையும் திறக்க முடியாமல் விம்மினாள்.

"வைஷ்ணவி " என்று அழைத்தபடி வந்த கோகிலாவின் சத்தம் கேட்க அவளை விட்டவன். அவளை திருப்பி இறுக்கி அணைத்து தன் ஆத்திரத்தை அடக்கியவன் அவனின் கை குட்டையால் அவளின் கண்ணீரை துடைத்து விட்டு " போ " என்றான். அவளும் கன்றி சிவந்திருந்த கைகளை தேய்த்தபடி வெளியேறினாள். இந்த விடயத்தை மற்றவரிடம் சொல்லி நியாயம் கேட்பதற்கு அக்காவின் வாழ்க்கை தடையாக இருந்தது.
சொல்வதென்றால் கூட எதை சொல்லுவது என்று குழம்பினாள். காயமும் படுத்துகிறான் கட்டியும் பிடிக்கிறான். அவன் மனதில் என்ன இருக்கிறது என்று அவளுக்கு புரியவில்லை.

அவனுக்கும் தன்னை சமன் செய்ய நேரம் தேவைப்பட்டது. ஏன் இவ்வாறு நடக்கிறோம் என்று அவனுக்கும் தெரியவில்லை. " அவளை யார் உரசினால் உனக்கென்ன" என்று அவன் மனசாட்சி அவனிடம் கேள்வி கேட்டது. அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது வைஷ்ணவியால் அவன் தன்னிலை இழக்கிறான். அவள் அருகில் இருக்கும் போது அவன் அவனாக இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் நிலை கண்ணாடியில் தலையை சாய்த்து கண்ணை மூடி நின்றவன் சிறிது நேரம் கழித்து வெளியே வந்தான். எல்லோரும் சாறி section இல் நிற்பதை பார்த்தவன் அங்கே இருந்த சோபாவில் அமர்ந்தபடி தொலைபேசியை நோண்ட தொடங்கினான்.

“பொண்ணோட தங்கச்சி சாறி உடுக்க வேணும்” என்று மாலதி கட்டாயப்படுத்தி வைஷ்ணவியை அழைத்து வந்திருந்தார். அங்கிருந்த salesman ஒரு சாரியை தூக்கி " இது நல்லா இருக்கும் பாருங்க " என்று அவள் தோளில் வைக்க போன போது

தடுத்தவள் " தாங்க.... நானே வைத்து பாத்துக்கிறேன் " என்றபடி அதனை வைத்து பார்த்தாள். அவளின் செய்கையை ஒரு நொடி நிமிர்ந்து பார்த்தவன் சிறு புன்னகையுடன் தலையை குனிந்து கொண்டான்.

இயந்திரதனமாக ஒரு சேலையை எடுத்தவள் அதனை ஒழுங்காக பார்க்க கூட அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

காதல் மலரும்.....

<u>யுகம்-9</u>

எல்லாம் முடிந்து சாப்பிட போனவர்கள் விரும்பியதை ஆர்டர் பண்ணி விட்டு சாப்பிட உட்காந்தனர். மனம் நிறைய பாரத்துடன் எதிலும் ஈடுபாடில்லாமல் இருந்த வைஷ்ணவி சாப்பாடு என்றதும் கொஞ்சம் ஆர்வமானாள். வேதனையான நினைவுகளை ஒதுக்கி விட்டு சாப்பிட தயாரானாள்.

ஆத்ரேயன் மட்டும் salad & lime juice ஆர்டர் பண்ணி

இருந்தான். "இத சாப்பிட இங்க வரணுமா இந்த மடையன் " என்று அவனை மனதுக்குள் நக்கலடித்தாள் வைஷ்ணவி. மற்றைய அனைவரும் தங்களுக்கு விரும்பிய உணவை ஆர்டர் பண்ணி இருந்தனர். வைஷ்ணவி மட்டன் பிரியாணி ஆர்டர் பண்ணி விட்டு அதை புசிக்கும் ஆவலுடன் காத்து கொண்டிருந்தாள். இவ்வளவு நாள் வீட்டில் இலை குலை மட்டும் சாப்பிட்டவளுக்கு பிரியாணி என்ற பெயர் அமிர்தமாக இருந்தது.

அனைவரும் இரு மேசைகளில் ஜோடி ஜோடியாக அமர்ந்திருந்தனர் . பெரியவர்கள் ஒரு மேசையிலும் சிறியவர்கள் ஒரு மேசையிலும் இருந்தனர். வைஷ்ணவிக்கு சரி பக்கத்தில் ஆத்ரேயன் அமர்ந்திருந்தான் ஆதியும் வர்ஷினியும் இருவருக்கும் நேரே ரகசியம் பேசி கொஞ்சி குலாவி இருந்ததை பார்க்க சிறியவர்கள் இருவருக்கும் சங்கடமாக இருந்தது.

" எங்க வந்து என்ன பன்றான் சீ... " என்று ஆத்ரேயன் முகம் சுளித்து கொண்டிருந்தான். அவனுக்கு பெண்கள் மேல் ஆர்வம் கிடையாது. பெண்கள் தான் தன் பின்னாடி வர வேண்டும் என நினைப்பவன். பெண்கள் பின்னால் தான் செல்வது அவனை பொறுத்த வரைக்கும் இழுக்கான செயல். அதனால் தான் வைஷ்ணவி பின்னால் தன் மனம் செல்வதின் காரணம் தெரியாமல் சில நேரங்களில் தன்னை தானே அவன் வெறுத்தான்.

வைஷ்ணவியும் என்ன செய்வது என்று தெரியாமல் குனிந்தபடி menu card ஐ பார்த்து கொண்டிருந்தாள். " இன்னும் ஏதும் ஆர்டர் பண்ணனுமா???" என்று கேட்டான் ஆத்ரேயன். " இல்லை " என்றவள் நிமிரவே இல்லை. ஆனால் மனதுக்குள் " இவன் எதுக்கு எப்போ பார்த்தாலும் என்னை வம்பிழுத்து கொண்டிருக்கிறான் " என்ற கேள்வி மட்டும் ஓடி கொண்டிருந்தது.

மட்டன் பிரியாணி வந்து கொண்டிருப்பதை பார்த்தவளுக்கு வாய் ஊற தொடங்கியது." ஆடி அசஞ்சு வருவதை பாரு " என்று மனசுக்குள் பிரியாணி கொண்டு வந்தவனுக்கு திட்டும் விழுந்தது.

மேசையில் வைத்ததும் பொறுமையிழந்து கையை கூட கழுவாமல் சாப்பிட போனவள் கையை ஆத்ரேயன் பிடித்திருந்தான். " சாப்பிடும் பொது கை கழுவ மாட்டாயா ??? " என்ற கேள்வியில் வெட்கப்பட்டு போனாள். " இவனோட எதுக்கு வம்பு " என்று கை கழுவ போனவள் திரும்பி வரும் பொது அங்கிருந்த ஸ்பூனினால் ஆத்ரேயன் அவளின் மட்டன் பிரியாணியை சாப்பிட்டு கொண்டிருந்தான். இந்த மூளை தனக்கு வரவில்லையே என்று தன்னை தானே கடிந்து கொண்டாள். அவள் மேசையில் salad & lime juice இருந்தது. எதிலும் பொறுத்து போகிறவளுக்கு சாப்பாடு என்றதும் கோபம் கொப்பளிக்க தொடங்கியது.

பக்கத்தில் இருந்த வர்ஷினி, ஆதி கூட தன்

பிரியாணியை பாதுகாக்கவில்லை என்று கடுப்பானவள், " இவங்க ரெண்டு பேருக்கும் எப்போ பார்த்தாலும் ரொமான்ஸ் தான் " என்று அலுத்து கொண்டாள் . ஆத்ரேயனின் அருகில் உட்கார்ந்தவள் " நீங்க சாப்பிடுவது என்னோடது" என்றாள்.

" so what ?" என்று தோளை உலுக்கியவன் அவளை நிமிர்ந்தும் பார்க்காமல் சாப்பிட்டான். இடையில் " செம taste" என்றவன் தனது வேலையில் மும்முரமாக ஈடுபட்டான். சாப்பாட்டில் அவள் கண்கள் நிலைக்க கட்டு படுத்த முடியாத கோபத்துடன் சாப்பிட போன அவன் கையை பிடித்தவள்.. " இப்போ என்னோடத தரப்போறியா இல்லையா? " என்றாள்.

அவளின் ஒருமை விழிப்பில் புருவங்களை தூக்கியவன் நிதானமாக " உன்னை தான் டாக்டர் கண்டதெல்லாம் சாப்பிட வேணாம் என்றாரே . உனக்கு நினைவில்லயா??? " என்றவன் அவள் கையை தட்டியபடி சாப்பிட தொடங்கினான். " சாப்பாட்டை இவனிடமிருந்து பெறமுடியாது "

என்று நினைத்தவளுக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. அது அவளின் முகத்தில் அப்பட்டமாக தெரிந்தது அவளின் எரிச்சலை பார்த்தவன் வந்த சிரிப்பை கட்டுப்படுத்திக்கொண்டு " உனக்கு நான் சாப்பிட்ட எச்சிலை சாப்பிட ஆசையாக இருந்தால் கேள் தருகிறேன் " என்றவன் அவள் பதிலுக்காக காத்திருந்தான்.

ஏதோ அவன் எச்சிலை சாப்பிட தான் ஆசைப்பட்டது போல் கதைத்தவனை பார்க்க கோபம் கோபமாக வந்தது. "இவன் என்ன பற்றி என்ன நினைச்சுட்டு இருக்கான்?" என்று யோசித்தவள். "எனக்கு வேண்டாம் " என்றபடி தன் முன்னிருந்த salad & lime juice ஐ வெறுப்புடன் சாப்பிட தொடங்கினாள்.

அவனின் செயல் அக்கறையையும் அவனின் பேச்சுக்கள் பழிவாங்குவது போலவும் இருக்க அவனை அவளால் கணிக்க முடியாமல் போனது.

நிச்சயதார்த்த நாளில் வர்ஷினி பக்கத்தில் வைஷ்ணவி அழகு தேவதையாக ஜொலித்தாள்.

எப்போதும் மிக சாதாரணமாக இருப்பவள் வர்ஷினியின் வற்புறுத்தலால் அழகாக அலங்காரம் பண்ணி இருந்தாள் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அவளை கண்களால் ரசித்த ஆத்ரேயனுக்கு மனம் தறி கேட்டு ஓடியது. "சை.... என்ன நினைப்பு இதெல்லாம்" என்று மனதை கட்டு படுத்தியவன். ஆதியிடம் " மேக்கப் போட்டாலும் காகம் காகம் தான் "என்று கிண்டலடித்தான் அவளுக்கு கேட்கும் குரலில்.

அவன் நடவடிக்கையினால் ஏற்கனவே கொதித்து கொண்டிருந்தவள் இவன் எப்போது பொய் தொலைவான என்று மனதுக்குள் நினைத்து கொண்டா ள்.

இனி எப்போதும் அவன் தன்னை காயப்படுத்த இடமளிக்க கூடாது என்று நினைத்தவள். அவனை பதிலுக்கு காயப்படுத்த வேன்றுமென்ற வன்மம் தோன்ற " சிலருக்கு முகம் மட்டும் தான் அழகு அகம் முழுக்க அழுக்கு .. பொம்பிளை பொறுக்கி " என்றாள் சத்தமாக. எல்லோர் முன்னிலையிலும் அவன் தன்னை எதுவும்

பண்ணமாட்டான் என்ற தைரியத்தில்இருந்தாள் . அவளின் வார்த்தைகள் அருகில் நின்ற ஆதி காதிலும் விழுந்தது.. " இந்த பொண்ணுக்கு கொஞ்சம் கூட பயமில்லையப்பா" என்று மனதில் நினைத்து கொண்டான். தங்கையின் இப்படி வெளிப்படையான வார்த்தைகள் வர்ஷினிக்கும் புதிது. இவர்களே இப்படி சங்கடப்படும் போது அவ்வார்த்தைகளுக்கு உரியவன் கண் சிவந்து ருத்ர மூர்த்தியாக மாறி இருந்தான்.. அவள் அதை சட்டை செய்யாமல் சிரித்தபடி இருந்தது அவனின் கோபத்தை பன் மடங்காகியது.

அவள் தனியாக மாட்டும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்தவனுக்கு அவளாகவே சந்தர்ப்பத்தை வரவழைத்து கொடுத்தாள் .

எல்லா வேலைகளும் முடிந்ததும் சற்று களைப்பாக இருக்க நிச்சயதார்த்தம் தொடங்க முன்னர் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் என்று தனது அறையை நோக்கி சென்றவளை பின் தொடந்தான் ஆத்ரேயன். நிச்சயதார்த்த

வேலைகளில் பிசியாக இருந்தவர்கள் இதனை கவனித்து கொள்ளவில்லை.

மேலே சென்றவள் கதவை சாத்தாமல் கட்டிலில் தொப்பென்று விழுந்து விட்டத்தை பார்த்தபடி கண்களை மூடினாள். தாளிடாத கதவினால் உள்ளே நுழைந்தவன் நிமிர்ந்தவாறு படுத்திருந்தவளுக்கருகில் மெதுவாக வந்து அவள் முகம் நோக்கி குனிந்து ஆக்ரோஷமாக அவள் இதழை கவ்வி திணற திணற முத்தமிட்டான்.

இந்த எதிர் பார்க்காத தாக்குதலில் அதிர்ச்சியடைந்தவள் தன் பலம் கொண்ட மட்டும் அவனை தள்ள முயற்சி செய்தாள். அவனாக விரும்பி அவளை விடுவித்ததும் அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. ஆக்ரோஷமாக அவனை அடிக்க போன அவள் கையை லாவகமாக பிடித்தவன் அவள் இரு கைகளையும் அவள் பின்னல் கொண்டு சென்று அவளை பின்னால் வளைத்து தன் உடல் முழுதும் அவளுடலில் உரசும் படி நின்றவன். " நானாடி

பொம்பள பொறுக்கி ? பொம்பள பொருக்கி இது தான் பண்ணுவான்.. அண்டைக்கு நீ அலங்கோலமா கிடந்த போதே உன் கண்ணை தவிர நான் எதையும் பார்க்கலடி.. அப்பிடி பட்ட என்னை பொம்பள பொறுக்கி என்று சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம் வேணும்?? நேரில் எந்த பொண்ணையும் நான் கண்ணுக்கு கீழே பார்த்து கதைச்சதில்லடி. அப்படி பட்ட என்னை இவ்ளோ கேவலமா நடக்க வச்சது நீதான்." என்று தான் செய்த பிழைக்கு அவள் மேல் பழி போட்டு தன்னை நியாயப்படுத்தி கொண்டான். மேலும் "இது நீ பேசுனதுக்காக நான் கொடுக்கும் தண்டனை.. இத வச்சு நான் உன்ன கல்யாணம் பண்ணுவேன் என்று கற்பனை பண்ணாதே . அதுக்கு நீ தகுதி இல்லாதவள் " என்று அவளை உதறி கட்டிலில் தள்ளியவன் அறையை விட்டு வெளியேறி விட்டான்

போகும் பொது கண்ணாடியில் தன்னை பார்த்து சரி செய்து கொண்டவன் உதட்டில் அப்பி இருந்த உதட்டு சாயத்தை தன் கைக்குட்டையால் நன்றாக துடைத்தபடி வெளியேறினான்.

கட்டிலில் விழுந்தவளுக்கு நிலை பெற நிறைய நேரமெடுத்தது. அவளால் முடிந்தது அழ மட்டுமே. இதை யாரிடம் சொல்லி என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள். அவன் செயல்களால் அவனை அவள் முழுமையாக வெறுத்தாள். அவன் அழகு மேல் அவளுக்கு முதலிருந்த ஈர்ப்பு அவன் தன்னை கண்ணியமாக காப்பாற்றியதில் அவன் மேல் வந்த மரியாதையை அனைத்தும் நொறுங்கி இருந்தது. இப்பொது எஞ்சி இருந்தது வெறுப்பு மட்டுமே.

கண்ணீரில் அழுது கரைந்தவள் சிறிது நேரம் கழித்து .முகத்தை நன்றாக கழுவினாள் அலங்காரம் எதுவும் பண்ணாமல் பொட்டு மட்டும் வைத்து கொண்டு வெளியே வந்தாள்.

வெளியே வந்த ஆத்ரேயன கீழே செல்லாமல் மனதினை ஒரு நிலைப்படுத்த balcony யில் வந்து குளிர் காற்று முகத்தில்பட நின்ற பிறகு தான் தன்னிலை அடைந்தான். மூளை தான் செய்தது சரி என்று வாதிட்டாலும் மனம் அடித்து கூறியது

"நீ நடந்து கொண்டது பிழை" என்று.

காதல் அழகு சம்பந்தப்பட்டது என்று வரையறுத்து வைத்த ஆத்ரேயானால் காதல் மனம் சம்பந்தப்பட்டது என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சில நேரங்களில் மிக நிதானமாக யோசித்து பார்ப்பான். "இது காதலா இருக்குமோ?" என்று ஆழ் மனம் கேள்வி கேட்டால் கூட.. "என் அழகென்ன அவள் அழகென்ன... இதெல்லாம் சாத்தியமே இல்லை" என்று முரண்பட்ட மனம் பதிலளிக்கும். எதிரியாக மனதுக்குள் நுழைந்தவள் . அவன் அறியாமலே அவன் மனதில் சிம்மாசனம் போட்டு உட்காந்திருந்தாள். அவன் ego அந்த காதலை உணர மறுத்தது. சாதாரண நேரங்களில் எதிரியாக தெரிகின்றவள் மேல் ஏனிந்த அக்கறை என்று குழம்பினான். இதிலிருந்து எப்படி வெளிவருவது என்று தெரியாமல் தவித்தான். அவள் மேல் காதல் கொண்டால் தன் நிலை கீழே இறக்கிவிடுமோ என்று பயந்து அவன் ego அவனை கட்டுப்படுத்தி கொண்டிருந்தது. சில நேரங்களில் அவனின் ego வை உடைத்து

கொண்டு அவன் காதல் வெளியில்
பெருக்கெடுத்து இருந்தது. நிறைய நேரம் நின்று
யோசித்தவன். இனி லீவுக்கு கூட இங்கு
வரக்கூடாது வைஷ்ணவியை பார்ப்பது இன்று
தான் கடைசியாக இருக்க வேண்டும் என்று
முடிவெடுத்தான். ஆழ்ந்த மூச்செடுத்தவன்
தன்னை சமப்படுத்தி கொண்டு கீழிறங்கினான்

அழுது வீங்கிய கண்களை கண்டு பதறிய
தாயிடம் தலையிடியம்மா என்று சமாளித்தவள்
மறந்தும் ஆத்ரேயன் நின்ற பக்கம்
போகவில்லை. நிச்சயதார்த்த நேரத்திலும் ஆதி
வர்ஷியை மட்டுமே பார்த்து கொண்டிருந்தாள்.
ஆனால் ஆதியின் கண்கள் அவள் மீது காண
நேரம் நிலைத்து விலகியது. "சொன்ன கேளுடா
மடையா.. அவளை பார்க்காதே ." என்று அவன்
மனம் அவனை திட்டி கொண்டிருந்தது.

நிச்சயதார்த்தம் முடிந்து வீடு வந்தவன் தனக்கு
முக்கியமான பரீட்சை இருப்பதாக பொய்
சொல்லிவிட்டு அன்றிரவே புறப்பட்டான்.
ஆதிக்கு அது பொய் என்று தெரிந்தாலும் அதனை

சொல்லும் தைரியம் இல்லாமல் தானுண்டு தன வேலையுண்டு என்று இருந்து விட்டான்.

சில வருடங்கள் கழித்து ஆத்ரேயன் கடைசி வருடத்தில் காலடி எடுத்து வைத்திருந்தான். ஆதி படித்து முடித்து விட்டு தந்தையின் கம்பெனியை அவருடன் சேர்ந்து நடத்த தொடங்கி இருந்தான். அவனுக்கும் வர்ஷினிக்கும் இன்னும் ஆறு மாதத்தில்கல்யாணம் என்ற நிலை இருந்தது.

ஆளுமை அதிகம் கொண்ட ஆத்ரேயன் கல்லூரியையே தன் கட்டுக்குள் வைத்திருந்தான். யூனியன் லீடர் ஆக இருந்த அவனின் கண்பார்வையிலேயே கல்லூரி அசைந்தது. வெறித்தனமாக கோபத்தை காட்டாமல் நிதானமாக காட்டி எதிரிகளை பந்தாடும் கலையை கற்றிருந்தான். அவனின் முறுக்கேறிய உடலிலும் வசீகரிக்கும் வதனத்திலும் சொக்கிப்போய் அந்த கல்லூரி பெண்கள் இருந்தனர். கல்லூரியின் students union ஆல் வெளிவிடப்படும் புத்தகத்தின் அட்டையில்

தனது six பேக் உடலை காட்டியபடி கொடுத்த போஸ் இனால் என்றுமில்லாதவாறு அந்த புத்தக விற்பனை களைகட்டியது. அவன் மீது பைத்தியமான பல பெண்கள் அவர்களின் காதலை சொல்லியும், எங்கே காதலித்தால் தன் மேலுள்ள craze குறைந்துவிடும் என்ற நினைப்பினாலும், தன்னை மயக்கும் அழகி இன்னும் தன்னை தேடி வரவில்லை என்ற திமிரினாலும் அனைவரையும் புறக்கணித்தான். படிப்பிலும் அவன் தான் topper ஆக இருந்தான். விளையாட்டு, நடனம் ,பாடல் என்று எல்லா திறமைகளும் கொண்ட சகலகலா வல்லவனவன். அவன் கோபத்தை வெகுவாக குறைத்து முகத்தில் புன்னகையை ஏந்தி கொண்டான். அடுத்தவரை காயபடுத்துவதை குறைத்து கொண்டான்.

அதற்கு அவன் வைஷ்ணவியை மறக்க மேற்றுக்கொண்ட தியானமும் காரணம். லீவுக்கு கூட போகாமல் ஏதும் சாட்டு சொல்லி நின்று விடுவான். இரு தடவைகள் கார்த்திகேயனும் மாலதியும் மனம் கேட்காமல் கல்லூரிக்கு வந்து

பார்த்து விட்டு சென்றனர். அவனின் இந்த மாற்றம் அனைவருக்கும் பெருத்த நிம்மதியாக இருந்தது. சுருங்க சொன்னால் அவன் வைஷ்ணவியின் நினைப்பிலாமல் சந்தோஷமாக வாழ பழகி இருந்தான்.

அங்கு பையன்களும் பெண்களும் அரட்டையடித்தபடி மர நிழலில் உட்காந்திருந்தனர். அங்கே வந்த மூன்றாம் வருடம் படிக்கும் பெண் ஆத்ரேயனிடம் ஒரு card ஐ நீட்டினாள் . அவனுக்கு இது பழகி போன ஒன்று சலித்தபடி வாங்கியவன் அதில் அவனை பற்றி வர்ணித்து ஒரு கவிதை எழுதி இருந்தது. அதை படித்து விட்டு " உனக்கு நன்றாக கவிதை எழுதும் திறன் இருக்கிறது தங்கச்சி ..... நீ இந்த வருட union இதழில் ஒரு கவிதை எழுதலாமே" என்றான். தங்கச்சி என்ற விளிப்பில் அவனுக்கு தன் மேல் ஈர்ப்பில்லை என்று அறிந்தவள் , தன்னை காயப்படுத்தாமல் காதலை புறக்கணிக்கும் அவனின் குணம் கண்டு அவள் காதல் ரெட்டிப்பானது.

"என்னம்மா love ஆ?.." என்று அங்கிருந்த அவனின் தோழர்கள் அவளை கலாய்த்து விட்டு , ஆத்ரேயனிடம் "உனக்கு எங்கோ மச்சம்டா " என்றபடி தங்களது அரட்டையை தொடங்கினர். அவர்களை பார்த்து முறைத்தவன் , " நீ வா" என்று அவளை அழைத்து கொண்டு அவளோடு நடந்தபடி "எதற்காக எல்லார் முன்னிலையிலும் இதை தந்தாய்? இதனால் உன் பெயர் தான் கேட்டு போகும். இங்கே நீ நன்றாக படிக்க வேண்டும். இந்த காதல் கத்தரிக்காய் எல்லாம் தூக்கி போட்டுவிட்டு உன் அம்மா அப்பாவுக்காக படி. அவர்களுக்காக வாழ். அவர்களே உனக்கு என்னைவிட எல்லாத்திலும் உயர்ந்த ஒரு பையனாக பார்த்து கல்யாணம் பண்ணி வைப்பார்கள். இப்போ நீ class க்கு போ..இதை நீ யாரிடமும் சொல்லாதே நானும் யாரிடமும் சொல்ல மாட்டேன்" என்று அவளை அனுப்பி வைத்துவிட் தன் நண்பர்கள் இருக்கும் இடத்துக்கு வந்தான்.

"என்னடா அந்த பொண்ணு காதால் ரத்தம் வந்ததா?" என்று ஒருவன் கலாய்க்க "சும்மா

இருடா?" என்று சிரித்தபடி வரும் பெண்களை site அடிக்க தொடங்கினான். அவன் சாமியாரில்லை ஆனால் உத்தமன்.

"டேய் அடுத்தவாரம் 1st year வருவாங்கடா ... நிறைய புது பொண்ணுங்க வருவாங்க... ragging பண்ணி செம ஜாலியா time spend பண்ணலாம்.." என்றவனை பார்த்து இனொருவன் " வரபோற பொண்ணு ஒண்ணு கூட நம்மள திரும்பி பார்க்காது... அதுக்கு தான் நம்ம hero இருக்காறே " என்றான் ஆத்ரேயனை சுட்டி காட்டியபடி. அதுக்கு முத்து பற்கள் தெரிய வசீகரமான புன்னகையை மட்டும் பதிலாக கொடுத்தான் ஆத்ரேயன். "இப்படி சிரிக்காதடா.உன்ன பார்க்கும் போது எனக்கே லவ் பண்ண தோணுது." என்ற தன் நண்பனை பார்த்து அவன் தோளில் கை போட்டு "அவனா நீ?" என்று கண்ணாடிதான். "டேய்,,," என்று முறைக்க போன நண்பனால் அவனை முறைக்க முடியாமல் சிரித்து வைத்தான்.

மலர்வேந்தன் வீட்டில்.....

"அப்பா கண்டிப்பா அந்த college க்கு தான் போகணுமா? வேற இடத்தில் சேர்த்து விடுங்கப்பா ப்ளீஸ்..." என்று அன்று மட்டும் பத்தாவது தடவையாக கெஞ்சி கொண்டிருந்தவளை பரிதாபமாக பார்த்தவர் "அது தான் no 1 கல்லூரியம்மா அங்கே தான் ஆதி அத்தான் படித்தார் ஆத்ரேயன் அத்தானும் படிக்கிறார்.. அவங்கள போல நீயும் நல்லா படிக்கணும் ., வேணும் என்றால் ஆத்ரேயன் அத்தானிடம் உன்னை கவனமாக பார்த்து கொள்ள சொல்லி விடுறேன் " என்றார். "பாலுக்கு பூனை காவலா?" என்று நினைத்தவள் "நீங்க அவர்ட்ட சொன்னா நான் அங்கே போக மாட்டேன். எனக்கு யார் உதவியும் தேவையில்லை நான் சுயமாக முன்னேறுவேன்." என்றாள் நெஞ்சை நிமிர்த்தி கொண்டு. "இது தான் என் பொண்ணு " என்று கட்டி அணைத்து கொண்டார். "அவனுக்காக நீ ஏன் பயப்படணும் " என்று அவள் மனம் கேட்டு கொண்டது. "சரி போய் தான் பார்ப்போமே " என்று முடிவெடுத்தவளாக தேவையான பொருட்களை

அடுக்க தொடங்கினாள்.

அது தேவையா இது தேவையா என்று குழப்பியவள் "ஆதி அத்தனிட்ட கேட்போம் " என்றவாறு கார்த்திகேயன் வீட்டுக்குள் நுழைந்தாள். அங்கே ஆதியும் கார்த்திகேயனும் வேலைக்கு செல்ல ஆயத்தமாகி சாப்பிட்டு கொண்டிருந்தனர். "அத்தான் என்னென்ன தேவை என்று குழப்பமா இருக்கு... 1 லிஸ்ட் போட்டு தாறீங்களா ப்ளீஸ்." என்று கேட்டாள். "நான் போய் நிறைய வருஷமம்மா..மறந்துட்டேன்.. வேணும்னா ஆத்ரி ட்ட கேட்டு பாரேன்....நில்லு call பண்ணி தாறேன் " என்றவனை முறைத்தவள் "எனக்கு யார் உதவியும் தேவையில்லை. எனக்கு தனியா சமாளிக்க தெரியும்.. அப்பிடி நீங்க யார்கிட்டயும் என்ன பார்த்துக்க சொல்லி சொன்னிங்க என்றால் நான் அங்கே போகமாட்டேன்..... இது உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்து தான் "என்று கார்திகேயனையும் மாலதியையும் சுட்டி காட்டியவளை பார்த்தவர்களுக்கு சிரிப்பு தான் வந்தது. "சரி நாங்க சொல்ல மாட்டோம்... நீ வந்து சாப்பிடு "

என்ற மாலதியை பார்த்து "நான் diet ல இருக்கேன் அத்தை " என்றபடி தன் வீட்டுக்கு சென்றாள். அவளின் நடவடிக்கை அவர்களுக்கு சிரிப்பை வரவழைத்தது. சொல்லா விட்டாலும் ஆத்ரேயன் பார்த்து கொள்ளுவான் என்ற நம்பிக்கையில் யாரும் அவனிடம் இது பற்றி வாய் திறக்கவில்லை.

காதல் மலரும்.....

#19

யுகம்-10

அவள் கல்லூரிக்கு செல்லும் நாளும் வந்தது. எல்லோரையும் திரும்ப திரும்ப அணைத்து ஒப்பாரி வைத்து ஒரு வழி பண்ணிவிட்டாள். "இவ எப்போ வெளிக்கிடுவா?" என்று கோகிலாவே நினைக்குமளவுக்கு அவளின் ஒப்பாரி பாடாய் படுத்தியது. ஆத்ரேயன் இருக்கும் தைரியத்தில் யாரும் அவளை பற்றி பெரிதாக கவலைப்படவில்லை.

தந்தையுடன் கல்லூரியை நோக்கி காரில் புறப்பட்டவளின் கண்கள் அழுதழுது வீங்கி இருந்தது.அங்கே கல்லூரி வெறிச்சோடி காணப்பட்டது. registration ஐ முடித்து விட்டு, வந்தவர்களிடம் நிர்வாகி இன்று கல்லூரிகளுக்கிடையில் basket ball tournament நடப்பதாக கூறியவர் பெண்கள் விடுதிக்கு செல்லுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். நாளை முதல் வகுப்புகள் நடைபெறும் எனவும் கூறினார்.

அவளுக்கோ இதயம் முழுதும் படபடப்பாகவே இருந்தது. விடுதியில் சந்தியாவுக்கும் வைஷ்ணவிக்கும் ஒரே அறை கிடைத்தது. மலர்வேந்தன் சென்றதும் தனிமையில் அழுத்தவளிடம் வந்த சந்தியா " ஏன் இதுக்கெல்லாம் அழுகிறாய்? just enjoy your days யா.. இன்று tournament நடக்குதாம் போய் பார்ப்போமா?" என்று கேட்டாள்.

அவளுக்கும் வீட்டு நினைவுகளை மறக்க ஒரு

மாற்றம் தேவைப்பட "சரி " என்றவள் குளித்து முடித்து வெளிக்கிட்டு சென்றனர். அங்கு final match நடைபெற்று கொண்டிருந்தது.

அங்கே சிவப்பு நிறத்தால் captain என்று முதலாம் இலக்கம் பொறிக்கப்பட்ட வெள்ளை armcut உம் வெள்ளை shorts உம் அணிந்து பரந்து விரிந்த மார்புடனும் உறுதியான தோள்பட்டையுடனும் தலையில் உள்ள கேசம் அங்குமிங்கும் ஆடி கொண்டிருக்க.. "come on aakash hurry up " என்று ஆக்ரோஷமாக கத்தி கொண்டிருந்தான் ஆத்ரேயன். ஆகாஷிடமிருந்து பந்தை பாய்ந்து பிடித்தவன் தரையில் பந்தை அடித்தபடி, தன்னை சுற்றி வந்தவர்களுக்கு வெட்டு காட்டி கூடையை நோக்கி ஓடியவன். சர்வ சாதாரணமாக பந்தை கூடையில் போட்டு விட்டு சிரித்தபடி தலையை கோதிக்கொண்டு நடந்தான். அந்நேரம் பார்த்து நடுவர் விசிலடித்து நேரம் முடிந்துவிட்டது என்று அறிவிக்க. ஆத்ரேயனை நோக்கி ஓடி வந்த மற்றைய வீரர்கள் அவனை கட்டியணைத்து அவன் மேல் புரண்டனர்.

மேடையிலிருந்த பெண்கள் "I love you aathreyan" என்று ஒன்று சேர கத்தினார்கள். அனைவரையும் பார்த்து சிரித்தவன் அவர்களை நோக்கி ஒரு பறக்கும் முத்தத்தை அளித்து விட்டு உடை மாற்றும் அறைக்கு சென்றான். "இதுக்கு மட்டும் குறைச்சலில்லை " என்று மனசுக்குள் வைஷணவி நினைத்து கொண்டிருக்க "வாவ்... என்னால முடியலடி,,, அவரை பார்க்கும் பொது என்னவோ பண்ணுது" என்று கூறிய சந்தியாவை உணர்ச்சிகளை துடைத்த பார்வை ஒன்றை பார்த்தாள்.

அவன் விளையாடும் ஆக்ரோஷத்தை பார்த்து அதிர்ந்து நின்றவள், அவனுக்கு கல்லூரியில் இருக்கும் வரவேற்பை பார்த்து மலைத்து போனாள். "இவ்வளவு அழகான பெண்களில் கண்டிப்பாக யாரையும் காதலிப்பான்" என்று நினைக்கும் போது மனசில் ஒரு வெறுமை அவளுக்கு ஏற்றப்பட்டது. அனைத்தையும் மனதிலிருந்து ஒதுக்கி வைத்தவள் நடப்பவைகளை கவனிக்க தொடங்கினாள்

கம்பீரமாக நடந்து வந்து trophy ஐ பெற்று முத்தமிட்டவனின் ஆளுமையில் அவளும் சொக்கி தான் போனாள். திடீரென்று அவனின் கொடுமைகள் நினைவுவர அவ்வளவு நேரமும் சூழ்ந்திருந்த மாயவலை அறுந்து விழுந்தது. தலையை உலுக்கி கொண்டவள் அவன் மீது அனல் பறக்கும் பார்வையை நிலைக்க விட்டாள். எல்லாம் முடிந்து விடுதிக்கு வந்தவளால் ஒழுங்காக உறங்க முடியவில்லை.. நாளைய நாளை நினைத்து பட படவென்று அடித்து கொண்டது.

பக்கத்தில் படுத்திருந்த சந்தியா ஆத்ரேயனை பற்றி மட்டுமே பேசி கொண்டிருந்தாள். "பேசாம ரூம் மாறுவோமா?" என்று கூட வைஷ்ணவி யோசித்தாள். "நாளைக்கு அவரை பார்க்கணும்" என்று சந்தியா கூற, "நான் அவனை பார்க்கவே கூடாது" என்று வைஷ்ணவி நினைத்து கொண்டாள்

காலையில் 6 மணிக்கு கதவு தட்டுப்பட

வைஷ்ணவி எழும்பி திறந்தாள். ஏழு மணிக்கு காலேஜ் ground க்கு யூனியன் leader இன் மீட்டிங்குக்கு அனைத்து முதல் வருட மாணவர்களையும் வர சொல்லி அழைப்பு வந்தது. சந்தியாவை எழுப்பியவள் அவசர அவசரமாக குளித்து வெள்ளை நிற சுடிதார் அணிந்து ஷால் போட்டு கிரௌண்ட் க்கு வெளிக்கிட்டாள்.

ground இல் காலை ஜோக்கிங்கை முடித்துவிட்டு ட்ராக் suit உடன் நண்பர்களுடன் சிரித்தபடி உரையாடி கொண்டிருந்த ஆத்ரேயனை பார்த்தவளின் மூச்சு நின்றது. "இவன் எங்க இங்க? " என்று யோசித்தவள்,நேற்று அந்த நெருக்கடியில் தன்னை அடையாளம் காணாதவன் இன்று எப்படியும் அடையாளம் கண்டு விடுவான் என்று பயந்து , என்ன செய்வது என்று தெரியாமல் ஷாலினால் முகத்தை மூடியபடி அவன் நின்ற இடத்துக்கு எதிர்பக்கம் தலையை மட்டும் திருப்பியபடி கூட்டம் நடைபெறவிருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள்.

"ஐ நம்மாள் " என்று திரும்பிய சந்தியா, ஷாலினால் முகம் முழுதும் மூடி இருந்த வைஷ்ணவியை பார்த்து அதிர்ந்தவள் "என்னடி வேஷமிது?" என்று கேட்டாள். "வாயை மூடிட்டு வாடி" என்று அவளுக்கு திட்டு விழுந்தது. கதைத்து கொண்டிருந்த ஆத்ரேயனுக்கும் அவளின் செய்கை வித்தியாசமாக இருந்தது. "யாரும் இப்படி முகத்தை மூடி ஷால் போடுவார்களா?" என்று யோசித்தவன் "ஹலோ white ஷூடி " என்றழைத்தான். "உன்ன தான்டி கூப்பிடுறாங்க." என்ற சந்தியாவிடம் " சும்மா இருடி " என்றவள் விறுவிறுவென நடந்து போனாள். கிட்டத்தட்ட ஓடி போனாள் என்றே கூறலாம்.

அவளின் செய்கை வித்தியாசமாக பட முகத்தை சுளித்து பார்த்தவன் "யாரடா மச்சி அது?" என்று நண்பர்களிடம் கேட்டான். "யாருக்குடா தெரியும்...நம்ம கிட்ட நல்ல படப்போறா என்று மட்டும் தெரியுது. அவளும் மீட்டிங்குக்கு தான் வந்திருக்கா. அங்க வச்சு பார்த்துக்கலாம் வா.." என்று அவ்விடத்தை நோக்கி நடந்தனர்.

அங்கு போனதும் ஷாலை விலக்கி "அப்பாடா " என்று மூச்சு விட்டவளை சந்தியா விசித்திரமாக பார்த்தாள். "என்னடி பார்குறா? கண்ண நோண்டுவன் அங்க பாரு" என்று அதட்டினாள் தன் விசித்திரமான நடவடிக்கையை மறைப்பதற்காக. சந்தியாவும் மேலே ஒன்றும் கேட்காமல் மேடையை நோக்கி நின்றாள்.

நண்பர்களுடன் கதைத்து சிரித்தபடி மேடையேறிய ஆத்ரேயன் . "ஹாய் I am your union leader aathreyan final year civil engineering " என்று தன்னை கம்பீரமாக அறிமுகப்படுத்தி கொண்டான். ட்ராக் suit இல் அவன் கம்பீரத்தையும் அழகையும் பார்த்து எல்லா பெண்களும் சொக்கி நிக்க எல்லா ஆண்களும் அவனை தமது role model ஆக கற்பனை செய்து கொண்டனர். வைஷ்ணவியோ அதிர்ச்சியுடன் உடலை பாதியாக வளைத்து முன்னிருந்த மாணவர்களுக்குள் ஒளிந்து கொண்டவள் "ஐயோ

இவனா யூனியன் லீடர் ? யாருமே சொல்லவில்லையே... இப்போ என்ன பண்றது" என்று யோசித்து முகத்தை பழையபடி ஷாலினால் மூடி கொண்டாள் .

தங்கள் கல்லூரியை பற்றி விபரித்தவன். எல்லாருக்கும் ஊக்கமளித்து விட்டு. ragging என்ற பெயரில் ஏதும் துன்புறுத்தல்கள் நேர்ந்தால் தன்னிடம் கூறும்படி கூறி தன் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தான். அவன் ragging பண்ணமாட்டான் ஆனால் நண்பர்களின் பகிடிவத்தைக்கு ஒத்துழைப்பான். பகிடிவதை உடலியல் துன்புறுத்தலாக எல்லை மீறுவதை பொறுத்து கொள்ளவும் மாட்டான். பேசி கொண்டிருந்தவன் கூட்டத்தில் ஒருவர் மட்டும் அங்கும் இங்கும் முன்னால் இருக்கும் மாணவிக்கு பின்னால் ஷால் மூடிய தலையை மறைப்பதை கண்டு கொண்டான். நெற்றியை சுருக்கி அங்கு நோட்டமிட்டவன் "இது அந்த வைட் ஷூடி" என்று மனதில் நினைத்து கொண்டிருக்க, அவனின் பார்வை சென்ற திசையை பார்த்த அவனின் நண்பன் "ஏய் "

என்றபடி அவளை நோக்கி வந்தான் . நண்பனின் முன்னால் நடந்தவன் அவனை கை நீட்டி தடுத்து விட்டு தான் செல்வதாக கண்ணால் சைகை காட்டியவன் அழுத்தமான காலடிகளுடன் கீழே இறங்கி வைஷ்ணவியை நோக்கி நடந்தான். அவனின் பார்வையை உணர்ந்த மாணவர்கள் அவனுக்கு வழி விட்டு பிரிந்து செல்ல வைஷ்ணவி நடுவில் தனியாக வெள்ளை ஷாலால் முகத்தை மூடி பேய் போல நின்றாள்.

அவளின் நிலை ஆத்ரேயனுக்கு சிரிப்பை அளித்தாலும் சிரிப்பை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்தி கொண்டான். "யாரிந்த லூசு ?" என்று மனதால் அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பேச்சு நின்றதை அவதானித்தவள் , மாணவர்களும் விலகி செல்ல என்ன நடக்கிறது என்று ஷாலின் உள்ளிருந்து பார்த்தவளுக்கு மங்கலாக அவன் தன்னை நோக்கி வருவது தெரிந்தது. "ஐயோ இந்த நெட்டையன் நம்மள நோக்கி வர்றனே. சும்மா இருந்திருந்தா கூட

இவ்வளவு அவமானம் வந்திருக்காது.. இப்போ எல்லார் முன்னாடியும் சீ .... இப்போ என்ன செய்வேன்" என்று கையை பிசைந்த படி குனிந்து நின்றாள்.

ஓடவும் முடியாமல் ஒழியவும் முடியாமல் அவஸ்தைப்பட்டாள். அருகில் வந்தவன் கையை கட்டி நின்றபடி அவளை கூர்ந்து பார்த்தான். பின்பு பக்கத்தில் நின்ற சந்தியாவிடம் ஷாலை எடுத்து தரும்படி சைகை செய்தான். அவளும் வைஷ்ணவி அருகில் வந்து ஷாலை எடுத்து கொண்டு வந்து கொடுத்தாள். ஷாலை எடுக்கும் பொது கண்களை மூடியபடி குனிந்து நின்ற வைஷ்ணவியை பார்த்து அதிர்ச்சியடைந்தவன் அதனை வெளியில் காட்டாமல் அவள் முன் சொடக்கிட்டான். இனியும் குனிந்திருந்தால் இன்னும் மானம் போய்விடும் என்றவள் பயத்துடன் கண்ணை திறந்து அவனை நோக்கினாள் .

ஆரம்பத்தில் அதிர்ச்சி அடைந்தாலும் அவளின் கோமாளி கூத்தினால் வந்த எரிச்சலை

கஷ்டப்பட்டு அடக்கியவாறு "உன் பெயர் என்ன?" என்று சிம்ம குரலில் வினவினான்.
"தெரியாதாக்கும்" என்று மனதில் நினைத்தவள் "வைஷ்ணவி மலர்வேந்தன் " என்றாள். ஷாலை அவளிடம் நீட்டியவன் "இதென்ன கோமாளி கூத்து.? attention seek பண்றியா?" என்றான் சினம் கலந்த குரலில் . ஷாலை பெற்றுக்கொண்டவள், அவன் கேட்ட கேள்வியில் வாயை பிளந்து அவனை பார்த்தாள். மனதுக்குள் "தொடங்கிட்டான் அவன் வேலையை,,,, இனி நான் ஏதோ அவன் பின்னால் தெரியிற போல buildup பண்ண போறான். கடவுளே காப்பாத்துப்பா " என்று கடவுளை வேண்டினாள்.

என்ன சொல்வதென்று தெரியாமல் அவன் கூர்மையான பார்வையை தவிர்ப்பதற்காகவே தலையை குனிந்து கொண்டாள். அவள் மீது அனல் பார்வையை வீசியவன் விறு விறுவென மேடையை நோக்கி சென்று அனைவரிடமும் எல்லாவற்றையும் விளங்கப்படுத்தியவன் கல்லூரிக்கு செல்லுமாறு பணித்து விட்டு உடை மாற்றுவதற்காக தனது விடுதிக்கு

நண்பர்களுடன் சென்றான்.

எல்லாம் முடிந்ததும் அனைவருக்கும் வைஷ்ணவி மேல் ஒரு தவறான பார்வை விழுந்தது. அவள் ஏதோ ஆத்ரேயன் தன்னை பார்க்க வேண்டும் என்பதற்காக அப்படி நடந்ததாக அனைவரும் நினைத்து கொண்டனர். ஆத்ரேயனின் பேச்சு அப்படி இருந்ததால் அவர்களும் அவ்வாறே நினைத்து கொண்டனர். சந்தியா மட்டும் அவளுடன் கூட இருந்தாள். அனைவரின் பார்வைகளும் அவளை தூற்ற அவள் தனக்குள் ஒடுங்கி போனாள். "இவ மூஞ்சுக்கு ஆத்ரேயன் சீனியர் கேக்குதா? "என்று அவள் காது படவே பேசி கொண்டனர். அவமானத்தால் நிலை குலைந்து போனவளுக்கு சந்தியா மட்டுமே ஆறுதல். ஒரு நாள் பழகி இருந்தாலும் அவளின் உண்மையான நட்பில் சொக்கி தான் போனாள். சந்தியாவுக்கு வைஷ்ணவியை பார்க்க பரிதாபமாக இருந்தது. அவள் விசித்திரமாக நடந்து கொண்டது ஆத்ரேயன் சொன்ன காரணத்துக்காக மட்டும் இல்லை என நன்கு புரிந்தது.

வகுப்புக்கு போக முதல் பசியேற்பட
சாப்பிடுவதற்காக கேன்டீனுக்கு வந்தனர். sandwich
ஒன்றை வாங்கிய வைஷ்ணவிக்கு அது
வயிற்றுக்குள் இறங்கவில்லை. தான் செய்த
கோமாளி தனத்தால் முதல் நாளே தேடி கொண்ட
அவமானத்தை நினைத்து எங்காவது ஓடி
போவோமா என்று கூட யோசித்தாள். சல
சலப்பாக இருந்த கான்டீன் அமைதியடைந்த
அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். கருப்பு நிற
tshirt உம கருப்பு நிற denim உம் அணிந்து shave
செய்து சில நாட்களில் அரும்பி இருந்த தாடி
மீசையுடன் கம்பீரமாக நடந்து வந்தான்
ஆத்ரேயன். கருப்பு நிறம் அவனின் நிறத்தை
மேலும் கூட்டி காட்டியது. "இவனெங்கே இங்கே?"
என்று யோசித்தவள், அவளை நோக்கிய
அவனின் கேலி புன்னகையால்
அவமானமடைந்தவளுக்கு அப்படியே
நிலத்துக்குள் பொய் விடலாம் போல இருந்தது

நண்பர்களுடன் போய் மேசையில் அமர்ந்தவன்
வாங்கி வந்த இட்லியை சாப்பிட தொடங்கினான்.

நண்பர்கள் அவனின் அனுமதி பெற்று தங்கள் ragging விளையாட்டை ஆரம்பித்து வைத்தனர். அதில் முதலில் அகப்பட்டது வைஷ்ணவி தான். "டேய் அந்த கோமாளி அங்கே இருக்குடா... அத 1st ஆ கூப்பிடுடா" என்றான் ஒருத்தன். சாப்பிட்டு கொண்டிருந்த ஆத்ரேயனுக்கு புரை ஏறியது.

ஒன்றும் பேசாமல் நடக்க போவதை மட்டும் அவதானித்தான். "ஏய் கோமாளி இங்கே வா..." என்று அவளை சுட்டி காட்டி கூப்பிட்டான் ஒருத்தன். குனிந்திருந்த அவள் அதனை கவனிக்கவில்லை. அதை கவனித்த சந்தியா "உன்ன தாண்டி கூப்பிடுறாங்க... உனக்கு கோமாளி என்று பெயர் வேற வச்சுட்டாங்கடி " என்றாள். "ஐயோ இப்போ என்ன செய்வேன்" என்று யோசித்தவள் மனதில் தைரியத்தை வரவழைத்து கொண்டு அவர்களை நோக்கி நடந்தாள்.

எல்லாரும் தன்னை பார்ப்பது போன்ற உள்ளுணர்வு அவளுக்கு ஏற்பட்டது. மறந்தும் அவள் ஆத்ரேயன் பக்கம் திரும்பவில்லை.

ஆத்ரேயனும் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு கொண்டிருந்தான். மற்றைய அனைவரும் இருக்க அவளை நிக்க வைத்து "உன் பேர் இனி கோமாளி.. யார் கேட்டாலும் அப்படி தான் சொல்லணும்" என்றார்கள். அவளும் பயத்தில் தலையை ஆட்டி வைத்தாள்.

"இவரை நீ site அடிச்சியா?" என்று ஆத்ரேயனை சுட்டி காட்டி கேட்டனர், அதுக்கும் அவள் நிமிராமல் "இல்லை" என்றாள். "சரி விடு,,,,,, இப்போ நீ மார்க்ஸ் போடணும்" என்றதும் அவள் இதயம் படபடவென அடித்து கொண்டது. முதலில் அவர்கள் காட்டியது ஆத்ரேயனை. அவனை நிமிர்ந்து பார்க்க தயங்கியவள், "ஒரு 25" என்றாள்.... "ஹா ஹா ஹா என்று சத்தமாக சிரித்தவர்கள் "அப்போ எங்களுக்கெல்லாம் மைனஸ் ஆ ?.... அதெப்பிடி முகத்தையே பார்க்காம மார்க்ஸ் போடுவா? ஒழுங்கா முகத்தை பார்த்து சொல்லு" என்றதும் தான் அவன் முகத்தை தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் . அவனும் அவளையே பார்த்து கொண்டிருந்தான். கூர்மையான வசீகரிக்கும்

விழிகளும் கூரான நாசியும் செப்பமான உதடுகளும் அரும்பிய மீசை தாடி என குறை சொல்ல முடியாத வசீகரமான முகமும் திடகாத்திரமான உடலும் என ஆணழகனாக இருந்தவனை பார்த்து வியந்து போனாள்.

"முகம் அழகா இருந்தாலும் அழுக்கான அகமுடையவன் " என்று மனசு சொல்லி கொண்டே இருந்தது. சுத்தகரித்தவள் "ஒரு 05" என்றாள். மொத்த கான்டீன் சிரிப்பில் மூழ்கியது. ஆத்ரேயனும் சிரித்து கொண்டான். "இங்க பாருடா முகத்த பார்க்காம 25 ஆம் முகத்தை பார்த்து 05 ஆம் ... நீ உண்மையாவே கோமாளி தான் " என்று சத்தமாக சிரித்தனர். வைஷ்ணவி மனதுக்குள் " நான் என்ன சொல்லிட்டேன் என்று இப்படி சிரிக்குதுகள் இந்த வானரங்கள்." என்று திட்டி கொண்டே இருந்தாள். மற்றயவர்களுக்கும் மார்க்ஸ் போட சொன்னவர்கள், அவள் பயத்தில் எல்லாருக்கும் 75 க்கு மேல் சொன்னாள் . அதை கேட்டு எல்லாரும் ஆத்ரேயனை பார்த்து "நாங்க எல்லாம் பாஸ் நீ மட்டும் failடா " என்றனர்.

"என்ன பண்றது? நம்ம குடுத்து வச்சது அவளவு தான்" என்று நக்கலாக சிரித்தபடி உரைத்தவன். அவளை பார்த்தவாறே கை கழுவ சென்றான். அவளுக்கு அவமானம் பிடிங்கி தின்றது. "இவன் முன்னாலே இப்படி அசிங்கப்பட வேண்டி இருக்கே,,,,இதுக்கு படிக்காமலே இருந்திருக்கலாம். எப்படி நாட்களை கடத்த போகிறேனோ " என்று புலம்பினாள். கையை கழுவி விட்டு வந்தவன் குனிந்து கொண்டிருந்தவளின் நாடியை கையிலிருந்த ruler இனால் நிமிர்த்தி, விழும் நிலையிலிருந்த கண்ணீரை கண்டு அவளை ஊடுருவ பார்த்தவன் "கிளாஸ்சுக்கு போ " என்றான்.

அவனை மீறி அங்கு ஒரு வார்த்தை சொல்ல யாருமில்லயே. அவளும் பாட புத்தகத்தை எடுத்தவள் போக தயங்கினாள். "என்ன?" என்று புருவத்தை உயர்த்தி கெட்டவனிடம் சந்தியாவை காட்டினாள். "நான் உன்னை மட்டும் தான் போக சொன்னேன். அவளுடன் இருக்க விரும்பினால் இரு " என்று கறாராக கூறினான். "விட்டா போதும் சாமி " என்று மனதில் நினைத்தவள் விறு

விறுவென நடந்தாள்.

வகுப்புகளெல்லாம் முடிந்து விடுதிக்கு செல்ல வெளிக்கிட்ட பொது மரத்தடியில் இருந்த பெண்ணொருத்தி "ஏய் இங்கே வா?" என்று வைஷ்ணவியை கூப்பிட்டாள். அவளும் பயந்த படி அவளருகில் சென்றாள். "உன் பெயரென்ன?" என்று கேட்க அவளுக்கு காலையில் சொன்னது நினைவு வந்தது.

"கோமாளி" என்றாள். "இங்க பாருடி கோமாளியாம்" என்று அனைவரும் கிண்டல் பண்ணி சிரித்தனர். அவளுக்கோ அவமானம் தாங்க முடியாமல் நெளிந்தாள். "சரி கோமாளி, இது என் friend அவளுக்கு நம்ம leader ஆத்ரேயன் மேல கொள்ளை பிரியம். இது அவ எழுதுன love letter,... அங்கே இருக்கிறான் பாரு .. அவன்கிட்ட இத கொடுத்து விட்டு அவன் சொன்னதை எங்க கிட்ட வந்து சொல்லணும். இடையில் நீ யாருடனும் பேசக்கூடாது. அப்படி பேசினால் விடுதியில் உன்னை இன்று தூங்க விடமாட்டோம்" என்றாள்.

அவளுக்கோ பெரிய இடியை யாரோ தலையில் போட்டது போல இருந்தது. "இதென்னடா வம்பு,.... கடவுளே என்ன காப்பாத்துப்பா " என்று வேண்டியபடி கடிதத்தை பெற்று கொண்டவள் அங்கு நிறைந்திருந்த நண்பர்களிடத்தில் வந்தாள்.

அவள் வருவதை பார்த்தவர்களுக்கு விளங்கி விட்டது. "ஷால் பார்ட்டி செமயா மாட்டிக்கிட்டா." என்று கலகலத்தனர். ஆத்ரேயனும் அவள் வருவதை கண்டும் காணாமல் தொலைபேசியை பார்த்தபடி இருந்தான். "என்னடி?" என்று கேட்ட ஒருவனுக்கு பதில் சொல்லாமல் நேரே ஆத்ரேயனிடம் சென்றாள். "பார்டா " என்று கேட்டவன் கலாய்த்தான்.

"இத உங்க கிட்ட கொடுக்க சொன்னாங்க" என்று கடிதத்தை அவனிடம் நீட்டினாள். அவள் வருவது தெரிந்து தலை குனிந்து இருந்தவன். நிமிர்ந்து பார்த்து சலிப்புடன் அதை வாங்கி கொண்டான். "ரொம்ப தான் பன்றான்" என மனதுக்குள்

நினைத்தவாறே தலை குனிந்து நின்றாள். கடிதத்தை வாசித்து முடித்தவன், அவள் குனிந்து கொண்டே இருப்பதை பார்த்து "கீழே ஏதும் விழுந்து விட்டதா?" என்று கேட்க "இல்லை" என்று சொன்னவளை ruler இனால் நாடியை பிடித்து தலையை நிமிர்த்தியவன் "இனி நீ தலை குனிந்து நான் பார்க்க கூடாது " என்றான்.

"இவனை தொடந்து பார்க்கணுமா? ஐயோ ஐயோ " என்று மானசீகமாக தலையில் .அடித்தவள், சரி என்று தலையாட்டினாள். "நீ போ" என்றவனிடம் போகாமல் தயங்கியபடி "உங்க முடிவை சொல்ல சொன்னாங்க" என்றாள்.

"இவ ஒருத்தி.." என்று சலிச்சவன்,"அந்த பொண்ணு எனக்கு பொருத்தமா?" என்று கேட்டான். "நான் பார்க்கவில்லை " என்றவளிடம் "என் கண்ணை பார்த்து பேச முடியாத பெண் எனக்கு தேவையில்லை என்று சொல் " என்றான். போக வெளிக்கிட்டவளை ஒரு கால் தடுத்தது. " அவ கொடுத்த லெட்டரை மட்டுமா கொடுப்பா? நீ எழுதி கொடுக்கமாட்டியா?" என்றவனிடம்

"இல்லை " என்று தலையாட்டினாள். "அப்போ நாளைக்கு ஆத்ரேயனுக்கு காதல் கவிதை எழுதி கொண்டு வரணும். நாலு வரியில் நச் என்று இருக்கணும் அதை வசித்தவுடனே அவன் மெரசலாகனும். மொக்கையாக எழுதி வந்தால் நீ நாளைக்கு கிளாஸ்சுக்கு போகமாட்டாய் எப்படி வசதி?" என்றான் ஒருவன். "இது என்னடா வம்பா போச்சு" என்று யோசித்தாள்

இது ஆத்ரேயனுக்குமே எரிச்சலாய் இருந்தது. "இவனுகளுக்கு வேற பொண்ணுங்க கிடைக்கலையா?" என்று மனதுக்குள் அர்ச்சித்து கொண்டிருந்தான். அவனுக்கு வேண்டாத சில நினைவுகள் வந்தன. அவனால் கட்டுப்படுத்த முடியாமல் "கொஞ்சம் வேலையிருக்கு வரேன் மச்சி " என்றவாறு எழுந்து சென்று விட்டான். அவளால் தான் செல்ல முடியவில்லை. "என்ன புரியுதா?" என்று கேட்க சரி என்று சொல்லி விட்டு வந்தாள். அவள் வந்த நேரத்துக்கு லெட்டர் தந்த கோஷ்டி எழும்பி சென்று இருந்தது. சற்று நிம்மதியுடன் அறைக்கு தாமதமாக வந்தவள் நடந்ததை சந்தியாவிடம் சொன்னாள். "எனக்கு

அப்படி எல்லாம் எழுத வராதே இதெல்லாம் எப்ப முடியும் ? என்று சோர்வாக கெட்டவளை பார்க்கவே சந்தியாவுக்கு பாவமாக இருந்தது.

அவள் முகமே சொன்னது அவளின் களைப்பை. “நீ படு வைஷு நான் எழுதி தரேன். இதெல்லாம் ஆறு மாசத்துக்கு தானாம்” என்றவள் வைஷ்ணவி தூங்கியதும் கவிதையை எழுதினாள். அவள் மனசில் ஆத்ரேயன் மேல் ஈர்ப்பு இருந்ததால் உணர்வுபூர்வமாக எழுதினாள்.

அடுத்த நாள் காலையில் நேரமாகியதால் விரைவாக வெளிக்கிட்ட இருவரும் வகுப்புக்கு சென்றனர். அது வரை லெட்டர் நினைவு வைஷுவுக்கும் வரவில்லை சந்தியாவுக்கு வரவில்லை. எல்லாம் முடிந்து வீட்டுக்கு புறப்படும் பொது மரத்தடி பெஞ்சில் இருந்தவர்கள் "இங்கே வா" என்றதும் தான் வைஷ்ணவிக்கு கடிதத்தின் நினைவு வந்தது. "எங்கடி லெட்டர்?" என்று கெட்டவளிடம் கொப்பிக்குள் இருந்த கடிதத்தை நீட்டினாள்.

யாருக்கும் தெரியாமல் வாங்கியவள்
அவர்களிடம் சென்றாள்.

அவள் கையிலிருந்து கடிதத்தை ஒருவன் வாங்கி
கொண்டு அதனை படிக்க தொடங்கினான்.

காதல் மலரும்.....

•

<u>யுகம்-11</u>

அன்பு காதலன் ஆத்ரேயனுக்கு,

விழிகளின் வழியே நுழைந்தவனே,

இதயத்தின் கதவினை திறந்தவனே

உன் இதழ் கொண்டு என் இதழ் மூடும்

நாளுக்காக காத்திருக்கும்

வைஷ்ணவி

கைகளை காட்டியவாறு கால் மேல் கால் போட்டு பெஞ்சில் சாய்ந்து இருந்த ஆத்ரேயனும் அதனை புன் சிரிப்புடன் கேட்டு கொண்டிருந்தான். கவிதையை வாசித்ததும் "ஊ ,.,,,,,,,,,,,,,,,," என்று அனைவரும் ஓலமிட்டனர் .இதை கேட்டதுமே அவள் திக்கி திணறி போனாள். மனதுக்குள் "இதை எழுதினத்துக்கு எழுதாமல் இருந்திருக்கலாமேடி , என் மானம் போகுதே... சும்மாவே ஆடு ஆடு என்று ஆடுவான்.... இப்போ என்ன செய்ய போறானோ.?" என்று அவனை கடைக்கண்ணால் பார்த்தாள். அவன் கண்கள் சந்தேகமாக அவளை பார்த்து கொண்டிருந்தன. மனதுக்குள் புலம்பியவளை பார்த்து ஒருவன் "உன்னிடம் லவ்வை சொல்ல சொன்னா நீ அவன்ட முத்தம் கேக்கிறியா? ரொம்ப தைரியம் தான் ." என்றான்

இன்னொருவன் ஆத்ரேயனிடம் திரும்பி "உன்கிட்ட என்னமோ கேட்கிறா எப்படி வசதி?" என்றான்.

சிரித்தபடி அவளின் கடிதத்தை வாங்கி பார்த்தவன் நண்பனின் காதில் ஏதோ கிசுகிசுத்து விட்டு "கேட்டத நமக்கு எப்போவும் கொடுத்து தானே பழக்கம் மச்சி....." என்றபடி தனது இதழ்களை நாக்கால் ஈரமாகியவன் இரு ஷர்ட் கைகளையும் மேலே இழுத்தவாறே அவளை நோக்கி நடந்தான்.

" ஊஊ ... " என்று சத்தமான சிரிப்புடன் ஊளையிட்டவர்களுக்கு தெரியும் அவன் பெண்களிடம் முறைதவறி நடக்க மாட்டான் என்பது ... ஆனால் அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை வைஷ்ணவி விஷயத்தில் அவன் விதி விலக்கு என்று.

அவன் சொன்னதை கேட்டதும் வைஷ்ணவியின் இருதயம் செயல்படாத போல் உணர்ந்தாள் .எல்லோர் முன்னிலையிலும் ஏதும் பண்ணிருவானோ என்று பயந்தவளின் கண்களில் கண்ணீர் கோர்க்க ஆரம்பித்தது.. முத்தமிடுவது ஒன்றும் அவனுக்கு புதிய விஷயமில்லையே. நான்கு சுவருக்குள்

நடந்ததால் அவனின் முதல் முத்தத்தை மறந்து வாழ்ந்தவளால் இதை ஒதுக்க முடியவில்லை.. " எவ்வளவு பேர் நிக்கிறாங்க .... இப்போ இவன் முத்தமிட்டால் என் வாழ்க்கை என்னாவது? என் மானம் மரியாதை என்னாவது??? "என்று பயந்த படி நின்றவள் பின்னால் நகர்ந்தாள். அவளை நோக்கியபடி அவன் நடந்த ஒவ்வொரு காலடிக்கும் மருண்டபடி பின்னால் நகர்ந்தவள் ஒரு கட்டத்தில் அவ்விடத்தில் நின்ற ஒரு பெரிய மரத்தில் மோதி நின்றாள். அவளை கூர்ந்து பார்த்தபடி சிறு புன்னகையுடன் வந்தவனின் கண்கள் தாபத்துடன் அவளிதழில் நிலைத்து நின்றது.

நெருங்கி வந்தவன் அவன் கையிரண்டையும் மரத்தில் குற்றியபடி அவள் இதழ் நோக்கி குனிந்தான். அவன் பார்வையின் அர்த்தம் புரிந்து பயத்தில் கண்களை மூடியவள், அவன் மார்பில் தன் இரு கைகளையும் வைத்து தள்ளியபடி " அது நான் எழுதவில்லை என் நண்பி சந்தியா தான் எழுதினாள் " என்று சத்தமாக கத்தினாள்.

அவளை விட்டு விலகி கையை கட்டி நின்றபடி சத்தமாக சிரித்தவன் "நான் சொன்னேன் தானே மச்சி இவ எழுதி இருக்க மாட்டா என்று " சொன்னபடி நண்பர்களுடன் கையை அடித்து கொண்டான். கண்களை திறந்தவள் அவனும் அவன் நண்பர்களும் கை தட்டி சிரித்தபடி அவளை பார்த்து கொண்டு நின்றனர்.

"அதெப்பிடிடா நீ கண்டு பிடிச்ச?" என்று கேட்டவனுக்கு "முயல் பிடிக்கிற நாய மூஞ்ச பார்த்தாலே தெரியும் "
என்றவன் பெஞ்சில் போய் உட்கார்ந்தான். ஆனால் உண்மையில் அவளின் கையெழுத்தை பார்த்ததுமே அவனுக்கு தெரிந்து விட்டது இது அவள் எழுதவில்லை என்று.

வைஷ்ணவிக்கு அவமானத்தால் கோர்த்திருந்த கண்ணீர் கீழே விழுந்தது. "இப்போ எதுக்கு அழுகுற அவன் kiss பண்ணல எண்டா ?" என்று நக்கலாக சிரித்தபடியே ஒருவன் கேட்டதும் அவள் பேயறைந்தது போல் அவனை பார்த்தாள். "நான் எதுக்கோ அழுகிறேன் இந்த மடையன்

என்ன கேக்கிறான் பாரு.. உன்ன எல்லாம் செருப்பால அடிக்கணும் போல இருக்குடா" என்று மனசுக்குள் அவனை அர்ச்சித்து கொண்டிருந்தாள்.

அதை அறியாதவனோ "நீ கவலை படாத பேபி.....அவன் நீ இல்ல அந்த உலக அழகி வந்து கேட்டாலும் kiss பண்ண மாட்டான்... ஐயா சுத்த தங்கம் " என்றான். அவளோ மனசுக்குள் "அப்படி நீ தான் நினைச்சிட்டு இருக்கனும் " என்று கவுண்டர் கொடுத்தபடி அவனை பார்த்தாள்.

நண்பன் சொன்னதை கேட்டு தர்மசங்கடப்பட்ட ஆத்ரேயன் அதனை கவனிக்காத போல் மரத்தை பார்த்து கொண்டிருந்தான். "இந்த நடிப்புக்கு ஒண்ணும் குறைச்சலில்லை."என்று மனசுக்குள் நெடித்து கொண்டாள் வைஷ்ணவி.

"சரி விடு உன்னை பார்க்க பாவமா இருக்கு நீ நாங்க சொல்ற பாட்டு ஒன்னு பாடிட்டு hostel க்கு போகலாம் "என்றனர். பாடல் தெரிவதில் அங்கு பெரிய சண்டையே நடந்து ஓய்ந்தது. கடைசியாக

தொலைபேசியில் ஒரு பாடலை எடுத்து பாட சொல்லி அவளிடம் கொடுத்தனர். அந்த பாடலை பார்த்து தர்மசங்கட பட்டவள் தன் இனிய குரலால் அதனை உணர்ச்சியோடு பாட தொடங்கினாள். ஆத்ரேயனுக்கு அவள் நன்றக படுவாள் என்று கேள்வி பட்டிருக்கிறான் இவளவு நன்றாக படுவாள் என்று இன்று தான் தெரியும்.

மழை வரும் அறிகுறி என் விழிகளில் தெரியுதே

மனம் இன்று நனையுதே இது என்ன காதலா சாதலா?

பழகிய காலங்கள் என் பார்வையில் விரியுதே

பாதைகள் நழுவுதே இது ஏனோ ஏனோ?

உன் தோளில் சாயும்போது உற்சாகம் கொள்ளும் கண்கள்

நீ எங்கே எங்கே இன்று உனை தேடி தேடி பார்க்கிறது

உன்னொடு போகும் போது பூ பூக்கும்
சாலையாவும்

நீ எங்கே என்று என்னை கேட்ட பின்பு வாடிடுதே

அறியாத வயதில் விதைத்தது ஓ ஓ ஓ ....

அதுவாகவே தானே வளர்ந்தது

புதிதாய் ஒரு பூவும் பூக்கையில் ஓ ஓ ஓ ....

அட யாரது யாரது பறித்தது?

உன் கால் தடம் சென்ற வழி பார்த்து நானும்
வந்தேனே

அது பாதியில் தொலைந்தடா

நான் கேட்டது அழகிய நேரங்கள் ஓ ஓ ஓ..

யார் தந்தது விழிகளில் ஈரங்கள்?

நான் கேட்டது வானவில் மாயங்கள் ஓ ஓ ஓ...

யார் தந்தது வழிகளில் காயங்கள்?

இந்தக் காதலும் ஒரு வகை சித்ரவதைதானே

அது உயிருடன் எரிக்குதடா

பாடி முடித்ததும் "wow amazing " என்றபடி பெரிய கைதட்டல் அங்கிருந்து வந்தது. ஆத்ரேயனோ கையை தட்டாமல் அவளை மெய் மறந்து பார்த்து கொண்டிருந்தான். அவளின் குரலையும் இசையையும் ரசித்தவர்கள் மத்தியில் அவன் பாடல் வரிகளை ரசித்திருந்தான்.

அந்த வரிகள் அவன் மனதை அசைத்து பார்த்தது. மூடிவைத்திருந்த ஏதோ இனம் புரியாத உணர்வு உடைத்து கொண்டு வெளிவருவது போல் இருந்தது.

இங்கு ஒரு கணம் நின்றால் கூட தன்னை கட்டுப்படுத்த முடியாது என்று நினைத்தவன் அவளை பார்க்காமல் விறு விறு வென எழுந்து சென்றான்.

அவன் போனதும் அவளை விடுதிக்கு போக சொன்னவர்கள் தாங்களும் விடுதியை நோக்கி நடந்தனர். விடுதிக்கு சென்ற ஆத்ரேயானால் நிலை கொள்ள முடியவில்லை.. அவன் கட்டுப்பாடு எல்லாம் தகர்த்தெறிய அவள் ஒரு கண்ணசைவே போதுமாக இருந்தது. எப்படி அவளை தவிர்ப்பது என்று புரியாமல் தவித்தான். அவன் மூளை அவளை வேணாம் என்று ஒதுக்கினாலும் அவன் மனம் அவளை எதிர்பார்த்தது. அவள் பாடலின் வரிகளை சுகமாய் மீடியபடி கட்டிலில் மல்லாந்து படுத்தவன் அப்படியே உறங்கி போனான்.தனது விடுதிக்கு சென்றவளுக்கு மனம் ரொம்ப அழுத்தமாய் இருக்க யாருடனும் பேசாமல் தூங்கி விட்டாள்.

அடுத்த நாளிருந்து அவளுக்கான பகிடிவதை

கணிசமாக குறைந்திருந்தது... அவளுக்கே அது ஆச்சரியமாகி போனது.. ஆனால் மனதுக்குள் மட்டும் மகிழ்ச்சியாக இருந்தது. அதுக்கு காரணம் ஆத்ரேயன் தான்.. அவளை தவிர்ப்பதற்கு அவளின் நேற்றைய கண்ணீரை காரணம் காட்டி அவள் மீதான பகிடிவதையை குறைத்திருந்தான். மனதின் அழுத்தம் குறைந்ததால் அவள் மற்றைய நண்பர்களுடன் பழக ஆரம்பித்திருந்தாள்.

பயத்தை கை விட்டு கொஞ்சம் நிமிர்வாக நடக்க தொடங்கினாள். ஆத்ரேயன் அவளிருக்கும் பக்கம் தலை வைத்து கூட படுக்கவில்லை.முடிந்தளவு அவளை பார்ப்பதை தவிர்த்திருந்தான்.

அது அவளுக்கும் சற்று நிம்மதியாக இருந்தது. அதனை குலைக்கும் முகமாக வந்து சேந்தது " freshers talent show" புதிதாக வந்தவர்கள் சீனியர்களுக்கு தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். அது பகிடிவதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்

நிகழ்வாக இருக்கும்.. இரவு நேர சாப்பாட்டுடன் அந்த நிகழ்வு முடிவடையும். அதன் பிறகு முதலாம் வருட மாணவர்கள் சுதந்திரமாக நடமாட முடியும். கலகலப்பான அந்த நிகழ்ச்சிக்காக அனைவரும் காத்திருந்தனர்.

அன்று சனிக்கிழமை விடுமுறை நாள், show வை பற்றி அறிமுகம் கொடுப்பதத்திற்காக ஆத்ரேயன் ஒரு கூட்டத்தை ஒழுங்கு படுத்தி இருந்தான். அந்நிகழ்வுக்காக இடையில் ஒன்றரை மாசங்கள் இருந்த போதும், வழமையாக அந்நிகழ்வுக்கு நிறைய முக்கிய புள்ளிகள் அழைக்கப்படுவதால், நிகழ்வு நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒத்திகையை அன்றே தொடங்கி விட்டனர்.

வைஷ்ணவி வழக்கம் போல தாமதமாக எழுந்தவள் சந்தியாவையும் எழுப்பி மீட்டிங் நடைபெறுமிடத்துக்கு தாமதமாக வந்து சேர்ந்தனர். "Excuse me " என்று உள்ளே நுழையந்தவர்களை " out " என்று சிம்ம கர்ஜனையுடன் வெளியே போக சொல்லி கை

காட்டினான் ஆத்ரேயன் . அவனின் தொனியில் எல்லாருக்கும் ஒரு வித கிலி உண்டானது. " sorry " என்றவாறே விளக்கம் கொடுக்க வந்தவர்களிடம் " No more explanation get out and stand there " என்று வெயில் சுட்டெரிக்கும் இடத்தை காட்டினான்.

" நம்மள அவமான படுத்துறதிலேயே குறியா இருக்கான் " என்று நினைத்த வைஷ்ணவி சந்தியாவை இழுத்து கொண்டு வெளியேறி சொன்ன இடத்துக்கு பொய் நின்றாள் " ஒன்றரை மாசத்துக்கு தான் இவங்க நம்மளோட வால் ஆட்ட முடியும்... அதுக்கு பிறகு பார் என்னோட performance ஐ " என்றவள் நேற்று இருவரும் பார்த்த ஷாருக்கானின் படத்தை பற்றி சிரித்தபடி அரட்டையடிக்க தொடங்கினர்.

பேசிக்கொண்டிருந்தவன் சிரிப்பு சத்தம் கேட்டு அவர்களை நோட்டமிட்டு , கோபத்துடன் " பாவம் என்று உன்ன சும்மா விட்டா நீ கொழுப்பேறி பொய் இருக்கா எனடி ..வரும் ஒரு மாசத்துக்கு உன்ன ஒரு வழி பண்ணாம விடமாட்டேன்" என்று சூளுரைத்தவன், மேடையில் நின்றபடியே

வைஷ்ணவியையும் சந்தியாவையும் கூப்பிட்டான். இருவரும் அங்கே வந்து சேர்ந்ததும், கைகள் இரண்டையும் பாக்கெட்டுக்குள் விட்டவாறே " லேட்டா வந்ததுக்கு punishment தரவேண்டாமா ?? " என்று ஒற்றை புருவத்தை உயர்த்தி கேட்டான். " இப்போ தந்ததுக்கு பேர் என்ன " என்று மனதுக்குள் வைஷ்ணவி பதிலடி கொடுத்தாள்.

" இந்த மண்டபம் ரொம்ப அழுக்கா இருக்கு " என்றவன் மேடையின் மூலைக்கு சென்று தும்பு தடியையும் குப்பை கூடையையும் எடுத்து வந்தான். தும்புத்தடியை சந்தியாவிடமும் குப்பை கூடையை வைஷ்ணவியிடமும் கொடுத்தவன் "நீ கூட்டு நீ அள்ளு " என்றபடி உக்காந்திருந்த மற்றயவர்களிடம் திரும்பி தனது பேச்சை தொடர்ந்தான்.

" தொடங்கிட்டானே... இனி நம்ம பாடு சரி " என்று முணுமுணுத்தவாறே சந்தியா கூட்டிய குப்பைகளை அள்ள தொடங்கினாள் வைஷ்ணவி . முன்ன பின்ன வேலை செய்து

பழக்கமில்லாதவள் என்றதால் குப்பைகள் ஆங்காங்கே சிதறி கிடந்தன.

ஆத்ரேயனின் நண்பர்கள் புதிய மாணவர்களுடன் பேசி கொண்டிருக்க, ஆத்ரேயன் இருவரையும் நோக்கி வந்தான். ஒழுங்காக அள்ளப்படாத குப்பைகளை பார்த்தவனுக்கு கோபம் எகிரியது. அவனை பொறுத்தவரை எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும்.. " ஏய்.. " என்று சத்தமாக அழைத்தவன் அவள் நிமிர்ந்து பார்த்ததும்.. " உனக்கு இது கூட அள்ள தெரியாதா?? முன்ன பின்ன வீட்ல வேல செய்திருக்கியா இல்லையா??? " என்றபடி அவளின் கழுத்து பிடரியை பிடித்து ஆக்ரோஷமாக இழுத்து வந்தவன் சிதறி கிடந்த குப்பைகளை காட்டி "இதெல்லாம் யார் அள்ளுவா?? "என்று கேட்டான்.

அந்த கோபத்தில் அவள் பழைய ஆத்ரேயனை பார்த்தாள். " நல்ல தானே இருந்தான்... இப்போ என ஆச்சு " என்று நினைத்து கொண்டிருந்தாள். பெண்கள் மீது அவனின் இந்த ஆக்ரோஷம் அவன் நண்பர்களுக்கும் புதிது.. எல்லா

பெண்களிடமும் கண்ணியமாகவும் மென்மையாகவும் பழகும் இவன் ஏன் இவளிடம் மட்டும் இப்படி வன்மையை காட்டுகிறான் என்று யோசித்தார்கள்..

மறுபடியும் அவமானப்பட்டதால் மனம் முழுதும் வலிக்க தொடங்கியது . அவனை ஒரு அடிபட்ட பார்வை பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்தவன் தலையை உலுக்கி சமன் செய்தான். நண்பனிடம் சென்று சிகரெட்டை வாங்கியவன் வெளியில் போய் "இதெல்லாம் பெரிய விஷயமா ?? ஏன் நான் கோபப்பட்டேன் " என்று யோசித்தவாறே புகையை ஊதி தள்ளி கொண்டிருந்தான்.

உள்ளெ வைஷ்ணவியை எல்லாரும் காட்சி பொருள் போல பார்த்தனர். கண்களில் கோர்த்திருந்த நீர் விழாமலிருக்க கஷ்டப்பட்டவள் " சந்தியா நீ கூட்டு நான் அள்ளுறன் " என்றபடி வேலையை தொடர்ந்தாள்.. " எல்லாருக்கும் நல்லவனாக இருப்பவன் எனக்கேன் கெட்டவனாகி போனான் "

என்று அவள் மனம் கேள்வி கேட்டு கொண்டிருந்தது.

வெளியில் நின்றவனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பில் பதட்டத்துடன் பேசியவன் சிகெரெட்டை போட்டு விட்டு உள்ளே வந்தான். "வைஷ்ணவி இங்கே வா " என்று சத்தமாக அழைத்தவனின் குரலில் அவளுக்கு மேலும் கிலி ஏற்றப்பட்டது.

எல்லாவற்றையும் போட்டு விட்டு அவனருகில் வந்தாள். "உன் phone எங்கே?" என்று கேட்டதும் தான் நேரமாகி விட்டதால் தான் விடுதியிலேயே விட்டு வந்ததாக சொன்னாள். பெரு மூச்சொன்றை விட்டு சிறிது யோசித்தவன் "நீ போ" என்றபடி நண்பனிடம் வந்தான். அவனின் உயிர் நண்பன் ஆகாஷை தனியே அழைத்து சென்றவன் "நீ எனக்காக ஒரு உதவி செய்யணும்" என்றான். "என்னடா?" என்று கெட்டவனிடம் வைஷ்ணவி தனது மாமன் மகள் என்று கூறி தற்போது மலர்வேந்தனுக்கு heart attack வந்திருப்பதாகவும் தான் வைஷ்ணவியை கூட்டி

செல்ல வேண்டுமெனவும் கூறியவன்.
நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளை பார்த்து கொள்ளும் படியும் கூறினான். "முக்கியமாக இந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் சமாளிச்சுக்கோ" என்றான்.

ஆகாஷ் அவனை விறைத்து பார்த்தபடி "என்னடா இதனை shocking news ஐ ஒண்ணா கொடுக்க? சரி நான் சமாளிச்சுக்கிறன். நீ இப்போ போ... வந்ததும் உனக்கு இருக்கு " என்றவனிடம் "thanx மச்சி " என்று கண்ணடித்து விட்டு தன் காரை எடுத்துவர விடுதிக்கு போனான். இந்த விஷயத்தை எப்படி வைஷ்ணவிக்கு சொல்வது என்று குழப்பமாகவே இருந்தது. சொன்னால் அவள் அழுது புலம்புவாள் என்று நன்கு அறிந்தவன்.. அதை தன்னால் சமாளிக்குமளவுக்கு தன்னிடம் பொறுமை இல்லை என்பதையும் உணர்ந்தான்.

எதுவும் கூறாமல் "காரில் ஏறு " என்று வைஷ்ணவியை யாரும் அறியா வண்ணம் பின் வழியாக அழைத்து சென்றான். "எங்கே போறம்?" என்று கெட்டவளிடம் "சத்தம் போடாமல் வா"

என்பது மட்டும் பதிலாக வந்தது. அவனாக சொல்லட்டும் என்றபடி போகும் பாதையை ரசித்துக்கொண்டு வந்தாள். சில மணி நேரங்களில் கார் ஒரு மருத்துவமனை வளாகத்துக்குள் சென்றது.

அதில் திடுக்கிட்டவள் "யாருக்கு என்னாச்சு?" என்று பதறியபடி கேட்டாள். எப்படி சொல்வது என்று தயங்கியவனின் shirt collar ஐ பிடித்து உலுக்கியவள் "சொல்லுங்க..." என்று ஆக்ரோஷமாக கேட்டாள். இனியும் மறைக்க முடியாது என்று உணர்ந்தவன் "மாமாக்கு ஹார்ட் அட்டாக்" என்றவனிடம் மறு பேச்சு பேசாமல்

காரை திறந்து கொண்டு வைத்தியசாலைக்குள் ஓடியவளை அவன் தடுக்கவில்லை.

reception இல் கேட்டு ஒருவாறு ICU வை அடைந்தவள் முன்னால் அழுது கொண்டிருந்த அம்மாவையும் அக்காவையும் கட்டி பிடித்து "அப்பா அப்பா " என்று கதற தொடங்கினாள்.

பின்னால் வந்து தலையை வருடிய மாலதி "பயப்பட ஒன்றுமில்லையம்மா ஆறு அடைப்புகளை ஆபரேஷன் பண்ணி விட்டால் அண்ணா நூறு வருடம் வாழுவார் " என்று அழுதவாறு சமாதான படுத்தினார்.

சமாதான படுத்தினாலும் அனைவருக்கும் மனசெல்லாம் பயமாகவே இருந்தது. "ஆறு அடைப்பா ?" என்றவள் அப்படியே நிலத்தில் அமர்ந்தாள். கார்த்திகேயன் யாருக்கும் சமாதானம் சொல்லும் நிலையில் இல்லை. ஆதி மட்டும் கொஞ்சம் தெம்பாக இருந்தான்.

ICU வை அடைந்த ஆத்ரேயனுக்கு கண்கள் குளமாகி இருந்தது. அவன் மதிப்பளிக்கும் ஒரே ஜீவன் அவர்தான். அவ்விடத்தில் இருந்த கதிரையில் தோய்ந்து அமர்ந்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து வந்த டாக்டர் இன்னும் ஒரு கிழமைக்குள் ஆபரேஷன் செய்ய வேண்டும் எனவும் அவரை அதிர்ச்சியடைய விடமல் ஒருவர் பின் ஒருவராக அவரை போய் பார்க்க

வேண்டுமெனவும் சொன்னார்.
குடும்பத்தினரிடம் கதைத்து புதன்கிழமை ஆபரேஷன் செய்யலாம் என்று முடிவெடுத்தனர். கோகிலா, வைஷ்ணவி வர்ஷினி சென்று வந்ததும், மூக்கில் oxygen பொருத்தி கஷ்டப்பட்டு கதைத்து கொண்டிருந்த நண்பனை பார்க்க சென்ற கார்த்திகேயன் கண்கள் கலங்க "வெந்தா" என்றார்.

"நான் இறந்தா என் மனைவி மக்களை பார்த்து கொள் கார்த்தி " என்றவரின் குரல் நலிந்து ஒலித்தது. "என்ன பேச்சுடா இது ... இந்த operation பண்ணினா நீ 100 வர்ஷம் வாள்வாயடா" என்று கண்ணீர் மல்க கூறினார். கொஞ்ச நேரம் நிலவிய நிசப்தத்துக்கு பின் "கார்த்தி உன் ரெண்டாவது பையனை என் பொண்ணு வைஷ்ணவிக்கு கட்டி கொடுப்பாயா?" என்று கேட்டார். உடனே அதிர்ச்சி அடைந்தவர் அதனை காட்டி கொள்ளாமல் சமாளிக்கும் பொருட்டு சரி என்றார். அப்போதும் கார்த்திகேயன் யோசித்தது வைஷ்ணவிக்காக

மட்டுமே. எல்லாம் முடிய சமாளிச்சு கொள்ளலாம் என்று நினைத்திருந்தார். இரண்டாவது மகனை நம்பி அவருக்கு வாக்கு கொடுக்கவும் பயம்.

ஆனால் விதி யாரை விட்டது? " எப்போ எனக்கு ஆபரேஷன்" என்று கேட்டவர். புதன்கிழமை என்றதும் அன்றைக்கே இரண்டு மகள்களினதும் கல்யாணத்தை வைத்து கொள்ளலாம் என்றார். கல்யாணம் முடிந்த பிறகு தான் ஆபரேஷன் செய்து கொள்வதாக கூறினார். அவருக்கு கார்த்திகேயனை பற்றி நன்கு தெரியும்.. இந்த விஷயத்தை இந்த சந்தர்ப்பத்தில் முடிக்கா விட்டால் அது நடைபெறாது என்று அறிந்தவர் அவர். ஆதியை விட ஆத்ரேயன் மேல் கொள்ளை பிரியமுள்ள மலர்வேந்தன் சாமர்த்தியமாக அவர்களின் திருமணத்துக்கு வித்திட்டார். இப்போது கார்த்திகேயனுக்கு மாரடைப்பு வருவது போல் இருந்தது. "என்ன அவசரம் டா ? ஆபரேஷன் முடிந்ததும் கல்யாணம் வச்சுக்கலாம். இன்னும் இருவரும் படித்து முடிக்கவுமில்லை. 3 நாட்களில் எப்படிடா

கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வது?" என்று கேட்டார். "கோவிலில் வைத்து தாலி கட்டிவிட்டு , ஆறு மாசம் கழிய வரவேற்றப்பை பெரிதாக செய்வோம்" என்று அதுக்கும் பதில் வைத்திருந்தார். "இவன் எல்லாம் ,முடிவே செய்துவிட்டான் போல" என்று நினைத்தவரிடம் "ஆத்ரேயனிடம் நீயே கேட்டுக்கொள் சம்மதத்தை " என்றார். அவருக்கு தெரியும் தான் கேட்டால் அவன் சுண்டு விரலை கூட அசைக்க மாட்டான் என்று.

வெளியில் வந்தவர் ஆத்ரேயனை பார்த்து "வேந்தன் உன்னிடம் பேசணுமாம் " என்றவர் உணர்ச்சியற்ற பார்வை ஒன்றை பார்த்தார். அவன் உள்ளே சென்றதும் அனைவரிடமும் மலர்வேந்தன் கூறியதை கூறினார். கோகிலா மனதுக்குள் "இந்த மனுசனுக்கு மூளை ஏதும் குழம்பிச்சா?" என்று கணவனுக்கு நன்றாக திட்டினார். வைஷ்ணவியோ "இவனை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா? என்னால முடியாது.. இத எப்படி அப்பாவிடம் சொல்லுவேன் "என்று பதறியவள் "அவனே

என்ன கட்டிக்கமாட்டான்" என்று தனக்கு தானே சமாதானம் சொல்லி கொண்டிருந்தாள். மீதி இருந்தவர்கள் வைஷ்ணவிக்காக பரிதாபப்பட்டனர். மாலதி அவர்களின் பயத்தை உணர்ந்தவளாய் " பயப்படாதீங்க அண்ணி ஆத்ரேயன் இப்போ திருத்திட்டான்" என்றார். "அண்ணனுக்கும் தங்கச்சுக்கும் மர கழண்டு போச்சு" என்று மனதுக்குள் கார்த்திகேயன் நினைத்து கொண்டார்.

அவனை அருகில் அழைத்த மலர்வேந்தன் "என் பொண்ணு வைஷ்ணவியை கல்யாணம் பண்ணிப்பியா " என்று கேட்டார். இதை விட அவனுக்கு யாரும் பெரிய இடியை தலையில் போட முடியாது."எப்படி இல்லை என்று சொல்வது" என்று மனதுக்குள் யோசித்தவனிடம், "இவனை யோசிக்க விட கூடாதே " என்று நினைத்த மலர்வேந்தன் "நீ கல்யாணம் பண்ணினால் தான் நான் ஆபரேஷன் செய்து கொள்வேன் இல்லாவிட்டால் இப்படியே செத்து விடுவேன்" என்றவர். கார்திகேயனிடம் கூறிய கல்யாணம் சம்பந்தமான அனைத்து

விடயங்களையும் அவனிமும் கூறினார். "சின்ன பையன் போல பிடிவாதத்தை பாரு " என்று நினைத்த ஆத்ரேயன் அவரின் கண்ணீரால் கொஞ்சம் நிலை தடுமாறி தான் போனான். " உன் கையை காலா நினச்சு கேட்கிறேன்பா என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கோ " என்று அழுத்தவரிடம் அவரை சமாதான படுத்தும் விதமாக "சரி " என்று மட்டும் உரைத்தவன் கோகிலா அத்தையிடம் விஷயத்தை சொல்லி சமாளிக்கலாம் என்று நினைத்தான்.

வெளியில் வந்தவன் யாரிடமும் எதுவும் பேசாமல் வீட்டுக்கு சென்றான், அவனிடம் கேட்க பயந்து யாரும் எதுவும் கேட்கவில்லை.

முடிவெடுக்க முடியாமல் சற்று நேரம் திணறியவன். ஒரு முடிவெடுத்தவனாக வைத்தியசாலையை நோக்கி மீண்டும் சென்றான். Corridor இனால் நடந்து ICU இருக்கும் பக்கம் நெருங்க போனவனுக்கு வைஷ்ணவி தன் தாயிடம் பேசி கொண்டிருப்பது தெளிவாக கேட்டது.

"அம்மா எனக்கு அந்த நெட்டையன் வேணாம்மா.. அவன் ரொம்ப மோசமம்மா...please புரிஞ்சுக்கோங்க..." என்று கண்ணீர் மல்க தாயிடம் வேண்டி கொண்டிருந்தாள்.

அதை கெட்டவனின் கோபம் எகிறியது.

"நான் தான் உன்ன வேணாம் என்று சொல்லணும்..என்ன கட்டிக்க உனக்கு கசக்குதாடி... இதுக்காகவே உன்ன கல்யாணம் கட்டி பாடாய் படுறேன் பாரு.. " என்று வன்மமாய் மனதில் நினைத்தவன் ICU வுக்குள் செல்லாமல் வீட்டை நோக்கி விறுவிறு வென்று சென்றான்.

காதல் மலரும்.....

<u>யுகம்-12</u>

ஆத்ரேயனின் மனநிலை தெரியாமல் அனைவரும் குழம்பி பொய் இருந்தனர். அவன் எதுவும் நடக்காத படி சர்வ சாதாரணமாக

இருந்தான். வைத்தியசாலைக்கு அதன் பிறகு அவன் வருகை தரவில்லை.. மலர்வேந்தன் அவனிடம் சம்மதம் கேட்டாரா இல்லையா என்று அனைவருக்கும் குழப்பமாக இருந்தது. கார்த்திகேயனுக்கோ கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுவதா இல்லையா என்று குழப்பம்.. அனைத்துக்கும் ஒரு முடிவு கட்ட அடுத்த நாள் சாப்பிடும் பொது ஆதியிடம் " ஆதி ஆத்ரேயன் ஏதும் சொன்னானா கல்யாணத்தை பற்றி?? என்று கேட்டார். அவனோ " இல்லையப்பா.... அவன் நேற்று வந்த களைப்பில் படுத்து தூங்கி விட்டான். இன்னும் எழும்பவேயில்லை " என்றான்..

சிறிது நேரம் கழித்து தூங்கி எழும்பிய கண்களுடன் வந்தவன்.. " அம்மா coffee " என்றபடி சோபாவில் உட்காந்தவாறே அன்றைய பத்திரிகையை புரட்டினான்.

coffee யை கொண்டு சென்ற மாலதியிடம் அவனிடம் கேட்குமாறு கண்களால் சைகை செய்தார் கார்த்திகேயன்.. அவனிடம் காபீயை

கொடுத்தவர் " மாமா என்ன சொன்னார் ??? " என்று கேட்டார்..

"எதை பற்றி? " என்று கேட்டான் பத்திரிகையை பிரட்டியபடி . கார்த்திகேயனுக்கு தலை சுற்றுவது போல் இருந்தது. பொறுமை இழந்தவர் " உன் கல்யாணத்தை பற்றி ஒன்னும் சொல்லவில்லையா ?? " என்று சீறினார்.

தலையை நிமிர்த்தாமலே " உங்க கிட்ட என்ன சொன்னார்?? " என்று கேட்டபடி காபீயை அருந்தினான். " நான் கேள்வி கேட்டால் இவன் என்னையவே திரும்ப கேள்வி கேட்பானா??? " என்று மனதுள் நினைத்தவர், அவனின் அலட்சிய போக்கால் அறிந்து கொண்டார் இவனுக்கு விஷயம் தெரியுமென்று. இப்பொது ஆத்திரம் கொண்டால் காரியம் கேட்டு விடும் என்று நினைத்தபடி " உனக்கும் ஆதிக்கும் வைஷ்ணவியையும் வர்ஷினியையும் கல்யாணம் பண்ணி வைத்தால் தான் அவன் ஆபரேஷன் செய்ய போவானாம்" என்று கூறினார்.

" அதுக்கு நீங்க என்ன முடிவு எடுத்து இருக்கீங்க? " என்று கேட்டான். "இதென்னடா வம்பா போச்சு? நான் அவனுக்கு அப்பாவா ? இவன் எனக்கு அப்பாவா ?" என்று முணு முணுத்தவர் " நீ சம்மதம் சொன்னால் ஏற்பாடு செய்யலாம் " என்றபடி அவனை கூர்ந்து நோக்கினார்.

பெருமூச்சு ஒன்றை விட்டவன் " என் சம்மதம் உங்களுக்கு எதுக்கு? உங்க நண்பனின் உயிர் பெரிதாக இருந்தால் ஏற்பாடு பண்ண வேண்டியது தானே என்றவன்." coffee cup ஐயும் பத்திரிகையையும் அங்கிருந்த மேசையில் வைத்து விட்டு மாடியேறிவிட்டான்.

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். " உங்கள் நண்பனின் உயிருக்காக நான் சம்மதிக்கிறேன் " என்று மறைமுகமாக சொன்ன மகனை அவரால் மனதுக்குள் மெச்சாமல் இருக்க முடியவில்லை.. கோகிலாவுக்கும் மலர்வேந்தனுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு பெண்கள் வீடு சார்பில் கல்யாண வேலைகளை

கார்த்திகேயனே மேற்றுக்கொண்டார்.

தனது முடிவு சரியா தவறா என்று புரியாமல் அதை பற்றி இனி சிந்திக்க கூடாது என்று முடிவெடுத்த ஆத்ரேயன் கல்யாணம் வரை யாருடனும் பேசப்போவதில்லை என்று உறுதியாக இருந்தான். தொலைபேசியில் மட்டும் ஒரு சில தொடர்புகளை மேற்றுக்கொண்டவன் அறையிலேயே முடங்கி போனான்.

வைஷ்ணவி தான் அவள் வீட்டில் ருத்ர தாண்டவமாடிவிட்டாள்... இந்த கல்யாணத்தை நிறுத்தும் வழி தெரியாமல் சங்கடப்பட்டவள் கல்யாணத்துக்கு முதல் நாள் நேரே ஆத்ரேயனை தேடி போனாள்.. அவனால் மட்டுமே இதை நிறுத்த முடியும் என்று அறிந்தவள் அவளே.

மாலதி கீழே வர சொன்னபோது கல்யாணத்துக்கு பிறகு பேசிக்கலாம் என்று மறுத்து அனுப்பினான். பொறுமை இழந்த
வைஷ்ணவி" ரொம்ப தான் ஓவரா பண்றான் அத்தை.. நானே போய் பேசிக்கிறேன்"

என்றவாறே அவன் அறையை நோக்கி மாடி ஏறினாள்.

கதவை தட்டியதும் கட்டிலில் படுத்தவாறே கால் மேல் கால் போட்டு ஒரு கையை தலையின் கீழும் மறு கையில் தொலைபேசியும் என சிறு காற்சட்டை மட்டுமே அணிந்திருந்தவன் " come in " என்றான்

உள்ளே வந்தவள் அவன் அமர்ந்திருந்த தோரணையிலும் உடையிலும் சங்கடப்பட்டு போனாள்.. " விவஸ்தை இல்லாம எப்பிடி படுத்திருக்குது பாரு " என்று மனசுக்குள் அவனை அர்ச்சித்துவிட்டு " உங்க கிட்ட கொஞ்சம் பேசணும் " என்றாள். வைஷ்ணவி போயிருப்பாள் என்று எதிர் பார்த்தவன் அவள் திடு திடுவென்று அறைக்குள் வந்ததும் முதலில் கொஞ்சம் தடுமாறியவன் பின் சுதாகரித்து கொண்டான்.

அப்படியே இருந்தபடி " பேசலாமே " என்றான் நிமிர்ந்து பார்க்காமல். " எனக்கு இந்த கால்யாணத்துல இஷ்டமில்லை எப்பிடியாச்சும்

நிறுத்திருங்க " என்றவள் மேல் கோபம் கொப்பளித்து கொண்டு வந்தது அவனுக்கு . ஆனால் பொறுமை காத்தவன் நிதானமாக " இதை உன் அப்பாவிடம் சொல் " என்றவன் அதுக்கு மேல் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. " என்ன இவன் கொஞ்சம் கூட சட்டை செய்யாமல் இருக்கிறான் " என்று நினைத்தவள் தயங்கியபடி செல்லாமல் நிக்க. தலையை நிமிர்த்தி அவளை பார்த்தவன் " இன்னும் ஏதும் பேசணுமா?" என்று கேட்டான்.

" இல்லை " என்று தலையை ஆடியவளிடம் "இப்படி என்னை வெறிச்சு பார்த்து கொண்டிருந்தது போதும். நாளை மீதியை பார்த்துக்கொள்ளலாம்... இப்போ கொஞ்சம் வெளியில் போ " என்றவன் தொலைபேசியில் கவனத்தை செலுத்தினான். விரைவாக வெளியே வந்தவளுக்கு பிறகு தான் அவன் இரட்டை அர்த்தத்தில் பேசியது உறைத்தது . கோபம் வந்தாலும் திரும்ப போனால் ஏதும் இன்னும் அசிங்கமாக கதைத்து விடுவானோ என்ற பயத்தில் "உன்ன கொல்லாம விடமாட்டேன் rascal

" என்று மனசுக்குள் திட்டி கொண்டிருந்தாள்.

அந்நேரம் பார்த்து மேலே வந்த ஆதி " என்னம்மா கல்யாண பொண்ணு மாப்பிள்ளையை பார்க்க அவ்வளவு ஆசையா??? " என்று கேலி பண்ணினான். அவனை பார்த்து மரியாதையை நிமித்தம் சிரித்தவள் அவனுக்கும் சேர்த்து மனதுக்குள் திட்டி விட்டு வெளியேறினாள்.

வீட்டுக்கு வந்த வைஷ்ணவி எப்படி கல்யாணத்தை நிறுத்துவது என்று புரியாமல் குழம்பி போனாள்.. கடைசியில் " கடவுள் பார்த்துப்பார் " என்று மனதில் நினைத்தபடி கல்யாண நாளுக்காக காத்திருந்தாள்.

அனைவரும் கோவிலுக்கு காலையிலேயே வந்திருந்தனர். மலர்வேந்தன் wheel chair இல் இருந்தார்..10 மணிக்கு வைத்தியசாலைக்கு போக வேண்டி இருந்தது ஆபரேஷனுக்காக. மணபெண்கள் இருவரும் ஒரே வேலைப்பாடுடைய சிவப்பு நிற சேலை கட்டி மிதமான மேக்கப் போட்டு இருந்தனர்.

மணமகன்கள் இருவரும் பட்டு வெட்டி சட்டையில் கம்பீரமாகவே இருந்தனர். வைஷ்ணவி கடைக்கண்ணால் ஆத்ரேயனை பார்த்தாள் அவனோ எந்த முகபாவனையும் காட்டாமல் சாதாரணமாக இருந்தான்.

"இவன் மனசுல என்னதான் நினைச்சிட்டு இருக்கான்?" என்று அவளுக்கு குழப்பமாகவே இருந்தது. ஐயர் மந்திரம் சொல்ல மேளதாளங்கள் மத்தியில் தலையை குனிந்து அவன் கையால் மங்கள நாணை பெற்று கொண்டாள். மூன்று முடிச்சு இட்டவன் அப்போது தான் அவள் முகத்தை நோக்கினான்.கட்டுப்படுத்த முடியாமல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது . யாருக்கும் தெரியாமல் கண்களை துடைத்தவள் ஆத்ரேயனை நிமிர்ந்து பார்க்க அவ்வளவு நேரமும் சாதாரணமாக இருந்தவனின் முகம் இறுக்கி போனது.

இறுகிய முகத்துடன் எல்லா சம்பிரதாயங்களையும் செய்தவனை பார்க்க அவளுக்கே பயமாக இருந்தது. எல்லாம்

முடிந்ததும் வைத்தியசாலைக்கு சென்றவர்கள் மலர்வேந்தனை ஆபரேஷன் theater க்குள் அனுப்பி வைத்து விட்டு வெளியில் காத்திருந்தனர். மலர்வேந்தன் நிறைந்த மனசுடன் அவர் உள்ளே சென்றார். கழுத்தில் புது தாலியுடனும் நெற்றி வகிட்டில் ஆத்ரேயானால் வைக்கப்பட்ட குங்குமத்தோடும் கண்கள் மூடி கண்ணீர் வழிந்தோட சுவரில் சாய்ந்து நின்றாள் வைஷ்ணவி. அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தான் ஆத்ரேயன்.

ஆபரேஷன் முடியும் வரை அங்கேயே நின்றவர்களுக்கு பதற்றமாகவே இருந்தது. சில மணி நேரங்கள் கழித்து ஆபரேஷன் திருப்தியாக முடிந்தது என தியேட்டரில் இருந்து வந்த வைத்தியர்கள் கூறினார்கள். அப்போது தான் எல்லாருக்கும் மனசு திருப்தியாகவே இருந்தது.

கார்த்திகேயனும் கோகிலாவும் வைத்தியசாலையிலேயே இருக்க மாலதி ஆரத்தி எடுப்பதற்காக வீட்டுக்கு வெளிக்கிட்டு சென்றார். அதன் பிறகு ஆதி, வர்ஷினி,

ஆத்ரேயன் மற்றும் வைஷ்ணவி கார்த்திகேயன் வீட்டுக்கு சென்றனர். அனைவருக்கும் சேர்த்து ஆரத்தி எடுத்த மாலதி நால்வரையும் கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கும்படி கூறினார். ஆரத்தி எடுத்து முடித்து வீட்டுக்குள் காலை வைத்ததும் வைஷ்ணவியை திரும்பி கூட பார்க்காமல் விறு விறு என்று ஆத்ரேயன் மாடி படி ஏறி விட்டான்.

மாடியேறும் போது "நான் தாலி கட்டும் போது நீ அழுததுக்கு இது தாண்டி தண்டனை இன்னும் அனுபவிப்பா " என்று வன்மையாக நினைத்தவனுக்கு தெரியவில்லை எல்லாத்துக்கும் சேர்த்து அனுபவிக்க போவது அவன் தான் என்று. இப்பொது விக்கித்து நின்றது வைஷ்ணவி மட்டுமல்ல வர்ஷினியும் கூட தான். என்ன இருந்தாலும் தங்கை வாழ்க்கை அல்லவா?

வைஷ்ணவியை மாலதி கூடி சென்று தனது அறையில் ஓய்வெடுக்க சொன்னார். அவருக்கு பயம் மகன் மருமகளை காயப்படுத்தி விடுவானோ என்று. கஷ்டப்பட்டு கண்ணீரை

அடக்கியபடி கண் மூடி சோபாவில் சாய்ந்து இருந்தாள். ஆதித்யன் வர்ஷினி ஜோடி வைஷ்ணவியின் வாழ்க்கையை நினைத்து வருந்தி கொண்டிருந்தனர். அவர்களுக்கும் தங்கள் வாழ்க்கையை தொடங்க மனம் இடம் கொடுக்கவில்லை. மலர்வேந்தன் வீட்டுக்கு வந்த பிறகு தங்கள் வாழ்க்கையை தொடங்க முடிவெடுத்தனர்.

ஆத்ரேயன் அறைக்கு செல்ல பயந்து கொண்டு மாலதி அறையில் ஓய்வெடுத்த வைஷ்ணவி அப்படியே உறங்கிவிட்டாள் மாலதியும் வைஷ்ணவியை எழுப்பவில்லை. சூரியன் உதயமானதும் தான் அவளுக்கு தான் அப்படியே உறங்கிவிட்டது தெரிந்தது.

காபி கப்புடன் வந்த மாலதியை நோக்கி " மன்னிச்சிருங்க அத்தை உங்க ரூம்லயே தூங்கிட்டேன்" என்றாள் உண்மையான வருத்தத்துடன். "பரவாயில்லையம்மா இந்தா காபி இதை ஆத்ரேயனுக்கு கொண்டு கொடு" என்றவாறே காபி கப்பை நீட்டினார். "அத்தை

எனக்கு பயமா இருக்கு " என்றாள் விழிகளை உருட்டியபடி. "இப்போ அவன் திருந்திட்டான்டா" என்றவரை வெற்று பார்வை பார்த்தவள் . மனசுக்குள் "அந்த நெட்டையனின் நடிப்புல நீங்களும் மயங்கிட்டிங்களே அத்தை " என்று நினைத்தாள். அவர் மனசை நோகடிக்க கூடாது என்ற எண்ணத்தில் ஒரு வகை உதறலுடன் அதனை பெற்று மாடிப்படி நோக்கி ஏறினாள்.

ஆத்ரேயன் குளித்து முடித்து இடுப்பில் வெள்ளை டவலை கட்டி கொண்டு கண்ணாடி முன்னே நின்று ஈரமான தலையை கோதியவாறு தொலைபேசியில் இல் கதைத்து கொண்டிருந்தான். வைஷ்ணவி பயத்துடன் கதவை தட்ட "yes come in " என்றவன் வைஷ்ணவியை எதிர்பார்க்கவில்லை. அதே போல் அவளும் அவனை இந்த நிலையில் எதிர் பார்க்கவில்லை. ஈரம் சொட்டிய பறந்து விரிந்த மார்பும் six pack உடலும் பெரிய புஜங்களும் சிவந்த நிறமும் என ஆணழகன் போல் நின்றவனை பார்த்து மலைத்தவள், மனதுக்குள் "எப்போ பார்த்தாலும் கவர்ச்சி நடிகை போல போஸ்

கொடுத்துக்கிட்டு.. சிக் " என்று நெடித்து கொண்டாள்

அவள் தன்னை மெய் மறந்து பார்த்து கொண்டிருப்பதை கவனித்தவன் போனை வைத்துவிட்டு அவளை நோக்கி " பார்த்து ரசிச்சு முடிஞ்சா? இப்போ சொல்லு எனக்கு எத்தின மார்க்ஸ் போடலாம்? அண்டைக்கு 05 தானே போட்டாய்" என்றான். இதயம் படபடக்க மற்ற பக்கம் திரும்பியவள் "என்ன பற்றி என்ன நினைச்சிட்டு இருக்கான்? ஏதோ அவன் பின்னால் நான் சுத்துற போல அவனே கற்பனை பண்ண வேண்டியது. பிறகு நம்மள போட்டு வதைக்க வேண்டியது Idiot" என்று மனசு திட்டவும் செய்தது "உண்மையாவே நீ அவனை சைட் அடிச்சனி தானே" என்று மனசு கவுண்டரும் கொடுத்தது. பின்னாலிருந்து கையை முன் கொண்டுவந்து காபி கப்பை வாங்கியவன் அவள் படபடப்பை பார்த்து சிரித்தபடியே " நான் கேட்டதுக்கு நீ இன்னும் விட சொல்லல" என்றான்.

அவளும் சளைக்காமல் "இப்போ மைனஸ் 5

என்றாள் " முகத்தை கடினமாக வைத்து கொண்டு.." அவ்வளவு அசிங்கமாவா இருக்கன் " என்று சிரித்தவாறே கேட்டவன். அவளை இழுத்து அவளோடு நெருங்கி கண்ணாடியில் நின்றவாறு "நீயே சொல்லு நமக்கு ஜோடி பொருத்தம் இருக்குதா? என் கலர் என்ன உன் கலர் என்ன?" என்றபடி அவளை உதறி தள்ளிவிட்டான்.

அதில் அதிர்ச்சியடைந்தவள் "நான் வேணாம் என்று சொல்லியும் அப்போ என்ன எதுக்கு கல்யாணம் பண்ணி கிட்டிங்க?" என்றாள் குரலில் வலியை தேக்கி.

கோபம் கொப்பளிக்க அவளருகில் அழுத்தமான காலடிகளுடன் வந்தவன் "உன்னை நான் தான் நிராகரித்து இருக்கணும், நீ என்னை நிராகரித்து அந்த கல்யாணம் நின்றதாக இருக்க கூடாது. அதுக்காக தாண்டி உன்ன கல்யாணம் பண்ணிக்கிட்டேன்." என்றான் கண்களில் பழி வெறி பளபளக்க.

"சீ... இதெல்லாம் ஒரு காரணமா? இதனால் ரெண்டு பேரின் வாழ்க்கையும் நாசமாகி விட்டதே " என்று கோபமாக உரைத்தவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. கேலி புன்னகையை முகத்தில் தவழ விட்டவன் "ரெண்டு பேரிடதுமா? உன்னுடையது மட்டும் என்று சொல்லு.. உன்னை விவாகரத்து பண்ணிய பிறகு என் கண்ணசைவுக்கே 1000 பெண்கள் பின்னால் வருவார்கள்.. ஆனால் நீ ரொம்ப பாவம்... " என்று உச்சு கொட்டியவன் ஒரு பாத்திரத்தை எடுத்து அவள் முன் நீட்டினான்.

ஆம் அது சமரச விவகாரத்துக்குரிய பத்திரம். அதில் ஏற்கனவே கையெழுத்து இட்டிருந்தான். "கழுத்தில் தொங்கிய தாலியின் மஞ்சள் காய முன் விவாகரத்தா?" என்று யோசித்தவளுக்கு நெஞ்சில் யாரோ ஈட்டியால் குத்தியது போல இருந்தது.

"இதில் கையெழுத்து இட்டு தா... மாமாவின் உடல் நிலைக்காக உன்னை இப்போ சும்மா விடுறேன். அவர் முழுமையாக

குணமடைந்ததும் இது கண்டிப்பாக நீதி மன்றத்துக்கு செல்லும்..எனக்கு நீ எப்போவும் தகுதி இல்லாத மனைவி தான் ." என்றவன் அவளை கூர்ந்து பார்த்தான்.

"கல்லுக்குள்ளும் ஈரம் " என்று வாய் விட்டு விரக்தியாக கண்ணீருடன் அவனை பார்த்து சொன்னவள் ஒரு வார்த்தையும் பேசாமல் அதில் கையெழுத்து இட்டுவிட்டு அறையை விட்டு வெளியேறினாள். "உனக்கு ரொம்ப திமிரடி "என்றவனுக்கு அவளின் கையெழுத்தை பார்க்கும் போது நெஞ்சில் ஒரு வலி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

சிறிது நேரம் கழித்து சாப்பிடுவதற்காக கீழே வந்தவன் வைஷ்ணவியை காணாமல் , அங்கு இருந்த வர்ஷினியிடம் "அண்ணி வைஷ்ணவி எங்கே?" என்று கேட்டான். "அவ வீட்டுக்கு போய் இருக்கிறா குளிச்சு வெளிக்கிடுறதுக்காக" என்றதும் சாப்பிடாமல் அவர்களின் வீட்டை நோக்கி நடந்தான்.

அவலறைக்குள் சென்றவன் பாத்ரூமுக்குள் அவள் குளித்து கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.. அவள் கட்டிலில் தொப்பென்று விழுந்தவன் அவள் வரும்வரைக்கும் காத்திருந்தான். "ரூமை எப்பிடி வச்சிருக்கா பாரு" என்று திட்டி கொண்டே படுத்திருந்தான். அவளின் அறை நேர்த்தியாக இருந்தாலும் அவனளவுக்கு இருக்கவில்லை.

குளித்து முடித்து கதவை திறந்தவள் அவன் கட்டிலில் படுத்து இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தவளாக கதவை படாரென மூடி கொண்டாள். "எதுக்கு இவன் இங்கே வந்தான் ? நான் எப்படி இந்த நிலையில் செல்ல முடியும் " என்று யோசித்தவளுக்கு வழி ஒன்றும் புலப்படவில்லை. அவள் கதவை திறந்து மூடியதை கவனித்தவன் "எவ்வளவு நேரமாக உள்ளே இருப்பதாக உத்தேசம் " என்று கேட்டான்.

கொஞ்சம் தைரியம் வர பெற்றவளாக "எதுக்கு இங்க வந்திங்க? நான் தான் கையெழுத்து இட்டு கொடுத்து விட்டேனே... வெளிய போங்க நான் உடை மாற்றணும் " என்றாள் .

"கையெழுத்திட்டாலும் இன்னும் விவகாரத்தாகவில்லை. இப்போவும் நீ என் மனைவிதான் "என்றவன் மேலும் "நான் ஒன்றும் உன்னோட romance பண்ண வரல. இன்று ராத்திரி கல்லூரிக்கு போகணும் ரெடியா இரு ,, அத சொல்ல தான் வந்தேன் " என்றவனின் மனசாட்சி "அதை சொல்ல நீ இங்க வரணுமாடா?" என்று கேள்வி கேட்டது.

"சரி....இப்போ நீங்க போங்க ப்ளீஸ் " என்று அவள் சத்தமிட , கட்டிலில் இருந்து எழுந்தவன்"புதுசா பார்க்கிற போல ரொம்பதான் பண்ணுறா" என்று முணு முணுத்தபடி வெளியேறிவிட்டான். அது அவள் காதிலும் தெளிவாக விழ தலையில் அடித்து கொண்டாள்

காதல் மலரும்.....

யுகம்-13

உடை மாற்றி கீழே வந்தவள் hall இல் ஆத்ரேயன் அமர்ந்திருப்பதை பார்த்து சற்று அதிர்ச்சியடைந்தாள்.

அவள் வருவதற்காக காத்திருந்தவன் முன்னால் நடக்க அவள் பின்னால் நடந்தாள். வீட்டுக்கு வந்ததும் மாலதியிடம் " அம்மா night college க்கு போகணும்.. அதனால இன்று பூரா வைஷ்ணவி மாமாவோட இருக்கட்டும்" என்றவனை யாரும் எதிர்த்து கேட்கவில்லை. அவளை ஏற்றி கொண்டு வைத்தியசாலைக்கு சென்றவன் அவளுக்கு அங்கு சாப்பாடு வாங்கி கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தான். கல்லூரியை பற்றி யோசித்தவன் ஆகாஷை தொடர்பு கொண்டு பேசி இதுவரைக்கும் எந்த பிரச்னையுமில்லை என்று அறிந்த பின்னர் தான் நிம்மதியடைந்தான்.

வைஷ்ணாவின் தந்தைக்கு மாரடைப்பு என்ற விடயம் மட்டும் நண்பர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மனிதாபிமானம் காரணமாக ஊருக்கு அவசரமாக அண்ணாவின் கல்யாண ஏற்பாட்டுக்கு சென்ற ஆத்ரேயன்

அவளை கொண்டு விட்டான் என்று எதையெதையோ சம்பந்தப்படுத்தி ஆகாஷ் கஷ்டப்பட்டு ஒரு கதையா உருவாக்கி இருந்தான்.

ஆத்ரேயன் சம்பந்தப்பட்டது என்பதால் யாரும் தூண்டி துருவவில்லை.

சாப்பிட்டு விட்டு எல்லோரிடமும் விடைபெற்றவர்கள் இரவானதும் காரில் கிளம்பினார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் பேசி கொள்ளவில்லை. ரேடியோவில் சென்ற பாடலை கேட்டவாறே வந்து சேர்ந்தனர். இரவானதால் ஒலிபரப்பப்பட்ட காதல் பாடல்களை கேட்டவள் அவஸ்த்தையில் நெளிந்தாள். வைஷ்ணவியின் விடுதியை நெருங்கியதும் காரை ஓரமாக நிறுத்தினான் ஆத்ரேயன்.

" இவன் எதுக்கு இப்போ காரை நிறுத்தினான்.. பாடலை கேட்டு அவனுக்கு ஏதும் feelings வந்திடுச்சோ? ஏதும் பண்ணிருவானோ? " என்று

தாறு மாறாக யோசித்தவள் மருட்சியுடன் அவனை பார்த்தாள். உணர்ச்சிகள் துடைக்கப்பட்ட முகத்துடன் அவளை பார்த்தவன் சடாரென குனிந்து அவனின் சேலையை கிளப்பி காலை தேடினான். அவன் செய்ததுக்கெலாம் மன்னிப்பு கேட்டு காலில் விழுறானோ என்று யூகித்தவள் " ஐயோ என்ன பண்றீங்க??? காலில எல்லாம் விழ வேணாம்.. நான் உங்கள மன்னிச்சிடேன் " என்று சொல்லி கொண்டிருந்தவளை நிமிர்ந்து கேலியாக பார்த்தவன் . "உனக்கு அப்பிடி எல்லாம் வேற நினைப்பிருக்கா? " என்று கேட்டான்.

மேலும் பேசவந்தவளை தடுத்தவன் மீண்டும் குனிந்து அவளின் காலை தேடினான். "அப்போ என் கால் இவனுக்கெதுக்கு?" என்று யோசித்து கொண்டிருக்கையிலேயே திடீரென நெஞ்சத்தில் சுரீரென ஒரு வலியை உணர்ந்தாள். மேலே எழுந்தவன் அவள் காலில் கிடைக்கும் இரு மெட்டிகளையும் உருவி கையில் வைத்திருந்தான். கலங்கிய கண்களுடன் அவனை

ஏறிட்டு பார்த்தவளை ஏளனமாக பார்த்தவன் காரின் முன்னாள் வைக்கப்பட்டிருந்த wet tissue வை எடுத்து நெற்றி வகிட்டில் வைக்கப்பட்டிருந்த குங்குமத்தை அழித்தான். அவன் செயல்களால் கோர்த்திருந்த கண்ணீர் கீழே உருண்டு விழுந்தது.

அதன் பிறகு அவள் கழுத்தில் கிடந்த தாலி மேல் கை வைத்தவனை தனது கையால் தடுத்தவள் " இது வெளிய தெரியாம நான் பார்த்துகிறேன் " என்றாள் கண்களில் கண்ணீருடன். அவளை ஊடுருவ பார்த்தவன், ""தாலி செண்டிமெண்ட் தடுக்குதோ" என்று கேலியாக கேட்டபடி அவன் கையை பிடித்திருந்த அவள் கைகளை வருடினான்.

கையை விடும் பொது கையிலிருந்த மாற்று மோதிரத்தை மட்டும் உருவியெடுத்திருந்தான் . அப்போது தான் அவன் கையில் மோதிரம் இல்லாததை கவனித்து " கொஞ்சம் கூட செண்டிமெண்ட் இல்லாத காட்டானாக இருக்கானே " என்று நினைத்தவளுக்கு கண்ணீர்

விடாமல் வெளியேறியது.

"உன் கண்ணில் ஏதும் water tank கட்டி வச்சு இருக்கியா தெரியல. எப்படி தான் எதுக்கெடுத்தாலும் உனக்கு அழுகை வருதோ .. எனக்கு தெரியாம எங்கேயும் கிளிசெரினை ஒளிச்சு வச்சுருக்கியா?" என்று சினந்து கேட்டபடி காரை கிளப்பினான். "இவனுக்கு கொஞ்சம் கூட இரக்கமே இல்லையா? மனிதாபிமானமே இல்லாத மரக்கட்டை. என் கண்ணீர் இவனுக்கு எப்போவும் நடிப்பா தெரியுதா? " என்று வெளியில் திட்ட முடியாததை மனசுக்குள் திட்டியவள் தாலி தெரியாமல் இருக்க புடவை முந்தானையை எடுத்து கழுத்தை சுற்றி கொண்டாள்.

அவளை விடுதியில் விட்டவன் காரை கிளப்பி கொண்டு தனது விடுதிக்கு சென்றான்.

அறைக்கு வந்து கதவை தட்டியதும் தூக்க கலக்கத்தில் வந்த சந்தியா கதவை திறந்தாள். " எப்படி வந்தாய் ?? என்னடி ஆச்சு?? அப்பா எப்படி இருக்கார்??? ஏண்டி சொல்லிட்டு போகல ???

அழுதியா?? ஏன் சாறி உடுத்திருக்கா ? " என்று அடுக்கடுக்காக கேள்விகளை கேட்டவளிடம் எதுவும் கூறாமல் கட்டிலில் தொப்பென்று இருந்தவள் அவளை உணர்ச்சியற்ற பார்வை பார்த்தாள்.

"வந்து சொல்றன் " என்றபடி குளிப்பதற்க்கு உடைகளை எடுத்தவள் குளித்து முடிந்ததும் இரவு உடையுடன் கழுத்தை சுற்றி towel ஐ போர்த்தி கொண்டு வந்தாள். அவள் வரும்வரை காத்திருந்த சந்தியா அவள் towel ஐ விலக்கியதும் எ வைஷ்ணவி கழுத்தில் தொங்கிய தாலியை பார்த்து அதிர்ந்து போனாள். இதை எதிர் பார்த்த வைஷ்ணவி குளிக்கும் போதே சந்தியாவுக்கு என்ன சொல்லி சமாளிப்பது என்று யோசித்து வைத்து விட்டவளுக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

" என்னடி கல்யாணம் பண்ணிட்டியா??? ஏண்டி சொல்லல???" என்று கேள்வி கெட்டவளிடம். " அப்பா, நான் கல்யாணம் பண்ணினால் தான் ஆபரேஷன் செய்வார் என்று பிடிவாதம்

பிடித்தார்.. அதனால் தெரிந்த உறவுக்கார பையனுடன் அவசர அவசரமாக கல்யாணம் முடிந்து விட்டது. தொலைபேசியை இங்கேயே வைத்து விட்டு போனதால் உன்னை தொடர்பு கொள்ள முடியவில்லை. உன் தொலைபேசி எண்ணும் எனக்கு பாடமில்லை .கல்லூரியில் இது தெரிந்தால் சீனியர்கள் கலாய்ப்பார்கள். அதானால் இதை மறைக்க நீ உதவ வேண்டும். மெட்டியையும் மோதிரத்தையும் கழட்டி வைத்து விட்டு வந்த எனக்கு தாலியை கழட்ட மனம் வரவில்லை. இனி இதனை மறைத்தவாறு high neck உடைகள் தான் அணிய வேண்டும் " என்று உண்மை பாதி பொய் மீதி என்று மனப்பாடம் பண்ணிய அனைத்தையும் ஒப்புவித்தாள்.

அனைத்தையும் அதிர்ச்சியும் ஆவலும் கலந்த மனநிலையுடன் கேட்ட சந்தியா " பையன் பேர் என்ன?? பையன் அழகா இருப்பானா??? கல்யாண போட்டோ இருக்கா??? " என்று சரமாரியாக கேள்வி கணைகளை தொடுத்தாள். " அய்யய்யோ இதுக்கெல்லாம் நான் ஒத்திகை பார்க்கவில்லையே என்று தடுமாறியவள் .

சமாளிப்போம் " என்று நினைத்தவாறே " அவசரமாக நடந்ததால் போட்டோ எடுக்கவில்லை.. சுமாரான பையன்... பெயர். aaryan" என்றாள் .. அவளுக்கு வேறு பெயரை சொல்ல விருப்பமில்லாமல் இருந்ததால் அவனின் பெயரையே சுருக்கி சொன்னவள் மனதுக்குள் " இவை வேற தோண தொண என்று கேள்வி கேட்டிட்டு இருக்கிறாள். கேள்விக்கு பிறந்தவள்... ஐயோ இப்போ எப்பிடி சமாளிப்பேன் ... சந்தியா பேபி முடியலடி இதுக்கு மேல பொய் சொல்றதுக்கு... " என்று நினைத்தவள். மேலே கேள்வி கேட்க போனவளிடம் " தூக்கம் வருது ப்ளீஸ் டி நாளைக்கு பேசிக்கலாம் " என்றவாறு படுத்து உறங்க போனாள் . ஆனால் உறங்காமல் எப்படி நாளைய நாளை சமாளிப்பது என்று மட்டும் யோசித்து கொண்டிருந்தாள்.

அறைக்கு வந்த ஆத்ரேயன் குளித்து வந்ததும் ஆகாஷ் கேள்வி கேட்க இடம் கொடுக்காமல் " தலை வலிக்குதுடா " என்றபடி தூங்கி விட்டான்

வெள்ளிக்கிழமை நன்றாக தூங்கி எழும்பியவள்

சனிக்கிழமை முதலாம் ஆண்டு மாணவர்களின் நிகழ்ச்சி சம்பந்தமான ஒத்திகைக்காக சென்றாள். போன கிழமை தாமதமாக சென்று குப்பை அள்ளியது நினைவுக்கு வர, சொல்லிய நேரத்துக்கு முன்பாகவே சந்தியாவுடன் சென்றுவிட்டாள்.

நண்பர்களுடன் வருகை தந்த ஆத்ரேயன் அனைவரும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியாவது செய்ய வேண்டும் என எதிர்பாத்திருந்தான். அனைவரையும் ஊக்குவிப்பதில் அவனை மிஞ்ச ஆளில்லை. எல்லாரும் என்னென்ன நிகழ்ச்சியில் பங்குபற்ற போகிறார்கள் என்று ஒவ்வொருத்தராக கெட்டவன் சந்தியாவில் வந்து நின்றான். சந்தியாவோ " நான் கவிதை எழுத போகிறேன் " என்றவளை விஷம சிரிப்புடன் நோக்கியவன் " எனக்கு எழுதி அனுப்பிய போல நான்கு வரியில் எழுதாமல் கொஞ்சம் நீளமா எழுதும்மா " என்றான். எல்லாரும் அங்கு சிரிக்க தொடங்கி விட்டனர். சந்தியாவோ வைஷ்ணவியை முறைத்தபடி நின்றாள்.. " ஐயோ சண்டையை மூட்டி

விடுறதுலயே இவன் குறியாக இருக்கானே.. " என்று மனதில் திட்டியவள் சந்தியாவை பார்த்து கண்களால் இறைஞ்சினாள்.

அடுத்து வைஷ்ணவியை கை காட்டி சொல் என்பது போல சைகை செய்தான்.. " நான் பாட போகிறேன்" என்றாள். " இங்கு நிறைய பேர் பாட பெயர் கொடுத்து விட்டார்கள் சுசிலா மேடம் நீங்க ஆடலாமே " என்றான் கேலிக்குரலில்

" என்னது ஆடுறதா??? இவனுக்கென லூசா??? " என்று யோசித்தவள் " எனக்கு ஆட தெரியாது " என்று வாய் கூசாமல் பொய் சொன்னாள். அவள் பரதநாட்டியம் பயின்றதை நன்கு அறிந்தவன் அவளை சந்தேகமாக பார்த்து " நான் தான் கோரியோக்ராபர், உனக்கு நான் பழக்கி விடுவேன் .நீ ஆடணும்... மேலே ஒரு வார்த்தை பேசாதே " என்றான். அவளோ மனதுக்குள் " இவன் நம்மள ஆட வைக்கிறதிலேயே குறியா இருக்கான்... என் விருப்பத்தை எதிலேயும் கேட்கவே மாட்டானா? " என்று நினைத்து கொண்டாள். பயமில்லாமல் எல்லோர்

முன்னிலையிலும் பாட தெரிந்தவளுக்கு நடனம் என்றதும் ஒரு வித பயம் ஏற்பட்டது.

நடனத்துக்கு பெயர் கொடுத்தவர்களை அழைத்தவன், ஜோடி நடனம் ஒன்று, ஆண்கள் மட்டும் உள்ளடங்கிய ஹிப்ஹாப் நடனம் ஒன்று , என இரு நடன நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்தி வைத்து இருந்தான். ஹிப்ஹாப் நடனத்துக்கான அசைவுகளை சொல்லி கொடுப்பதற்காக மேடைக்கு ஏறினான்.

நடனமாட கூடிய லூசான jeans உம் tshirt உம் அணிந்திருந்தவன் பாடலை போட்டதும் கைகள் இரண்டையும் தட்டியபடி ஆட தொடங்கினான்.. அவனின் நடனத்தை வாயை திறந்தபடி பார்த்து கொண்டிருந்தவர்களில் வைஷ்ணவியும் ஒருத்தி. இருந்து, படுத்து, சுழன்று என பல பரிணாமங்களில் பிரபு தேவா போன்று ஆடியவனை கண் கொட்டாமல் பார்த்தவள் மனதுக்குள் " கிளிஞ்சுது போ... இவன போல ஆடுனா நாலு நாளைக்கு என்னால எழும்ப முடியாது. இவன் பழக்கி நான் ஆடி இதெல்லாம்

நடக்கிற கதையா???நல்ல காலம் இது ஆண்கள் மட்டும் ஆடுற டான்ஸ். இல்லாட்டி என்னை தான் முதலில இந்த முட்டாள் ஆட சொல்லி இருப்பான். " என்று சலித்து கொண்டாள்.

அவன் நடனத்தை பார்த்த ஆண்கள் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.." இத போல எப்பிடிடா ஆடுறது??? " என்று அவர்கள் தங்களுக்குள் கதைத்தது வைஷ்ணவிக்கு விளங்க, அவர்களை பார்த்து சிரித்தவள். " உங்க பாடு டர் தான் " என்றாள். " ஆ நீயும் தான் ஆடணும்... அப்போ பார்த்துக்கலாம் " என்று அவர்களும் பதிலுக்கு கிண்டலடித்தனர். ஆடிமுடிய அங்கு பெரிய கரகோஷம் எழுந்தது.. கைதட்டியவர்களை பார்த்து முறைத்தவன் " நீங்க கை தட்டுறதுக்காக நான் ஆடல... எப்பிடி ஆடணும் என்று கவனிச்சு நீங்க ஆடுறதுக்காக தான் ஆடி காட்டினேன் " என்றான்.

அந்நடனத்தை ஆடுவதற்காக, ஆத்ரேயன் அழைத்ததும் அதை ஆட பிரியப்பட்டவர்கள் தயக்கத்துடன் மேடைக்கு வந்தனர். " come on guys "

என்றவன் பாடலை போட சொல்லி சைகை செய்து விட்டு முதல் ஸ்டெப்பை போட்டு காட்டினான்.

முதல் ஸ்டெப்பிலேயே மலைத்தவர்கள் அதனை கஷ்டப்பட்டு ஆடி காட்டினார்கள் . அவனும் மிக பொறுமையாக ஒவ்வொருத்தராக அசைவுகளை திருத்தி கொண்டிருந்தான்.. அவர்கள் கஷ்டப்பட்டு தட்டு தடுமாறி ஆடுவதை பார்த்த வைஷ்ணவிக்கு சிரிப்பு பொத்து கொண்டுவர கட்டுப்படுத்த முடியாமல் சத்தம் போட்டு சிரித்து கொண்டிருந்தாள். நேரே கதிரையில் இருந்து அவள் சிரிப்பதை பார்த்த மாணவர்கள் ஆடுவதற்கு சங்கடப்பட்டு கொண்டிருந்தனர்.

அவளுக்கு முதுகு காட்டி பழக்கி கொண்டிருந்த ஆத்ரேயன் " what happened ?" என்றவாறே அவர்கள் பார்வை போகும் திசையை அறிந்து திரும்பி பார்த்தான்.. அவள் சிரிப்பதை பார்த்தவனுக்கு கோபம் கொப்பளித்து கொண்டு வந்தது... பாட்டை நிறுத்த சொல்லி சைகை

காட்டியவன்; முழுதாக திரும்பி கை காட்டியபடி அவளை கண் வெட்டாமல் பார்த்து கொண்டு நின்றான்.. பாட்டு நின்றும் அவள் கட்டுப்படுத்த முடியாமல் வாயை மூடி சிரித்தவள் எல்லாரும் பார்ப்பதை உணர்ந்து கஷ்டப்பட்டு கட்டுப்படுத்தினாள்.

அப்போது தான் ஆத்ரேயன் கையை காட்டியவாறு தன்னை முறைத்து கொண்டிருப்பதை கவனித்தவள் பயந்தபடி எழுந்து நின்றாள்.

சுண்டு விரலை நீட்டி " வா " என்றழைத்தான் ஆத்ரேயன். " தூங்குற சிங்கத்தை சொறிஞ்சுட்டனே ..... நெட்டையன் இப்போ என்ன பண்ண போறானோ " என்று பயந்தபடி அவனருகே சென்றவளுக்கு நிசப்தமான அந்த மண்டபத்தில் காதில் கோய்ங் என்று ஒரு சத்தம் மட்டும் கேட்டது..ஆம் அவளை அவன் அறைந்திருந்தான்..

அவன் இப்படி பெண்கள் மீது கை நீட்டி யாரும்

பார்க்கவில்லை என்பதால் அனைவருக்கும் அது அதிர்ச்சியாக இருந்தது.. எல்லோரும் வாயை கப்பென்று மூடி கொண்டனர் .வலியை பொறுத்து கொண்டவளுக்கு அவமானத்தை பொறுத்து கொள்ள முடியவில்லை. எல்லார் பார்வையும் அவள் மேலே நிலைத்திருந்தது .. தன்னை காக்க வேண்டியவன் தன்னை அடித்ததும் கண்ணீர் பொத்து கொண்டு உடைப்பெடுத்தது..

" behave your slef .. அவர்களை பார்த்து சிரிப்பதற்கு You are not a child anymore ..... try to be matured girl ... என் கண் முன்னாடி நிக்கதே வெளிய போ " என்று கத்தியவன் " come on guys ..... forget that dog " என்றபடி தனது வேலையை தொடங்கினான்..

அவமானம் ஒரு பக்கம் வலி ஒரு பக்கம் என தலையை குனிந்தபடி கன்னத்தில் கை ஒன்றை பதித்தபடி வெளியேறியவளுக்கு தெரியும் தான் நடந்து கொண்டது பிழை என்று.. " அதுக்காக இப்படியா அடிக்கணும்..வாயால சொல்ல வேண்டியது தானே ... போதாததுக்கு என்ன dog என்று வேற திட்டுறான்.. நான் dog இல்லடா நீ

தான் dog அதுவும் சொரி dog " என்று குழந்தை போல திட்டி கொண்டு விம்மியபடி அறையை அடைந்தவள் துக்கம் தாழ முடியாமல் அழுதழுது தூங்கி போனாள்

தாமதமாக வந்த சந்தியாவுக்கு குழந்தை போல் விம்மியபடி படுத்திருந்த வைஷ்ணவி மேல் பரிதாபமாக இருந்தது.." நீ ஏண்டி சிரிச்ச" என்றவாறே அவளை அணைத்து கொண்டாள். தோழி தோளில் சாய்ந்தவளுக்கு கண்ணீர் மட்டும் நிற்கவில்லை. அவனை எப்படி எங்கே lock பண்ண முடியும் என்று யோசித்து கொண்டே இருந்தாள் . அடுத்தநாள் ஒத்திகைக்கு வரமுடியாது என்று விடுதியிலேயே தங்கி விட்டாள் .

தனியாக வந்த சந்தியாவை கவனித்த ஆத்ரேயன் அவள் வரமாட்டாள் என்பதை ஏற்கனவே எதிர்பார்த்து இருந்தான்.
போகும் போது சந்தியாவை அழைத்தவன் " உன் friend கிட்ட சொல்லு என் கிட்ட இருந்து எப்போவும் அவள் தப்பிக்க முடியாது என்று "

என்றவாறே தன்னறைக்கு புறப்பட்டான். சந்தியா அவன் கூறியதை வைஷ்ணவியிடம் கூறினாள் .. " அவன் என்ன பெரிய ஆளா?? அவன் வீரம் எல்லாம் பொம்பிளைங்க கிட்ட மட்டும் தான் " என்று பொரிந்து தள்ளிய வைஷ்ணவிக்கு மனதில் கோபத்தீ திகு திகுவென பற்றி எரிந்தது.

ஒழுங்காக தூங்காததால் வெள்ளி கிழமை ஓய்வு எடுத்தவள் திங்கட்கிழமை கல்லூரிக்கு சென்றாள். கேன்டீனில் சாப்பிட்டு கொண்டிருந்த ஆத்ரேயன் அவளை வர சொல்லி கைகளால் அழைத்தான். " இந்த வில்லங்கம் நம்மள இப்போ எதுக்கு கூப்பிடுது " என்று முணுமுணுத்தபடி வந்து நின்றாள்.

" நேற்று ஏன் வரல? " என்று கேட்டவனிடம் " கொஞ்சம் உடம்பு சரி இல்லை" என்று சமாளித்தவளுக்கு சந்தியா எழுப்ப எழுப்ப அவளுக்கு திட்டிவிட்டு போர்வைக்குள் புகுந்து தூங்கியது நினைவுக்கு வந்தது. " இனி ஒழுங்கா வரும் வழியை பார்.... வராததுக்கு தண்டனையாக 500 தடவை மன்னிப்பு கேட்டு

கடிதம் எழுதி பின்னேரம் கொண்டு வந்து தா " என்று கூறியவன் அவளை போகுமாறு சைகை செய்தான்.

அவனின் தொடர் தொல்லைகளால் பூவாக இருந்தவள் புயலாக மாறினாள். அவனின் செயலுக்காக மனசுக்குள் "மன்னிப்பு கேக்கட்டாமே ... அடேய் தடியா உன்னோட இந்த திமிருக்கு உன்ன கதற விடணும்டா..என்ன பண்ணலாம்?" என்று யோசித்து கொண்டே வகுப்புக்கு சென்றவளுக்கு தலையில் இடி விழாத குறையாக ஐந்து அசைன்மெண்டுகள் அடுத்த நாளே submit பண்ண சொல்லி இருந்தது.

" என்னடி இது?? நான் என்ன machine ஆ ஒரு நாளில் எப்பிடிடி ஐந்து அசைன்மெண்டுகள் செய்ய முடியும்... இப்போ என்னடி பண்றது?? " என்று சாந்தியாவிடம் பாவமாக கேட்டாள்.

" இதுக்கு தாண்டி சீனியர் யாரையும் லவ் பண்ணி கைக்குள போடு வச்சிருக்கணும்... இப்படியான நேரத்தில் ரொம்ப உதவியா இருக்கும்..

ஆத்ரேயன் சீனியர் போல ஒருவர் கிடைச்சா இன்னும் நல்லா இருக்கும்.. அவர் batch top தெரியுமா?? ..யாரு try பண்ணியும் மடியவே மாட்டேன் என்றாரடி " என்று கண்ணை விரித்து சொன்னவளை ஆச்சரியமாக பார்த்த வைஷ்ணவிக்கு அவன் batch top என்பது புது செய்தியாக இருந்தது.. " நெட்டையன் படிப்பிலயும் புலி போல " என்று நினைத்தவளுக்கு ஒரு யோசனை தோன்ற குறும்புடன் சிரித்தவள் " ஆத்ரேயா இனி நீ என் அடிமைடா " என்று சூளுரைத்தபடி பாடத்தை கவனித்தாள்

வகுப்பு முடிந்து செல்லும் பொது சந்தியாவை போக சொன்னவள் சற்று தள்ளி நின்றபடி மரத்தடியில் இருந்தோருக்கு மத்தியில் இருந்த ஆத்ரேயனை சுண்டு விரலால் வர சொன்னாள் . அது அங்கிருந்த எல்லாருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. " நானா" என்று கேட்ட ஆகாஷிடம் " இல்லை" என்று சைகையில் சொன்னவள் பக்கத்திலிருந்த ஆத்ரேயனை காட்டினாள்.

" டேய் உன்ன தானாம்டா " என்றபடி அனைவரும் அவளை வெறித்து பார்த்தனர் அவளின் நடவடிக்கை ஆத்ரேயனின் கோபத்தை அதிகரிக்க " என்னடி லந்தா??? " என்று கேட்டபடி சட்டை கையை மடித்தவாறு அவளருகில் வந்தவன்.. " அறஞ்சன் ஏன்டா உன் பல்லெல்லாம் கொடுப்படும்.. இந்த திமிர வேற யார்கிட்டயும் வச்சுக்கோ.... என் கிட்ட வேணாம்... " என்று புறங்கையால் அடிப்பது போல காட்டியவன் மேலும் அவளின் சுண்டு விரலை தன கையால் பிடித்து " கைய நீட்டி கூப்பிடுறியா?? " என்றபடி அதை முறுக்கினான். வலி தாங்க முடியாமல் அவளும் "ஆ ... விடுங்க வலிக்குது " என்று சத்தமாக கதியவளிடம் " கொன்னிருவன் " என்றபடி திரும்பி நடந்தான்.

" எதுக்கு கூப்பிட்டேன் என்று கேட்கவே இல்லையே Mr .ஆத்ரேயன் " என்றாள். அவளின் பெயருச்சரிப்பில் திரும்பியவன் கண்களில் சினம் ருத்ரதாண்டவமாடியது. " என்னடி பேர் சொல்லி கூப்பிடுறா??? கொழுப்பா??? " என்றவளிடம் " அதானே உங்க பெயர்.

உங்களுக்கு பிடிக்காட்டி புருஷன்னு கூப்பிடவா ?? " என்று விஷம சிரிப்புடன் கண்ணை அடித்து கேட்டாள். அவ்வளவு நேரமும் சிங்கம் போல் சிலிர்த்து கொண்டிருந்தவன் அவளை அதிர்ச்சியுடன் பார்த்தான்.

அவனின் அதிர்ச்சியை போக்குவதற்காக அவன் கண் முன்னால் சொடக்கிட்டவள் "சொல்லுங்க கூப்பிடவா? தாலி உள்ள தான் இருக்கு எடுத்து வெளிய போடவா?" என்று கேட்டாள். ஒரு கணம் திகைத்தவன் உடனே சுதாகரித்து, "என்ன மிரட்டுரியா ?" என்று அடக்கப்பட்ட கோபத்துடன் வினவினான்.

"சே சே .... நான் யாருங்க உங்கள மிரட்ரத்துக்கு? நீங்க தான் batch topper , basket ball champion, union leader , male model.... ஆ ..... அப்புறம் dance choreographer.... இப்படி பல திறமையுள்ள the great ஆத்ரேயன் ஆச்சே. உங்கள போய் நான் மிரட்ட முடியுமா? என்ன போல பொண்ணுக்கு நீங்க புருஷன் என்று சொன்னா அத போல பெருமை வேற எங்கயும் இல்ல. அப்படி நீங்க தான்

சொல்லி இருக்கீங்க.so நான் சொல்லி பெருமை படலாம் என்று நினைச்சிருக்கேன் " என்றவள் முகத்தை சோகமாக வைத்து கொண்டு தாடையை தடவியவாறே "ஆனா பாருங்க உங்கள போல ஒருவர் என்ன போல சுமாரான no அப்பிடி இல்ல அசிங்கமான பொண்ண பொண்டாட்டி என்று சொல்ல முடியுமா? உங்கள தேடி தினம் தினம் எவ்வளவு ப்ரோபோசல் வருது... அன்னைக்கு நான் கொண்டு வந்து தந்த லெட்டர் தந்த பொண்ணு கூட அழகான பொண்ணு தான்.. அவங்க முன்னாடி என்னை பொண்டாட்டி என்று சொல்றது உங்களுக்கு அசிங்கமில்லையா?? அத நினச்சா மட்டும் தான் கொஞ்சம் கவலையா இருக்கு... நீங்களே சொல்லுங்க என்ன பண்ணலாம்? " என்றபடி புருவத்தை உயர்த்தி கேட்டாள் கேட்டாள்.

அவன் இந்த அதிர்ச்சியை எதிர் பார்க்கவில்லை. அவள் இவ்வளவு பேசி அன்று தான் கேட்டிருக்கிறான்... அவன் முகத்தில் கோவம் ருத்ரதாண்டவமாடியது.. இந்த பெரிய கல்லை தலை மேல் போடுவாள் என்று கொஞ்சம் கூட

அவன் யோசிக்கவில்லை."தன்னை அடக்க ஒருத்தியா ?" என்று யோசித்தவனுக்கு BP எகிறியது . ஆனால் இப்போது அதனை காட்ட முடியாது என்று நன்கு உணர்ந்து கொண்டவன் .. "சரி சொல்லு இப்போ என்ன பண்ணனும்? எதுக்கு கூப்பிட்ட? " என்று கோபத்தில் பற்களை கடித்தவாறு கேட்டான்.

"அப்படி வா மச்சான் வழிக்கு " என்றவள் கையிலிருந்த பேப்பர்களை அலட்சியமாக அவன் புறம் நீட்டி "எனக்கு நாளைக்கு ஐந்து அசைன்மெண்ட்ஸ் இருக்கு... போன வாரம் லீவு எடுத்ததால் எல்லாம் நாளைக்கு சப்மிட் பண்ணனும். நீங்க எல்லாவற்றையும் நாளைக்கு செய்து நான் வர முதலே அந்தந்த lab இல் சப்மிட் பண்ணி விடுறிங்க... புரியுதா?" என்றாள். அதனை வாங்கி பார்த்தவன்.. " நீ தானே படிக்க வந்திருக்க... நீ தானே செய்யணும்" என்றான் கோபத்தை அடக்கியவாறு. அவனை கேலியாக பார்த்தவள் " அதெல்லாம் உங்களுக்கு தேவையில்லாத விஷயம்.... சொல்றத செஞ்சா சீனியர் இல்லாட்டி புருஷன் ஓகேவா ? " என்று

சிரித்தபடி கேட்டுவிட்டு "அப்பாடா .....
இன்னைக்கு நல்லா தூங்கலாம்" என்று கையை
தூக்கி நெட்டி முறித்தாள்.

அவள் சொல்லுவதை கேட்டுக்கொண்டு அவன்
அமைதியாக நிற்பதை பார்த்த அவன் நண்பர்கள்."
அவன் சிங்கம் போல சிலிர்த்து போன வேகத்தை
பார்த்த நான் நினச்சன் அவளை ஹாஸ்பிடல் ல
அட்மிட் பண்ணனும் என்று... என்னடா அவன்
இப்படி பம்முறான் " என்று கிசு
கிசுத்தனர்.தூரத்தில் இருந்ததால்
வைஷ்ணவியும் ஆத்ரேயனும் பேசியது
அவர்களுக்கு கேட்கவில்லை.

"நான் சொன்னது புரியும் என்று நினைக்கிறேன் "
என்று விசிலடித்துக்கொண்டு "நல்லா கதறுடா"
என்று மனதுக்குள் திட்டிவிட்டு விடுதிக்கு
சென்றாள். முதன் முதலாக அன்று தான்
ஆத்ரேயனின் வாய் மறு பேச்சு பேசாமல் அடங்கி
இருந்தது. அவள் செல்வதை வெறித்து
பார்த்தவனுக்கு அடுத்து என்ன செய்வது என்று
குழப்பமாகவே இருந்தது.

காதல் மலரும்.....

<u>யுகம்-14</u>

பெருமூச்செடுத்தவன் நண்பர்களிடம்என்ன சொல்லி சமாளிப்பது என்று நினைத்து கொண்டே நண்பர்களை நோக்கி நடந்தான். " என்னடா அவ என்னமோ சொல்லுறா.. நீயும் பூம் பூம் மாடு போல தலையாட்டிட்டு வந்து நிக்குற..??? " என்று கேட்ட ஒருத்தன் அவன் கையிலிருக்கும் பேப்பர்களை வாங்கி பார்த்தான்.. " அவ அசைன்மென்ட் ஐ நீ ஏன்டா வாங்கிட்டு வந்த??? " என்று கெட்டவனிடம் இதுக்கு மேல் சும்மா இருக்க முடியாது என்று முடிவெடுத்தவன் " அவ அப்பா ஹாஸ்பிடல்ல தானே இருக்கிறார்.. ரொம்ப stress ஆக இருக்குதாம் அசைன்மென்ட் செய்றதுக்கு உதவி செய்ய சொல்லி கெஞ்சி கேட்டா . நானும் பாவம் போனா போகுது செய்து கொட்டுக்கலாம் என்று வாங்கிட்டு வந்துட்டேன் . " என்றான்

" இதெல்லாம் நம்புற போல இல்லையே... அவ

கெஞ்சி கேட்ட போலவே இல்லையடா " என்று ஒருவன் சந்தேகமா கேட்டான்.." இவன் ஒருத்தன் நேரம் காலம் தெரியாம சந்தேகப்பட்டுக்கிட்டு ..உன் திறமையை இதுல காட்டு படிப்புல காட்டாதே ...." என்று மனசுக்குள் புழுங்கியவன் என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தான்.

எல்லாம் நேருக்கு நேர் சுட சுட பேசி பழகிய அவனுக்கு சமாளிப்பது எல்லாம் மலையை பிளக்கும் வேலையாக இருந்தது. இதெல்லாம் பார்த்த ஆகாஷுக்கு நண்பனை பார்க்க பாவமாக இருந்தது.. " அவனை கொஞ்சம் விடுங்கடா " என்று கூறியவன் .. " நீ வா மச்சான் " என்று தோளில் காய் போட்டபடி அழைத்து சென்றான்.

கொஞ்ச தூரம் சென்றதும் ஆத்ரேயனிடம் " என்னடா பிரச்சனை" என்று கேட்க... " நீயுமாடா?? " என்ற தோரணையில் அவனை பார்த்த ஆத்ரேயன் " ஒண்ணுமில்லடா நான் அவளோட அத்தான் என்று எல்லார்ட்டையும் சொல்ல போறதாக மிரட்றாடா " என்றவன் " யார்கிட்ட என்ன என்ன பொய் சொன்னோம் என்று ஒரு

லிஸ்ட் எழுதணும் " என்று மனசுக்குள் காமெடியாக நினைத்து கொண்டான்

" அதுல என்னடா இருக்கு ... சொன்ன சொல்லட்டுமே " என்ற நண்பனை பார்த்து " இப்போதைக்கு வேணாம்டா ... அந்த கதையை கொஞ்சம் விடேன் please" என்றபடி முன்னே நடந்து சென்றான்.

அறைக்கு சென்ற வைஷ்ணவி முகத்தில் ஒரு வித மலர்ச்சி இருந்தது. என்றாலும் அவன் இதுக்கெல்லாம் மசியக்கூடிய ஆளா என்று சந்தேகம் ஒரு மூலையில் இருந்து கொண்டே இருந்தது. அசைன்மென்ட் எதுவும் செய்யாமல் laptop இல் படம் பார்த்து கொண்டிருந்தவளிடம் "என்னடி பயமில்லாம படம் பார்த்துட்டு இருக்கிறா?" என்று சந்தியா கேட்டாள்.

"அதெல்லாம் செய்யலாம் நீ உன் வேலைய பாரு " என்றபடி படத்தில் மூழ்கி போனாள் . ஆத்ரேயனுக்கு அசைன்மென்ட் எல்லாம் பெரிய விடயமாகவே தெரியவில்லை.ஒரு மணி

நேரத்தில் அனைத்தையும் முடித்தவன் "புள்ள பூச்சிக்கெல்லாம் கொடுக்கு முளைக்கும் என்று நான் என்ன கனவா கண்டேன் " என்று வடிவேல் பாணியில் மனதுக்குள் நினைத்தபடி எதுவும் செய்ய மனசில்லாமல் அப்படியே தூங்கிவிட்டான்.

காலையில் அவன் தொலைபேசிக்கு ஒரு மெசேஜ் வந்திருந்தது வைஷ்ணவியிடமிருந்து.."என்ன sir எல்லாம் முடிச்சிட்டீங்களா?" என்று.... "இவளொருத்தி" என்று தொலைபேசியை off பண்ணி தூக்கி கட்டிலில் போட்டவன் கல்லூரிக்கு சென்று அவளின் அசைன்மென்ட்ஸ் எல்லாம் submit பண்ணிவிட்டு கேன்டீனில் உட்காந்திருந்தான்.

"இந்த பய ரிப்ளை பண்ணவும் இல்லை. phone உம் off ..முடிக்காட்டி இப்போ என்ன பண்றது? கடவுளே காப்பாத்துப்பா ." என்றபடி கல்லூரிக்கு அரக்க பறக்க வந்தவள் அவளுடையது எல்லாம் submit பண்ணி இருக்கவும் நிம்மதியாக கான்டீன் க்கு போனாள்.

சந்தியாவையும் விட்டு விட்டு நேரத்துக்கு முந்தியே வந்ததால் கான்டீன் வெறிச்சோடி போய் கிடந்தது. ஆத்ரேயனும் ஒரு சிலரும் மட்டுமே அமர்ந்திருந்தனர். coffee ஐ ஆர்டர் பண்ணியவள் அதனோடு போய் ஆத்ரேயன் இருந்த மேசையில் அவன் முன்னே அமர்ந்தாள்.

"ஐயோ வந்துட்டாளே ... இன்னைக்கு என்ன குண்டை தூக்கி தலையில் போடபோறாளோ " என்று முதல் தடவையாக மனசுக்குள் பயந்தபடி உட்காந்திருந்தான்.

"எங்கே போன்?" என்று கெட்டவளிடம் "சார்ஜ் இல்ல"என்றபடியே அவளை பார்க்காமல் கண்ணாடியூடு வெளியில் பார்த்து கொண்டிருந்தான். "இவனுக்கு இன்னும் திமிர் அடங்கலை " என்று யோசித்தவள் "அடுத்ததா என்ன உத்தேசம் " என்று கேட்டாள்.

வந்த கோபத்தை அடக்கி கொண்டு "இப்போ எதுக்கு தொண தொண என்று பேசிட்டு இருக்க? நீ

சொன்ன போல எல்லாம் செய்து சப்மிட் பபண்ணிட்டேன் ... இதுக்கு மேல உனக்கென்ன வேணும்?" என்று கேட்டான்.

அவளோ மனசுக்குள் "நீ ஏன்டா இப்படி துள்ளுற? உனக்கு என்ன டாஸ்க் கொடுக்கலாம் என்று யோசிச்சு யோசிச்சே தல வலிக்குது... கொஞ்சம் டைம் தாடா..." என்று நினைத்தவள்... "தேவைப்படும் போது கேக்கிறேன் " என்றபடி cofee ஐ அருந்த தொடங்கினாள் .

அந்நேரம் பார்த்து அங்கு வந்து சேர்ந்தான் ஆகாஷ்.. இருவரும் ஒரே மேசையில் இருப்பதை பார்த்தவன் விறுவிறுவென மேசையருகில் வந்து உட்கார்ந்தவன் "இன்னைக்கு எத்தனை அசைன்மென்ட் கொண்டு வந்திருக்க ?" என்று கோபமாக கேட்டான்.

"அவ விட்டாலும் இவன் விடமாட்டான் போலயே.... எப்படியோ அடிச்சு மோதட்டும் " என்று யோசித்தபடி தனக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை எனபது போல் இருந்தான்

ஆத்ரேயன் . "இன்னைக்கு ஒண்ணுமில்லை அண்ணா" என்று சிரித்தபடி கூறினாள். "இங்க பாரு நீ அவன் மாமன் மகள் என்று எனக்கு தெரியும் அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அத வச்சு என் நண்பனை விரட்டுனா நான் பார்த்துட்டு சும்மா இருக்க மாட்டேன். வந்து 1st year கூட முடியல அதுக்குள்ள உனக்கு அவ்வளவு திமிராடி " என்று சினத்துடன் வினவினான். "சரி அவளை உசுப்பேத்திட்டான்.. நம்ம பாடு என்ன ஆக போகுதோ " என்று யோசித்த ஆத்ரேயன் மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை.

ஆகாஷை விசித்திரமாக பார்த்த வைஷ்ணவி ஆத்ரேயனையும் பார்த்தாள். அவன் தன்னை பார்க்கவில்லை என்றதும் அவன் முன்னே சொடக்கிட்டாள். அவள் சொடக்கிடத்தில் ஆடி போனது ஆகாஷ் தான். வைஷ்ணவியை பார்த்த ஆத்ரேயன் "என்ன?" என்று சோர்வாக வினவினான். "என்ன பேச்சு இது?" என்று புருவத்தை தூக்கியபடி ஆகாஷை கண்ணால் காட்டி கேட்டாள். அவளின் அதிரடியிலும் நண்பனின் பம்மலிலும் அதிர்ந்து போன ஆகாஷ்.

"நீ ஏன் மச்சி அடங்கி போற?" என்று கேட்டான். அவனை வெற்று பார்வை பார்த்தவன் வைஷ்ணவியிடம் "இப்போ உனக்கு என்ன வேணும் ?" என்று கேட்டான்

"அவர் என்கிட்டே மன்னிப்பு கேட்கணும்" என்றவள் "மாட்டினியாடா?" என்று மனசுக்குள் சிரித்து கொண்டாள். "கிழிஞ்சிது போ ..." என்று முணுமுணுத்தபடி நண்பனை பார்த்தான். நண்பனின் பார்வையை உணர்ந்த ஆகாஷ் "நான் எதுக்கு மன்னிப்பு கேட்கணும் ? நீ தான் என்கிட்டயும் இவன் கிட்டயும் காலில விழுந்து மன்னிப்பு கேட்கணும்" என்றான்.

"இவன் வேற நேரம் காலம் தெரியாம ஓவரா perform பண்றனே " என்று யோசித்த ஆத்ரேயன் "அடுத்து என்ன?" என்பது போல வைஷ்ணவியை பார்த்தான். அவளும் தன கையை high neck சல்வார் கழுத்தடிக்கு கொண்டு போனவள் கழுத்தை வருடி கொடுத்தாள். "கொல்றாடி " என்று முணுமுணுத்து ஆத்ரேயன் "மன்னிப்பு தானேடா கேட்டு விடேண்டா.... " என்று

ஆகாஷிடம் சொன்னான்.

அவனின் கூற்றில் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அடைந்தான். "நான் ஏன்டா கேக்கணும்? அவ தானே டா கேக்கணும் " என்று வீரப்பாக உரைத்தவன் நண்பனின் "ப்ளீஸ் டா எனக்காக இந்த ஒரே ஒரு தடவை மட்டும் " என்ற கெஞ்சலில் கொஞ்சம் இளகினான் . "நீ வர வர சரி இல்ல மச்சான்... "என்றவன் கொப்பியை எடுத்தவாறே "மன்னிச்சிடும்மா" என்றபடி விறுவிறுவென கேன்டீனை விட்டு வெளியேறினான் . ஆத்ரேயன் இவ்வாறு கெஞ்சி ஆகாஷ் பார்த்தது இன்று தான்,.. ஏதோ சரி இல்லை என்று தோன்ற "கண்டுபிடிக்கிறேன்" என்று சூளுரைத்தவாறு வகுப்பறைக்கு சென்றான்.

அவன் செல்வதை பார்த்து கொண்டிருந்தவன் "இப்போ திருப்தியா?" என்று கேட்டவாறே எழுந்து வகுப்பறைக்கு சென்றான்.

அவனின் தளர்ந்த நடை அவளுக்கே நெருடலாக

இருந்தது... வாழ்க்கையில் அவன் வாங்கிய முதல் அடி அது.. அன்புக்கு மட்டுமே அடி பணிந்தவன் இனொருவரின் அதிகாரத்துக்கு முதல் முறை பணிந்து நடக்கிறான்.. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இக்கட்டான நிலையில் தவித்து கொண்டிருந்தான்.

வகுப்பறைக்கு சென்றவன் ஆகாஷ் பக்கத்தில் உட்கார அவனோ முகத்தை திருப்பி வைத்து கொண்டிருந்தான்.

" புருஷன் கிட்ட கோவிச்ச பொண்டாட்டி போல ஏன்டா முகத்தை திருப்பிட்டு இருக்க?? " என்று நக்கலாக கேட்டு நண்பன் தோளில் கைபோட்டு சிரித்த ஆத்ரேயனை பார்த்து அவன் சமாதானமானாலும் அவன் எண்ணம் முழுக்க "வைஷ்ணவி எதுக்காக ஆத்ரேயனை அடக்குகிறாள்" என்பதிலேயே நிலைத்திருந்தது.

வகுப்பு முடிந்து வைஷ்ணவி வந்த போது ஆத்ரேயன் நண்பர்கள் "ஏய் இங்கே வா...." என்று அவளை அழைத்தனர். "இவனுகள் எதுக்கு

அவளை கூப்பிடுறானுகள்? " என்று புருவத்தை சுருக்கி யோசித்தபடியே அவளை கண் வெட்டாமல் பார்த்து கொண்டிருந்தான்.

கொஞ்சம் திமிராகவே வந்தவள் "என்ன அண்ணா ?" என்று கேட்டாள். "உனக்கு கை இல்லையா? உன் அசைன்மென்ட்ஸ் எல்லாம் எதுக்கு இவன் கிட்ட கொடுக்கிற?" என்று அதிலொருவன் கேட்க.. பதிலெதுவும் பேசாமல் கழுத்தை வருடியபடி ஆத்ரேயனை விஷமமாக பார்த்தாள்.

"நான் இங்கே கேட்குறேன்... உனகென்னடி அங்கே பார்வை? திமிராடி ?" என்று கெட்டவன் பொங்கி எழுந்தான். அவளின் பார்வையின் அர்த்தத்தையும் நிலைமை மோசமாக போவதயும் உணர்ந்த ஆத்ரேயன் "அவளை விடுங்கடா" என்று இறைஞ்சும் குரலில் நண்பர்களிடம் சொன்னான். அவனின் இந்த குரல் அவர்களுக்கு புதிது.

"ஏண்டா விடணும்? இவளுக்கு கொழுப்பேறி போச்சு... அழுகிறாள்..... ragging பண்ண வேணாம்

என்று நீ சொன்னதால் தான் சும்மா விட்டோம்... ஆனா இவ சரி இல்லை " என்று ஒருத்தன் எகிறினான்.

ஆகாஷோ மனசுக்குள் "அவ கிட்ட மன்னிப்பு கேட்கணும் என்று இவன் தலையிலும் எழுதி வச்சிருக்கு போல" என்று நினைத்து கொண்டான்.

இவ்வளவு நடந்தும் அவளின் பார்வை ஆத்ரேயனிலேயே நிலைத்திருந்தது. புருவத்தை தூக்கியபடி கொடுப்புக்குள் சிரித்து கொண்டிருந்தாள். ஆத்ரேயன் மனதில்"அவனுகளை பார்க்கிறாளா பாரு... என்னையே பார்த்துகிட்டு... இதுக்கும் நான் தானே சமாளிக்கணும் " என்று நினைத்தவன். "சொன்ன கேளு அவளை விடு... பார்த்துக்க வேண்டிய நேரம் நான் பார்த்துகிறேன் " என்று கறாரான குரலில் கூறினான். அவனின் இந்த குரலுக்கு எதிர் குரல் கொடுக்கும் தைரியம் யாருக்குமில்லை.

"என்னமோ போடா" என்றபடி நண்பர்கள் தங்கள்

வேலையை தொடர்ந்தனர். "அப்பாடா " என்று மனசுக்குள் நினைத்தவன் போ என்று அவளை கண்களால் சைகை செய்தான். அவனை பார்த்து குறும்பு மின்ன கண்ணை அடித்தவள் சிரித்தபடியே நடந்து சென்றாள்

இப்படியே வார நாட்கள் கடந்து சனிக்கிழமையை அடைந்தது. " எந்திரிடி.... போன முறை போல என்னால கூட்ட முடியாது... ப்ளீஸ் டி. " என்று சந்தியா வைஷ்ணவியை உசுப்பி கொண்டிருந்தாள். " இவ ஒருத்தி ஒழுங்கா தூங்கவும் விடுறா இல்ல " என்று சலித்தபடி எழுந்தவள்.. " இனி எந்த கொம்பனும் நம்மள கூட்ட சொல்ல முடியாது. " என்றபடி சாவகாசமாக குளித்து வெளிக்கிட்டு வந்தாள்..

" உனக்கெல்லாம் ஆத்ரேயன் சீனியர் அறைஞ்சிருக்க கூடாது கீழ போட்டு மிதிச்சிருக்கணும் " என்றபடி வைஷ்ணவியை இழுத்து கொண்டு சந்தியா ஒத்திகை பார்க்கும் மண்டபத்துக்கு விரைந்தாள்..

மிக தாமதமாக வந்ததால் சந்தியா தயங்கி நிக்க வைஷ்ணவியோ " வாடி " என்றபடி உள்ளே அழைத்து சென்றாள்.

" excuse me " என்று உள்ளே செல்ல ஆயத்தமாக ஆத்ரேயன் வைஷ்ணவியை உறுத்து விழித்தவன் எதுவும் பேசாமல் தனது பயிற்சியை தொடர்ந்தான்.

"எப்படி?? என்னோட பவர்?? " என்றபடி காலரை தூக்கி காட்டியவள் அவன் நிக்கும் இடத்துக்கு வந்திருந்தாள்.

அவன் அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் எல்லாருக்கும் பழக்கி கொண்டே இருந்தான்.. " என்னே திமிர் இவனுக்கு?? என்ன டான்ஸ் ல இருந்து தூக்கிட்டானா??? விடமாட்டேன் " என்று மனதுக்குள் நினைத்தவள் " க்கும்.,... க்கும்.... " என்று செருமினாள்

அதனை கவனித்த ஆத்ரேயன் பெரு மூச்சொன்றை விட்டுவிட்டு " you continue guys "

என்றபடி அவளை நோக்கி வந்து அவளின் நேரே இரு கைகளையும் கட்டி நெஞ்சை நிமிர்த்தி கொண்டு நின்றவன் " சொல்லுங்க" என்றான்.
"நான் டான்ஸ் ல இல்லையா ... எனக்கு பழக்கும் உத்தேசம் இல்லையா??? " என்றவளிடம்,

" நீ தான் போன வாரம் வரவில்லையே ... நான் நினைச்சன் உனக்கு இஷ்டமில்லை என்று..so ஜோடி எல்லாம் set பணியாச்சு.. அப்படி உனக்கு ஆட ஆசை இருந்தா ஒருவனை கூட்டிட்டு வா ... ஆடலாம் " என்றபடி அவளை கூர்ந்து பார்த்தவன்.. " வேற ஏதும் பேசானுமா??? நான் போகலாமா??"என்று கேட்டான்

அவன் வைஷ்ணவிக்கு அடங்கி போனான் அனால் முழுதாக அடங்க அவன் ஈகோ இடம் கொடுக்கவில்லை.. அவனது கோபத்தை பொறுத்து கொண்டவளால் புறக்கணிப்பை பொறுத்து கொள்ள முடியவில்லை..

அவனை உருது விழித்தவள்... "எனக்கே ஆப்பா? இருடா உனக்கு பெரிய ஆப்பா வைக்கிறேன் "

என்று வன்மமாய் நினைத்தவள் அவனிடம் " எனக்கு கண்டவனோட எல்லாம் ஆட முடியாது.. கண்ட இடத்துல கை வைப்பாங்க.. so உங்களோட ஆடலாம் என்று முடிவு பண்ணி இருக்கிறேன் என்ன சொல்றிங்க? " என்று கண் சிமிட்டி கேட்டாள்..

புருவத்தை சுளித்தவன் " what ? நானா??? நான் எப்படி உன் கூட ஆடுறது??? நான் என்ன 1st year ஆ??? " என்று கெட்டவனிடம்.. " நீங்க ஆடினா இங்க யாரும் எதிர்த்து கேள்வி கேட்கவே மாட்டாங்க... யாருக்கும் பதில் செல்ல வேண்டிய அவசியமும் இல்ல.. நீங்க ஆடலாம்.. ச்சே ச்சே ... ஆடணும் .... " என்றவாறே கழுத்தை வருடினாள்.

"இவ ஒருத்தி எதுக்கெடுத்தாலும் கழுத்துக்கு கிட்டயே கையை கொண்டு போவா .....சரியான இம்சடி நீ " என்று மூணு முணுத்தவன் " அப்போ நானும் கண்ட கண்ட இடத்துல கை வைப்பேன் பரவலயா ?? " என்று ஒற்றை புருவத்தை உயர்த்தி கேட்டான். அது அவளுக்கு தரமசங்கடமான கேள்வி தான்... ஆனால் கொஞ்ச

நேரம் யோசித்தவள் " பரவாயில்லை புருஷன் தானே நான் adjust பண்ணிப்பேன் " என்று கண்ணடித்தாள்.

அவள் பேச்சை கேட்டு தலையிலடித்து கொண்டவன் " இருக்குடி உனக்கு " என்று முணுமுணுத்து விட்டு " வா வந்து தோலை " என்றவாறு முன்னோக்கி சென்றான்

பாடலை போட சொன்னவன் பாடல் தொடங்கியதும் அவள் இடையை இரு கைகளால் பிடித்து இழுத்து வலதுகையை இடையை சுற்றி இறுக்கி அணைத்தபடி இடது கையால் அவள் வலது கையை கோர்த்து கொண்டான்.

" உன் இடது கையை என் தோல் மீதி வை " என்றவன் பாடலுக்கேற்றவாறு இரு உடல்களையும் இணைத்து அசைத்தான்

அவன் இழுத்த போதே அதிர்ச்சியுடன் அவள் மேல் விழுந்தவள்... அவனின் செய்கைகளால்

கூச்சத்தில் நெளிந்தாள். " என்ன இவன் சும்மா சொல்றான் என்று பார்த்தா இப்படி பண்ணுறானே " என்று ஆரம்பதில் மனதில் நினைத்தவளுக்கு மஞ்சள் கயிற்றின் மாயத்தால் அவன் தன்னவன் என்ற எண்ணம் மேலிட்டது. அவனின் நெருக்கமும் பிரத்தியேக நறுமணமும் அவள் நெற்றியில் பட்ட அவன் மூச்சு காற்றும் அவளுக்கு ஒரு வித சிலிர்ப்பை உண்டாக்கியது.

அவளின் இடை மெது அவன் கொடுத்த அழுத்தம் அவளின் உணர்ச்சிகளை தூண்ட எங்கேயிருக்கிறோம் என்பதை மறந்து கண் மூடி அவனுடன் அவள் கன்னத்தை அவன் மார்பின் மீது பதித்து அவனுடன் ஒன்றினாள்

ஆரம்பத்தில் அவஸ்த்தையில் நெளிந்தவள் தன்னுடன் ஒன்றுவதை பார்த்து கொடுப்புக்குள் சிரித்தவன் அவள் காதில் அவனது மீசை முடி உரச நெருங்கி குனிந்து " மேடம் ... உங்க feelings எல்லாம் கொஞ்சம் தள்ளி வச்சிட்டு இப்போ ஆடலாமே " என்றான்.

அவன் நெருக்கத்தை ஆழ்ந்து அனுபவித்தவள் அவன் குரலிலும் கூற்றிலும் நிஜ உலகுக்கு வந்ததும் எதிர் பாராத விதமாக அவனை தள்ளி விட்டாள். அப்போது தான் தனது செய்கையின் வீரியம் விளங்க " ஐயோ இவன் முன்னாடி இப்படி அசிங்க பாட்டாச்சே .. இப்போ எப்படி அவன் முகத்தில முழிக்கிறது.... சும்மாவே பேரழகன் என்று நினைப்பு வேற அவனுக்கு .. இனி இவனை கைலயே பிடிக்க முடியாதே... ..... வைஷு பேபி உனக்கு கொஞ்சம் கூட control இல்லையாடி ??" என்று தன்னை தானே குனிந்து நின்று கடிந்தவள் சற்று நேரம் கழித்து நிமிர்ந்து பார்த்தாள். பாடல் நிற்பாட்டி இருக்க அனைவரும் அவளையே பார்த்து கொண்டிருந்தனர்..

ஆத்ரேயனோ இரு கைகளையும் விரித்து காட்டி முகத்தினை கடினமாக வைத்து கொண்டு " what is this ?? " என்றான்..அனால் அவனின் கண்களில் குறும்பையும் வாய் நுனியில் அடக்கப்பட்ட சிரிப்பையும் வைஷ்ணவி கண்டு கொண்டாள்

இப்போ எப்படி சமாளிப்பது என்று யோசித்தவள் "

போன வரம் வராததால் எனக்கு ஸ்டெப்ஸ் கஷ்டமா இருக்கு இன்று பார்த்திட்டு நாளைக்கு ஆடுறேனே " என்றாள். அவளை நக்கலாக பார்த்தவன் " ok your wish " என்று தோளை உலுக்கியபடி நடனத்தை பழக்க தொடங்கினான்.

காதல் மலரும்.....

<u>யுகம்-15</u>

நடனத்தை பார்த்து கொண்டிருந்தாலும் அவள் மனசு முழுவது "ஏன் நான் இப்படி நடந்து கொள்கிறேன்? அவனின் குணமறிந்து எனக்கு அவன் மீது காதல் வந்திருக்குமா?... ஏன் என் மனம் அவன் அருகாமையை நாடுகிறது? உன்ன அவன் எவ்வளவு கேவலப்படுத்துகிறான்... உனக்கு கொஞ்சம் கூட வெட்கமில்லையா? " என்றெல்லாம் தன்னை தானே திட்டியபடி தாறு மாறாக பல கோணங்களில் சிந்தித்தது. கடைசியாக தன் வாழ்க்கையில் அவன் நிரந்தரமானவனல்ல என்றும் விவாகரத்து பத்திரத்தில் கல்யாணம் முடிந்த அன்றே

கையொப்பமிட்டதும் நினைவுவர அவளால் மனதை ஒருநிலை படுத்த முடிந்தது.

அவனுக்கோ அவள் தனது அருகாமையை விரும்பியதெல்லாம் பெரிய விடயமாக படவில்லை. "பத்தோடு பதினொன்று " என்று நினைத்து கொண்டாலும் உள்ளுக்குள் இனம்புரியாத சந்தோசம் தோன்றியது. பல பெண்கள் தன் பின்னால் சுற்றிய போது கூட வராத திருப்தி வைஷ்ணவி தன்னுடன் ஒன்றியதும் அவனுக்குள் உண்டானது. ஆனால் வலுக்கட்டாயமாக அனைத்தையும் ஒதுக்கி வைத்தவன் தனது வேலையில் மும்முரமாக ஈடுபட்டான்.

அடுத்த நாள் நேரத்துக்கு ஒத்திகையை ஆரம்பிக்கும் பொது ஆத்ரேயன் வைஷ்ணவியிடம். " என்ன இன்றாவது ஆடலாமா??? இல்ல நேற்றைய போல தானா ??? " என்று நக்கலாக அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் வினவினான்..

" நான் ரெடி " என்றவள் மேடையில் போய் நின்றுவிட்டாள். " வெட்டி வீராப்பு " என்று அவன் சொன்னது அவளுக்கு தெளிவாக கேட்டது. உள்ளுக்குள் கூனி குறுகி போனாலும் வெளியில் அதனை காட்டாமல் நெஞ்சை நிமிர்த்தி நின்றாள்.

அவளருகில் வந்தவன் நேற்று போல இடையில் கை கொடுத்து இழுத்த போதும் , கைகளிரண்டையும் கோர்த்த போதும், இரு உடல்களையும் முழுமையாக இணைத்த போதும் , அவளிடத்தில் எந்த சலனமும் உருவாகவில்லை. இது அவனுக்கு ஒரு பக்கம் ஆச்சரியத்தையும் மறு பக்கம் மனதில் இனம் புரியாத வலியையும் கொடுத்தது.

அப்போது தான் அவள் மனதின் உறுதி நிலையை பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றான். "எத்தனை நாளைக்கு என்று நானும் பார்க்கிறேன் .." என்று மனதுக்குள் யோசித்தவன் அழகான நடன அசைவுகளை கற்று கொடுத்தான்.

அவள் மனது தொடர்ந்து "இவன்

நிரந்தரமானவன் அல்ல" என்று மட்டும் உச்சரித்து கொண்டிருந்தது.

இருவரும் சேர்ந்து நடனமாடியதை அவதானித்த ஆகாஷ் ஒரு வேளை இருவரும் காதலர்களாக இருப்பார்களோ என்று யோசித்தவன். "சா சா நம்ம ஆள் ரசனை இவ்வளவு மட்டமா இருக்க சான்ஸ் இல்லை" என்று மனதை சமாதானப்படுத்தி கொண்டான்.

யாரும் எதிர் பாராத விதமாக வைஷ்ணவி குனிந்து வளையும் போது அவள் தாலி வெளியே வந்து விழுந்தது. பாட்டோடும் நடனத்தோடும் ஒன்றியவள் அதனை கவனிக்கவில்லை. ஆத்ரேயனும் அதனை கவனிக்கவில்லை. நடனத்தை பார்த்து கொண்டிருந்த ஆத்ரேயனின் நண்பர்கள் கண்ணுக்கே அது முதலில் பட்டது.

ஒருவன் ஓடி சென்று பாடலை நிறுத்தியதும் மண்டபம் முழுதும் நிசப்தமாகியது. ஆடுவதை நிறுத்திய ஆத்ரேயன் "என்னடா ஆச்சு?" என்று கேட்டான்.

அவனின் நண்பனோ அதற்கு பதிலளிக்காமல் நேரே வைஷ்ணவி முன் சென்றவன் அவளை அதிர்ச்சியுடன் பார்த்தான். "இவன் ஏன் நம்மள இப்படி பார்க்கிறான்?" என்று நினைத்தவள் மண்டபத்தை நோக்கி பார்வையை செலுத்த அனைவரும் அவளை அதே போல பார்த்து கொண்டிருந்தனர். " என்னடா இது வம்பா போச்சு? ரொம்ப அழகா ஆடிட்டமோ ? இப்படி எல்லாரும் பார்க்கிறாங்களே." என்று யோசித்த படி ஆத்ரேயன் பக்கம் திரும்பியவள் அவனோ எல்லாருக்கும் மேலாக அதிர்ச்சியும் கலக்கமும் கலந்த முகத்துடன் நின்றான். "இவனுக்கு என்னாச்சு நல்லா தானே இருந்தவன்.. ஒரு வேளை நம்ம டிரஸ் எங்கயும் கிழிஞ்சிருக்கோ ?இப்படி பார்க்கிறாங்களே " என்றபடி குனிந்தவளுக்கு மயக்கம் வராத குறை தான்.

உடனே சுத்தகரித்த ஆத்ரேயன் அருகில் வந்து அவளின் தாலியை தொட்டு தூக்கியவன் "உனக்கு கல்யாணம் ஆகிருச்சா? ஏன் எங்க கிட்ட சொல்லல?" என்று கேட்டான். அவன் முகம்

அதிர்ச்சியை தவிர எந்த உணர்ச்சியையும் பிரதிபலிக்க வில்லை. அவன் கேள்வியில் அதிர்ந்தவளுக்கு "இது உலக மகா நடிப்புடா சாமி" என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்ன கூறுவது என்று முதலில் திகைத்தவள் பின் சுதாகரித்து சந்தியாவிடம் கூறிய அனைத்து பொய்களையும் மீண்டும் ஒப்புவித்தாள். "அப்போ எங்களுக்கு treat இல்லையா ?" என்று அனைவரும் வினவினர். "Treat ஆ?? இவ்வளவு பேருக்குமா ?" என்று வாயை பிளந்தவளிடம் " ஆமா இன்னைக்கு உன் செலவில் எல்லாருக்கும் treat " என்றான் ஆத்ரேயன் குறும்பு சிரிப்புடன். "என்கிட்டயேவாடா" என்ற அர்த்தத்தில் அவனை முறைத்தவள் " கண்டிப்பா வைக்கிறேன் அதுவும் என் புருஷன் செலவில் " என்றால் அவனுக்கு போட்டியாக.

" எப்பிடியோ நீ வச்சா சரி " என்றவாறு எல்லாரும் கலைந்து சென்றார்கள். அவள் பதிலில் ஆடி போனது ஆத்ரேயன் தான்.. அவளிடம் இருந்து தப்புவதற்காக மண்டபத்துக்கு பின்னால்உள்ள

வெளியில் நின்று புகைத்து கொண்டிருந்தவன் "நம்மள இன்னைக்கு ஆண்டி ஆக்கிருவாளோ ?? " என்று யோசித்து கொண்டிருந்தான்.

அவனை எல்லா இடமும் தேடியவள் கடைசியாக அங்கு வந்து சேர்ந்தாள். " எப்போ பாரு எங்கயாச்சும் நின்று சிகெரெட் பிடிக்க வேண்டியது. " என்று முணு முணுத்தபடி அவன் முன்னாள் வந்து நின்றவளை பார்த்து " காச ஆட்டைய போட பிளான் பண்ணறாடா ஆத்ரேயா கொஞ்சம் உஷாரா இருடா" என்று தனக்கு தானே அலெர்ட் கொடுத்தவன்.

" என்ன வேணும்?? " என்று சாதாரண குரலில்கேட்டான்.. " காசு வேணும் " என்று கையை நீட்டியவளிடம் " காசு இல்லை " என்றான்.. " அப்போ credit card கொடுங்க " என்று கேட்டாள் .. " கொண்டுவரலடி " என்றவன் புகைக்க தொடங்கினான். அவளுக்கோ கோபம் தலைக்கேறியது..

அவன் சிகரெட்டை பறித்து தூக்கி எறிந்தவள்

"இப்போ காசு கொடுக்க முடியுமா முடியாதா?? " என்று கேட்டாள். "இப்போ எதுக்குடி அத தூக்கி எறிஞ்ச ?" என்று கெட்டவனை அவள் முறைக்க. " உண்மையா இல்லடி..நம்புடி . " என்றான் .

அவனுக்கு தெரியும் தெனாவெட்டாக முடியாது என்றால் மிரட்ட தொடங்குவாள் என்று .
அதனால் தான்
இல்லை என்றவாறே சமாளித்தான். "எங்கே பார்ப்போம் " என்றபடி அவன் அருகே வந்தவள் முன்னாலிருந்து அவனை அணைத்தவாறே பின் பாக்கெட்டில் கை வைத்து purse ஐ எடுக்க முயற்சி செய்தாள் . " விடுடி... யாரும் பார்த்தா என்ன நினைப்பாங்க?" என்று அவளை தள்ளி விட்டவன் .

" நானே தரேன் " என்றபடி பர்சிலிருந்து கிரெடிட் கார்டு ஐ எடுத்து " சரியான இம்சடி நீ " என்றபடி அவள் கையில் வைத்தான். "அந்த பயம் இருக்கட்டும் " என்றபடி திரும்பியவளுக்கு தலையில் யாரோ குண்டை தூக்கி போட்டது போல இருந்தது. அவளின் திகைப்பை அறிந்து

திரும்பிய ஆத்ரேயனுக்கோ அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது. அங்கு ஆகாஷ் கை கட்டியபடி இருவரையும் பார்த்து கொண்டு நின்றிருந்தான்.

ஏற்கனவே ஆத்ரேயன் தெரியாத போல வைஷ்ணவியிடம் எல்லார் முன்னிலையிலும் கல்யாணத்தை பற்றி விசாரித்தது சந்தேகமாக இருக்க... " அதெப்பிடி மாமன் மகள் கல்யாணம் பண்ணினது தெரியாமலா இருக்கும்?? எதுக்கு இவன் ஓவர் performance கொடுக்கணும்??? கல்யாணம் ஆன பொண்ணோட ஏன் அவ்வளவு கிளோஸ் ஆ நடனம் ஆடனும் ??" என்று பல கேள்விகள் மூளையை துளைக்க அந்நேரம் பார்த்து வைஷ்ணவி தனியாக யாரையோ தேடியபடி மண்டபத்துக்கு பின்னால் செல்வதை கண்டு கொண்டான்.

பின்னால் வந்தவனுக்கு அவர்களின் உரையாடலில் இருந்து எல்லாம் புரிந்து விட்டது. ஆர்யனும் ஆத்ரேயனும் ஒருவனே என்று. அவனின் உறுத்த விழிப்பை சட்டை செய்யாமல் "

மச்சான் நீ எங்கட இங்க?? " என்று கேட்டான் ஆத்ரேயன் .

" ஏன் நான் வந்தது புருஷன் பொண்டாட்டி கொஞ்சி விளையாட இடைஞ்சலாக இருக்குதா??? " என்று கேட்க " இனி இவனிடம் மறைக்க முடியாது " என்று யோசித்தவன்.

" இங்க வா மச்சான் " என்று கூப்பிட்டுவிட்டு ."நீ போ" என்று வைஷ்ணவியிடம் சொல்ல ஆகாஷோ " நீ இங்கேயே நில்லும்மா " என்றவன். " அவ இருக்கட்டும் நீ சொல்லு " என்றான்.

"என்னத்தடா சொல்லணும் ?? சொல்றதுக்கு பெரிசா ஒண்ணுமில்ல ...அவ கழுத்துல இருக்கிற தாலி நான் தான் கட்டினேன் .. ஆனா எனக்கோ அவளுக்கோ இந்த கல்யாணத்துல இஷ்டமில்லை .. அதனால mutual divorce க்கு apply பண்றதுக்கு divorce papers லயும் sign பண்ணிட்டம் அதால தான் இத சொல்ல விருமபல.... madam க்கு தாலி சென்டிமென்ட் கொஞ்சம் ஜாஸ்தி.. தாலியை கலாட்ட மாட்டேன் என்று

சொல்லிட்டா " என்று சர்வசாதாரணமாக சொல்லி முடித்தான்.

" டேய் ஒரு நளைக்கு ஒரு இடி போதும்டா.. நீ என்ன இவ்வளவு ஷாக்கிங் நியூஸ் சொல்லுற ?? கல்யாணம் முடிஞ்ச அதிர்ச்சியிலிருந்தே நான் வெளி வரல அதுக்குள்ள டிவோர்ஸ் ஆ? " என்று கேட்டவனிடம்.

ஒரு புன்னகையுடன் .. " இந்த பஜாரியோட மனுஷன் வாழ்வானா ??? " என்று கண்ணடித்து கேட்டான் .அவனின் பேச்சில் கோபமடைந்தவள் " அதுக்கு நீ முதல் மனுஷனா இருக்கணுமே ?? " என்று பதிலால் அடித்தாள். " என்னடி வாய் நீளுது?? " என்று முறுக்கி கொண்டு அவளருகில் போனவன் " ஆகாஷ் அண்ணனுக்கு தெரிந்தது இப்போ எல்லாருக்கும் தெரியவரும் " என்றபடி வெளியில் கிடந்த தாலியை தூக்கி காட்டினாள். மிரட்டலில் வாயை கப் என்று மூடி கொண்ட ஆத்ரேயனை ஆச்சரியமாக பார்த்த ஆகாஷ். " ஓ இது தான் நம்ம ஆள் பம்முறத்துக்கு காரணமா? " என்று சரியாக

யூகித்தவன் " அதுதான் நேற்று மேடம் உன்னோட ஆடும் போது அப்படி குழைஞ்சாங்களா ,?? " என்று கண்சிமிட்டி கேட்டான். வைஷ்ணவியோ மனதுக்குள் " ஐயோ என் மானம் போகுதே " என்று நினைத்தபடி வேறெங்கோ பார்த்து கொண்டு நின்றிருந்தாள்.

அவளையே பார்த்து கொண்டிருந்த ஆத்ரேயன் அவள் கண் முன் சொடக்கிட்டு " எதோ கேக்கிறாங்க நீயே பதில் சொல் " என்று சொல்லி விட்டு முன்னே போய் விட்டான்.. என்ன சொல்வதென்று தெரியாமல் முழித்தவள் " போகலாமா அண்ணா " என்றபடி ஆகாஷை பார்க்காமல் விறு விறு வென நடந்தாள். " விடை சொல்லடியும் பரவல treat ஆச்சும் தாங்கப்பா " என்று சலித்தபடி ஆகாஷும் பின்னால் சென்றான்.

online இல் அனைவருக்கும் சாப்பாடு ஆர்டர் பண்ணி விட்டு அவர்கள் வரும்வரை காத்திருந்தாள் . அப்போது ஆத்ரேயனுக்கு வந்த மெசேஜ் இல் அவனது கிரெடிட் கார்டில் இருந்து

பெறப்பட்ட பணம் அலெர்ட் இல் வந்திருந்தது. " நம்மள முழுங்கவே வந்து சேர்ந்திருக்கா " என்று சலித்து கொண்டான். பக்கத்திலிருந்த ஆகாஷோ " உன் பாடு இனி திண்டாட்டம் போல " என்று கேட்டுவிட்டு வாயை பொத்தி கொண்டான். அவனை பார்த்து முறைத்தவன்" என் புழப்பு உனக்கு சிரிப்பை இருக்கு எனடா " என்றபடி அமர்ந்திருந்தான். " ஆனா எனக்கு ஒரு சந்தேகமடா " என்ற ஆகாஷுக்கு என்ன என்பது போல் புருவத்தை உயர்த்தி கேட்டான் ஆத்ரேயன்.

" கேக்கிறேன் என்று கொவிக்காத 1st night முடிஞ்சாடா ? " என்று கேட்டவனை முறைக்க முயன்று தோற்ற ஆத்ரேயன் சிரித்தபடி " பிரியப்போற எங்களுக்கு எதுக்குடா சும்மா commitments ? " என்று கேட்டவன் தொலைபேசியை நோண்ட தொடங்கினான். "அவ்வளவு நல்லவனாடா நீ?" என்று கேட்ட ஆகாஷுக்கு நிமிர்ந்து பார்த்து ஒரு புன்னகையை மட்டும் பதிலாக கொடுத்தான்.

சாப்பிட்டு முடித்ததும் "thank you வைஷ்ணவி for your treat " என்று எல்லாரும் கூவ, ஆத்ரேயனோ ஒரு படி மேலே போய் " thank you ஆர்யன் " என்று கூவினான். அவன் குரல் கேட்டு ஆகாஷும் வைஷ்ணவியும் ஒருவரை ஒருவர் திரும்பி பார்த்து கொண்டனர்.. ஆகாஷ் ஆத்ரேயன் காதில் " டேய் நீ நடிப்பில் சிவாஜி கணேஷன் சாரையே மிஞ்சிருவாடா " என்றான். அவனோ சிரித்தபடி "பின்ன என்னடா காசு என்னோடது thanx மட்டும் அவளுக்கா ?" என்று ஆதங்கமாக கேட்டான்.

கடந்து சென்ற நாட்கள் அவர்கள் ஒத்திகை பார்த்த நிகழ்ச்சியையும் திருப்தியாக முடித்துவிட்டு முதல் வருட இறுதி பரீட்சையில் வந்து நின்றது. ஆத்ரேயனோ படிக்காமலே சிறப்பாக பரீட்சையை எழுத வைஷ்ணவியோ விழுந்து விழுந்து படித்து சுமாராக பரீட்சை எழுதி முடித்தாள். பின்பு ஒரு மாத லீவுக்காக வீட்டுக்கு சந்தோஷமாக சென்றவளுக்கு தெரியவில்லை அது தான் அவள் வாழ்க்கையில் ஏற்றப்பட போகும் கடைசி சந்தோஷமான நாட்கள் என்று. கடைசி வருட

மாணவர்களுக்கான farewell party லீவு முடிந்து ஒரு மாதத்தினால் நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்டது.

அனைவரையும் கட்டி தழுவி விடைபெற்ற ஆத்ரேயனை பார்த்த வைஷ்ணவி "இவனுக்குள் feelings எல்லாம் இருக்கா?" என்று யோசித்தாள். பெண்களோ "எப்போ சீனியர் கல்யாணம்? அப்படி பண்ணுற ஐடியா இருந்தா எங்களில் யாரையாச்சும் பண்ணுங்க... farewell party ல முடிவை சொல்லனும் " என்று அவனிடம் சொல்லி கொண்டிருந்தனர். அவனும் "ok babies " என்று அவர்களிடம் ஜொல்லு விட்டு கொண்டிருந்தான்.

இதெல்லாம் பார்த்த ஆகாஷோ " நம்மள ஒருத்தி கண்டுகிறாளா பாரு.... கல்யாணம் பணியவனையே சுத்தி சுத்தி வருதுகள் " என்று முணுமுணுத்து கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் வந்த வைஷ்ணவி "ஏதோ கருகிற வாசம் வருதே" என்று சொல்ல "அது உன்னிடம் இருந்து தான் வருது " என்று பதிலடி கொடுத்து

அவள் காலை வாரி விட்டான். அவளும் சிரித்தபடி சமாளித்து வைத்தாள்.

எல்லாம் ஒரு வழியாக முடிந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். வைஷ்ணவி எதையும் பற்றி கவலை படாமல் தனது வீட்டிலேயே இருந்தாள் . அவளை ஆத்ரேயனும் கண்டுக்கவில்லை, அவன் தன் தந்தையின் தொழிலை அவரிடமிருந்து கற்றுக்கொள்வதிலும் சிங்கப்பூரில் கிளையை உருவாக்குவதிலும் மும்முரமாக இருந்தான். ஆதியோ மனைவியுடன் பெங்களூரில் உள்ள கிளையை நிர்வாகம் செய்ய சென்று இருந்தான்.

மலர்வேந்தன் எவ்வளவோ சொல்லியும் ஆத்ரேயன் இருப்பான் என்பதால் வைஷ்ணவி மறந்தும் அலுவலகத்துக்கு செல்லவில்லை. நாவல் , படம் என நாட்களை கடத்தி கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் மூன்று நாட்கள் பொறுத்து பார்த்த மாலதி, வைஷ்ணவி வீட்டுக்கே வந்து விட்டார்.

கோகிலாவிடம் "உங்க மகள் என்ன நினைச்சிட்டு

இருக்கா? இங்கேயே தங்கிடுறதா முடிவெடுத்து இருக்காளா?" என்று கடுமையுடன் வினவினார். அவரின் "உங்க மகள் " என்ற விளிப்பில் அவரின் கோபத்தையும் தன் மேலுள்ள பாசத்தையும் அறிந்த வைஷ்ணவி ஒன்றும் பேசாமல் விறு விறு வென மாடி ஏறி சென்றாள்.

"ரொம்ப திமிர் புடிச்சவ.... அப்பிடியே ஆத்ரேயன் போல " என்று கோகிலாவிடம் புலம்பி தள்ளி கொண்டிருந்தார். மகளின் குணமறிந்ததால் கோகிலாவும் சிரித்தபடி அவரை பார்த்து கொண்டிருந்தார். சற்று நேரத்தில் உடுப்பு பையுடன் வந்தவள் " அத்தை போகலாமா?" என்று கேட்டாள். அவளை ஆச்சரியமாக பார்த்த மாலதி "என் செல்லம்" என்றவாறு கை பிடித்து அழைத்து சென்றார்.

பகல் முழுதும் மாலதியுடன் செலவிட்டவள், இரவானதும் ஆத்ரேயன் அறைக்கு மாலதியின் கட்டாயத்தின் பெயரில் சென்று அடைந்து கொண்டாள். "ரொம்ப சுத்தமோ?" என்று யோசித்தபடி அறையை ஆராய்ந்து

கொண்டிருந்தவள் செருமல் சத்தம் கேட்டு திரும்பி பார்க்க அங்கே ஆத்ரேயன் கையை காட்டியபடி கதவடியில் சாய்ந்து நின்று அவளையே பார்த்து கொண்டிருந்தான். அவன் சிவப்பேறிய கண்கள் குடித்திருந்ததை பறை சாற்றியது. அவளை நோக்கி அழுத்தமான காலடிகளுடன் நெருங்கி வந்தவனை பார்த்ததும் அவளிதயம் தாறு மாறாக துடித்தது.. அவளும் பயத்தில் பின்னால் செல்ல கட்டிலில் மோதுபட்டு மேலே செல்ல இடமில்லாமல் மருண்டபடி நின்றிருந்தாள். அவளை மூச்சு காற்று படுமளவுக்கு நெருங்கியவன் வலதுகையை அவள் தோள் மீது வைத்து அவளை தள்ளி விட்டு கட்டிலுக்கு செல்ல வழி எடுத்தவன், அப்படியே கட்டிலில் விழுந்து உறங்கிவிட்டான்.

அவன் தள்ளி விட்டதில் விழுந்து விடாமல் தன்னை சமன் செய்தவள் "இதுக்கு தானா அவ்வளவு buildup " என்று தலையில் அடித்து கொண்டாள். கட்டிலில் சிறிய இடத்தில் தன்னை குறுக்கி படுத்தவளுக்கு மாலதி மேல் கோபம்

பொத்து கொண்டு வந்தது. "அத்தை எல்லாம் உங்களால் தான்" என்று மாலதிக்கு திட்டியபடியே உறங்கி போனாள்.

தங்களை மறந்து ஒருவரை ஒருவர் கட்டிபிடித்தவாறு உறங்கி கொண்டிருந்தவர்களை எழுப்பும் முகமாக ஆத்ரேயனின் தொலை பேசி அலறியது. அந்த சத்தத்தில் இருவரும் கண் விழித்த பொது வைஷ்ணவி ஆத்ரேயனை அணைத்தவாறு அவன் மார்பில் தலை வைத்து படுத்திருந்தாள். ஆத்ரேயனின் கையும் அவளை அணைத்திருந்தது. ஒரே நேரத்தில் கண் விழித்து பார்த்தவர்களுக்கு இது அதிர்ச்சியாக இருக்க சுதாகரித்து கொண்டு விலகி அமர்ந்தார்கள்.

தலையை உலுக்கி சமன் செய்தவனுக்கு மது உட்சேன்றதால் சற்று தலை வலியாக இருக்க நடந்ததை யோசிக்க முடியாமல் தலையை பிடித்து கொண்டவன் "நீ எப்போ வந்த?" என்று கேட்டான். "நல்ல கேள்வி,.,,, நேற்று உங்க முன்னாடி தானே இருந்தேன் நினைவில்லயா?"

என்று கேலியாக கேட்டாள். "இல்லை" என்று ஒற்றை வரியில் பதிலளித்தவன் குளிக்க சென்று கதவை சாத்தி கொண்டான்.

எழும்ப மனமில்லாமல் அப்படியே படுத்து கொண்டிருந்தவள் வெளியில் towel உடன் வந்தவனை பார்த்து "சரி இனி இவன் கவர்ச்சி நடிகை போல போஸ் கொடுக்க தொடங்கிருவான் .,...நாம எஸ்கேப் ஆகிறது தான் நல்லது" என்று நினைத்தபடி கட்டிலில் இருந்து பாய்ந்து எழுந்தவள் கதவை சாத்தி விட்டு வெளியே சென்றாள். அவள் செல்வதை கேலியாக பார்த்தவன் உடை மாற்றி அலுவலகத்துக்கு செல்ல ஆயத்தமானான். கீழே வந்தவளை பார்த்த கார்த்திகேயன் "வாம்மா ,,, இப்போ தான் எங்க வீட்டுக்கு வர வழி தெரிஞ்சிச்சா ?" என்று கேட்டார். "ஆ.... அவ வந்துட்டாலும்... நான் போய் நேற்று கூட்டி வந்தேன் " என்று மாலதி தன் புகழ் பாடினார்.

இருவரையும் பார்த்து புன்னகைத்தவள் சமயலறைக்கு சென்று ஒரு கப்பில் மாத்திரம்

coffee போட்டு எடுத்து கொண்டு மாடியேறினாள். அனைவரும் நினைத்தார்கள் இது ஆத்ரேயனுக்காக போடப்பட்டது என்று. ஆனால் அது அவளுக்காக மட்டுமே போடப்பட்டது. அறைக்குள் செல்ல மனமில்லாமல் அவ்விடத்தில் இருந்த சோபா வில் இரு கால்களையும் சப்பாணம் போட்டு உட்கார்ந்தபடி coffee ஐ அருந்தி கொண்டிருந்தாள்.

உடை மாற்றி வெளியில் வந்தவன் sofa வில் இருந்தவளிடம் "எனக்கில்லயா?" என்று கேட்டான். "நான் என்ன உங்க வீட்டு வேலைக்காரியா? தேவை என்றால் நீங்க போட்டு குடிங்க." என்றபடி coffee cup இல் வாய் வைக்க போனவளிடம் கையில் கப்பை காண வில்லை. நின்றபடி கப்பை லாவகமாக பறித்து எடுத்தவன் அதனை குடித்து கொண்டிருந்தான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் குடித்து முடித்தவன் "not bad " என்றபடி அவளிடம் கப்பை கொடுத்து கன்னத்தை தட்டி விட்டு சென்றான். "don'touch me idiot " என்று திட்டியதை கேட்டவன்,

கீழிறங்காமல் அவளை நோக்கி விறுவிறுவென வந்து அவள் முகம் நோக்கி குனிந்து அவளிதழ்களில் அழுந்த முத்தமிட்டவன் "நீ எதை செய்ய வேணாம் என்று சொல்றியோ அதை மட்டும் தான் நான் செய்வேன் " என்று கூறி கண்ணை அடித்துவிட்டு கீழிறங்கினான். கண நேரத்தில் நடந்து முடிந்த அடுத்தடுத்த நிகழ்வுகளால் அதிர்ச்சியடைந்தவள் உதட்டை நன்றாக தேய்த்தபடி தனது அன்றாட வேலைகளில் ஈடுபட தொடங்கினாள்.

காதல் மலரும்.....

<u>யுகம்-16</u>

இரவானதும் பயத்தினால் அவனுக்காக காத்திருக்காமல் கதவை திறந்து வைத்து விட்டு தூங்கி விட்டாள். அவளின் அருகாமையில் தன்னை இழக்கும் அவனுக்கும் அது நிம்மதியாக இருந்தது. காலையில் அவனுக்கு முதல் எழுந்தவள் கீழே போய் மாலதியுடன் நேரம் செலவழிக்க தொடங்கினாள். மொத்தத்தில்

அவர்கள் சந்திப்பதை முற்றாக தவிர்த்து கொண்டனர். இப்படியே நாட்கள் கடந்து விடுமுறை நாளில் வந்து நின்றது. வைஷ்ணவிக்கோ எப்பொழுது லீவு முடியும் என்ற எண்ணமே இருந்தது.

ஞாயிற்றுகிழமை என்றும் பாராமல் அவளை தவிர்ப்பதற்காகவே அவன் அலுவலகத்திற்கு செல்ல தொடங்கினான். அன்று அதி காலை வைஷ்ணவிக்கு ஒரே அலுப்பாக இருந்தது. வர்ஷினிக்கு call பண்ணி பேச தொடங்கினாள். "ஹாய் அக்கா?எப்படியிருக்க?" என்று கேட்க... "நல்லா இருக்கிறேண்டி ... கொஞ்சம் உடம்பு முடியாம இருக்கு..." என்றாள் வர்ஷினி.

"என்னாச்சு?" என்று உணமையான கவலையுடன் விசாரிக்க.. வர்ஷினியோ வெட்கப்பட்டவாறு "I think I am pregnant .... ஆதிக்கு முக்கியமான வேலை என்று early ஆகவே office போய்ட்டார்.. வந்ததும் தான் check பண்ணி confirm பண்ணனும்.. உன் கிட்ட தான் முதலில சொல்லி இருக்கிறேன்.. ஆதி கிட்ட கூட சொல்லல... confirm பண்ணிட்டு

எல்லார் கிட்டயும் சொல்லலாம் என்று இருக்கிறேன் " என்றதை கேட்டதும் தான் தாமதம். கட்டிலில் ஏறி நின்று குதித்தவாறே "உண்மையாவா சொல்லுற? எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? இப்போவே எல்லார்ட்டையும் சொல்றன்..என்னால உன்ன போல எல்லாம் மறச்சு வைக்க முடியாது.. bye ." என்று குதூகலித்தவாறு தொலைபேசியை அணைத்து கட்டிலில் போட்டவளுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. குழந்தை போல் அங்கும் இங்கும் தாவி திரிந்தவள் "இதனை அத்தை கிட்டயும் அம்மா கிட்டயும் சொல்லணும்..." என்று குழந்தை போல தாவி தாவி கீழே இறங்கினாள். அவள் தாவி வருவதை பார்த்த ஆத்ரேயன் "இவ எதுக்கு குரங்கு போல behave பண்ணுறா?" என்று சிந்தித்தவாறே சாப்பிட்டு கொண்டிருந்தான்.

"அத்தை நம்ம வீட்டுக்கு ஒரு குட்டி பாப்பா வரப்போகுது" என்று கத்தியபடி மாலதியிடம் ஓடி வந்தாள். இதை கேட்டதும் ஆத்ரேயனுக்கு புரை ஏறியது. முன்னாள் இருந்து சாப்பிட்டு

கொண்டிருந்த கார்த்திகேயனோ ஆத்ரேயனை பார்த்து புன்னகைத்து "congrats my son " என்றார். வலுக்கட்டாயமாக சிரித்தவனுக்கு யோசனை தோன்றியது. அந்நிலையில் யாருக்கும் வர்ஷினி நினைவு வரவில்லை.

மாலதியும் சந்தோஷமாக வைஷ்ணவை அணைத்து கொண்டாள். " நல்ல விஷயம் சொல்லி இருக்கேம்மா . ரொம்ப சந்தோஷமாக இருக்கு" என்றார் தலையை வருடியபடி. அவளும் வாகாக அவர் தோளில் சாய்ந்து கொண்டாள். " இரு பாயசம் செய்து வாறன்.நீ நல்லா சாப்பிடணும் " என்றபடி சமயலறைக்குள் நுழைந்தார்.ஆத்ரேயன் நெற்றியில் புருவ முடிச்சுடன் வைஷ்ணவியை நோக்கினான். அவள் முகத்தில் சந்தோசத்தை தவிர எதுவும் தெரியவில்லை.

எங்கே வைஷ்ணவியின் வாழ்கை கெட்டுவிட்டது என்று மறுக்கியவர்களுக்கு இது பெரும் சந்தோஷத்தை கொடுத்தது. அவர்களுக்கு தெரியவில்லை கர்ப்பமாக

இருப்பது வர்ஷினி என்று. சாப்பிட்டு விட்டு கை கழுவ வந்த ஆத்ரேயனிடம் " என்னடா உன் பொண்டாட்டி கர்ப்பமா இருக்கா உன் முகத்திலே சிரிப்பையே கணோம்" என்றார். அவனும் வலுக்கட்டாயமாக சிரித்து விட்டு வைஷ்ணவியை நோக்கி சென்றான்.

சாப்பிட்டு கொண்டிருந்த வைஷ்ணவி அருகிலிருந்த கதிரையில் அவளை நெருங்கி இருந்தவன். வைஷ்ணவியிடம் காதருகில் " How is it possible ? " என்றான் அடக்கப்பட்ட கோபத்துடன். அவள் ஒரு புரியாத பார்வையை அவனிடம் வீசினாள். "சொல்லுடி நீ எப்படி conceive ஆனாய் ?" என்று சீறினான் கார்த்திகேயனுக்கு கேட்காதவாறு

அப்போதுதான் அவளுக்கு விளங்கியது ஆத்ரேயனின் கோபத்துக்கான காரணம். "ஒரு வேளை இவன் லூசா இருப்பானோ" என்று மனதில் நினைத்தவாறே வந்த சிரிப்பை அடக்கி கொண்டு " நீங்க மறந்துட்டீங்களா? நான் இங்க வந்த அன்று போதையில் வந்திங்க தானே....

அண்டைக்கு உங்கள அறியாமலே எல்லாம் நடந்து போச்சு" என்றாள் முகத்தை பாவமாக வைத்து கொண்டு.

இதை கேட்ட ஆத்திரேயன் தலையில் இடி சத்தமில்லாமல் இறங்கியது. அவன் குடித்திருந்தாலும் ஒரு நாளும் நிதானம் தவறியவனில்லை. தலையில் கை வைத்தபடி அமர்ந்தவனுக்கு எவ்வளவு யோசித்தும் எதுவும் நினைவுக்கு வரவில்லை. அன்று வைஷ்ணவியை தள்ளிவிட்டு தூங்கியது மட்டுமே நினைவிருந்தது. இதை பார்த்த வைஷ்ணவிக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தாலும் கார்த்திகேயன் அருகிலிருந்ததால் அடக்கி கொண்டிருந்தாள்.

அப்போது மாலதி பாயாசத்துடன் வந்து வைஷ்ணவிக்கு வாய்க்குள் பாயசத்தை ஊட்டிவிட்டு, " இந்த மாதிரி நேரத்தில் இப்பிடி மாடியிலருந்து தாவி இறங்க கூடாதும்மா.... எப்பிடியம்மா கல்லூரியில் தனியாக சமாளிக்க போகிறாய்? ஆத்ரேயனும் பக்கத்தில் இருக்க

மாட்டானே " என்று கவலைப்பட்டபடி பாயசத்தை கார்த்திகேயனுக்கு ஆத்ரேயனுக்கும் கொடுத்தார்.

இதை கேட்டு அதிர்ச்சியடைந்த வைஷ்ணவி . " இந்த நெட்டையன் தான் லூசு என்று பார்த்தா குடும்பமே லூசா இருக்கும் போலயே" என்று நினைத்துக்கொண்டு , இனி மறைத்தால் விபரீதமாகிவிடும் என்று தோன்ற " ஐயோ அத்தை நான் கர்ப்பம் இல்ல வர்ஷினி தான் கர்ப்பம்" என்று கூறியவாறு சத்தமாக சிரித்தாள்.

சந்தேகமாக பார்த்த மாலதியிடம் "இப்போ தான் வர்ஷினி call பண்ணினா .....ஆதி அத்தான் வீட்டில் இல்லையாம் ... evening டாக்டர் கிட்ட confirm பண்ணிட்டு எல்லார் கிட்டயும் சொல்றன் என்று சொன்னா... எனக்கு தான் ஓட்ட வாயே அத்தை.. அதான் உளறிட்டேன் " என்று வெகுளியாக சொன்னபடி பாயசத்தை சாப்பிட்டாள். அவள் முதுகில் இரு அடிகளை போட்ட மாலதி "எதையும் விளக்கமா சொல்ல மாட்டியா?" என்று சிரித்தவாறே கேட்டார். "வர்ஷினியும் பாவம்

தனியா அங்கே இருந்து என்ன பண்ண போறாளோ... அந்த ஆதி எப்போவும் அவளை விட்டிட்டே இருக்க மாட்டான்" என்று கவலைப்பட்டார்.

இதனை கேட்ட பிறகு தான் ஆத்ரேயனுக்கு மூச்சு விடக்கூடிய போல இருந்தது. அவளை உறுத்து விழித்துவிட்டு பாயசத்தை சாப்பிட தொடங்கினான். வைஷ்ணவியோ அவனை நோக்கி நாக்கை துருத்தி காட்டி விட்டு தொடர்ந்து சாபிட்டாள். சாப்பிட்டு நிறைய நேரமாகியும் office க்கு செல்லாமல் அவ்விடத்திலேயே இருந்த மகனை பார்த்து "நீ இன்று வரலையா?" என்று கேட்டார். "நீங்க போங்க நான் வர லேட் ஆகும் " என்றவன் தொலைபேசியை நோண்ட தொடங்கி விட்டான்.

"இவன் இன்னைக்கு போக மாட்டானா?" என்று யோசித்தவள் சாப்பிட்டு விட்டு மாடியேறிவிட்டாள். அதுக்காகவே காத்திருந்த போல அவனும் பின்னாடியே போனான். இருவரையும் பார்த்த மாலதி மனதுக்குள் சிரித்து

கொண்டார். அவள் அறைக்குள் சென்றதும் பின்னால் சென்றவன் அறைக்கதவில் சாய்ந்திருந்தபடி சொடக்கிட்டான். "ஐயோ இந்த வானரம் இன்னும் போகலையா?." என்று யோசித்தவள் திரும்பி பார்த்தாள்.

பெரு மூச்சொன்றை விட்டவன் அவளை நோக்கி " நீ என்ன தான் மனசில நினைச்சுட்டு இருக்க? நமக்கு விவாகரத்து ஆக போகுது.. ஆனா நீ பேசுற பேச்சு உனக்கு என் கூட வாழ ஆசை என்று சொல்லுது. உனக்கு பொண்ணா அடக்க ஒடுக்கமா இருக்க தெரியாதா? எப்போ பார்த்தாலும் என் பின்னாடி சுத்தி கிட்டு.. do you want me to make love ? அதுக்காக தான் என்ன உசுப்பேத்தி விடுறியா ? என்ன மயக்கி உன் கூட நிரந்தரமாக வாழ வைக்க plan பண்றியா? ஆண்களை மயக்கி திரியும் உன்னை போன்ற பெண்களுக்கு பெயர் என்ன தெரியுமா? "என்று பச்சையாக கேட்டான். அவனுக்கு அவள் மேல் வந்த ஈர்ப்புக்கும் காதலுக்கும் அவளே காரணம் என்று பழி போட்டான்.

அவன் கேள்வியில் ஆடி போனாள். " மனதால் கூட அவன் கூறியது போல் அவள் நினைத்தது கிடையாது.. இது வரைக்கும் விளையாட்டுக்காகவே அவன் கூட பேசி இருக்கிறாள் பழகி இருக்கிறாள்.... அதற்காக என்ன வார்த்தை சொல்லி விட்டான்.. இது இரண்டாம் தடவை.... இவன் நாக்கில் கத்தியை வைத்து விட்டா சுற்றுகிறான்" என்று மறுக்கியவளுக்கு கண்ணீர் புகு புகு வென வெளியேறியது.

கோவம் கொப்பளிக்க கண்ணீருடன் அவனை நோக்கியவள் அவனை திருப்பி காயப்படுத்தும் பொருட்டு " அப்பிடி நான் மயக்கணும் எண்டா அதுக்கு நீ ஆம்பிளையா இருக்கணும்." என்று கூறிவிட்டு அவன் பதிலை எதிர் பார்க்காமல் வாசலில் நின்ற அவனை தள்ளிவிட்டு விறு விறு என்று கீழே வந்துவிட்டாள்.

அவள் கூறியதை கேட்ட ஆத்ரேயனின் முகம் கோபத்தில் சிவந்து அவன் மீசை கூட துடித்தது. அவள் சற்று நேரம் அங்கு நின்றிருந்தால் அவள்

உயிருடன் இருப்பாளா என்றே சந்தேகம். கோபத்தை கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் குளியலறைக்கு சென்றவன் உடையுடனேயே தலையில் நீர் பட நிறைய நேரம் shower க்கு கீழே நின்றான்.

கோபத்தை குறைக்க பயிற்சி பெற்றவனால் அவனின் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் தவித்தான். சாந்த சொரூபியானவர்களுக்கே இவ்வாறான வார்த்தைகள் இல்லாத கோபத்தை உருவாக்கி விடும்.. ஆத்ரேயனோ கோபத்துக்கு பெயர் போனவன். நீரினால் கூட அவனின் கோபத்தை தணிக்க முடியவில்லை. வெளியே வந்தவன் உடை மாற்றிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான். அவன் செல்வதை சமயலறையில் ஒளிந்து நின்று பார்த்தவளுக்கு அவனின் வேக நடையே கோபத்தின் அளவை பறை சாற்றியது.

விளைவை யோசிக்காமல் பேசி விட்டு வந்தவளுக்கு மனம் பாரமாக இருந்தது. அவனை நினைத்து பயமாகவும் இருந்தது. மாலதி

கார்த்திகேயனை மீறி எதுவும் நடக்காது என்ற தைரியத்தில் அவ்வீட்டில் வலம் வந்தாள். மன பாரம் குறையாமல் இருக்க கதை புத்தகம் ஒன்றை எடுத்து வாசிக்க தொடங்கினாள்.

வீட்டை விட்டு வந்தவனுக்கு அவள் பேசிய வார்த்தைகள் மட்டுமே தலையில் ஓடி கொண்டிருந்தது. மனதை சாந்த படுத்த பூங்கா, கடற்கரை என்று எல்லா இடமும் காரில் சுற்றியவன் அதுவரை பன்னிரண்டு சிகெரெட்களை ஊதி தள்ளி இருந்தான். அப்போவும் மனம் கேட்காமல் காரை pub க்குள் விட்டான்.

கவலையை மறக்க குடிப்பதாய் நினைத்து கவலையையும் கோபத்தையும் அதிகரித்து கொள்கின்றனர் நம்மூர் ஆண்கள். அதுக்கு அவன் மட்டும் விதிவிலக்கா என்ன? போதை ஏற ஏற கோபம் இறங்குவதத்திற்கு பதில் அவளை பழி வாங்க வேண்டுமென்ற வன்மமே அவன் மனதில் உருவானது. கண்கள் சிவக்க போதையுடன் வீட்டை அடைந்தவன் யாரையும் பார்க்காமல்

மாடியேறி விறு விறுவென மேலே போனான்.

தான் கதைத்த கதையின் வீரியத்தை நினைத்து ஏற்கனவே பயந்தபடி இருந்தவள் கதவு தட்டும் சத்தம் கேட்டு எழும்பி கதவை திறந்தாள்.. சிவந்த கண்களுடனும் கலைக்கப்பட்ட தலையுடனும் மதுவும் சிகெரெட்டே உம் கலந்த நெடியிடனும் வந்தவனை பார்க்க வைஷ்ணவிக்கு கிலி ஏற்பட்டது..

அத்தை மாமா இருக்கும் போது ஒன்றும் செய்யமாட்டான் என்ற தைரியத்தில் கதவை திறந்து விட்டு அவனை பார்க்காமல் விறு விறுவென கட்டிலை நோக்கி நடந்தாள். சேர்த்து வைத்திருந்த கோபம் மேலிட தாவி சென்று அவளுடைய சட்டையை பிடித்து இழுத்ததில் இரவு உடையின் ஒரு துண்டு கிழிந்து அவன் கையுடன் வந்தது. திடுக்கிட்டு திரும்பியவள் " என்ன பண்றீங்க?? " என்ற கேட்டது தான் தாமதம் அவளை கட்டிலில் தள்ளி அவள் மேல் விழுந்தவன் அவளது இதழ்களை சிறை செய்திருந்தான்..

சிகெரெட் நெடி மது நெடி இரண்டும் சேர்ந்ததால் அவளுக்கு குமட்டி கொண்டு வந்தது.. மென்மையாக இதழை கவ்வியவன் அவளின் வார்த்தைகள் நினைவு வர அவளை மிக மிக வன்மையை கையாண்டான்.. அவனின் வன்மையான தாக்குதலில் திக்கி திணறியவள் முடிந்தளவு தன்னை அவனிடமிருந்து காப்பாற்ற போராடினாள் .. திடகாத்திரமான ஆண்மகனிடமிருந்து விடுபட அவள் செய்த போராட்டம் தோல்வியிலேயே முடிந்தது.. " ப்ளீஸ் என விடுங்க.. நான் பேசினது தப்பு தான் என்ன மன்னிச்சிருங்க.. ஒரு பெண்ணோட விருப்பமில்லாம பலாத்காரம் பண்றது தப்பு.. " என்று மனம் வெம்ப அவனிடம் காலில் விழாத குறையாக கை கூப்பி மன்றாடினாள்

அவளின் கதறலால் கோபமடைந்தவன் கன்னத்தில் இறுக்கி ஒரு அறையை விட்டபடி " நீ தானேடி கேட்டா நான் ஆம்பிளையா என்று அதை நான் நிரூபிக்க வேணாமா??? " என்று வன்மையாக உரைத்தவன் அதே வன்மையுடன்

அவளில் தன் தேடலை தொடங்கினான்

வலி பொறுக்க முடியாமல் கதறியவளின் இதழ்களை தன் இதழ்களால் அடக்கி சத்தம் வெளி வராமல் செய்தவனுக்கு, தெம்பில்லாமல் இருந்த அவளை அடக்கி ஆள்வது பெரிய விடயமாக தெரியவில்லை. அவள் கனவு ஆசை எல்லாம் ஒரு நொடியில் சிதைந்து போனது.

அப்போது கூட தன்னை பற்றி மட்டும் யோசிக்காமல் "என்னாலேயே இந்த வலியை தாங்க முடியவில்லையே அந்த பிஞ்சு குழந்தைகளை காமுகர்கள் துவம்சம் செய்யும் பொது அந்த குழந்தைகள் என பாடு பட்டிருக்கும்" என்று நினைத்து அவர்களுக்காகவும் சேர்த்து கண்ணீர் விட்டாள்.

எப்படி தொடங்க வேண்டிய தாம்பத்யம் அவளின் எதிர்பார்ப்பு அனைத்தையும் தவிடு பொடியாகிவிட்டு சேற்றில் மலர்ந்தது. அவள் உடல் முழுதும் காயப்படுத்தி விட்டு எழுந்தவனுக்கு அதுவும் திருப்தியில்லாமல்

போக மேசையிலிருந்த தனது purse இலிருந்து காசை எடுத்தவன் அவள் முகத்தில் வீசி எறிந்துவிட்டு " என்னை பொறுத்த வரைக்கும் நீ விபச்சாரி தான் " என்ற நா கூசாமல் வன்மமாக உரைத்தவன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான். அவளுக்கு யாரோ தன்னை உயிருடன் ஈட்டியால் குத்துவது போன்ற வலி ஏற்றப்பட்டது.. உடல் வலி மனா வலி இரண்டும் சேர்ந்து எழ முடியாமல் மனதுக்குள்ளேயே மரணித்து போனாள் . குளித்து விட்டு வெளியே வந்தவன் அதே இடத்தில அவள் எழாமல் அப்படியே இருப்பதை கண்டு " நீ இருக்கும் தோரணையை பார்த்தால் இன்னொரு முறை என்னை கூப்பிடுற போலவே இருக்கு " என்று சொன்னவன் அறையை விட்டு வெளியேறினான்.

காலையிலிருந்து அவன் மனதில் கொழுந்து விட்டு எரிந்த நெருப்பு இப்போது தான் அணைந்தது. அவள் வலியில் சந்தோசம் காணும் கொடூரனாய் மாறி போனான். அவன் கொன்று புதைத்து அவனின் காதலுடன் சேர்த்து அவளின்

காதலையும் தான்.

எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றுவது போல் செந்தணலை அவள் மீது வாயால் வாரி இறைத்து விட்டு போயிருந்தான். பதறி எழுந்தவள் நடக்கவே முடியாமல் குளியலறைக்கு சென்று தன்னை கண்ணாடியில் பார்த்தாள் .. அவன் அறைந்ததால் கன்னம் வீங்கியும் உதட்டில் இருந்து ரத்தம் கசிய உடல் முழுதும் கன்றியும் வீங்கியும் இருந்தது. வெறி நாய் கடித்தது போல் அவளை குதறி இருந்தான்.

மனசாட்சி கிலோ என விலை என்று கேட்கும் ரகமாகி போனான் அவன் . குளிக்க shower ஐ திறந்தவளின் காயங்களில் தண்ணீர் பட அவ்வலியை தங்க முடியாமல் கண்ணீர் விட்டாள். ஒரு பறவையின் இறக்கையை உடைத்ததை அறியாதவன் தனது வேலைகளில் மூழ்கி போனான்.

காதல் மலரும்.....

யுகம்-17

குளித்து விட்டு வந்தவளுக்கு உடலெல்லாம் வலி எடுத்தது. சுற்றி அனைவரும் இருந்தும் கணவனின் ஆதரவு இல்லாததால் அநாதை போன்ற உணர்வே மேலோங்கி இருந்தது. நடந்ததை எல்லாரிடமும் சொல்லி அவனுக்கு தண்டனை வாங்கி கொடுக்க மனம் நினைத்தாலும் அந்தரங்க விஷயங்களை பகிர்ந்து கொள்ள அந்த பெண் மனம் இடமளிக்கவில்லை. உடை கூட அணிய அவள் உடலில் உள்ள காயங்கள் இடம் கொடுக்கவில்லை. கஷ்டப்பட்டு உடையை அணிந்தவளுக்கு உடல்வலியை விட அவன் காசை தூக்கி எறிந்து சொன்ன வார்த்தைகள் மன வலியை கூட்டியது.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தவளுக்கு அவனுடைய அறையில் இருப்பது அருவருப்பாக இருக்க, காற்று வாங்க balcony க்கு வந்து நின்றாள். கீழே சென்றால் அவள் முகத்தை பார்த்து மாலதி கேள்வி கேட்பார் என்ற

பயத்தால் அவள் கீழ் செல்ல யோசிக்கவில்லை.

மாலதி ஆத்ரேயனிடம் வைஷ்ணவியை பற்றி விசாரிக்க "அவளுக்கு பசிக்கவில்லையாம். தூங்கி விட்டாள் " என்று வாய் கூசாமல் பொய் சொன்னவன் சாப்பிட்டு விட்டு நெஞ்சத்தில் கொஞ்சம் கூட குற்ற உணர்ச்சியோ ஈரமோ இல்லாதவனாக அறைக்குள் புகுந்து கொண்டான் . அவனை பொறுத்தவரைக்கும் அவள் பேசியத்துக்கான தண்டனை இது என்று வன்மமாக நினைத்து கொண்டான்.

நீண்ட நேரம் யோசித்தவளுக்கு அவனை விட்டு பிரிவதை தவிர எந்த முடிவும் எடுக்க தெரியவில்லை.

நேரே சென்றாள் ஆத்ரேயானின் அறைக்கு..

அவனோ கவலை இல்லாமல் பாட்டு கேட்டு கொண்டிருந்தான்.. அவனை பொறுத்தவரை அவள் கதைத்ததற்கு தண்டனை கொடுத்து விட்டான். அதற்கு மேல் அவன் யோசிக்கவும்

இல்லை யோசிக்க விரும்பவும் இல்லை. அறைக்குள் வந்தவள் நீண்ட நேரம் தன்னை வெறித்து நோக்குவதை உணர்ந்தவன் நிமிர்ந்து புருவத்தை உயர்த்தி என்ன என்று கேட்டான்.

அவனின் பார்வைக்காக காத்திருந்தவள் எந்த தாலியை கழட்டுவதத்திற்கு அவள் தயங்கினாலோ அதே தாலியை ஒரு கணத்தில் கழட்டி மேசையில் வைத்தவள் " நீங்க சொன்ன போல divorce க்கு apply பண்ணுங்க.. உங்களுக்கு பிடிச்ச போல அழகான பொண்ண பார்த்து கல்யாணம் பண்ணலாம் ... எனக்கு உங்களோட வாழ இஷ்டமில்லை.. " என்றாள் உணர்ச்சிகளை துடைத்த குரலில்.

அவள் தாலியை கழட்டியதில் சற்று அதிர்ந்தவன் உடனே சுதாகரித்து கொண்டு " என்ன பேபி பண்றது.. நீ சொன்னதுக்கு எதிரா தான் எனக்கு எல்லாம் செய்யணும் போல இருக்கு.. இப்போ எனக்கு உன் கூடவே வாழணும் போல இருக்கே.... என்ன பண்ணலாம்?? " என்று கண் சிமிட்டி கேட்டான். அவன் குரலில் காதல்

இல்லை கேலி மட்டுமே நிறைந்திருந்தது.

அவளை நோக்கி அழுத்தமான காலடிகளுடன் நடந்தவனை பார்த்தவளுக்கு இதயம் நின்று துடித்தது.. "மறுபடியுமா?" என்று வலியோடு நினைத்தவள், பின்னால் நகர்ந்து சென்றதில் சுவற்றில் மோதி நின்றாள். அவள் முகத்தை உற்று பார்த்தவனுக்கு அவளின் மருண்ட விழியும் அழுதழுது வீங்கிய கண்களும் அறைந்தால் தடித்த கன்னமும் அவனுக்கு அவன் மனதின் இரும்பு திரையை உடைத்து இனம் புரியாத வலியை கொடுக்க அவளை மென்மையாக கையாள நினைத்தான். அவள் பேசிய வார்த்தைக்கு பதிலாக அவளை மனபங்கப்படுத்தி கேவலமாக பேசி அவனின் கோபத்தை தணித்து கொண்டவனுக்கு அவளிடம் இனி வன்மையாக நடப்பதை பற்றி யோசிக்க கூட முடியவில்லை.

அருகில் வந்தவன் மென்மையாக அவள் கன்னத்தை தடவினான். சிறிது வலி ஏற்பட்ட போதும் பல்லை கடித்து பொறுத்து கொண்டாள்.

" உன்ன யாரு தேவையில்லாம பேச சொன்னது?? இங்கே பாரு உனக்கு தான் சேதாரம் " என கவலை தோய்ந்த குரலில் கூறினான். அவளின் கன்னத்தில் அறைந்த தடத்தை பார்த்தவனிடம் கோபம் முழுமையாக நீங்கி காயப்பட்டவளின் மேல் பரிதாபம் மட்டுமே எஞ்சி இருந்தது. தான் இவ்வளவு கொடூரமாக நடந்தும் , அவள் தன்னுடன் மென்மையாக நடப்பதை நினைத்து அவன் வியந்தான். அவளுக்கு தன் மீதான காதலை அப்போது தான் அறிந்து கொண்டான்.

அவளின் வலியை குறைக்க வேன்றுமென்ற அவா எழ முத்தத்தால் அவள் காயத்தை ஆற்றுவதற்காக அவளை நெருங்கி அவளை நோக்கி குனித்தவனின் உதடுகளில் கை வைத்து தடுத்தவள் "உங்க கிட்ட கொஞ்சம் பேசணும் " என்றாள் . அவளை விட்டு சற்று விலகி நின்று கைகளை காட்டியபடி நின்றவன் "பேசு" என்று சைகை செய்தான். அவனுக்கு தன் மேல் காதல் இருக்கிறதா இல்லையா என்று தெரியாத பாவையவளுக்கு அதையாவது கடைசியாக

அறிந்து விட வேண்டும் என்று உள்ளம் துடித்தது.

சற்று நேரம் யோசித்தவள். " நீங்க என காதலிக்கிறிங்களா??? " என்று உணர்ச்சி துடைத்த முகத்துடன் கேட்டாள். அவன் நேரடியான இந்த கேள்வியை எதிர் பார்க்கவில்லை தான் ..மீண்டும் மீண்டும் யோசித்தவனுக்கு அவள் மீது காதல் உள்ளதா இல்லையா என்று அறிந்து கொள்ள முடியவில்லை. அவள் மீது சில நேரம் ஏற்படும் ஈர்ப்புக்கு என்ன பெயர் என்று அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை சிறிது நேரம் யோசித்தவன் " இல்லை " என்று தலையை மட்டும் ஆட்டியபடி அவளை கூர்ந்து நோக்கினான். அவனே உணராத காதலை அவன் எவ்வாறு அவளுக்கு உணர்த்துவான்? அவளுக்காக இல்லாத காதலை ஏற்க அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. அவனது பார்வையில் கோபமோ பழி உணர்ச்சியோ இல்லை. அவள் மீதான பரிதாபம் மட்டுமே இருந்தது.

அவனின் இல்லை என்ற வார்த்தை அவளை

உயிருடன் புதைத்தது. அவன் கோபத்தில்தான் தன்னை விபச்சாரி என்றழைத்தான் எனவும் அவனுக்கு தன் மீது கொஞ்சமாவது காதல் இருக்கும் எனவும் நிதானத்தில் அவன் அதை ஏற்று கொள்வான் என்றும் நப்பாசையில் இருந்தவளுக்கு, அவன் தன்னை உண்மையாகவே விபச்சாரியாக நினைத்து இருக்கிறான் என்ற செய்தியால் மனமுடைந்து போனாள்.

அவளின் மன அழுத்தத்தால் மூளை தாறுமாறாக சிந்திக்க தொடங்கியது. "செத்துவிட்டால் என்ன " என்று யோசித்தாள். ஒரு மனிதனுக்கு தற்கொலை எண்ணம் நீடிப்பது ஒரு சில நிமிடங்களுக்கு மாத்திரமே.. அந்த நிமிடத்தை கூட இருப்பவர்கள் ஆறுதலை அளித்து கடத்தி விட்டால் அவ்வெண்ணெம் மீண்டும் உருவெடுக்காது. வைஷ்ணவிக்கு அந்நிமிடத்தை ஆறுதலாக மாற்ற கூட யாரும் இருக்கவில்லை. கண்ணீர் பெருக்கெடுக்க கோபத்துடன் அவனை முறைத்தவள்.

" அப்போ உங்களுக்கு தேவை என் உடல் மட்டும் தான் .....நீங்கள் சொன்னது போல் நான் விபச்சாரி தான் " என்று அகங்காரமாக கத்தியவளின் நடவடிக்கை அவனுக்கு சரியாக படவில்லை..

எதோ தப்பாக தோன்ற கண நேரத்தில் அவனை தள்ளிவிட்டு விறு விறு வென சென்றவள் மேசையிலிருந்த தண்ணீர் போத்தலை சுவற்றில் அடித்து உடைத்து உடைந்த கண்ணாடி துண்டால் தான் மணிக்கட்டை கிழித்த படி " இப்போ என் உயிர் போயிரும்.. என் உடலை வைத்து என வேணுமென்றாலும் செய்து கொள்ளுங்க " என்று சீறினாள்.

ரத்தத்தை கண்டு பதறியவன் " உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு "என்றபடி அருகில் ஓடியவன், ஏற்கனவே ஏற்பட்ட தாக்கத்தாலும் சாப்பிடாததாலும் ரத்தம் பீறிட்டு வழிய கண்கள் செருகி மயக்கமுற்றவளை கைகளில் தங்கினான்.

அவன் மனதில் இனம் புரியாத வலி சூழ்ந்தது..

என்ன செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் சிந்தித்தவன்.. பின்பு சுதாகரித்து கொண்டு அவளை குழந்தை போல் தூக்கியபடி கீழே இறங்கினான்..

ரத்தம் சொட்ட சொட்ட மருமகளை தூக்கி வந்த மகனை பார்த்த மாலதி பதறி போனாள். இதே நிலையில் அவள் இருவரையும் இரண்டாம் தடவை பார்க்கிறாள். அனால் அவளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை முதல் முறை உயிரை காப்பாற்றிய மகன் தான் இரண்டாம் முறை அவள் உயிரை குடித்து கொண்டிருக்கிறான் என்று..

" என்னாச்சுடா ?? " என்று பின்னால் வந்த தாயை சட்டை செய்யாமல் அவளை தூக்கி கொண்டு

காரின் பக்கத்து சீட்டில் படுக்க வைத்து அவளுக்கு seat belt ஐ மாற்றியவன் காரை எடுத்து கொண்டு வைத்தியசாலையை நோக்கி விரைந்தான். ஒரு கையால் காரை ஒட்டியவனின் மறு கை அவனையும்

அறியாமலே அவளது தலையை வருடியபடி இருந்தது.

Emergency unit இல் அவளை ஒப்படைத்து விட்டு வெளியே காத்திருந்தவனுக்கு அவன் மேலேயே கோபம் வந்தது.. "ஷிட் ஷீட் ஷிட் " என்று கூறியபடி சுவரில் தனது முஷ்டியை வேகமாக குத்தினான். அவன் கையில் சுவரிலிருந்த ஆணி குத்தி ரத்தம் வழிந்த போதும் அவனால் உடல் வலியை உணரமுடியாத அளவு மனவலி மிகுந்திருந்தது.

கார்த்திகேயன் வர தாமதமானதால் கோகிலாவும் மலர்வேந்தனும் மாலதியும் அங்கே வந்து சேர்ந்தனர்.. கையில் ரத்தம் சொட்ட வெளியிலிருந்த கதிரையில் தொய்ந்து அமர்ந்தான்.

" என் பொண்ணுக்கு என்னாச்சு ... ?? " என்று பதறியபடி மலர்வீந்தன் ஆத்ரேயனின் சட்டையை பிடித்திருந்தார். ஒரு தந்தையின் கதறல் அது.

முதன் முறை அவன் தனக்குள் நொறுங்கி போனான்.. தன் மேல் இதுவரை காலமும் நம்பிக்கை வைத்து தன் மகளையே கல்யாணம் பண்ணி தந்த ஜீவன் அவர். அவருக்கு கூட தன்னால் உண்மையாக இருக்க முடியவில்லை என்ற குற்றவுணர்ச்சி அவனை தளர செய்தது. தலை குனிந்து நின்றவன் கலங்கிய கண்களுடனும் குற்ற உணர்வுமாக மலர்வேந்தனை பார்த்த பார்வையில் என்ன உணர்ந்தாரோ தெரியவில்லை அவன் சட்டையிலிருந்து கையை எடுத்தவர் " என்னாச்சு ? " என்று நிதானமாக கேட்டார்.

எந்த பதிலும் சொல்லாமல் அவள் உயிர் பிழைப்பாளா இல்லையா என்று பதறி கொண்டிருந்தவனிடம் உள்ளே இருந்து வந்த டாக்டர் " வைஷ்ணவியோட கணவர் மட்டும் உள்ளே வாங்க " என்று அவனை உள்ளே அழைத்து சென்றார்.

சர்வநாடியும் ஒடுங்கியபடி தளர்ந்த நடையுடன்

உள்ளே சென்றவனுக்கு கண் மூடி படுத்திருந்த அவள் முகம் சற்று நிம்மதியை கொடுத்தது. " நல்ல நேரம் கீறல் ஆழமாக போகவில்லை.. அப்படி இருந்திருந்தால் இவங்களை காப்பாற்றி இருக்கவே முடியாது.. " என்று அவனை முதலில் அசுவாசப்படுத்திய டாக்டர் குரலில் சற்று கோபத்தை தேக்கி " ஏன் Mr உங்களுக்கு கொஞ்சம் கூட மனிதாபிமானம் இல்லையா ??? ஒரு பொண்ண இப்படி தான் treat பண்ணுவீங்களா ?? " என்று கேட்டார்.

அவர் எதை பற்றி பேசுகிறார் என்று முதலில் புரியாதவன் அவரை சந்தேகமாக பார்க்க " இங்கே வாங்க " என்று அழைத்து சென்றவர், அவளின் ஆடையை விலக்கி காட்டினார்.

அவளின் கழுத்து மார்பு வயிறு என அனைத்து இடங்களும் கண்டறியும் சிவந்தும் பற்கள் தடத்துடன் காயமாகி இருந்ததை பார்த்து அதிர்ந்தவன் முதன்முறை " நான் ஏன் இப்படி மிருகமாகி போனேன் " என்று மனதுக்குள் வருந்தினான்.

அவன் கண்களில் உருண்டோடிய கண்ணீர் அவள் காயங்களில் பட அவள் முகமோ வலியில் சுருங்கியது.
உடனே கண்களை துடைத்தவனிடம் " இதற்கும் சேர்த்து தான் treatment கொடுத்திருக்கிறோம்... பெண் என்றால் பூ மாதிரி சார் அவள் மனமும் மேன்மை உடலும் மேன்மை.. உங்க இரண்டு பேருக்கும் என்ன problem என்று எனக்கு தெரியல ஆனா ஒரு பெண்ணை இப்படி வருத்துபவன் உண்மையான கணவனே இல்லை.. உங்க மனசில கொஞ்சம் கூட மேன்மையே இல்லையா?" என்று கேட்டார் . அவரும் பெண்ணல்லவா?

மேலும் அவர் " இது rape அண்ட் suicide case wife ஆக இருந்தா கூட அவங்க விருப்பமில்லாம அவங்கள தொடுறதும் அவங்கள காயப்படுத்துறதும் சட்டப்படி தப்பு. முறைப்படி police க்கு நான் inform பண்ணனும் ஆனா உங்க wife கெஞ்சி கேட்டதால தான் நான் action எடுக்காம விட்டேன்". என்றார். அவரின் இந்த மிரட்டல்

அவனுக்கு கோபத்தை கிளற "action எடுத்தாலும் I am ready to face " என்றான் திமிராக. இவனெல்லாம் மனுஷனா என்ற பார்வை பார்த்துவிட்டு அவர் வெளியேறினார். அவனை மிரட்ட யாராலும் முடியுமா? அன்புக்கு அடிபணிந்தாலும் அதிகாரத்துக்கு அவன் அடிபணிய போவதில்லை என்று அந்த டாக்டருக்கு தெரியவில்லை.

அவளருகே வந்தவன் அவளின் காயங்களை கண்வெட்டாமல் பார்த்து கொண்டிருந்தான். அந்நேரம் பார்த்து கண்விழித்த வைஷ்ணவி தனது உடை முழுதாக விலகி இருக்க அவன் தன்னை கண்வெட்டாமல் பார்த்து கொண்டிருப்பதை பார்த்து பதறியவள் பக்கத்தில் கிடந்த bed sheet ஐ எடுத்து தன் மீது போட்டுகொண்டாள். போட்டதில் வலி ஏற்பட "ஸ்... ஆ... " என்று முகத்தை சுருக்கி சிணுங்கினாள்.

"இதுக்கு மட்டும் குறைச்சல் இல்லை" என்று மனதில் நினைத்து பெருமூச்சு விட்டவாறு உணர்ச்சியை துடைத்த முகத்துடன் வெளியில்

வந்தவனிடம் ஆளாளுக்கு விசாரிக்க " she is fine " என்ற ஒற்றை வார்த்தையில் எல்லாரையும் அடக்கியவன் மேல் எதுவும் பேசாமல் வெளியேறி விட்டான். அவனை தூண்டி துருவ யாருக்கும் தைரியம் இல்லாததால் அனைவரும் வாய் மூடி இருந்தனர்.

உள்ளே வந்த அனைவரும் தூண்டி துருவி விசாரித்த போதும் கூட அவளிடம் மௌனமே பதிலாக வந்தது. " ரொம்ப அழுத்தக்காரி " என்று மாலதி திட்டிய போதும் அவள் வாய் திறந்தாளில்லை . ஆத்ரேயனை பற்றி அவள் மூச்சு கூட விடவில்லை.

சில மணி நேரம் களைத்து கார்த்திகேயனும் அவ்விடத்தில் வந்து சேர்ந்தார். " எங்க அந்த ராஸ்கல் " இன்று கர்ஜித்தவரை அடக்க எல்லாருக்கும் பெரும் பாடாய் பொய் விட்டது.

அந்நேரம் பார்த்து உள்ளே வந்த டாக்டர் "கொஞ்சம் அவரை disturb பண்ணவேண்டாம்" என்று கூறி அனைவரையும் சற்று நேரம்

வெளியே இருக்க சொன்னார்.

மனோ தத்துவத்திலும் தேர்ச்சி பெற்ற அவர் அவள் உடல் நிலையை பற்றி வினவிய பின் "நீங்க போலீஸ் complaint கொடுக்க விரும்பலையா ??? " என்று மறுபடி கேட்க.. "இல்ல டாக்டர்... thank you for your concern. ஆனால் இதெல்லாம் வேணாம் please " என்றவள் மேலும் இந்த விஷயத்தை தன் குடும்பத்தாரிடம் சொல்ல வேண்டாம் எனவும் கெஞ்சியவளை பார்த்தவர். " தாலி செண்டிமெண்ட் ஆ... நம்ம ஒரு பொண்ணுங்களுக்கே அது தான் weak point ... புருஷன் என்று பார்த்து பார்த்து அவங்க படுத்துற எல்லா கொடுமைகளையும் மறச்சு வாழுறாங்க .. ஆனா அந்த மிருகங்களுக்கு பொண்ணுங்களோட அருமை விளங்காது,.. சரி அதை விடும்மா,.,,அது உன் விருப்பம்.. ஆனால் எதுக்காக நீ சாகனும்?அவனுக்காக நீ வாழ தேவையில்லை.. உன் மீது உண்மையான பாசம் வச்சிருக்கும் உன் அம்மா அப்பாவுக்காக நீ வாழ்ந்து கட்டணும்...உன்னை கேவல படுத்தும் எவனுக்காகவும் நீ வாழ தேவையில்லை

உனக்காக மட்டுமே வாழ். " என்று அவள் இன்னொரு முறை தற்கொலைக்கு முயலாமல் இருக்க கூடியவாறு அறிவுரைகளை சூசகமாக வழங்கினார்.

அவரின் அறிவுரைகள் அவளுக்கு புது தெம்பளிக்க அவரை பார்த்து "கண்டிப்பா இனி suicide க்கு try பண்ண மாட்டேன் டாக்டர் " என்று சிரித்தபடி கூறினாள்.

அவள் கூறியது நிம்மதியளிக்க வெளியில் வந்தவர் அவள் முழுதாக குணமாகும் வரையும் வைத்தியசாலையிலேயே இருக்க வேண்டும் என கூற கோகிலாவும் மலர்வேந்தனும் அவளுடன் தங்கி விட கார்த்திகேயனும் மாலதியும் வீட்டுக்கு வந்தனர்.

விஷயம் கேள்விப்பட்டு ஆத்ரேயனை தொடர்பு கொள்ள முனைந்த ஆதியால் கூட அவனை தொடர்பு கொள்ள முடியவில்லை..

வைத்தியசாலையில் இருந்து நேரே சென்றவன்

அவனுடைய guest house க்கு. உடைகளை களைந்தவன்.. நடு ராத்திரி என்றும் பாராமல் அங்கே இருக்கும் நீச்சல் தடாகத்தில் பாய்ந்து தன் மனம் அமைதியடையும் வரை குளிர்ந்த நீரில் நீந்தினான்..

தனது மன பாரங்களை உடல் களைப்பால் மறக்கும் வரை நீந்தியவன் ஒரு மணி நேரம் கழித்து வெளியே வந்தான். அந்த குளிர்ந்த நீரில் இருந்தும் கூட அவனது மனதில் உள்ள வெம்மை தீரவில்லை. தன்னால் ஏன் அவளை முழுமையாக காதலிக்க முடியவில்லை ... அதே நேரம் ஏன் அவளை விட்டு முழுமையாக விலகவும் முடியவில்லை என்று யோசித்தவனுக்கு தன் மீது மட்டுமே கோபம் இருந்தது. காதலுக்கும் ஈகோவுக்கும் இடையில் இருந்து அவன் மனம் தத்தளித்து கொண்டிருந்தது. வீட்டுக்கு போக மனமில்லாமல் தொலைபேசியை அணைத்து வைத்தவன் அங்கேயே தூங்கி போனான்.

மாலதி வீட்டில் அவனை நினைத்து பதற " உன்

பையன் ஒன்றும் செத்து போக மாட்டான்.. சுத்தி இருக்கிற நம் எல்லாரையும் கொன்று புதைச்சிட்டு தான் அவன் செத்து போவான்.. " என்று மாலதிக்கும் சேர்த்து திட்டி கொண்டிருந்தார்..

மாலதியோ மனசுக்குள் " இந்த மனிசன் வேற நேரம் காலம் தெரியாம அபசகுனமா பேசிகிட்டு " என்று வெளியே கூற முடியாததை மனதுக்குள் போட்டு மறுக்கியவர் வாசலுக்கும் வீட்டுக்கும் நன்கு தடவை நடந்து விட்டார்.

தூங்கி எழுந்தவனின் மனம் கொஞ்சம் நிம்மதியடைய காரை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு புறப்பட்டான்.

வீட்டுக்கு வந்தவனிடம் கார்த்திகேயன் " அந்த பொண்ணு வாய் திறக்காததால் நீ தப்பிட்ட .. இல்லாவிட்டால் நடந்திருப்பதே வேற " என்று சிம்ம குரலில் கர்ஜித்தார்.

அவரின் மிரட்டலில் அவனின் ஈகோ

வெகுண்டெழ அவரை ஏளனமாக பார்த்தவன் "சொல்லி இருந்தா போல என்ன செஞ்சிருப்பீங்க? அவள் என்ன சொல்றது நானே சொல்றன் அவ suicide க்கு try பண்ண நான் தான் காரணம் " என்று நெஞ்சை நிமிர்த்தி கொண்டு சொல்லிவிட்டு விறு விறு வென மாடியேறி போனான்

அது கார்த்திகேயனுக்கு கோபத்தை எகிற விட " பார்த்தியடி உன் மகனுக்கு இளக்காரத்தை... அவனை " என்று கர்ஜித்தவர் மனைவியின் விழிகளில் தெரிந்த கண்ணீரிலும் கெஞ்சலிலும் அடங்கி போனார்.

அதற்கு பிறகு ஆத்ரேயன் வைஷ்ணவியை பார்க்க செல்லவில்லை. அவளும் கொஞ்சம் மனம் தேறி இருந்தாள். கல்யாணம் கணவன் மட்டும் வாழ்க்கை இல்லை.. வாழ்க்கையில் நிறைய சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் புதிதாக பிறந்தாள். அதற்கு அந்த டாக்டரின் அறிவுரைகளும் காரணம்.

அவள் discharge ஆகும் நாளில் அவளை பார்க்க

வைத்தியசாலைக்கு வந்திருந்தான். அவனை கண்டதும் கோகிலாவும் மலர்வேந்தனும் வெளியேறி விட பக்கத்தில் இருந்த கதிரையை இழுத்து போட்டு அவளை நெருங்கி உட்கார்ந்தவன் அவளை ஊடுருவ பார்த்தான்.

" எதுக்காக இப்படி பார்க்கிறான் பாவி.. என்ன சாகவும் விடுறானில்ல வாழவும் விடுறானில்ல " என்று மனதால் அவனை அர்ச்சித்து கொட்டியபடி அவனின் பார்வை வீச்சை தாங்க முடியாமல் குனிந்து இருந்தாள்.

அவள் முன் சொடக்கிட்டவன், " உனக்கு என்ன வேணும்??? " என்று கேட்டான். நிமிர்ந்தவள் " விவாகரத்து " என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தாள். அவளின் பதில் மனதை ஈட்டியால் குத்தினாலும் அதனை காட்டாமல் கடினமாகவே முகத்தை வைத்திருந்தான்.

" நீ கேட்டு தான் நான் தரணும் என்ற அவசியமில்லை... நான் ஏற்கனவே lawyer கிட்ட கொடுத்திட்டேன் ..he will proceed quickly " என்று

நெஞ்சை நிமிர்த்தி சொன்னவனை பார்க்க அவளுக்கு சினம் வீறு கொண்டு எழுந்தது.

" இந்த பாவி பயலுக்கு இந்த திமிர் மட்டும் குறையல... பாவம் போன போகுது என்று விட்டு வச்சா ரொம்ப தான் துள்ளுறான் .. இவன் உண்மையாவே மனுஷனா? இல்ல மிருகமா? மகனே உன்ன போலீஸ் ல புடிச்சு கொடுத்திருக்கணும்டி.. இப்போ இங்க இருந்து தெனாவெட்டா பேசிட்டு இருந்திருக்க மாட்ட ... இப்போ போலீஸ் ல கம்பி எண்ணி கொண்டு இருந்திருப்ப..செய்ற எல்லாத்தையும் செஞ்சிட்டு பேசுற பேச்ச பாரு.. " என்று மனதுக்குள் வெதும்பியவள் அவனை வெற்று பார்வை பார்த்து " உங்க உதவிக்கு ரொம்ப நன்றி " என்று கை கூப்பி சொன்னாள்.

அவளின் கேலி அவனுக்கு வித்தியாசமாக மட்டுமல்ல அவள் தன்னை விட்டு மனசளவில் விலகி சென்ற போலவும் இருக்க " இனி என்ன உத்தேசம் "என்று கேட்டான்.

" அது உங்களுக்கு தேவை இல்லாதது " என்று முகத்திலடித்தபடி சொல்லிவிட்டு அவனை கூர்ந்து பார்த்தபோது அவன் கண்கள் கோபத்தில் தீ பிழம்பாய் ஜொலித்ததை கண்டு அதிர்ந்தவள் " அடியே வைஷு வாய வச்சுக்கிட்டு நீ சும்மாவே இருக்க மாட்டியா .. உன் வாயில தான்டி உனக்கு சனி... என் கைய கிழிச்சதுக்கு பதிலா அவன் கைய கிழிச்சிருந்தா கூட இந்த படு பாவி கிட்ட மாட்டிட்டு முழிக்கிறதுக்கு பதிலா ஜெயிலில களி தின்னுட்டு சாந்தோஷமா இருந்திருக்கலாம்.. " என்று நினைத்தபடி பயத்தில் தலையை குனிந்து கொண்டிருந்தாள்.

அவளின் உதாசீனத்தால் வந்த கோபத்தை கட்டுப்படுத்த சிறிது நேரம் எடுத்தவன். சிறிது நேரம் கழித்து " அதுவும் சரி தான்... " என்றபடி எழுந்தவன் " காயம் ஆறிடுச்சா " என்று கேட்டான் . கையிலிருந்த காயத்தை பார்த்தவளிடம் " நான் அத கேட்கல " என்றவனின் கண்கள் அவள் கழுத்தில் பரிதாபமாக நிலை கொண்டு கீழிறங்கியது . " அப்போ எதை கேட்கிறான் " என்று யோசிக்கும் போதே அவனின் பரிதாப

பார்வை அதனை காட்டி கொடுக்க, அவனை உறுத்து விழித்தவள் " உன்ன போல மிருகத்துக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை... உன் நடிப்பை எல்லாம் வேற யார் கிட்டயும் வச்சுக்கோ leave me alone and get lost " என்று கண்ணீருடன் சீறினாள். அவளின் திடீர் கோபம் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தாலும் அதை வெளி காட்ட விரும்பாதவன் விறு விறுவென வெளியேறினான்.

அவனின் கோபத்தையும் திமிரையும் பொறுத்து கொண்டவளால் அவனின் அக்கறையை ஏற்றுக்கொள்ள முடியாது துடித்தாள். அவனின் அன்பு போலியாக தெரிந்தது. மீண்டும் அவனின் போலி நடிப்பில் வீழ்ந்து மனம் காயப்பட அவள் விரும்பவில்லை. எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்தை உருவாக்கும். அவள் எதிர்பார்ப்பில்லாமல் வாழ தொடங்கி இருந்தாள்.

அவனுடன் ஏட்டிக்கு போட்டி நின்றாலும் அவளுக்கு அவன் மேல் உள்ள ஈர்ப்பு போல

அவனின் நடவடிக்கையில் இருந்து அவனுக்கும் தன் மேல் ஈர்ப்பு இருக்கும் என எதிர்பார்த்தவளின் நம்பிக்கை போலியாகி போனதுடன் அவன் மிருகமாகி போனதையும் ஏற்று கொள்ள முடியாது தவித்தவள், இனி அவனின் நடிப்பை நம்புவதில்லை என்று முடிவெடுத்தாள்.

காதல் மலரும்.....

ஹாய் நண்பர்களே,..
உங்கள் கருத்துக்களை இங்கு பதிவு செய்யுங்கள்

<u>யுகம்-18</u>

வைத்திய சாலையிலிருந்து வந்தவள் ஆத்ரேயன் வீட்டுக்கு செல்லாமல் தனது வீட்டிலேயே முடங்கி போனாள். யாரும் அவளிடம் அதை பற்றி கேட்கவுமில்லை. சில நேரங்களில் அவனின் கோர முகம் நினைவு வந்து அவளை கொள்ளாமல் கொள்ளும்... அவன் தன் கணவனல்ல என்று நினைத்து மனதை திடப்படுத்த பழகி இருந்தாள்.

கல்லூரி செல்லும் நாளும் வந்தது. கல்லூரிக்கு போவதற்கு முதல் நாள் மாலதியிடமும் கார்த்திகேயனிடமும் சொல்லுவதற்காக கோகிலாவின் கட்டாயத்தின் பெயரில் ஆத்ரேயனின் வீட்டுக்கு வந்தாள். வந்தவள் இருவரிடமும் சொல்லி விட்டு வெளியேற போனாள். அந்நேரம் பார்த்து ஜோக்கிங் போய் களைத்த ஆத்ரேயனும் வீட்டுக்குள் நுழைந்தான். அவனை ஒரு கணம் கண்டு திகைத்தவள், காணாதது போல அவளை தாண்டி சென்றாள். அவள் செல்வதை வெறித்து பார்த்தவன் சொடக்கிட்டு அவளைஅழைத்தான். "இந்த நெட்டையன் எதுக்கு நம்மள கூப்பிடுறான் " என்று முணு முணுதவறே அவனை திரும்பி பார்த்தாள். "மேடம் என்கிட்ட சொல்லிட்டு போக மாட்டாங்களா " என்று கேலியாக கெட்டவனிடம் "மனசுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டும் தான் நான் சொல்லிட்டு போக வந்தேன் " என்று ஒரு வார்த்தையில் அவனை எட்ட நிறுத்தி விட்டு திரும்பி பார்க்காமல் தனது வீட்டுக்கு சென்றுவிட்டாள்.

அவளின் இந்த விலகல் அவனை நிலை குலைய செய்தது. அடித்திருந்தால் திரும்ப அடித்திருப்பான்.. திட்டி இருந்தால் அதற்கும் பதிலடி கொடுத்திருப்பான். ஆனால் வலிக்காத போல ஊசி ஏற்றுபவளுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் நின்றான்.

"போடி போ.. எத்தனை நாளைக்கு என்று நானும் பார்க்கிறேன் ,,, எப்படி இருந்தாலும் என்னட்ட தானே வரணும்..:அப்போ இருக்குடி உனக்கு." என்று திமிராக நினைத்தவன் தனது வேலையை பார்க்க சென்று விட்டான்.

கல்லூரிக்கு சென்றவள் ஆரம்பத்தில் மனதை ஒருநிலை படுத்த முடியாமல் தடுமாறினாள். ஒரு நாள் அவள் கழுத்தை அவதானித்த சந்தியா "எங்கடி தாலி?" என்று கேட்க "இவ ஒரு கேள்விக்கு பிறந்தவ" என்று மனதுக்குள் திட்டியவள் "அரிக்குது, என்று கழட்டி வச்சிட்டேன் " என்றவள் மறந்தும் சந்தியாவை பார்க்கவில்லை. அவளின் பதிலால்

ஆடிப்போனவள் அவளை சந்தேகமாக பார்த்தாள். சிறிது காலம் ஆத்ரேயன் நினைவால் கஷ்டப்பட்டவள், தனது நண்பர்கள் வட்டத்தை பெரிதாக்கினாள். அது அவளுக்கு ஆத்ரேயனின் நினைவை வரவிடாமல் செய்தது. பின்பு மனதை ஒரு நிலைப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்த தொடங்கினாள்.

அவள் சென்றதிலிருந்து ஆத்ரேயன் தனது வேலையில் மும்முரமாக ஈடுபட்டான். வைஷ்ணவியை முற்றாக மறந்திருந்தவன், ஒரு நாள் படுத்திருந்து பாட்டு கேட்டு கொண்டிருந்தான். அவனது play list இல் வைஷ்ணவி பாடும் போது அவன் யாருக்கும் தெரியாமல் record பண்ணிய பாடல் விழுந்தது." மழை வரும் அறிகுறி " என்று பாடும் அவள் குரலை கேட்டவன் அதில் மெய் மறந்து போனான். அந்த குரலின் ஏக்கம் அவனை குடிக்காமலே போதை கொள்ள செய்தது. விடாமல் அந்த பாடலை பத்து தடவைகளுக்கு மேல் கெட்டவனின் உள்ளம் அவளின் அருகாமைக்காக ஏங்க தொடங்கியது.

உன் கால் தடம் சென்ற வழி பார்த்து நானும் வந்தேனே

அது பாதியில் தொலைந்தடா

நான் கேட்டது அழகிய நேரங்கள்

யார் தந்தது விழிகளில் ஈரங்கள்?

நான் கேட்டது வானவில் மாயங்கள்

யார் தந்தது வழிகளில் காயங்கள்?

இந்தக் காதலும் ஒரு வகை சித்ரவதைதானே

அது உயிருடன் எரிக்குதடா

இந்த வரிகளை திரும்ப திரும்ப கேட்டவன் அதனை அவள் தனக்காகவே பாடியது போல் உணர்ந்தான். அந்த சந்தர்ப்பத்தில் தான் அவன் அவளின் காதலுடன் சேர்த்து தன் காதலையும்

உணர்ந்தான். அவளை முதன்முதலில் ரத்த வெள்ளத்தில் பார்த்தது முதல் கடைசியாக வைத்தியசாலையில் பார்த்தது வரை ஒவ்வொன்றாக நினைவு வந்து கொள்ளாமல் கொன்றது. என்ன செய்வதென்று தெரியாமல் தலையை பிடித்தவாறு சிறிது நேரம் அமர்ந்திருந்தவனுக்கு "இது தான் காதலடா " என்று மனசாட்சி அடித்து கூறியது.

அவளை காயப்படுத்தியதை நினைத்து அவனுக்குள்ளேயே மருகி போனான். உண்மையான அன்பை இழந்து விட்ட வலியை உணர்ந்தான். அவளுடன் பேச வேண்டுமென மனம் துடிக்க அவளுக்கு அழைத்தான். ஆனால் அவளோ அவன் தொலைபேசி எண்ணை தடை செய்து வைத்திருந்தாள். அவளின் உதாசீனம் மறுபடி அவனின் ஈகோவை தட்டி எழுப்ப.. "நீ என்னடி bock பண்றது..நான் உன்னை block பண்ணுறன் பார்" என்றவாறே அவளின் நம்பரை தடை செய்தான்.

அவளின் நினைவு தினம் தினம் வாட்ட

அதற்காகவே அவன் ஓய்வில்லாமல் உழைக்க தொடங்கினான். ஓய்வு நேரங்களில் அவளின் அணைப்புக்காக ஏங்கி ஏங்கி தவிக்க தொடங்கினான். அவளை காண வேண்டும் என்று ஒவ்வொரு அணுவும் துடித்தது... கண்ணாடியில் தனது முகத்தை பார்க்கவே விரும்பாமல் இருந்தான்.. எந்த அழகை வைத்து அவளை கொச்சை படுத்தினானோ. அதே அழகை அவன் வெறுத்தான். தாடி மீசையுடன் சாப்பிடாமல் வேலை வேலை என்று அலைந்தவனை பார்க்க மாலதியின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது.. கேட்டாலும் அவன் சொல்ல மாட்டான் என்று தெரிந்தும் மன ஆறுதலுக்காக ஒரு நாள் கெட்டதற்கு விரக்தியாக புன்னகைத்து விட்டு சென்று விட்டான்.

அருகில் இருந்த பொது உணராத காதலை விலகி சென்றதும் உணர தொடங்கினான். மனம் கேட்காமல் வைஷ்ணவிக்கு அழைத்த மாலதி "உனக்கும் ஆத்ரேயனுக்கும் இடையில் என்ன பிரச்னையம்மா??? " என்று கேட்க.. அவளோ சர்வ சாதாரணமாக " பெரிசா ஒண்ணுமில்லை அத்தை

விவாகரத்து செய்ய்ய போகிறோம்.. இனி நீங்க அவரை பற்றி கதைக்க விடுமானால் எனக்கு எடுக்க வேண்டாம் " என்று கறாராக கூறி வைத்துவிட்டாள். விவாகரத்து என்ற வார்த்தையில் ஒடுங்கி போனவர் அவளின் உதாசீனத்தில் நிலை குலைந்து போனார்.

நடந்தத்தை கணவரிடமும் மகனிடமும் கூறி ஒப்பாரி வைக்க, கார்த்திகேயனோ " அவங்க வாழ்க்கை நீ தலையிடாதே " என்று கழன்று கொண்டார்.. ஆத்ரேயனோ மனதுக்குள் " உண்மையாவே நான் அவளுக்கு வேண்டாமா??? " என்று வருந்தியவன் ஒரு விரக்தி புன்னகையில் மாலதியை கடந்து போனான். ஆதியையும் வர்ஷினியையும் இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம் என கார்த்திகேயன் கறாராக சொல்லி விட்டார். மலர்வேந்தனுக்கும் கோகிலாவுக்கும் கூட விஷயம் தெரிவிக்க படாமல் இருந்தது. அவள் காதலை மறந்தும் இவன் காதலை உணர்ந்தும் ஒரு மாதத்தை கழித்தனர்.

ஒரு மாதம் கழிந்ததும் வந்து சேர்ந்தது சீனியர்களின் farewell நிகழ்ச்சி. அதற்கு போவதில்லை என்று மனதுக்குள் முடிவெடுத்த வைஷ்ணவி அதனை வெளியில் சொல்லாமல் மறைத்து வைத்து இருந்தாள். கடைசிநேரத்தில் உடல் நிலை சரி இல்லை என்று காட்டி போகாமலிருக்க திட்டம் போட்டாள்.

எல்லாரும் சந்தோஷமாக நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மேற்கொண்ட போதும் அவள் எதிலும் கலந்து கொள்ளாமல் தானுண்டு தனது வேலையுண்டு என இருந்துவிட்டாள். ஆத்ரேயனோ அவளை சந்திப்பதற்கு அவா இருந்தாலும் தன்னால் தன்னை கட்டுப்படுத்த முடியாது என்று தோன்ற வீண் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக போவதில்லை என்று முடிவெடுத்தவன் அதனை கல்லூரி மாணவர்களுக்கும் அறிவித்திருந்தான். கல்லூரி மாணவர்கள் ஆகாஷுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆத்ரேயனை கூடி வருமாறு கெஞ்சி கொண்டிருந்தனர்.

ஆகாஷும் "try my best " என்று சொல்லி விட்டு வைத்து விட்டான். அவன் வருவானா மாட்டானா என்று குழம்பி தவித்த பொது, அந்த செய்தியை கேள்விப்பட்ட சந்தியா வைஷ்ணவியிடம் வந்து " ஆத்ரேயன் சீனியர் நாளைக்கு வரமாட்டாராம்டி " கவலையா இருக்கு என்றாள் . ஆனால் அது வைஷ்ணவிக்கோ அது இனிப்பான செய்தி அல்லவா அடுத்தநாள் தயாராகி போவதற்கான சேலையை பெட்டியில் தேட தொடங்கினாள்

Farewell நிகழ்ச்சிக்கு போக விரும்பாமல் இருந்தவனை முதல் நாள் ஆகாஷ் வந்து சந்தித்தான்.. அவனின் சாமியார் கோலம் கண்டு திகைத்தவன் "என்னடா ஆச்சு??? " என்று கேட்டு விரக்தி புன்னகையையும் மௌனத்தையும் பதிலாக பெற்றான்.

வரமாட்டேன் என்று ஆரம்பத்தில் அடம் பிடித்தவன் கடைசியில் ஆகாஷின் வற்புறுத்தலால் நிகழ்ச்சிக்கு போக சம்மதித்தான். " கொஞ்சம் தாடியை trim பண்ணிட்டு vaada" முகமே தெரியல."

என்றவனிடம் " இப்போ நான். அழகா illaya" என்று நக்கலாக தான் கேட்டான் ஆனால் உண்மையில் காடு போல வளர்ந்திருந்த தாடி அவனின் அழகை குறைக்காமல் மாறாக கூட்டி இருந்தது. "நீ எப்படி இருந்தாலும் அழகன் டா " என்று கண் சிமிட்டி தோளில் கை போட்டு சொன்ன ஆகாஷை பார்த்து வாய் விட்டு சிரித்தான் நிறைய நாட்கள் கழித்து.

ஆகாஷுடன் அன்று காலை வந்து இறங்கிய ஆத்ரேயன் விடுதியில் ஓய்வெடுத்துவிட்டு மாலையானதும் farewell நிகழ்ச்சிக்கு செல்ல தயாரானான். கருப்பு நிற முழுக்கை சட்டை அணிந்து முதலிரு பட்டன்களை திறந்து விட்டவன், அதனை முழங்கை வரை மடித்தான். அதற்கு பொருத்தமான கருப்பு நிற ஜீன்ஸ் உம் பெல்ட்டும் அணிந்தவன் shirt ஐ in பண்ணி விட்டு கருப்பு நிற shoes ஐயும் அணிந்து கொண்டான். மேலும் கையில் கருப்பு நிற titan கைக்கடிகாரத்துடன் நிகழ்ச்சிக்கு வெளிக்கிட்டிருந்தான். அனைத்தும் கரிய நிறமாக அணிந்தவனின் முகத்தை

மூடுமளவுக்கு வளர்ந்திருந்த தாடியும் மீசையும் அவனுக்கு அழகை கூட்டியதே தவிர கொஞ்சம் கூட குறைக்கவில்லை. அவன் முகத்தில் மாத்திரம் இனம் புரியாத வேதனை படர்ந்திருந்தது.

வைஷ்ணவியோ ஆத்ரேயன் வரமாட்டான் என்ற நிம்மதியுடன் வான் நீல நிற கல் வேலைபாடுடைய ஷிபான் புடவை அணிந்தவள் எந்த வித மேக்கப் உம் இல்லாமல் முடியை பின்னி விட்டிருந்தாள். சிறு தங்க தொடும் மலையும் மட்டும் அணிந்திருந்தாள். அவளின் எளிமையே அவளை மிக அழகாக காட்டியது.

அவளின் எளிமையை பார்த்த சந்தியா வைஷ்ணவியிடம் " கொஞ்சம் மேக்கப் போட்டுக்கடி "என்றவளின் முகம் அடையாளம் காண முடியாதவாறு மேக்கப் இனால் நிரம்பி இருந்தது.. அவளின் மாறுவேஷத்தை பார்த்து வந்த சிரிப்பை கட்டுப்படுத்தியவள் " ஏன் என்ன யாரும் அடையாளம் காண கூடாது என ஆசைப்படுறியா ??? " என்று குறும்புடன்

கேட்டாள்.

" உன் கிட்ட போய் சொன்னேன் பாரு " என்று சலித்து கொண்டவள் தனது மாறு வேஷத்தை தொடர்ந்தாள்.

அவளை பார்த்து கண்ணுக்கெட்டாத சிரிப்பை சிரித்தவள் போவதற்கு ஆயத்தமாகி 30 நிமிடங்களுக்கு முன்னரே வந்து சேர்ந்தனர்.

சந்தியாவுடன் சென்று அனைவருக்கும் welcome drink கொடுக்க தொடங்கியவள் நண்பர்களின் கலகலப்பில் காயங்களை மறந்து போனாள்.

அதற்குள் அவள் நிம்மதியை குலைப்பதற்காகவே அவளது நண்பன் ஒருவன் " ஆத்ரேயன் அண்ணா வந்திருக்காருடா... செம handsome ஆக இருக்கார்.. வாடா சீக்கிரம் " என்று அழைக்க அவள் கால்கள் தன்னை அறியாமல் நிலை கொள்ள முடியாமல் நடுங்கியது.

" இவன் வரமாட்டேன் என்று தானே சொன்னான்.. எதுக்கு வந்திருக்கிறான் .. ??? " என்று அவனை

கண்ட மேனிக்கு திட்டியவள் மேல் அடுத்த இடி விழுந்தது. " வைஷு இங்க வந்து இவர்களுக்கும் கொடும்மா " என்று அவள் நண்பன் அழைக்க அவன் சொன்ன மேசைக்கு தலையை குனிந்தபடி வந்து பரிமாற தொடங்கினாள்.

வைஷு என்ற பெயரில் ஆத்ரேயன் மனது சில்லிட கையில் தட்டுடன் மெல்லிய கொடி போல் நடந்து வந்தவளை கண் வெட்டாமல் பார்த்து ரசித்து கொண்டிருந்தான்.

தட்டை ஆத்ரேயனிடம் நீட்டியவள் அவனின் கையை வைத்து அவனை அடையாளம் கண்டு கொண்டவள் மறந்தும் நிமிர்ந்து பார்க்கவில்லை.

அவள் நிமிராமல் இருப்பது மனதை உறுத்த வேண்டுமென்றே எடுக்க போன கிளாசை அவளை நோக்கி கெளித்து விட்டான்.

அது அவள் புடவையிலும் பட்டது. அவன் வேண்டுமென்று செய்ததை அறிந்தவள் அவனை நிமிர்ந்து முறைத்து பார்த்தாள். அவளின்

பார்வைக்காக ஏங்கியவன் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாது கண்களில் மட்டும் ஏக்கத்தை தேக்கி வைத்து அவளை நோக்கினான். உடனே அங்கிருந்த மாணவன் " வைஷு பார்த்து கொடுக்க மாட்டியா?? " என்று அவளை திட்ட போக, அவனை பார்த்து ஆத்ரேயன் முறைத்ததில் அவன் குரல் தானாக அடங்கியது.

" sorry இது என் தப்புதான் " என்று ஆத்ரேயன் அவன் வாழ்க்கையில் முதல் முறை அவளிடம் மன்னிப்பு யாசித்தான் . சுற்றி இருந்தவர்களுக்காக " its ok " என்றவள் தட்டை எடுத்து கொண்டு விறு விறுவென சென்று விட்டாள். சென்றவள் மனதுக்குள் "அவன் மனம் போல் அவன் உடை" என்று சொல்லி கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து தட்டோடு வந்த சந்தியா ஆத்ரேயனுக்கு drink வழங்கி சென்றாள் . சென்றவள் வைஷ்ணவியிடம் " வரமாட்டார் என்று நினைச்சன் வந்துட்டார்டி ..... தாடி எல்லாம் வளர்த்து செம handsome ஆக இருக்கார் சான்சே

இல்ல... " என்று புகழ்ந்து தள்ளியவளிடம் " பாம்பு கூட அழகு தான் " என்று ஒற்றை சொல்லை உரைத்தவள் மன நிம்மதியை தேடி எதிலும் ஈடுபடாமல் தள்ளி பொய் நின்று கொண்டாள்.

நிகழ்ச்சி தொடங்கிய போது சந்தியா கூப்பிட்டும் முன்னே செல்லாமல் ஒரு ஓரமாக இருந்த மேசையில் அமர்ந்திருந்தாள். அவளை காணாமல் தேடிய ஆத்ரேயனின் காதல் கண்கள் அவளை கண்டதும் ஆசுவாசமடைந்தது.

அவளோ யாரையும் பார்க்காமல் மேடையை வெறித்து பார்த்தபடி இருந்தாள். இருவரும் அமர்ந்திருந்த தோரணையை பார்த்த ஆகாஷ் "என்னடா புருஷனுக்கும் பொண்டாட்டிக்குமிடையில ஏதும் சண்டையா ?" என்று கேட்க வெற்று பார்வை பார்த்தவன் சிரிப்பை மட்டும் பதிலாக கொடுத்தான்.

"நீ சொல்ல மாட்டா... அந்த பொண்ணுக்கிட்டயே கேட்டுக்கிறேன் " என்று கூறியபடி எழுந்தவனை பரிதாபமாக பார்த்தவன் "உன் தலையெழுத்தை

யாரால் மாற்ற முடியும் " என்று மனதில் நினைத்து கொண்டான்.

தன்னை நோக்கி வந்த ஆகாஷை பார்த்த வைஷ்ணவி " இந்த வில்லங்கம் நம்ம கிட்ட எதுக்கு வருது?" என்று நினைத்து கொண்டாள். அவள் இருந்த மேசையில் உட்கார்ந்தவன் "எப்படிம்மா இருக்க?" என்று கேட்க. "நல்லாயிருக்கிறேன் அண்ணா " என்றவள் அவனை பார்க்காமல் தவிர்த்தாள். அவளின் ஒதுக்கத்தை அறிந்தவன் "இந்த பொண்ணுக்கு நம்ம மேல என்ன கோபமோ?" என்று யோசித்து விட்டு "உனக்கு ஆத்ரேயனுக்கும் என்னம்மா பிரச்சனை?" என்று நேரடியாக கேட்டான்.

ஆத்ரேயனை பற்றி கதைத்து தன் மன உறுதியை குலைக்க விரும்பத்தவள் , அவனை தவிர்ப்பதற்காக "mind your business " என்று ஒன்றை வரியில் அவனை நிலை குலைய செய்தான். அக்கறையாக வந்தவனின் மனம் கனத்து போனதில் தளர்ந்த நடையுடன் எழுந்து சென்றான். அவன் தளர்ந்த நடையை பார்த்து

குற்ற உணர்வு மேலிட "I am really sorry அண்ணா " என்று மனதுக்குள் சொல்லி கொண்டாள். ஆத்ரேயன் மேலுள்ள கோபத்தை அவனை பற்றி கதைக்க வந்த அனைவரிடமும் காட்டினாள்.

தளர்ந்த நடையுடன் வந்த நண்பனை கவனித்தவன் ஏதோ தவறாக பட விசாரித்தான். ஆரம்பத்தில் கூற மறுத்தவன் நண்பனின் வற்புறுத்தலால் அனைத்தையும் உளறி கொட்டினான். நண்பன் தன்னால் அவமானப்பட்டதில் கோபம் மேலிட "திமிர் புடிச்சவ" என்று மனதுக்குள் திட்டியவன் அவளிடம் கதைத்து பயனில்லை என்று அறிந்தவன் நிதானமாக மைக் கை வாங்கியபடி மேடை ஏறினான். "good evening girls ...நான் இன்று உங்களுக்கு ஒரு குட் நியூஸ் உம் ஒரு bad நியூஸ் உம் சொல்ல போகிறேன்.... முதலில bad news " என்றவன் வைஷ்ணவியை கண் விலகாமல் பார்த்தபடி "எனக்கு கல்யாணம் ஆயிருச்சு" என்றான்.

அந்த செய்தியில் அனைவரும் ஒரு கணம்

ஸ்தம்பித்து நின்றனர். அங்கிருந்த சில பெண்கள் "noooo " என்று கத்தினார்கள்.. "cool down babies" என்றவரிடம் "யார் அந்த lucky girl " என்று கூட்டத்தில் இருந்த பெண் கேட்க. "நம்ம college தான் உங்களுக்கெல்லாம் தெரிஞ்ச பொண்ணுதான் " என்றான்.

இவையனைத்தையும் கேட்ட வைஷ்ணவி திக் பிரம்மை பிடித்த போல இருந்தாள். மனதுக்குள் "வாய வச்சிட்டு சும்மா இருக்க மாட்டியா வைஷு... உன் வாயால அவனை சீண்டுறதே வேலையா போச்சு" என்று மானசீகமாக தலையில் அடித்து கொண்டாள்

அவன் கூற்றில் எல்லாருக்கும் ஆவல் மேலிட அவனை சொல்லும்படி கெஞ்சினர். "வேற யாரும் இல்ல guys உங்க batch மிஸ்.வைஷ்ணவி மலர்வேந்தன் தான் இப்போ Mrs.வைஷ்ணவி ஆத்ரேயன் ஆகி இருக்காங்க" என்றதும் கூட்டமே சலசலக்க தொடங்கியது.

"calm down guys , நல்ல விஷயம் என்ன தெரியுமா?

எனக்கு விவாகரத்து ஆக போகுது" என்றான். அந்த மண்டபமே நிசப்தமாகியது. என்ன நடக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை. வைஷ்ணவிக்கோ அவன் தன் தலையில் இடை விடாது குண்டு போடுவதை போல இருந்தது.

"ஏன் எதுக்கு என்று உங்களுக்கு நிறைய கேள்வி இருக்கும்... அனைத்தையும் வைஷு கிட்ட கேட்டு கொள்ளுங்க" என்று கூறியவன் அவளை பார்த்து ஏளனமாக சிரித்து விட்டு கீழே இறங்கினான். "ஐயோ ... இவன் என்ன பண்ணி வச்சு இருக்கிறான்.. இத விட நான் ஆகாஷ் அண்ணாகிட்டயே பதில் சொல்லி இருக்கலாம்.. அவனை பற்றி தெரிஞ்சும் லூசு போல நடந்திருக்கியே " என்று தனக்கு இடை விடாமல் திட்டி கொண்டாள். அனைவரினதும் கண்களும் தன்னையே மேய்வது போல் இருக்க பின்னால் இருந்த புதருக்குள்ளால் புகுந்தவள் மற்றய பக்கம் இருந்த ஆற்றோரத்தில் வந்து நின்று கொண்டாள். விடுதிக்கு செல்ல வேண்டுமானால் மேடையை தாண்டி செல்ல வேண்டும் அது இப்போது சாத்தியமில்லை என்றதாலேயே இந்த

முடிவை எடுத்தாள்.

அவனின் செயலால் அதிச்சியடைந்த ஆகாஷ் "என்னடா பண்ணி வச்சு இருக்க?" என்று கேட்க... "உன்ன அவமனப்படுத்துனா தானே நல்லா படட்டும் " என்றான். அவன் அப்படி கூறினாலும் அவன் மனதின் மூலையில் அவள் தன்னவள் என்று அனைவரிடமும் சொல்ல வேண்டுமென்ற ஆசை நிறைவேறிய திருப்தி தோன்றியது.

ஆகாஷோ அவன் நட்பை நினைத்து பெருமை படுவதா இல்லை அவன் வாழ்க்கையை நினைத்து கவலை படுவதா என்று தெரியாமல் திண்டாடினான்.

நிகழ்ச்சிகள் தொடங்கி நடந்து கொண்டிருந்த போது ஆத்ரேயன் வைஷ்ணவியையே தேடி கொண்டிருந்தான். அவன் கண்ணில் அவள் படவே இல்லை.. அனைத்து நிகழ்ச்சியும் முடிந்து அனைவரும் டின்னர் காக அழைக்கப்பட்டனர். அப்போதும் அவள் கண்ணில் படாமலிருக்க அவன் மனதில் பயம் உருவானது. எல்லாரையும்

சாப்பிட சொல்லி விட்டு அவ்விடமெலாம் தேடினான். கடைசியில் புதரால் எட்டி பார்த்தவன் வைஷ்ணவி ஆற்றின் ஓரத்தில் காற்று வாங்கியபடி நிற்பதை கண்டான். சத்தமில்லாமல் அவளருகில் நெருங்கி போனவன் அவள் காதுக்குள் குனிந்து " என்ன செய்கிறாய் இங்கே ?" என்று கேட்க. கும்மிருட்டில் மிக அருகில் கேட்ட குரலால் பயந்தவள் துள்ளி பாய்ந்து திரும்ப சமநிலை தவறி ஆற்றுக்குள் விழ போனாள்.

உடனே சுதாகரித்த ஆத்ரேயன் அவளிடையை சுற்றி பிடித்திருந்தான். பிடித்தவன் அவளை தன்னுடன் சேர்த்து தள்ளி இழுத்து சென்றான். நீண்ட நாள் காணாத ஏக்கம் அவனுள் பல விதமான உணர்ச்சிகளை தோற்றுவிக்க அவளை இறுக்கி அணைத்தவன், அவள் நெற்றியில் தன் முத்திரையை பதித்தான். அப்படியே அவன் அதரங்கள் முகத்தில் ஒவ்வொரு பாகத்தையும் சந்தித்து அவளது அதரங்களை நெருங்கி நின்றது.

அவ்வளவு நேரமும் விறைப்பாக இருந்தவள், அவன் இதழ் அருகில் வந்ததும் "rate ஐ பேசிட்டு

தொடருவமா ?" என்று உணர்ச்சி துடைத்த குரலில் கேட்டாள் . அவள் கேட்ட கேள்வியில் தீ சுட்டால் போல அவளை விட்டு விலகி நின்றவன் கண்களில் கோபம் ருத்ரதாண்டவமாடியது. "என்ன வார்த்தை சொல்லி விட்டாள் ?" என்று மனம் தாறுமாறாக அடித்து கொண்டது.

முதலிருந்த ஆத்ரேயனாக இருந்திருந்தால் சரி என்று சொல்லி இருப்பான். இப்பொது அவன் மனம் முழுதும் அவளல்லவா நிறைந்திருக்கிறாள். அவளை கூர்மையாக பார்த்தவன் "ச்ச என்ன பேச்சு பேசுறாய்?" என்றான். அவளோ எந்த தாக்கமும் இல்லாமல்.. "நீங்க தானே சொல்லி இருக்கீங்க நான் உங்க மனைவியுமில்லை காதலியுமில்லை என்று.. பிறகெப்படி நீங்க என்னோட தவறா நடந்து கொள்ள முடியும்? என்ன நீங்க தப்பான பெண்ணா நினச்சு தானே அப்பிடி ,நடக்கிறிங்க ... so நான் ரேட் பேசுனதுல தப்பில்ல என்று நினைக்கிறன் " என்றாள் . அவள் ஒவ்வொரு வார்த்தையும் அவனிதயத்தை நெருஞ்சி முள்ளால் குத்தியது. "தன் காதலை உணர்த்தாமல் அவளை

அணைத்தது தப்பு " என்றுணர்ந்தவன், அவன் காதலை வெளிப்படுத்தும் பொருட்டு "இங்கே பார் வைஷு... நடந்ததெல்லாம் தயவு செய்து மறந்திரு.. எனக்கு இப்போ நீ வேணும் ப்ளீஸ்" என்று தனது ஈகோவையும் காதலையும் அவள் காலடியில் சமர்ப்பித்தான்

அவனை கூர்ந்து நோக்கியவள் " நான் ரெடி... எவ்வளவு தருவிங்க?" என்று கேட்டாள்... அது அவன் கோபத்தை பன்மடங்காகியது. "லூசா நீ? நான் என்ன பேசுறன் நீ திரும்ப திரும்ப அதையே பேசிட்டு இருக்கா?" என்று சினம் கலந்த குரலில் சீறினான். "நான் வேணும் என்று கேட்டீங்க" என்றாள் . தான் கேட்டது உண்மையாகவே விளங்கவில்லையா அல்லது நடிக்கிறாளா என்று யோசித்தவள், "ஐயோ புரிஞ்சுக்கொடி... எனக்கு உன் காதல் வேணும்டி... உன் உடம்பல்ல..." என்றான் நிஜமாகவே கவலை தோய்ந்த ஏக்கமான குரலில். அவன் சொன்னதை கேட்டு பெருமூச்சு விட்டவள் "இங்கே பாருங்க ஆத்ரேயன் ... என் காதல் செத்து போச்சு... இந்த வார்த்தையை நான் உங்கள காதலிக்கும் போது

சொல்லி இருந்தா நான் நம்பி இருப்பேன். செத்த பிணத்திடம் காதலை சொல்லாமல் என்ன விவாகரத்து பண்ணி விட்டு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணுங்க..தயவு செய்து என்ன நிம்மதியா இருக்க விடுங்க... காதல் என்று உங்களையும் ஏமாற்றி என்னையும் ஏமாற்ற வேண்டாம் ப்ளீஸ்." என்று கை கூப்பி கெஞ்சினாள்.

"கடைசியா என்ன சொல்ல வாற ?" என்று கெட்டவனிடம்... "உங்கள சத்தியமா பிடிக்கல... I hate you .. ஒரு மிருகத்தோட வாழ வேண்டிய அவசியம் எனக்கில்லை " என்று உறுதியான குரலில் கூறினாள். அவளுக்கோ அவன் சொல்வது உண்மையா பொய்யா என்று ஒரு புறம் சந்தேகம் இருந்தாலும் அவன் மீதான பயமும் வெறுப்பும் அவனை அவளிடமிருந்து தள்ளி வைத்தது.

ஆத்ரேயன் இவ்வளவு தூரம் இறங்கி பேசியதே பெரிய விஷயமாக இருந்தது. அவளது உதாசீனத்தால் அவன் களைந்து வைத்திருந்த

ஈகோவை திரும்ப மாட்டி கொண்டான். "சரி தான் போடி.. உன்னட்டை போய் கெஞ்சினேன் பாரு என்ன செருப்பால அடிக்கணும் ... நீ இல்லாட்டி இன்னொருத்தி,... உலகத்தில பொண்ணுங்களுக்கா பஞ்சம்??.. உன்ன divorce பண்ணிட்டு உன் கண் முன்னாடியே இன்னொருத்தியை கட்டுறேன் பாரு,,, தயவு செஞ்சு என் கண் முன்னாடி வந்திராதே " என்று ஆதங்கத்தில் ஏதேதோ பேசியவன் கனத்த மனதுடன் இரவு சாப்பாடு சாப்பிடாமல் வெளியேறினான்.

அவள் கனமான மனதுடன் யாருக்கும் தெரியாமல் கண்ணீருடன் விடுதிக்கு சென்றாள்.

காதல் மலரும்.....

"காதல் கொண்ட மனதை காயப்படுத்தி விட்டு காயப்படுத்திய நீயே
மருந்திட வந்தால் காயம் கொண்ட மனம் குணமாகுமா அல்ல ரணமாகுமா நான் அறியேன் .....

என் கோபம் என்னும் திரைக்கு பின்னால் உன் மீதான காதல் இருப்பதை
நான் அறியேன் கண்ணம்மா.....

நானே அறியாத காதலை உன்னிடத்தில் எப்படி உணர்த்துவேன் கண்ணம்மா....." (by saranya.R)

யுகம்-19

வெளியேறியவன் ஆகாஷை விட்டு செல்ல முடியாது என்பதால் காரில் காத்து கொண்டு இருந்தான். " ரொம்ப திமிருடி உனக்கு... இனி நான் உன் பின்னாடி வந்தா என்ன செருப்பால அடி" என்று அவளை கெட்ட வார்த்தைகளால் திட்டி கொண்டிருந்தான்.

யாருக்கும் தெரியாமல் விடுதிக்கு வந்தவளுக்கு நண்பர்களை எப்படி சமாளிப்பது என்று நினைக்கவே தலை சுற்றி வந்தது . " எல்லாரும் வர முதல் தூங்க வேணும் " என்று நினைத்தவள்

குளித்து விட்டு தூங்க தொடங்கினாள். ஆனால் படுத்தவளுக்கு தூக்கம் வருவதற்கு பதில் ஆத்ரேயனே கண் முன்னாடி வந்து கொண்டிருந்தான்.

நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிந்ததும் ஆத்ரேயனை காணவில்லை என்று தேடிய ஆகாஷ் அவன் காரில் இருக்கும் செய்தி கேட்டு அங்கு விரைந்தவன், கண் மூடி சீட்டில் சாய்ந்து படுத்திருந்த நண்பனை பரிதாபமாக பார்த்தான்." என்னடா ஆச்சு?? " என்று கேட்க.. உடனே சுதாகரித்த ஆத்ரேயன் " போவோமா மச்சி ? " என்று கேட்டுவிட்டு காரை start பண்ணினான். அவனிருக்கும் மன நிலையில் அவனால் நிதானமாக கார் ஓட்ட முடியாது என்று அறிந்த ஆகாஷ் " நீ இறங்கு மச்சி நான் ஓடுறன் " என்றவாறு கதவை திறக்க. அவனும் அதையே யோசித்தவன் இறங்கி மாறி உட்கார்ந்தான்.

"இவன் கிட்ட இருந்து ஒரு வார்த்தை கூட புடுங்க முடியாது" என்று நினைத்த ஆகாஷ் அவனிடம் எதுவும் விசாரிக்காமல் காரை கிளப்பி கொண்டு

சென்றான்

அனைவரும் நிகழ்ச்சி முடிந்து விடுதிக்கு புறப்பட சந்தியாவின் மனது மட்டும் கொதித்து கொண்டிருந்தது. " ஒரு வார்த்தை என் கிட்ட சொன்னாளா அவ?. " என்று வைஷ்ணவியை மனதுக்குள் திட்டியவாறு விடுதிக்கு வந்து சேர்ந்தாள். அனைவரும் வைஷ்ணவியையும் ஆத்ரேயனை பற்றியும் பேசியவாறே வந்து சேர்ந்தனர்.

அனைவரும் வரும் அரவம் கேட்க "இந்த நெட்டையனால எப்படியெல்லாம் நடிக்க வேண்டி இருக்கு " என்று யோசித்த வைஷ்ணவி கண் மூடி வாசலுக்கு முதுகு காட்டி ஒரு பக்கம் சரிந்தவாறு படுத்து இருந்தாள்.

கதவு திறந்த சத்தம் கேட்க இறுக்கி கண்ணை மூடியவள் மேலும் அவளுக்கு எந்த அரவமும் கேட்கவில்லை. " என்ன ஒரு சத்தத்தையும் காணோம்?? " என்று யோசித்தவள் மெதுவாக தலையை திருப்பி பார்த்தாள். அவள்

எதிர்பார்த்தது சந்தியாவை மட்டும் தான்.. ஆனால் ஒட்டு மொத்த பெண்களும் கை கட்டியவாறு அவளையே பார்த்து நின்று கொண்டிருந்தனர்.

" இதுக்கு ஆகாஷ் அண்ணாவே மேல் " என்று நினைத்தவள் " ஹி ஹி என்ன எல்லாரும் என்னை அப்பிடி பார்க்கிறிங்க ? " என்று நாடகத்தனமாக சிரித்தவாறு எழும்பி உட்கார்ந்தாள்.

முன்னுக்கு நின்ற சந்தியாவோ அவளை சுட்டெரிப்பது போல் பார்த்து கொண்டிருந்தாள். " மாரி ஆத்தா போல இவ பார்க்கிறத பார்த்தாலே உதறுதே " என்று நினைத்தவளின் முகத்தில் பயம் அப்பட்டமாக தெரிந்தது.

கண்ணில் பயமிருந்தாலும் அவள் இதழ்கள் சிரித்து கொண்டே இருந்தது. " லூசு போல சிரிக்காதேடி " என்று சீறிய சந்தியா. " உண்மைய சொல்லு எப்படி கல்யாணம் ஆச்சு ஏன் டிவோர்ஸ் ஆக போகுது ... நீ சொல்லாவிட்டால் நாங்க

யாரும் உன்னோட கதைக்க போறதில்ல " என்றார்கள்.

" இதென்னடா வம்பா போச்சு என்று யோசித்தவள் .. ஆத்ரேயா எல்லாம் உன்னால தாண்டா " என்று அவனுக்கு மனதுக்குள் திட்டி விட்டு , ஆத்ரேயன் மாமன் மகன் என்பதில் தொடங்கி திருமணம் நடந்தது வரை சொல்லி முடித்தாள். இருவருக்கும் இந்த திருமணத்தில் சம்மதமில்லை என்று சொன்னவள் மறந்தும் அவன் தனக்கு செய்த கொடுமைகளை வாய் திறந்து சொல்லவில்லை.

" இருவருக்கும் பிடிக்காத திருமணம் என்பதால் விவாகரத்து செய்ய முடிவெடுத்திருக்கிறோம் .. அதனால தான் உங்க கிட்ட நான் சொல்லல ... என்ன மன்னிச்சுருங்க " என்றாள்.

அவளின் மன்னிப்பில் சமாதானமானவர்கள் " அப்போ ஒண்ணுமே நடக்கலயா ? " என்று ஏக்கத்துடன் ஒருத்தி கேட்க, அதில் அவளுக்கு மறக்க வேண்டிய தருணங்கள் எல்லாம்

நினைவுக்கு வந்தது.. கஷ்டப்பட்டு கண்ணீரை கட்டு படுத்தியவள் இல்லை என்று தலையாட்டினாள்..

அவள் பக்கத்தில் உட்கார்ந்த சந்தியா " அத விடு. ஏண்டி பிடிக்கல?? அவரை போல ஒருத்தர் கிடைக்க மாட்டானா என்று நாங்க எல்லாம் ஏங்கி கொண்டு இருக்கிறோம் .. உனக்கு என்ன பிரச்சனை ?? " என்று கேட்டாள்.

" அவனை போல ஒருத்தன் கிடைக்கல என்று நிம்மதியா இருங்க " என்று மனசுக்குள் சொன்னவள் " ஏனோ பிடிக்கல.. என்ன தூங்க விடுங்க செல்லங்களா ப்ளீஸ் " என்று கெஞ்சினாள் . அவளின் கெஞ்சலுக்கு மரியாதையை கொடுத்து அவளை விட்டு விலகி சென்றனர்.

பெருமூச்சு எடுத்தவளுக்கு அதுவும் தூக்கமில்லாத இரவாகவே கடந்தது. வீட்டில் ஆத்ரேயனை விட்டுவிட்டு ஆகாஷ் புறப்பட்டான். அறைக்கு வந்தவனுக்கோ வைஷ்ணவி மேல்

அளவு கடந்த ஆத்திரம் வந்தது.. " என்ன உனக்கு .பிடிக்கலயாடி Damn it ... " என்று கோபத்தில் சீறியவன் கையிலிருந்த தொலைபேசியை போட்டு உடைத்தான்.

அப்போதும் கோபம் அடங்காததால் முகம் பார்க்கும் கண்ணாடியில் குத்தியதில் அது உடைந்து கையில் ரத்தம் வழிய கட்டிலில் இருந்தான்.. சத்தம் கேட்டு ஓடி வந்த மாலதிக்கு இதயம் பதற அவன் கையை புடவை முந்தானையால் அழுந்த பிடித்து ரத்தத்தை கட்டுப்படுத்தியவர். அவன் தலையை அணைத்தவாறு " ஏன்டா இப்பிடி பண்ணின ??? " என்று கேட்டு கண்ணீர் விட்டார். மனதுக்குலேயே மறுக்கும் அவனுக்கும் அந்த அணைப்பு தேவையாக இருந்தது... கடினமான நேரத்தில் தேடி வரும் ஆறுதல் மனதிலுள்ள கவலைகளை எல்லாம் வெளியில் கொட்டிவிடும்.

மாலதியின் இடையை அணைத்து கொண்டவன் " அவளுக்கு நான் வேணாமாம் அம்மா.. " என்று கண்ணீருடன் கூறினான். தனது வயதை மறந்து

அவர் கையில் குழந்தையாகி போனான்.

வாழ்க்கையில் இது இரண்டாம் முறை மகனின் கலங்கிய முகத்தை அவர் பார்ப்பது. உண்மை முழுதாக தெரியாதவர் " அவ இல்லாட்டி பொண்ணா இல்லை??? உனக்கு நல்ல பொண்ண பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறேண்டா " என்றார்..

அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தவன் " அவளை விட நல்ல பொண்ணு உங்களால கண்டு பிடிக்கவே முடியாது " என்றான். மகனின் கூற்றில் அதிர்ந்தவர், அவனை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக " நீ எங்களுக்காக நல்லா வாழணும்டா.. உன்னை இப்படி பார்த்து பார்த்தே நாங்க செத்து விடுவோம் போல இருக்குடா.. " என்றார் கண்களில் கண்ணீர் வழிய.

அவன் வாழ்க்கையில் விரும்பிய முதல் உயிர் அவன் தாய்.. அவர் கண்ணில் கண்ணீரை கண்டவன் தன்னை ஆசுவாசப்படுத்தின் கொண்டு " நீங்க போங்கம்மா எனக்கு ஒன்னும்

ஆகாது.... உங்களுக்காகவாவது நான் மாறுவேன் " என்று அவரை அனுப்பி வைத்தவன் குளியலறைக்குள் புகுந்தான்.

மனதில் இல்லாத சந்தோஷத்தை முகத்தில் சிரமப்பட்டு கொண்டு வந்தான் தனது தாய்க்காக.அடுத்து என்ன செய்வது என்று யோசித்தவன் இனி வைஷ்ணவியை பற்றி நினைக்கவே கூடாது என்று முடிவெடுத்தான்...

அடுத்த நாள் காலையில் மாலதிக்கு ஆத்ரேயனின் தோற்றம் ஆச்சரியத்தை கொடுத்தது. மீசை தாடி எல்லாம் சவரம் பண்ணியவன் தலை முடியையும் ஸ்டைல் ஆக வெட்டி இருந்தான்.

" ஹாய் அம்மா " என்று சிரித்தபடி வாந்தவனை பார்த்த மாலதிக்கு மனம் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அவனின் இந்த மாற்றம் கார்த்திகேயனுக்கு திருப்தியாக இருக்க.. கோபம் எல்லாம் கலைந்தவர் சாதாரணமாக தொழிலை பற்றி உரையாட தொடங்கினர். யாரும் மறந்தும்

வைஷ்ணவியை பற்றி வாய் திறக்கவில்லை.

சிங்கப்பூர் கிளையை பற்றி தந்தையுடன் உரையாடியவன் அடுத்த மாதமே அங்கு சென்று தனது வேலைகளை தொடர ஆயத்தமானான்.. வைஷ்ணவியை பற்றி நினைப்பதை முற்றாக தவிர்த்தான்.. தொழிலில் வேங்கை போல் சீறி பாய்ந்தவன் குறுகிய காலத்தில் வெகுவாக வளர்ந்து நின்றான்..

வைஷ்ணவியும் எல்லாம் மறந்து படிப்பில் கவனம் செலுத்த தொடங்கினாள். மீண்டும் அவர்களின் நிம்மதியை குலைக்க வந்து சேர்ந்தது வர்ஷினியின் வளைகாப்பு.

வர்ஷினி வளைகாப்புக்காக வீட்டுக்கு வந்திருந்தாள். முதல் குழந்தை என்பதால் எல்லோர் மனதிலும் சந்தோசம் குடி கொண்டது. சிங்கப்பூரில் இருந்து ஆத்ரேயனும் வந்திருக்க.. நிகழ்ச்சிக்கு வராமலிருக்க முடியது என்பதால் வைஷ்ணவியும் வர வேண்டியதாக போய் விட்டது.

வந்தவள் மலர்வேந்தன் வீட்டிலேயே தங்க, அவர்கள் பிரச்சனை அரசால் புரசலாக தெரியும் என்பதால் யாரும் எதுவும் கேட்கவில்லை அதுவாகவே சரியாகும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

வளைகாப்பு நிகழ்ச்சிக்காக உறவினர்களும் நண்பர்களும் கார்த்திகேயன் வீட்டுக்கு குழும தொடங்கினர். குறித்த நேரத்துக்கு முன்னரே மலர்வேந்தன் வீட்டினர் அனைவரும் கார்த்திகேயன் வீட்டுக்கு செல்ல வைஷ்ணவியோ " நேரத்துக்கு வந்து சேருவேன் " என்றபடி வீட்டுக்குள் முடங்கிவிட்டாள்.

சிவப்பு நிற வேலைப்பாடுடைய பட்டு சாரியில் அதற்கேற்ற நகைகளும் அணிந்து மூக்கில் வைர மூக்குத்தி மின்ன.. வயிற்றிலுள்ள குழந்தை முகத்தின் பிரகாசத்தத்தை கூட்ட அழகு தேவதையாக ஜொலித்த மனைவியை கண் இமைக்காமல் பார்த்து கொண்டிருந்தான் காதல் கணவன் ஆதி.

கண்ணாடி முன்னால் இருந்து கண்ணுக்கு மை தீட்டியவள் " போதும் பார்த்தது வந்து இந்த பூவை வைத்து விடுங்க" என்றவளை பார்த்து வசீகரமாக புன்னகைத்தவன். அதே நமட்டு சிரிப்புடன் வந்து அவள் முன்னால் இருந்த பூவை எடுத்து தலையில் சூடி விட்டான்.

" நீ அழகிடி... " என்றவன் அவளை தன் பக்கம் திருப்பி " இது பெரிய babyக்கு " என்றபடி அவள் நெற்றியில் முத்தமிட்டவன், " இது சின்ன baby க்கு " என்றபடி அவனது குழந்தையை சுமந்து கொண்டிருந்த வயிற்றில் முத்தமிட்டான். அவன் அன்பில் நெகிழ்ந்தவள் அவன் தொழில் வாகாக சாய்ந்தபடி " வைஷ்ணவி பாவம் ஆதி.. அவளுக்கும் இது போல ஆசை கனவு இருக்கும் தானே " என்றாள்.

ஒரு பெரு மூச்செடுத்தவன் " வர்ஷி .. இந்த ஆத்ரேயன் என் கிட்ட முகம் கொடுத்தும் பேசுகிறான் இல்லை.. முக்கியமாக வைஷ்ணவியை பற்றி கேட்க போனால் நைசாக

நழுவி விடுகிறான்.. அவர்களை சேர்த்து வைக்க கூட என்ன பிரச்னை என்று தெரியாமல் நான் குழம்ப வேண்டி இருக்கு .. உன் தங்கச்சியும் வாயவே திறக்க மாட்டாள்.. ரெண்டு பெரும் கல்லூரி மங்கன் கணக்காக என்ன கேட்டாலும் ஒண்டும் சொல்ல மாட்டேன் என்று சொல்லுறாங்க ... என்னால எதுவும் பண்ண முடியலடி " என்றான் உண்மையான வருத்தத்துடன். அவளுக்கும் அதே வருத்தம் தான் போல.

ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருந்தவர்களை மாலதி வந்து அழைக்க்க அவருடன் மண்டபத்துக்கு சென்றவள் அங்கு பூவினால் அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தாள். ஆதித்தன் , ஆத்ரேயன் , கார்த்திகேயன் மூவரும் ஒரே மாதிரி வெள்ளை நிற பட்டு வெட்டி சட்டையுடன் ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் நின்றனர்.

ஆத்ரேயன் மனதில் வேதனை இருந்தாலும் முகத்தில் புன்னகையை தழுவி இருந்தான்.

வைஷ்ணவி வர தாமதமானதால் கோபமடைந்த கோகிலா தொலைபேசியில் திட்ட அறக்க பறக்க ஓடி வந்து சேர்ந்தாள்.

வந்தவளை பார்த்த அனைவரும் ஆட்சியின் உச்சத்துக்கே சென்றிருந்தனர். சாதாரண வெள்ளை நிற சுடிதார் அணிந்திருந்தவள் அவசரத்தில் பொட்டு பூ எதுவும் இல்லாமல் வந்திருந்தாள். ஆத்ரேயன் அதிர்ச்சியுடன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தான். அவன் மனதுக்குள் " உன் காதல் தானேடி செத்து போச்சு நானுமா செத்து போய் விட்டேன் " என்று ஏக்கமாக கேட்டு கொண்டான்.

அவளை பார்த்து அதிர்ந்த கோகிலா மண்டபத்தில் நிறைய பேர் இருப்பதால் வந்தவளை தர தர வென பக்கத்தில் இருந்த அறைக்குள் இழுத்து சென்றாள் .. பதறியபடி மாலதியும் ஆத்ரேயன் கையை பிடித்து இழுத்தது கொண்டு உள்ளே சென்றார். ஏனையவர்கள் அங்கே இருந்த விருந்தினர்களுக்காக அங்கேயே

இருந்தனர்.

அவளை கூர்ந்து நோக்கியவாறு . " எங்கடி தாலி ? " என்று கேட்டார். அவள் கழட்டி வைத்திருக்கிறாள் என்று நினைத்தவர். ஒரு விசேஷத்துக்கு கூட போடாமலா கழட்டி வைத்திருப்பாள் என்று யோசித்தார். அவர் கேட்டதும் தான் அவளுக்கு தாலியின் நினைவு வந்தது .. கண் துடைப்புக்காக போடுவதற்கு கூட தாலி அவளிடம் இல்லையே. என்ன சொல்லி.சமாளிப்பது என்று பதறியவள் தலை குனிந்து நின்றாள். அவளின் மௌனம் அவரின் சினத்தை அதிகரிக்க .. " சொல்லுடி.. " என்று அவள் தோளை பிடித்து உலுக்கினார். " மெட்டியுமில்லை மோதிரமும் இல்லை பூவுமில்லை பொட்டுமில்லை தாலியுமில்லை .. அதக்குள் வெள்ளை நிற சுடிதாருடன் அபச குணமாக வந்து நிக்கிறியே " என்று கண்ணீர் மல்க கதறிய பொது தான் அவளுக்கு தான் வந்திருக்கும் நிலை.விளங்கியது. அவள் வேண்டுமென்று அப்படி வரவில்லை. அதனை சொன்னாலும் யாரும் நம்ப போவதில்லை என்று

அறிந்தவள் வாய் மூடி மௌனமாக நின்றாள்.

சாறி அனைத்தும் ஆத்ரேயன் வீட்டில்
இருந்ததால் தான் அவள் கையில் கிடைத்த
சுடிதாரை அணிந்தாள். அது என்ன நிறம் என்று
கூட அவள் கவனிக்கவில்லை.
தொலைபேசியில் எடுத்து கோகிலா திட்டியதால்
பொட்டும் பூவும் வைக்காமலே ஓடி வந்து
விட்டாள்.

கோகிலா கூறியதும் அவளுக்கு மனதுக்குள்
தணலை வாரி இறைத்தது போல வலியை
கொடுத்தது. ஆத்ரேயன் நிற்பது தெரிந்தவள்
நிமிர்ந்து அவனை பார்த்தாள். அவன் முகம் எந்த
உணர்ச்சியையும் காட்டாது வெட்டி சட்டையில்
கம்பீரமாக கையை காட்டியபடி மாலதி பின்னால்
நின்று அவளை பார்த்து கொண்டிருந்தான்.

கோகிலாவோ மனம் வெதும்பி தன் தலையில்
அடித்தபடி " உன்னை பெற்றதுக்கு பெறாமலே
இருந்திருக்கலாம். ஏண்டி இன்னும் கண் முன்னே
இருக்க ? எங்கயாச்சும் போய் செத்துபோடி "

என்று கதறினார். மகளின் வாழ்க்கை கண் முன்னே வீணாவதை பொறுத்து கொள்ள முடியாமல் வெம்பினார். இவையனைத்துக்கும் அவருக்கு விவாகரத்து விடயம் தெரியவில்லை. அவரின் வார்த்தைகள் வைஷ்ணவியின் வலி கொண்ட இதயத்தில் மேலும் கத்தியால் குத்துவது போல இருந்தது.

அவர் திட்டுவதை பொறுத்து கொள்ள முடியாதவன் " அத்தை கொஞ்சம் பொறுங்க " என்ற கர்ஜனையுடன் விறு விறு வென தனது அறைக்குள் சென்றவன் வரும் பொது ஒரு நகை பெட்டியுடன் வந்தான்.

கோகிலாவை விலக்கி அவள் முன்னால் வந்து அதிலிருந்த தாலியை அவள் கண்களை பார்த்தவாறு அவள் கழுத்தில் அணிவித்தான். அவள் கண்களில் கண்ணீரை கண்டவன் "நான் தாலி கட்டும் போது ஏண்டி எப்போ பார்த்தாலும் அழுகிறாய் ?" என்று மனதுக்குள் கேட்டு கொண்டான். பின் குங்குமத்தை எடுத்து நெற்றி வகிட்டில் வைத்தவன் தாலியிலும் வைத்தான் .

மோதிரத்தை எடுத்து அவள் இடது கையில் அணிவிக்கும் பொது அவன் வலது கையிலும் மோதிரம் இருப்பதை வைஷ்ணவி கண்டு கொண்டாள். கடைசியாக மெட்டியை எடுத்து அவள் கால்களில் அணிவிக்கும் போது அவன் கண்களிலிருந்து கண்ணீர் துளி மன்னிப்பு யாசித்து அவள் காலில் விழுந்து தெறித்தது. அவளோ பதறியபடி காலை பின்னால் இழுக்க அவனோ கண்களை குனிந்தபடியே துடைத்து விட்டு கம்பீரமாய் எழுந்து நின்றவன் " அத்தை கூட்டிட்டு போங்க " என்று சொல்லிவிட்டு வெளியேறி மண்டபத்தில் நின்று கொண்டான்.

அவ்வளவு நேரமும் பிரம்மை பிடித்தபடி கண்களில் கண்ணீர் வழிய நின்றவளை அப்போது தான் கோகிலா தன்னுடன் அணைத்து கொண்டார். ஆத்ரேயனின் செயலில் அவர்கள் நல்ல விதமாய் இருப்பதாக கற்பனை செய்து கொண்டார். மாலதியோ ஆத்ரேயனின் காதலை புரிந்து கொண்டும் இவர்களை எவ்வ்வறு சேர்ப்பது என்று புரியாமல் நின்றார். அவன்

கண்ணீரை உணர்ந்த வைஷ்ணவியோ மனதில் பாரத்துடன் அன்னையுடன் சேர்ந்து நடந்தாள்.

அவன் கண்ணீரால் தான் பலவீனப்பட்டதாக உணர்ந்தவள் எப்படி தன்னை நிலைப்படுத்துவது என்று தெரியாமல் தவித்தாள். வளைகாப்பு தொடங்கியதும் ஆதி வர்ஷினிக்கு மஞ்சள் பூசி கையில் காப்பு அணிவித்தான் . ஒவ்வொருவராக அனைவரும் தங்களது சம்பிரதாயத்தை முடித்தனர். ஆனால் யாருக்கும் மனதில் மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை.

அங்கிருந்த உறவினர் ஒருவர் " வைஷு எப்போ உனக்கு? " என்று கேட்க அவள் சற்று நிலை தடுமாறி போனாள். இப்படி ஒரு ஆசை அவள் மனதில் உதித்தது கிடையாது அதனால் தலையை உலுக்கி சமன் செய்தவள்.. " இப்போ என அவசரம். படித்து முடிக்கணும் ' என்று சமாளித்தாள்.

அனைத்தையும் ஆத்ரேயன் கேட்டாலும் அவள் புறம் திரும்பவில்லை.. அவளின் கண்ணசைவே

தன்னை நிலை கொள்ள விடாது என்று அறிந்தவன். அவளை முற்றாக தவிர்த்தான். பட்டு வெட்டி சட்டையில் கம்பீரமாக இருந்தவன் முகம் மட்டும் சோர்வாக இருந்தது. . "பக்கத்தில் போனாலே ரேட் பேசுவா" என்ற நினைப்பில் அவளருகில் கூட அவன் பயத்தில் செல்லவில்லை.

எல்லாம் முடிந்ததும் வர்ஷினியை மலர்வேந்தன் வீட்டுக்கு அழைத்து செல்ல ஆயத்தமானர் . ஆதியால் தான் தாங்கி கொள்ள முடியவில்லை " அம்மா கட்டாயம் கூட்டி போகணுமா ? " என்று சின்ன குழந்தை போல் அடம்பிடித்தவனை ஆத்ரேயனோ விசித்திரமாக பார்க்க வர்ஷினியோ சங்கடத்தில் நெளிந்தாள். " இந்த ஆதிக்கு விவஸ்த்தையே இல்லை எல்லார் முன்னாடியும் என் மானம் போகுது " என்று தலையில் மானசீகமாக அடித்து கொண்டாள்.

" எல்லார் முன்னாடியும் மானத்தை வாங்காம கொஞ்ச நேரம் சும்மா இருடா " என்று மாலதி அவனை அதட்டினாள் மலர்வேந்தன் அதுக்கு "

ரொம்ப தூரம் இல்லை ஆதி .. அடுத்த மதில் தான் " என்றார்.. அதற்கு அவன் தர்மசங்கடத்துடன் சிரித்து வைத்தான்.

வீட்டுக்கு வந்த வைஷ்ணவி யாரிடமும் பேசாமல் அறைக்குள் அடைபட்டு கிடந்தாள் . அடுத்த நாளே அவள் கல்லூரிக்கும் ஆத்ரேயன் சிங்கப்பூருக்கும் சென்றனர்.

நாட்கள் மாதங்களாக வர்ஷினிக்கு இடுப்பில் ஒரு வலி ஏற்றப்பட்டு உடல் முழுதும் பரவியது. காலையில் பூ பறித்து கொண்டு நின்றவள் அம்மா என்று அலறியபடி கீழே விழுந்தாள் . சத்தம் கேட்டு ஆதி வீட்டிலிருந்து ஓடி வர வலி தங்க முடியாமல் கீழே விழுந்து துடித்து கொண்டிருந்த வர்ஷினி கண்ணில் பட்டாள்.. பதறியவன் அவளை தூக்கி கொண்டு காரில் வைத்தியசாலைக்கு பறந்தான்.

தனியார் வைத்தியசாலை என்பதால் பிரசவ அறைக்குள் அவனும் அனுமதிக்கப்பட அவளின் பிரசவ வலியை அருகிலிருந்து பார்த்தான்.

பெண்களை தனது இச்சைக்காக பயன்படுத்தி தூக்கி போட்டு செல்லும் ஆண்களுக்கு பிரசவ வலியின் வேதனை புரிவதில்லை. ஒரு உயிரை அவள் உருவாக்க அவள் படும் வேதனை தெரிவதில்லை. அவளின் கதறலினால் ஆதியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.. "எனக்கு ஒரு குழந்தை போதும் " என மனதில் நினைத்து கொண்டான்.. ஆனால் பெண்ணவளோ எத்தனை வேதனை வந்தாலும் மீண்டும் மீண்டும் குழந்தை பெறுவதற்கு தயங்க போவதில்லை என்று அவன் அக்கணம் அறியவில்லை.சில மணி நேரத்துக்கு பின் வெளிவந்த ஆண் குழந்தையை கையில் ஏந்திய ஆதிக்கு தான் வாழ் நாள் சாதனையை நிலை நாட்டிய போல் பெருமிதம் உண்டானது . குழந்தையின் பிஞ்சு விரல்களின் தீண்டலில் உலகை மறந்தான்.

தனக்கு ஒரு அங்கீகாரத்தை பெற்று கொடுத்த களைப்பில் தூங்கி கொண்டிருந்த வர்ஷினியை அணைத்து நெற்றியில் முத்தமிட்டவன் குழந்தையுடன் நேரத்தை செலவிட தொடங்கினான். குழந்தையின் மருங்கை

விழாவுக்கு ஆத்ரேயனும் வைஷ்ணவியும் வந்து சேர்ந்தனர். வைஷ்ணவி வர இரு வாரங்களுக்கு முன்னரே ஆத்ரேயன் வந்து சேர்ந்தான். வைஷ்ணவிக்கு பரீட்சை இருந்ததால் உடனே வர முடியவில்லை.

கையில் குழந்தையை ஏந்திய ஆத்ரேயனுக்கு மனதில் இனம் புரியாத சிலிர்ப்பு ஏற்றப்பட்டது. அவனுக்கு தன் மன காயங்களுக்கு வடிகாலாக குழந்தை அருகில் தேவைப்பட்டது. அதனை உணர்ந்த ஆதி பால் கொடுக்கும் நேரம் தவிர மற்றைய நேரங்களில் குழந்தையை அவனிடம் கொடுத்து விடுவான். வர்ஷினியும் எதுவும் சொல்வதில்லை. குழந்தையை அருகில் வைத்து கொண்டு அதன் முகத்தை பார்த்துக்கொண்டு இருந்து விடுவான் ஆத்ரேயன். குழந்தையால் அவன் முகத்தில் சந்தோசம் குடி கொண்டது.

இரு கிழமைகள் கழித்து வந்த வைஷ்ணவி,குழந்தை ஆதி வீட்டில் இருப்பதாக கேள்விப்பட்டவள் " அம்மணி புருஷன் இல்லாம இருக்கமாட்டாங்கலாமா?? " என்று

ஆதங்கத்துடன் தாயிடம் கேட்டாள்.

கோகிலாவோ " உன்ன போல எல்லாரும் இருப்பாங்களா? " என்று குத்தலாக பேச. "இதுக்கு மட்டும் குறைச்சல் இல்லை " என்று கூறியவள் முறைத்து விட்டு ஆதி வீட்டுக்கு சென்றாள்.

முன்னறையில் இருந்த மாலதியோ மீண்டும் அவள் தாலி இல்லாமல் வந்திருப்பதை பார்த்து அவளை வரவேற்க விரும்பாமல் முகத்தை திருப்பி கொண்டார். மீண்டும் வைஷ்ணவி அனைத்தையும் கழட்டி வைத்து விட்டிருந்தாள் அவனின் நினைவை மறப்பதற்காக.அவனால் அணிவிக்க பட்ட ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் அவனின் நினைவை அவளிடம் தோற்றுவித்தது.

இதையறியாத மாலதியோ மனதுக்குள் " என் மகன் என்ன செத்தா போய் விட்டான். பொண்ணுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் ஆகாது " என்று நினைத்து கொண்டார்.

" பேரன் வந்ததும் சிலருக்கு நாம கண்ணுக்கே தெரியிரமில்லப்பா " என்று மாலதியை சீண்டுவதற்காக சொன்னவள் விறு விறு வென மாடி ஏறினாள். " சாடிக்கேற்ற மூடி " என்று மாலதி சலித்து கொண்டார்.

அறையை தட்ட முதலில் சங்கடப்பட்டவள் தைரியத்தை வரவழைத்து கொண்டு தட்டியதும் திறந்த வர்ஷினி "இப்போ தான் வழி தெரிஞ்சிச்சா ??? வாடி உள்ள " என்றாள்

" இல்ல அக்கா அத்தான் உள்ளே இருக்கிறார் நான் இங்கேயே நிற்கிறேன் . எனக்கு முதல் நம்ம குட்டி பையன காட்டு " என்றவளிடம் ஆத்ரேயன் அறையை காட்டியவர்ஷினி " அங்கே போய் பார் " என்றாள்.

" அங்கேயா ?... பாப்பாவை அங்கே விட்டிட்டு இதுங்க இரண்டுக்கு romance கேக்குது " என்று நினைத்தவள் அதற்குள் சென்று கதவை திறந்து பார்த்தாள். வெறும் காற்சட்டையுடன் ஆத்ரேயன் குழந்தையை பார்த்தபடி தூங்க அவனருகில்

குழந்தை அழகாக தூங்கி கொண்டிருந்தது.

" இவனுக்கு எப்போவும் tshirt போட்டு பழக்கமில்லையா ?? " என்று மனதுக்குள் நினைத்து கொண்டிருந்தவள்

மெதுவாக நெருங்கி வந்து எட்டி பார்த்தாள். குழந்தையை கண்டதும் அணைக்க வேண்டும் என்ற ஆவலில் அவனை தாண்டி குழந்தையை போனவளின் கையை அவன் பிடித்திருந்தான். ஆதி கூட அவனிடம் சொல்லி விட்டு தான் குழந்தையை தூக்கி கொண்டு செல்வான். தன்னிடம் சொல்லாமல் குழந்தையை தொட வந்தவளின் கையை கன்றி போகுமளவுக்கு இறுக்கி பிடித்தபடியே எழுந்து உட்கார்ந்து யார் என கண்ணை கசக்கி பார்த்தான். வைஷ்ணவி என்றதும் கையை விட்டவன் அவளுக்கு இடம் கொடுப்பதற்காக எழுந்து முன்னால் இருந்த சோபாவில் இருந்து கொண்டான்.

" ஐயோ இவன் முன்னாடியா நான் குழந்தையை கொஞ்சனும்... கொஞ்சம் எழும்பி வெளியே போக

மாட்டியாடா தடியா " என்று முதலில் திட்டியவள் பின் தன்னை மறந்து குழந்தையின் பிஞ்சு விரல்களில் தன்னை தொலைத்து குழந்தையுடனேயே ஒன்றி போனாள்.

காலுக்கு மேல் கால் போட்டு கை கட்டி வேற்று மார்புடன் அனைத்தையும் உணர்ச்சியற்ற முகத்துடன் பார்த்து கொண்டிருந்தான். தனது சுண்டு விரலை குழந்தையின் கைக்குள் அடக்கிய படி அதனை மோர்ந்து கொண்டு அவன் படுத்த இடத்திலேயே குழந்தையை அணைத்து கொண்டு இன்னொரு குழந்தை போல நெருங்கி படுத்தாள்.

குழந்தை தூக்கம் கலைந்து அழ தொடங்க பதறி எழுந்தவள் என்ன செய்வதென்று தெரியாமல் ஆத்ரேயனை பார்த்தாள். அவள் எழும்பிய போதும் ஆத்ரேயன் அவள் மேலிருந்த பார்வையை அகற்றவில்லை. " எப்போ பார்த்தாலும் முழுங்குற போலவே பார்த்துகிட்டு.. பொருக்கி... குழந்தை அழுகுது கொஞ்சமாச்சும் அசையிறானா பாரு. " என்று மனதுக்குள்

திட்டியவள் எப்படி குழந்தையை தூக்குவது என்று தெரியாமல் திண்டாடினாள். அவளால் குழந்தையை தூக்க முடியும் என்று நினைத்தவன் அவள் திண்டாட்டத்தை பார்த்ததும் " மூணு பிள்ளை பெற வேண்டிய வயசில பிள்ளை தூக்க தெரியாம இருக்கிறத பாரு " என்று அவளுக்கு கேட்குமாறு முணுமுணுத்தவன் அவளை நோக்கி அழுத்தமான காலடிகளுடன் வந்தான்.

அருகில் வந்த கண நேரத்தில் அவளை தாண்டி குழந்தையை தூக்கி தழுவி இருந்தான். அவன் அணைப்பில் அழுகையை நிறுத்திய குழந்தை நன்றாக தூங்கியது. " இவன் மட்டும் எப்படி அழகாக தூக்குகின்றான் ? " என குழந்தையை பார்த்தபடி ஏங்கியவளின் ஏக்கத்தை புரிந்தவன் எதுவும் பேசாமல் குழந்தையை அவள் புறம் நீட்டினான்.

அவளும் கையை அவன் போல தள்ளி நீட்ட அவளை பார்த்து முறைத்தவன் " முதல் தரம் தூக்கும் பொது இப்படி தள்ளி யாரும்

தூக்குவார்களா? உன் மார்போடு அணைத்து பிடி ? " என்று கடினமாக கூறியவன் அவளை நெருங்கி நின்று குழந்தையை ஒப்படைத்தவன் எவ்வாறு குழந்தையை தாங்க வேண்டுமென அவள் கைகளை சீர்படுத்தி விட்டான்.

" ரெண்டு கிழமைக்கு முன்னே வந்திட்டு பண்ணுற அளப்பறைய பாரு " என்ற அவளின் முணுமுணுப்பு அவனுக்கு தெளிவாக கேட்டது. அவளை முறைத்தபடியே அவளருகில் நெருங்கி நின்றான் குழந்தைக்காக. . அவன் அருகாமை அவளுக்கு அவஸ்தையாக இருந்தாலும் குழந்தைக்காக அதனை பொறுத்து கொண்டாள். அவளை முறைத்து பார்த்தபடியே குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டான்.

இது தான் சந்தர்ப்பம் என்று நினைத்தவள் "எப்போ விவாகரத்து கிடைக்கும்?" என்றாள். அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றியவன் குழந்தையை பார்த்தபடியே " வக்கீலிடம் கொடுத்து court க்கு போடா சொல்லி விட்டேன் ... படிக்கும் நீ court க்கு வந்து அலைய

தேவையில்லை. எப்படியாவது case ஐ முடிக்க பார்க்கிறேன் என்று வக்கீல் சொன்னார். அடுத்த வருடம் கிடைத்து விடும். " என்றான். நீதி மன்ற வழக்குகளை பற்றி அறிவில்லாத அவளும் சரி என்று தலையை ஆட்டினாள். "அப்போ நான் நினைத்தபடி நீங்க மன்னிப்பு கேட்டது நடிப்பா? " என்று மனதுக்குள் கேட்டு கொண்டாள்.

அந்நேரம் பார்த்து ஆதி குழந்தையை கேட்டு வந்தான். வைஷ்ணவி குழந்தையை அணைத்து இருந்ததை பார்த்து எப்படி வாங்குவது என்று சங்கடப்பட , அவளுக்கும் அதே சங்கடம்இருந்தது. ஆத்ரேயனோ அதை கவனிக்காமல் " வா ஆதி குழந்தையை வாங்கிக்கோ " என்ற படி குழந்தையை கொஞ்சி கொண்டிருந்தான்.

வைஷ்ணவியோ " இந்த நெட்டையன் வாங்கி கொடுக்க வேண்டியது தானே " என்று அர்ச்சித்து விட்டு ஆத்ரேயனை கலக்கமாக பார்த்தாள். அவள் தன்னை பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தவன் "இவ எதுக்கு நம்மள இப்படி

பார்க்குறா ?" என்று யோசித்த படி அவளின் கலக்கமான முகத்தை பார்த்து "என்ன" என்று கேட்க அவளோ கண்களால் குழந்தையையும் ஆதியையும் காட்டினாள்.

அவள் கண்களால் சொல்லியதை புரிந்தவன் " இதுக்கு மட்டும் நான் வேணுமாக்கும் " என்று ரகசியமாக கேட்டபடி வந்த சிரிப்பை அடக்கி கொண்டு குழந்தையை வாங்கி ஆதியிடம் கொடுத்தான். . " இனி இங்கு நமக்கென்ன வேலை " என்று நினைத்தவள் ஆதி பின்னால் ஓடி சென்றாள். குழந்தையின் மருங்கை நிகழ்வு நல்ல விதமாக முடிய வைஷ்ணவி கல்லூரிக்கு சென்று படிப்பை தொடர்ந்தாள். ஆத்ரேயனும் தனது தொழிலை பார்க்க சென்று விட்டான்.

சில ஆண்டுகள் கழித்து கல்வியை முடித்து வந்த வைஷ்ணவி தந்தையின் நிறுவனத்துக்கு செல்ல விருப்பமில்லாமல் சில வேலைகளுக்கு apply பண்ணி விட்டு வீட்டிலேயே முடங்கி கிடந்தாள். ஆத்ரேயன் இரு வாரம் ஓய்வெடுக்க வீட்டுக்கு வந்திருந்தான். அப்போதும் அவள் மலர்வேந்தன்

வீட்டிலேயே இருக்க அனைவரும் சேர்ந்து இருவரிடமும் பேசுவதாக முடிவெடுத்தனர். ஆத்ரேயனை அழைத்து கொண்டு மாலதி மலர்வேந்தன் வீட்டுக்கு வந்தார். எதுக்கு அழைக்கிறார் என்று தெரியாமல் அவனும் வந்தான்.

கோகிலா அழைத்ததும் கீழே வந்தவள் "சரி நமக்கு ஆப்பு ரெடி " என்று மனதுக்குள் கவுண்டர் கொடுத்தாள் . அவள் வருவதை உணர்ச்சி துடைத்த முகத்துடன் பார்த்து கொண்டிருந்தான். அனைவரும் இருந்ததும் கொஞ்ச நேரம் கழித்து மலர்வேந்தன் "வைஷ்ணவி என்ன முடிவு பண்ணி இருக்க?" என்று கேட்க அவளோ "எதை பற்றி ?" என்று கேட்டாள்.

"திமிர் புடிச்சவ" என்று மனதுக்குள் திடியவர் "ஏன் நீ ஆத்ரேயனுடன் சேர்ந்து வாழ கூடாது?" என்று நேரடியாக கேட்டார். " விவாகரத்து பெற்ற பிறகு சேர்ந்து வாழ்ந்த ஊர் தப்பா பேசுமப்பா " என்று சொல்ல அனைவரும் அதிர்ந்து போனார்கள்.

"விவகாரத்தே ஆகவில்லை இவ வேற ஓவர் performance கொடுக்கிறாளே " என்று மனதுக்குள் வைஷ்ணவியை கடிந்தபடி இருந்தான் ஆத்ரேயன். "என்னடி சொல்லுற?" என்று சீறினார் மலர்வேந்தன். "உண்மையை தான் சொல்றன். எனக்கு இந்த வாழ்க்கை வாழ இஷ்டமில்லை" என்றவளின் கன்னத்தை பதம் பார்த்தது மலர்வேந்தனின் கை. அதை யாரும் எதிர் பார்க்கவில்லை. வைஷ்ணவியை அடித்ததால் வந்த கோபத்தை கட்டு படுத்தி கொண்டிருந்தான் ஆத்ரேயன். மலர்வேந்தன் என்பதால் எதுவும் அவனால் பேச முடியவில்லை.

" அந்த தம்பி உன் பின்னால் அலைகிறார் . உனக்கு அவ்வளவு திமிரா? எந்த வாழா வெட்டியும் என் வீட்டில் இருக்க தேவையில்லை முதலில் வெளியே போ " என்று சீறினார்.

தந்தை முதல் முறை அறைந்ததில் நிலை குலைந்தவள்.. அவர் வார்த்தைகளில் துவண்டு போனாள். அவரையும் கோகிலாவையும் முறைத்து விட்டு உடுப்புகளை எடுக்க மேலே

சென்றவளின் பின்னால் ஆத்ரேயன் ஓடி அவள் அறைக்குள் வந்தான். அவனுக்கு பயம் முதல் போல் தற்கொலை முயச்சி செய்திருவாளோ என்று.

மலர்வேந்தன் அப்படி கூறியது அவள் ஆத்ரேயனிடம் செல்லட்டும் என்ற எண்ணத்தில்.. அனால் அவளுக்கோ அவரின் கூற்றால் ஆத்ரேயன் மேலான கோபம் பல்கி பெருகியது.அவள் உடுப்பு அடுக்குவதை பார்த்து அதிர்ந்தவன் "எங்கே போக போறா?" என்று பதட்டமாக கேட்டான். அவன் கையை உதறியவள் " எல்லாம் உன்னால தான்,,,, என் அப்பா என்னை முதல் முறை அறஞ்சிருக்கிறார் .. அத்தை கூட என்னோட பேசுவதில்லை .. எல்லாரும் என்னை ஏதோ குற்றவாளியை பார்க்கிற போல பார்க்கிறாங்க .. ஆனா உன் மனசுக்கு நல்லாவே தெரியும் யார் குற்றவாளி என்று.. எங்கப்பா என்னை துரத்தின பிறகு இந்த வீட்டில எனக்கென்ன வேலை.. " என்று விம்மியவள்." என்னை பார்த்து வாழா வெட்டி என்றாங்க .. ஆனா என்னை வாழாம ஆகினாதே நீ

தானே.. அது யாருக்கும் தெரியலையே... எல்லோர் முன்னிலையிலும் நல்லவன் வேஷம் போடுறா... " என்ற உயிர் கொள்ளும் வார்த்தைகளில் அவன் கை அவளை விட்டு தானாக விலகியது.

அவன் எதுக்கும் அஞ்சாதவன். நல்லவனாக நடிக்குமளவுக்கு அவனுக்கு நல்ல பெயர் இருந்ததில்லை. அந்தரங்க விஷயங்களை பகிர முடியாததால் தன் தவறை கூற முடியாமல் இருந்தான். அதனை வைஷ்ணவி இவ்வாறு நினைப்பாள் என்று கொஞ்சமும் நினைக்கவில்லை.

அவன் யோசிக்கும் நேரத்தில் உடைகளை அடுக்கி முடிந்தவள் வெளியே செல்ல போக. அவள் கையை பிடித்தவன் "வா நானே நடந்தது அனைத்தையும் எல்லாரிடமும் சொல்றன். நான் எப்போவும் அதெல்லாம் மறைக்க நினைச்சது கிடையாது. அது நம்ம personal அதால தான் சொல்லல.. இதுக்கு மேல மறைக்கணும் என்று எனக்கு அவசியமில்லை " என்றான் கடினமான

முகத்துடன்.

இப்போது இடி அவள் தலையில் விழும் நேரம். என்ன தான் கோபம் இருந்தாலும் தன் கணவன் மற்றவர் முன்னிலையில் தலை குனிந்து நிக்க அவள் விரும்பவில்லை. சொல்லி விடுவானோ என்று பயந்தவள் "இப்போ மட்டும் அது அந்தரங்கம் இல்லையா ?" என்று கேட்டாள்.

அவள் கேள்வியில் சலித்தவன் "உனக்கு என்ன தாண்டி வேணும்?" என்று கேட்டான் ஏக்கத்துடன். "நிம்மதி" என்றாள். "ஒண்ணு விவாகரத்து அது இல்லாட்டி நிம்மதி.. இதுகெல்லாம் நான் எங்கே போவேன் ?" என்று யோசித்தவன். "அதுக்கு நான் இப்போ என்ன பண்ணனும்?" என்று கேட்டான்.

"என்ன வீட்டை விட்டு போக விடணும்:" என்றாள். "சரி நீ போ ... நான் எல்லார்ட்டையும் உண்மையை சொல்லுவேன் " என்றான். அவனை முறைத்தவள் "இப்போ நான் என்ன பண்ணனும்" என்று கேட்டாள். "அப்படி வா வழிக்கு " என்று மனதில் நினைத்தவன் நீ எங்க வீட்டை வந்து

இரு... நான் இன்றே போய்விடுவேன் " என்றான். "முடியாது" என்றவளிடம் தோலை உலுக்கி "உன் இஷ்டம் ஆனால் நான் உண்மையை சொல்வேன் " என்றான்.

" உண்மைய சொன்ன நான் செத்து போவேன்" என்றபடி கீழே வந்தவள் " வைஷு .. " என்று ஆரம்பிக்க போன கோகிலா வை கை நீட்டி தடுத்தபடி " இனி எனக்கும் இந்த குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்ல ... என்ன புரிஞ்சுக்காத நீங்க யாரும் எனக்கு வேணாம்.... என்ன இனி யாரும் என்னை கட்டாயப்படுத்த முடியாது ... அப்படி கட்டாய படுத்தினால் என்னை உயிருடன் பார்க்க முடியாது." என்றவள் யாரையும் பார்க்காமல் விறு விறு வெளியேறினாள். அவள் ஏற்கனவே தற்கொலை முயட்சி செய்ததால் கையாளாகா தனத்துடன் எல்லாரும் அவள் செல்வதை பார்த்து கொண்டிருந்தனர் ஆத்ரேயன் உட்பட.

வெளியேறி சென்றவள் மகளிர் விடுதி ஒன்றில் தங்கி கொண்டாள் .. அனைவரும் இருந்து

அனாதையாக வாழ காரணம் ஆத்ரேயன் என்ற எண்ணம் மட்டும் அவள் மனதில் ஓங்கி இருந்தது . அவன் மேல் உள்ள காதல் மொத்தத்தையும் அவளே வெறுப்பாக மாற்றிக்கொண்டாள். பலவித வேலை interview என்று அலைந்து திரிந்தாள். அவள் வங்கி கணக்கில் எடுக்க எடுக்க காசு பெருகியது. மலர்வேந்தன் பாசத்தில் போடுகிறார் என்று நினைத்தவளுக்கு ஆத்ரேயன் காதலில் போடுகிறான் என்று உண்மையை நினைக்க தோன்றவில்லை.

ஒரு நாள் அவள் apply பண்ணாத சிங்கப்பூர் அர்ஜுன் குரூப் ஒப் கொம்பனிஸ் இலிருந்து appointment letter வந்தது.. apply பண்ணாமல் interview வைக்காமல் இதெப்படி சாத்தியம் என்று யோசித்தவள் ஆத்ரேயனின் வேலையாக இருக்குமோ என்று சந்தேக பட்டாள். ஆனால் விசாரித்ததில் அது ஆத்ரேயனுக்கு எதிரான கம்பெனி என்று அறிந்தவள் அங்கு வேலைக்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கு தெரியவில்லை தொழில் போட்டியாளர்களான அர்ஜுனும் ஆத்ரேயனும் நிஜ வாழ்வில் நண்பர்கள் என்று.

யுகம்-20

சிங்கப்பூர் வந்தவளது ஒவ்வொரு அசைவையும் அவளுக்கே தெரியாமல் கண்காணித்து கொண்டிருந்தான்.. அப்போது தான் அவனது பிரிவு அவளுக்கு எந்த தாக்கத்தையும் உருவாக்கவில்லை என்று புரிந்ததும் அவனுக்கு அவள் மேல் கோபம் பெருகியது. எப்படியாவது அவளை தன்னிடம் கொண்டு வர வேண்டும் என்பதற்காக தான் அவன் அந்த கம்பெனியையே வாங்கினான்.

அப்படி இருந்தும் முதல் நாள் கூட அவனை பார்த்தவள் எந்த உணர்ச்சியும் காட்டாமல் இருக்க அவனுக்கு அவள் மேல் கோபம் மேலும் அதிகரித்தது. அதற்காகவே அவளை சீண்டினான்.. ஏன் தன்னால் அவளை போல் இருக்க முடியவில்லை என்று தன் மீதும் கோபம்

கொண்டான். கோபத்தால் அவளை மீண்டும் காயப்படுத்தி விடுவோமோ என்று பயந்து முடிந்த வரைக்கும் அவளை தவிர்த்தான்.. சில நேரம் அவனையும் மீறி அது வெளி பட்டது.. அவன் கோபம் அவளின் காதலுக்காக மட்டுமே.

அப்போது தான் அவள் கார்த்திக்கை காதலிப்பதாக கூறினாள். அதை பொறுத்து கொள்ளா முடியாமல் தான் தன்னை மீறி முத்தமிட்டான் . அவள் ரேட் பேசியதிலிருந்து அவளை அணைக்கவோ முத்தமிடவோ கூடாது என்று இருந்த அவன் விரதம் அவளின் உதாசீனத்தால்தோல்வியில் முடிந்தது. .

அடுத்த நாள் காலையில் எழுந்தவனுக்கு தலை வலிப்பது போல இருந்தது. எழும்பி இருந்து நடந்ததை யோசித்தவன் "அவளுக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தா என்கிட்டயே அந்த தடிப்பையன் கார்த்திக்கை காதலிப்பதாக சொல்லி இருப்பாள். அப்போ என் மேல் உனக்கு உண்மையாவே காதல் இல்லையா?..... உன்னை போல என்னால இருக்க முடியலடி.. என்னை

விட அந்த கார்த்திக் கிட்ட என்னடி இருக்கு ? ஆனா இனி பாரு என் ஆட்டத்தை ...என்னை காதலிக்காத நீ எனக்கு வேணாம்.. இனி உன்னை நிம்மதியாக இருக்கவே விட போறதில்லை.... உன் திமிரை அடக்கமா விடமாட்டேண்டி... " என்று அவளுக்கு சரமாரியாக திட்டியவன் குளித்து ஆயத்தமாகி office க்கு செல்ல ready ஆனான்.

காலையில் விரைவாக எழுந்த கீர்த்தனா, நன்றாக தூங்கி கொண்டிருந்த வைஷ்ணவியை பார்த்து பெரு மூச்சு விட்டவள் குளித்து ஆயத்தமாகி இருந்தாள். அப்போதும் வைஷ்ணவி எழும்பவில்லை. வைஷ்ணவி மீது கோபமாக இருந்ததால் அவளும் எழுப்பாமல் இருந்தாள். தனது நட்பை கேவலப்படுத்திவிட்டாள் என்ற உணர்வு அவளுக்கு மேலோங்கி இருந்தது. "எந்த பெரிய விஷயத்தை என்கிட்டே இருந்து மறைச்சுட்டா? ... என் மேல உன் நம்பிக்கை அவ்வளவு தானா?" என்று மனசுக்குள் திட்டியபடி ஹாலுக்குள் உக்காந்திருந்தாள். நேரம் சென்றாலும் அவள்

எழும்பாமல் இருக்க விறு விறு வென சென்றவள் கொஞ்சம் கூட பாவம் பார்க்காமல் பிரிட்ஜ்ஜிலிருந்த குளிர் நீரை எடுத்து அவள் மீது ஊற்றிவிட்டு திரும்பி பார்க்காமல் ஹாலுக்குள் சென்று உட்கார்ந்தாள்.

"லூசாடி நீ?" என்று திட்டியபடி பதறி எழுந்தவளுக்கு அப்போது தான் நேற்று நடந்தது எல்லாம் நினைவு வந்தது. "இனி இவளை எப்படி சமாளிக்கிறது? " என்று நெற்றியை நீவி விட்டவள் குளித்து வெளிக்கிட்டு வந்திருந்தாள். கீர்த்தனா வைஷ்ணவியை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. அந்நேரம் பார்த்து கார்த்திக்கும் வந்து சேர்ந்து கதவை தட்டினான்.

கதவை திறந்த வைஷ்ணவியை கட்டி அணைத்தவன் "miss you வைஷு பேபி" என்றான் கீர்த்தனாவை பார்த்தபடி. அவன் அணைப்பில் தடுமாறிய வைஷ்ணவி "இவன் வேற நேரம் காலம் தெரியாம over acting பண்ணுறான்" என்று நினைத்தவள் அவனை இரு கைகளாலும் தள்ளி நிப்பாட்டியவள் "போவமா ?" என்று கேட்டுவிட்டு

முன்னே சென்றாள் .

கார்த்திக்கின் நடிப்பை பார்த்த கீர்த்தனாவோ வந்த சிரிப்பை அடக்கி கொண்டு அவனை பார்க்காமல் lift அருகில் சென்றாள். அந்நேரம் பார்த்து ஆத்ரேயனும் அவ்விடத்துக்கு வர வைஷ்ணவிக்கு இதயமே நின்று விடும் போல பயம் உருவானது. "என்ன நடக்க போகுதோ?" என்று தலையை குனிந்தவள் நிமிராமலே லி◌ப்டுக்காக காத்திருந்தாள். அவனோ நேற்று நடந்துக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாத போல கார்திக்கையும் கீர்த்தனாவையும் பார்த்து சினேகமாக புன்னகைத்தான். கீர்த்தனா ஒரு தர்மசங்கடமாக சிரித்து வைத்தாள். "குட் மோர்னிங் சார்" என்றான் கார்த்திக்.

"உனக்கு குட் மோர்னிங் இல்லடா பேட் மோர்னிங் " என்று கீர்த்தனா நினைத்து மனதுக்குள் சிரித்தாள். ஆத்ரேயனும் எதுவும் நடக்காத போல பதிலுக்கு விஷ் பண்ணினான். கார்த்திக்குடன் சகஜமாக ஆத்ரேயன் பழகுவது கீர்த்தனாக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்று

நடந்தது கனவோ என்றும் ஒரு கணம் யோசித்தாள். கீர்த்தனா யோசனையுடன் ஆத்ரேயனை பார்ப்பதை கண்ட கார்த்திக்கோ "எப்போ பாரு அவனை சைட் அடிச்சுகிட்டு " என்று மனதில் கருவியவன், தனது நாடகத்தை ஆரம்பிப்பதற்காக வைஷ்ணவியிடம் திரும்பி "வைஷு டார்லிங் ஏன் கண் எல்லாம் வீங்கி இருக்கு ? நைட் என்ன நினச்சு தூங்கலாயா?" என்று ஏக்கமாக கேட்டான்.

"அட பாவி பயலே கார்த்திக் .. நேரம் காலம் தெரியாம ரொமான்ஸ் பண்ணுறியேடா .....ஏன்டா இப்படி கொஞ்சி கொஞ்சி பேசி ஓவர் performance கொடுக்கிற? இந்த நெட்டையன் வேற நிக்கிறான்... ஐயோ இப்போ என்ன செய்வேன்?" என்று மனதுக்குள் பயத்தில் உளறியவள் வெளியில் சிரித்தபடி "ஒண்ணுமில்ல கார்த்திக் தலைவலி" என்றாள் .

அந்த ஏக்கமான குரலை சகிக்க முடியாமல் முகத்தை சுளித்த கீர்த்தனா ஆத்ரேயனை பார்த்தாள். அவன் உணர்ச்சி துடைத்த

முகத்துடன் கீர்த்தனாவை பார்த்தான். வைஷ்ணவியின் பக்கம் அவன் மறந்தும் திரும்பவில்லை.. எப்படி கார்த்திக்கிடம் விஷயத்தை சொல்வது என்று தெரியாமல் கீர்த்தனா யோசித்தபடி இருந்தாள்.

lift வந்ததும் உள்ளே ஏறியவர்கள் யாரும் யார் முகத்தையும் பார்க்கவில்லை. கார்த்திக் மட்டும் act பண்ணுறேன் பேர்வழி என வைஷ்ணவியை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தான். அதை பார்த்து உள்ளே கொதித்துக்கொண்டிருந்த ஆத்ரேயனின் மனம் "நானும் பாவம் போனா போகுது என்று பார்க்கிறேன். என் கிட்ட அடி வாங்காம அடங்கமாட்டான் போல இருக்கே....." என்று யோசித்தவன் மனதை கட்டுப்படுத்தி கொண்டான். கீர்த்தனாவும் மனதுக்குள் அதையே தான் நினைத்து கொண்டிருந்தாள்.

காரில் தோண தோண என்று பேசிய கார்த்திக்கை " கொஞ்சம் வாய மூடிட்டு வாரியா ?" என்று கேட்டு அடக்கிய வைஷ்ணவி

யோசனையுடனேயே அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தாள். ஆத்ரேயனை சந்தித்து பேச வேண்டும் என நினைத்து கொண்டிருந்தவளுக்கு காலையிலிருந்து எந்த வேலையும் ஓடவில்லை. ஆத்ரேயன் கொஞ்சம் free ஆனதும் "may I come in ?" என்று கேட்டபடி உள்ளே நுழைந்தாள்.

"yes come in " என்றவன் laptop இலிருந்து கண்ணை எடுக்காமல் கையால் பேச சொல்லி சைகை காட்டினான். "திமிர பாரு" என்று யோசித்தவள் "எனக்கு டிவோர்ஸ் வேணும் " என்றாள். நிமிர்ந்தவன் வலது கையை நாடியில் குத்தியபடி அவளை புருவங்களை சுருக்கி சந்தேகமாக பார்த்தான். "இவன் எதுக்கு நம்மள இப்பிடி பார்க்கிறான் " என்று யோசித்தவள் அவன் பார்வையை தாங்கி நின்றாள்.

பெருமூச்செடுத்து "வெல் வைஷ்ணவி" என்றபடி மேசையில் கையை குற்றி எழுந்தவன். கோர்ட்டை கழட்டி கதிரையில் தூக்கி போட்டான் . டையை கீழே ஒற்றை கையால் இழுத்து

லூசாக்கிய படி அவளருகில் வந்தான். அவளருகில் அவன் வரும்போது அவள் இதயம் நின்று துடித்தது. அவளருகில் வந்ததும் அவள் முன்னால் இருந்த மேசையில் கால்களை குறுக்கே வைத்தபடி சாய்ந்து நின்று முழு நீள ஷர்ட் கைகளை முழங்கை வரை மடித்து கொண்டே அவளை கூர்ந்து நோக்கி "என்ன கேட்டீங்க ? டிவோர்ஸ் ஆ?" என்றான்.

அவனின் செய்கையில் முதலில் தட்டு தடுமாறியவள் "டிவோர்ஸ் தான் " என்றாள் அவன் கண்ணை தைரியமாக நோக்கியபடி. கையை கட்டியபடி அவளை பார்த்தவன் "இந்த அலுவலகத்தில் நீங்க என் employee நான் உங்க CEO ? நான் எப்படி உங்களுக்கு டிவோர்ஸ் தர முடியும்?" என்று புருவத்தை உயர்த்தி கேட்டான். அவன் பேசுவது புரியாமல் அவள் நோக்க. மேசையில் எட்டி தனது கார் key யை எடுத்தவன் "இது office ... உங்க official விஷயம் மட்டுமே என்னிடம் பேசலாம்.. ஆனால் அது கூட உங்களால் என்னிடம் பேச முடியாது. உங்க எல்லா விஷயமும் அனாமிகா தான் handle

பண்ணுறவங்க. எது என்றாலும் அவங்க கிட்ட தான் நீங்க பேச முடியும். உங்க personal விஷயம் பேச இது இடம் இல்லை. உங்க கூட எல்லாம் வெட்டி கதை பேச எனக்கு நேரமில்லை.hope you understand " என்றவன் விறு விறு வென வெளியேறினான்.

அவளுக்கோ இப்படி அவன் முகத்திலடித்தபடி பேசியது அவமானமாக இருந்தது. "பெரிய நினைப்பு தான் " என்று உதட்டை சுளித்தபடி கோபமாக வெளியேறி தனது கேபினுக்குள் சென்று அமர்ந்தாள். வந்திருந்தவளுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. என்ன செய்வது என்றே யோசனையாக இருந்தது. கீர்த்தனாவும் கதைக்காமல் இருப்பது கவலையளிக்க அவளுடன் பேச அவளறைக்கு சென்றாள்.

அவள் வந்ததை அறிந்த கீர்த்தனா " வாங்க miss வைஷ்ணவி sorry mrs .வைஷ்ணவி வேலை சம்பந்தமாக ஏதும் பேசணுமா ?" என்று கேட்டாள். "ரெண்டு பேரும் சொல்லி வச்சு பேசுறாங்களோ " என்று நினைத்தவள். "ஒண்ணுமில்ல miss

கீர்த்தனா " என்று வெளியேறிவிட்டாள் .

சாப்பிட சென்றவள் கார்த்திக்குடன் அமர கீர்த்தனா தனியாக அமர்ந்து கொண்டாள். கோபம் கொப்பளிக்க அவளருகில் சென்றவள் " என்னடி உனக்கு இப்போ பிரச்சனை?" என்று கேட்டாள். "ஒண்ணுமில்லயே " என்று சாப்பிட தொடங்கியவளை பார்க்க வைஷ்ணவிக்கு கோபம் எகிறியது. "என்ன பார்த்தா உனக்கு நக்கலா இருக்கா ?" என்று கெட்டவளிடம் "இந்த கம்பெனி ceo ஆத்ரேயன் சார் ட wife ஐ பார்த்து நான் ஏன் நக்கலா யோசிக்க போறேன் ?" என்று சாப்பிட்டபடி கேட்டாள். "நீயும் என் மனசை வதைக்காதேடி" என்று கண்களில் நீர் நிரம்ப கூறியவளை பார்க்க கீர்த்தனாக்கும் பாவமாக இருந்தது. அந்நேரம் பார்த்து அங்கு கார்த்திக் வந்து சேர்ந்தான்.

கண்ணீர் நிரம்பிய வைஷ்ணவியின் கண்களை பார்த்தவன் "உன்னை யாரு என்ன சொன்னா என்று சொல்லு பேபி,,, நான் அவங்கள உண்டு இல்ல என்று பணிவிடுறன் " என்று கீர்த்தனாவை

பார்த்தபடி கூறினான். "இவன் ஒருத்தன் எப்போ பார்த்தாலும் குட்டைய குழப்பி கொண்டே இருக்கிறான். " என்று வைஷ்ணவி யோசிக்க, கீர்த்தனா வைஷ்ணவியை பார்த்து "இவன் ஒருத்தன் காணும்.. உன் life total கிளோஸ் " என்றபடி சாப்பிட தொடங்கினாள்.

அதை கேட்டு கடுப்பாகிய கார்த்திக் "ஏன் என்ன கல்யாணம் பண்ணினா அவ சந்தோஷமா இருக்க மாட்டாளா?" என்று கோபத்துடன் கீர்த்தனாவை பார்த்து கேட்டான். அவனை முறைத்து பார்த்த கீர்த்தனா பெருமூச்சை விட்டபடி எழுந்து சென்றாள். அதை பார்த்த கார்த்திக் "அவளுக்கு பொறாமை வைஷு " என்றான். வைஷ்ணவிக்கு அவனை திட்டவும் மனசு வரவில்லை. அவனை நடிக்க சொன்னதே அவள் தானே, அதனால் அவனை உணர்ச்சியற்ற பார்வை பார்த்துவிட்டு வாங்கிய சாப்பாட்டை சாப்பிடாமல் வெளியேறினாள்.

பின்னேரம் flat க்கு சென்றதும் ஆத்ரேயனுடன் கதைக்க வேண்டுமென நினைத்த வைஷ்ணவி

தனியாக அவன் வீடு தேடி சென்றாள். அவன் கதவை தட்டியதும் அப்போது தான் களைத்து விழுந்து வந்தவன் கதவை திறந்தான். அவளை பார்த்ததும் "பச் "என்று சலித்தபடி "உள்ளே வா" என்று சொல்லிவிட்டு sofa வில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தான். "ரொம்பத்தான் சலிச்சுகிறான் " என்று யோசித்தவள் உடனே "எனக்கு விவாகரத்து வேணும் " என்றாள்.

"இவளுக்கு விவாகரத்து என்றதை தவிர எதுவும் வாயில வராதா?" என்று சலித்தவன். "நீ apply பண்ணு நான் தாறன். " என்றான் சர்வ சாதாரணமாக.. "அப்போ இன்னும் apply பண்ணலயா?" என்று அதிர்ச்சியுடன் கெட்டவளிடம் "இல்லை " என்று தலையை மட்டும் ஆடியவன். "coffee போட போகிறேன்,... உனக்கும் வேணுமா?" என்று கேட்டான்.

"இவனுக்கு எதிலும் அக்கறையே இல்லையா?இந்த நேரம் காபி பற்றி பேசுகிறான்" என்று மறுக்கியவள் "நான் உங்க கிட்ட பேசணும்" என்றாள். "இப்போவும் பேசிட்டு தானே இருக்க"

என்றபடி கிச்சனுக்குள் சென்றவனை பின் தொடர்ந்தவள் "அப்போ என் கிட்ட பொய் சொன்னிங்களா?" என்று கேட்டாள். "yes of course " என்றவன் காபி போட ஆயத்தமானான். அவளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. இதற்கு மேல் அங்கு நிக்க தயங்கியவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

கீர்த்தனாவும் அவளுடன் கதைக்காமல் தனது வேலையை பார்க்க மனசுடைந்தவள் விம்மி விம்மி அழ தொடங்கினாள். அவள் அழுவதை பார்த்த கீர்த்தனா மனசு பொறுக்காமல் "இப்போ எதுக்கு அழுறா?" என்று கேட்டபடி அணைத்து கொண்டாள்.

"உன் கிட்ட என்னை பற்றி சொல்லாதது தப்பு தான். ஆனால் நானே மறக்க நினைக்கிற விஷயத்தை எதுக்கு உன்னட்ட சொல்லணும் என்று தான் நான் .சொல்லல. " என்று மன்னிப்பு யாசித்தவளிடம். "சரி விடு" என் கிட்ட சொல்லாதது எனக்கு கோபம் தான் , ஆனா ஏதோ காரணத்துக்காக தான் சொல்லாம விட்டிருப்பா .

Its ok .. இப்போவும் என்கிட்டே சொல்ல தேவையில்லை.... உனக்கு சொல்ல தோணுற நேரம் சொன்ன போதும் " என்று தலையை வருடினாள். நண்பியின் அன்பு ஆறுதலை தர பழைய நிலைக்கு வந்த வைஷ்ணவி கீர்த்தனாவுடன் சந்தோஷமாக பேசியபடி நேரம் கடத்தினாள் .

காதல் மலரும்.....

<u>யுகம்-21</u>

பேசும் போது வைஷ்ணவி கார்த்திக்கின் பேச்சை எடுத்தாள். கீர்த்தனவோ " அந்த தடியனை தானே நீ லவ் பண்ணுறாய் " என்று கூறி கண் சிமிட்டி சிரித்தாள்.

"சும்மா இருடி" என்று அவள் முதுகில் அடி போட்டவள் " உனக்கு உண்மையாவே அவனை பிடிக்கலையா ?? " என்று கேட்டாள்.

" பிடிக்கல என்று இல்ல ஆனா அவன் பண்ணின வேலைக்கு கொஞ்ச நாள் நல்லா அவஸ்த்தை படணும் ... நீங்க உங்க acting ஐ continue பண்ணுங்க " என்றால் குறும்பாக.. வைஷ்ணவியும் அவளுடன் சேர்ந்து சிரித்தாள்.

அனாமிகா ஆத்ரேயனை எப்படி காதலிக்க வைப்பது என்று யோசித்தே அலுவலகத்தில் காலம் கடத்தினாள்.
அவனுக்கு எப்படி நடந்தால் பிடிக்கும் என்றும் அவளுக்கு தெரியவில்லை . அவன் flirting type உம் இல்லை என்று யோசித்தவள் அதற்கான திட்டத்தை அமுல்படுத்த தொடங்கினாள்.ஆத்ரேயன் அறைக்குள் சென்றவள் சம்பந்தமில்லாமல் கதைத்து அவன் வேலைகளை குழப்பியபடி இருந்தாள்..
அவனுக்கு எரிச்சலாக இருந்தாலும் எதுவும் சொல்ல முடியாமல் கோப்புகளை பிராட்டியபடி இருந்தான். அந்நேரம் பார்த்து அவனுக்கு சாதகமாக வைஷ்ணவியின் பேச்சு வந்தது. கோப்புகளை அப்படியே தூக்கி போட்டவன் சுவாரசியமாக கேட்க தொடங்கினான்.

" அந்த வைஷ்ணவியும் கார்த்திக்கும் லவ் ஆமே.... எல்லாரும் பேசிக்கிறாங்க அவங்க ரெண்டு பேரும் ஒன்றாக இருந்து தான் சாப்பிடுறாங்களாம். கீர்த்தனாவையும் கழட்டி விட்டிட்டாங்களாம். அந்த பொண்ணுக்கு நீங்க தந்த performance warning லெட்டரும் கொடுத்தேன் . இப்படிஆபீஸ் ல கொஞ்சி கிட்டு இருந்தா எப்படி ஒழுங்கா வேல பார்க்க முடியும் ?? நீங்க கொஞ்சம் warn பண்ணி விடுங்க " என உண்மை பாதி பொய் பாதியென கூறி முடித்தாள்.

இது தான் சந்தர்ப்பம் என்று யோசித்தவன் வைஷ்ணவி கார்த்திக் இருவரையும் வர சொல்லி உத்தரவிட்டான்.
" என்ன குண்டை தூக்கி போட போகிறானோ " என்று பயத்துடனேயே வைஷ்ணவியும் கார்த்திக்கும் உள்ளே நுழைந்தனர்.

இருவரையும் பார்த்து கேலியாக புன்னகைத்தவன் " well Mr. கார்த்திக் and Miss or Mrs ?" என்று அவளை கூர்ந்து பார்த்து கொண்டு

கேட்க அவளும் "Miss. வைஷ்ணவி " என்றாள் அவன் கண்ணை பார்த்தபடியே . இரு கண்களையும் விரித்து உதட்டை பிதுக்கியவன் "ஓகே மிஸ்.வைஷ்ணவி நீங்க ரெண்டு பேரும் லவ் பண்ணுறதாக கேள்விப்பட்டேன். that's your personal .. அதில தலையிட எனக்கு எந்த அதிகாரமும் இல்ல. பட் உங்க காதலால் வேலைக்கு எந்த disturbance உம் வர கூடாது. அத சொல்ல தான் கூப்பிட்டேன். உங்க romance எல்லாம் வெளிய வச்சுக்கோங்க " என்றவன் கார்த்திக்கை பார்த்து புன்னகைத்தபடி "எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம் என்று இருக்கீங்க??? " என்று கேட்டான்.

கார்த்திக் திகைத்து போனான். " விளையாட்டு விபரீதம் ஆகி விட்டதே .. இப்போ என்ன பண்றது?? பேசாம சார் கிட்ட உண்மையை சொல்ல வேண்டியது தான்." என்று நினைத்தவன் " அப்படி இல்ல சார் ... " என்று தொடங்க போனான். அந்நேரம் பார்த்து ஆத்ரேயன் பேச்சினால் வைஷ்ணவிக்கு கோபம் சிலிர்த்தெழ காயப்படுத்தும் நோக்கத்தோடு கார்த்திக்கை

முந்தி கொண்டு " அது எங்க personal சார். அத உங்க கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை.. எங்க காதலால் உங்க ஆபீஸ் வேலை தடைபடாது . ஒன்லி official விஷயம் மட்டும் எங்க கிட்ட பேசலாம்.. நீங்க CEO நாங்க employee .. எங்க கல்யாணம் உங்களுக்கு தேவையில்லாத விஷயம்." என்றாள் கடுமையான குரலில். இவையனைத்தையும் ஆத்ரேயன் மேசையில் கை குற்றி நாடியை நீவியபடி வைத்து இருந்தபடி உணர்ச்சியற்ற முகத்துடன் கேட்டு கொண்டிருந்தான். இது ஆத்ரேயனுக்கு அதிர்ச்சி அளித்ததை விட கார்த்திக் ஸ்தம்பித்து நின்றான். "இவ என்ன இப்படி பேசுறா?" என்று யோசித்தபடி நிக்க பக்கத்திலிருந்த அனாமிகா கோபத்துடன் விறு விறு வென அவளை நோக்கி வந்தவள் " how dare you ?? இப்படி தான் மரியாதையில்லாம பேசுவியா ?? அவர் ஸ்டேட்டஸ் என்ன பவர் என்ன என்று உனக்கு தெரியுமா? நீ low class தானே... உன் திமிருக்கு உன்ன வேலைய விட்டு தூக்கிருவேன் .. mind it" என்று சீரியவளை

வைஷ்ணவி முறைத்து பார்த்து கொண்டிருந்தாள்.

நிலைமை மோசமாவதை அறிந்த ஆத்ரேயன் அனாமிகா தோள் மேல் கை போட்டு தன் கை வளைவுக்குள் கொண்டு வந்தவன் " ரிலாக்ஸ் அனாமிகா. எதுக்கு இப்பிடியான இடியட்ஸ் கிட்ட பேசணும்.? just leave it " என்றதும் அவன் அணைப்பில் கோபத்தை மறந்து உருகியவள் அவன் மார்பிலே பட்டும் படாமலும் சாய்ந்து கொண்டாள் .

அவர்களின் நெருக்கம் வைஷ்ணவிக்கு இனம் புரியாத பதட்டத்தை உருவாக்க அதை கட்டுப்படுத்தியவள் அவர்களை நேராக பார்த்து நின்றாள்.

இடையில் கலங்கி நின்ற கார்த்திகை பார்த்த ஆத்ரேயன் " how can you marry this kind of shit?" என்றான். அதுக்கு கார்த்திக் வாய் திறந்து உண்மையை கூற வர மீண்டும் முந்தி கொண்ட வைஷ்ணவி " that is his problem not yours " என்றபடி

கார்த்திக்கின் கையை பிடித்தாள்.

" ஐயோ இவளுக்கு என்னாச்சு?? முந்திரி கொட்டை போல எல்லாத்துக்கும் முந்திகொண்டு ஏதேதோ பேசுறா ... லூசா இவளுக்கு??? இல்ல உண்மையாவே என்னை லவ் பண்ணுறாளோ ?? " என்றெல்லாம் தாறுமாறாக கார்த்திக் யோசித்தான்.

கார்த்திக் அவளிடமிருந்து கையை விலக்க வெகுவாக போராடினான். அவன் கையை இன்னும் இறுக்கி பிடித்தவள் "இந்த தடியன் வேற எல்லாத்தையும் சொதப்ப போறான். " என்று மனதுக்குள் கார்த்திக்கை கடிந்தபடி நின்றாள்.

அதை கவனித்த ஆத்ரேயன் " என்னம்மா நீ தான் எல்லாம் பேசிட்டு இருக்க.. உங்க மாப்பிள வாயே திறக்கிறார் இல்ல.. அவருக்கும் சேர்த்து நீயே பேசிருவியோ? " என்றான் நக்கலாக.. இது தான் சந்தர்ப்பம் என்று " சார் ... " என்றபடி பேச தொடங்கிய கார்த்திக்கை இடை மறித்தவளாக " ஆமா சார் அவர் நினைக்கிறதெல்லாம் நானே

பேசிவிடுவேன் .. அவ்வளவு strong லவ். " என்றாள். " கிழிஞ்சிது போ... என்ன பேசவே விடமாடியா??? இவை நமக்கு எதோ பெரிசா ஆப்பு விக்க பிளான் பண்ணி இருக்கா ... " என்று கார்த்திக் யோசிக்க, அவளை கூர்ந்து ஆத்ரேயன் பார்த்த " ஓஹோ " என்றபடி அனாமிகா மீதான தான் அணைப்பை இறுக்கினான்.
அனாமிகாவுக்கோ ஒன்றும் ஏறவில்லை.. ஆத்ரேயனை பார்வையாலே பருகி கொண்டிருந்தாள். அதனை ஆத்ரேயனும் அறிவான். அனாமிகா தோளிலிருந்த ஆத்ரேயன் கையை பார்த்து அனல் பார்வை வீசியவள். இல்லை என்று சொல்லுவான் என்ற நம்பிக்கையில் "வேற ஏதும் பேசணுமா சார்?" என்றாள். ஆத்ரேயனோ "கண்டிப்பா" என்று சொல்ல அவளுக்கோ திண்டாட்டமாகி விட்டது. "என்ன பேச போறானோ?" என்று பயந்தபடி பார்த்து கொண்டிருந்தாள்.

"ஆனா உங்க கிட்ட இல்ல வைஷ்ணவி கார்த்திக் கிட்ட.so " என்றவன் தனது சுட்டுவிரலை வாய் மேல் வைத்து காட்டினான். அவன் பேசியதில்

கார்த்திக் நிம்மதியடைய வைஷ்ணவி பதட்டமானாள். " கார்த்திக் உங்க காதல் I mean கள்ள காதல் வைஷ்ணவி husband க்கு தெரியுமா?" என்று கேட்க அவன் தலை சுற்றி விழாத குறைதான்.

"காதலே இல்ல இதுக்குள்ள கள்ள காதலா " என்று அதிர்ந்தவன் திரும்பி அதிர்ச்சியாக வைஷ்ணவியை பார்த்தான். ஆத்ரேயன் இப்படி கேட்பான் என்று எதிர்பார்க்காத அவளோ சங்கடப்பட்டு கொண்டு கார்த்திக்கை பார்த்தவள் ஆத்ரேயனிடம் திரும்பி "என்னை பற்றி அவதூறு பரப்ப வேண்டாம் சார் " என்றபடி திரும்பியவள் "தடியன உளறாம control பண்ணுவேனா இல்ல அந்த நெட்டையனை உளறாம control பண்ணுவேனா?" என்று யோசித்தவள் இந்த இதுக்கு மேல் அங்கே நின்றால் பிரச்சனை ஆகிவிடும் என்று பயந்து விறு விறு வென வெளியேறி விட்டாள்.

அவள் வேகமாக செல்வதை பார்த்தவன் வாய் விட்டு சிரித்தபடி "கார்த்திக் ஏதோ சொல்ல

நிறைய நேரமா try பண்ணுணிங்க?இப்போ சொல்லுங்க disturbance போய்விட்டது " என்றான். மனதில் கொஞ்சம் நிம்மதி பரவ "love எல்லாம் இல்ல சார்.. சும்மா விளையாட்டுக்காக தான் " என்றான் . அதை கேட்ட ஆத்ரேயன் மனதில் ஒரு வித நிம்மதி பரவ " இப்படியெல்லாமா விளையாடுவாங்க " என்று கேட்டான் கேலி குரலில்.

இதுக்கு மேல் மறைக்க முடியாது என்று நினைத்த கார்த்திக் உண்மையை உளறிவிட்டான். மனதில் புது வித சந்தோசம் பரவ புன்னகைத்தபடி "so you love கீர்த்தனா? ரைட் ? " என்றான். கார்த்திக்கும் ஆம் என்பது போல் தலையை ஆட்டினான். "congrats you can go " என்றவனுக்கு அப்போது தான் அனாமிகாவை அணைத்து கொண்டு நிற்பது நினைவு வந்தது. " ஷீட் " என்று நெற்றியை நீவியபடி அனாமிகாவை பார்த்தான். அவள் இவ்வுலகில் இல்லை என்று அறிந்தவன் அவளை விலக்கி விட்டு தனது இருக்கையில் அமர்ந்த படி " அனாமிகா anything else " என்று கேட்க அவளும் ஆத்ரேயனை தாப

பார்வை பார்த்துக்கொண்டு இல்லை என்று தலையை ஆட்டியபடி தனது அறைக்குள் சென்றாள் .

அவனுக்கு அந்த பார்வை எல்லாம் ஒரு பொருட்டே இல்லை என்பது போல் தனது பணியை தொடர்ந்தான். வெளியே வந்த கார்த்திக் வைஷ்ணவியை தேட அவளோ பயத்தில் கீர்த்தனாவிடம் தஞ்சம் புகுந்திருந்தாள்.

வைஷ்ணவியின் பதட்டத்தை பார்த்து கீர்த்தனா விசாரிக்க.. " கார்த்திக் போய்ட்டானா பாரு " என்று கீர்த்தனாவை பார்த்தபடி உட்கார்ந்தாள். எட்டி பார்த்தவள் " ஆமாம் போய்ட்டான் " என்றதும் தான் அவளுக்கு மூச்சு வந்தது. " அப்பாடா " என்றவள் நடந்தது அனைத்தையும் கீர்த்தனாவிடம் கூறினாள் . அவள் சொல்வதை கூர்ந்து கெட்டவள் கொடுப்புக்குள் சிரித்தபடி.. " கிஸ் ஒன்னு ஜஸ்ட் மிஸ் ஆகிட்டு " என்றாள். அதை கேட்ட வைஷ்ணவி முறைத்தபடி இருந்தாள்.

அலுவலகம் முடிந்து வண்டியில் ஏறியதும் வைஷ்ணவியை பார்த்து முறைத்த கார்த்திக் "ஏன் இன்னைக்கு அப்படி நடந்துக்கிட்ட ? உனக்கு கல்யாணம் ஆயிருச்சா ? " என்று நேரடியாவே கேட்டுவிட்டான். சற்று மிரண்டவள் பின்பு சுத்தகரித்தது கொண்டு "கார்த்திக், அவன் எவ்வளவு பேசுறான் என்று பார்த்தா தானே... அதுக்கு அப்படி தான் answer பண்ணனும். திமிர் புடிச்சவன். அவன் திமிர அடக்க வேணாமா?" என்று கேட்டவள் மேலும் "அவன் என்ன பத்தி தப்பா சொன்னா நீ நம்பிருவியா ? நான் உன் friend ஆ இல்லை அவன் உன் friend ஆ ?" என்று கேட்டு அவனின் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

அவனுக்கு வைஷ்ணவியை நம்புவதா வேணாமா என்று குழப்பமாகவே இருக்க "பிறகு பார்த்து கொள்ளலாம்" என்று மனதை சமாதான படுத்தி கொண்டான்.

ஆத்ரேயன் தன்னுடன் நடந்து கொண்டதை வைத்து அவனுக்கு தன் மீது காதல் என்று

யூகித்த அனாமிகா , தந்தை தர்மேந்திரனிடம் சொல்லி கல்யாணம் பேச ஆயத்தமானாள். ஆத்ரேயனின் குணத்தை நன்கு அறிந்த அர்ஜுன் "எனக்கு அவன் இவளை காதலிப்பான் என்று நம்பிக்கையில்லை. எதுக்கும் பேசி பாருங்க" என்று தந்தையிடம் சொல்லிவிட்டு விலகிவிட்டான்.

தர்மேந்திரனும் சில நாட்கள் கழித்து லீவு நாளாக பார்த்து மனைவியுடன் ஆத்ரேயன் வீட்டை தட்டினார். லீவு என்பதால் நன்கு தூங்கியவன் அப்போது தான் எழுந்தான். calling bell சத்தம் கேட்டு கதவை திறந்தவனுக்கு தர்மேந்திரன் வந்திருப்பதை புருவங்களை சுருக்கி பார்த்தவன் "வாங்க அங்கிள் உட்காருங்க" என்றபடி அவனும் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்தான்.

சற்று தயங்கியபடி "Mr. ஆத்ரேயன் என் பொண்ண நீங்க காதலிக்கிறிங்க என்று கேள்விப்பட்டேன். அதை பற்றி பேசிவிட்டு போகலாம் என்று தான் நானும் என் மனைவியும் வந்திருக்கிறோம்" என்றார்.அவர் சொல்வதை கூர்ந்து கேட்டவன்

தலையை கோதியபடி "ஒரு திருத்தம் நான் உங்க பொண்ண காதலிக்கவில்லை ஆனா உங்க பொண்ணு என்ன காதலிக்கிறா என்று நினைக்கிறேன் " என்றவன் மேலே சொல்லும்படி சைகை காட்டினான்.

இதனை கேட்ட தர்மேந்திரனுக்கு ஒரே அவமானமாக பொய் விட்டது. வெளியில் அதனை கெட்டி கொள்ளாமல் சமாளித்தவர். "ok என் பொண்ணு உங்களை காதலிக்கிறா. கல்யாணம் பற்றி பேசலாமா ? " என்று கேட்டார்.

அவர் சொல்வதை கேட்டு புன்னகைத்தவன் "என்ன uncle நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே நான் உங்க பொண்ண காதலிக்கவில்லை என்று வெளிப்படையாக கூறினேன். பிறகெப்படி கல்யாணம் எல்லாம்?..அந்த பேச்சை விடுங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க ஏதும் சாப்பிடுறீங்களா?" என்று புருவத்தை உயர்த்தி கேட்டான். ஒரு சின்ன பையன் முன்னால் கூனி குறுகி நிற்பது அவமானமா இருக்க. பல்லை கடித்து பொறுத்து கொண்டவர் "இல்லை தம்பி வேணாம்" என்று

சொல்லிவிட்டு வெளியேறிவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் "என்னப்பா ஆச்சு?:" என்றபடி ஓடி வந்த அனாமிகாவை பரிதாபப்பட்டு நோக்கியவாறு "அவர் உன்னை காதலிக்கவில்லையாம்" என்று கவலை தோய்ந்த முகத்துடன் கூறினார்.

அதனை கேட்டு அதிர்ச்சியடைந்தவள் "உண்மையாவா அப்பா? அவர் பொய் சொல்கிறார். எனக்கு நல்லா தெரியும் அவர் என்னை காதலிக்கிறார். " என்று அழுதபடி புலம்ப தொடங்கினாள். மகளின் நிலையை பார்த்து அவரால் கண்ணீர் விட மட்டுமே முடிந்தது. அங்கு வந்த அர்ஜுன் "நான் சொல்லி நீங்க கேட்கவில்லை. இப்போ நல்லா அனுபவிங்க." என்று திட்டிவிட்டு தனது வேலையை பார்க்க தொடங்கினான்.

பொறுமை இழந்து விறு விறுவென ஆத்ரேயன் வீட்டுக்கு தனியாக சென்றவள். பலம் கொண்டு கதவை தட்டினாள். அப்போது தான் குளித்து

விட்டு காட்சட்டையுடன் வந்தவன் கதவு தட்டும் சத்தம் கேட்டு tshirt போடாமல் அவசரமாக கதவை திறந்தான். ஏற்கனவே அவன் மீது மயங்கி இருப்பவள் அவனின் முறுக்கேறிய உடற்கட்டை பார்த்து பைத்தியமாகி போனாள். ஒரு கணம் எழுந்த உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அவனை கண்ணீருடன் நோக்கினாள். அவள் தட்டியதில் அந்த floor லிருந்த அனைவரும் வெளியே வந்து பார்த்தனர், வைஷ்ணவி உட்பட.

அனைவரும் நோக்குவதை உணர்ந்தவன் "இவ வேற நேரம் காலம் தெரியாம " என்று முணு முணுத்த படி "இங்கேயே நில்லுங்க வாறன்" என்றபடி tshirt ஐ போட்டு கொண்டு வந்தான். அவனுக்கு தெரியும் அவளை தனியாக உள்ளே அழைத்து சென்றால் நிலைமை விபரீ தமாகி தன்னை பற்றி அவதூறு வரும் என்று.அதனாலேயே கவனமாக இருந்தான். வெளியில் தன்னை நிற்க வைத்தது அவமானத்தை அதிகரிக்க அவளின் கோபம் பல்கி பெருக தொடங்கியது.

வந்தவன் "கீழே வாங்க " என்றபடி முன்னிருந்த பூங்காவுக்கு அழைத்து சென்றான். அவனுக்கு தான் தன் பின்னால் சுற்றிய நிறைய பெண்களை மனம் கோணாமல் சமாளித்து பழக்கமாச்சே. அவனுக்கு அப்போது தெரியவில்லை அனாமிகா அவர்களை எல்லாம் விட வித்தியாசமானவள் என்று. அங்கிருந்த கதிரையில் அமர்ந்ததும், "இப்போ சொல்லுங்க" என்று கேட்டவனிடம் " நீங்க என்ன ஏன் காதலிக்கவில்லை என்று பொய் சொன்னிங்க?" என்று கேட்டாள் . "அது பொய் இல்லையே உண்மை தானே.." என்றவன். பெருமூச்சை எடுத்து விட்டவன் "இங்கே பாருங்க அனாமிகா ... நீங்க சாதிக்க நிறைய இருக்கு.,. இப்படி காதல் என்று சுத்துறத விட்டிட்டு உங்க வாழ்க்கைல நல்லா முன்னேறணும். என்னை விட எல்லாத்திலயும் சிறந்த கணவன் கிடைப்பார் " என தனது போதனையை தொடங்கினான்.

தந்தை அண்ணன் சொல்லியே கேட்காதவளுக்கு அவனின் போதனை எரிச்சலை கொடுத்தது.

கோபப்பட்டால் காரியம் கெட்டுவிடும் என்று யோசித்தவள் அவன் சொல்லுவதை அமைதியாக கேட்டு கொண்டு இருந்தாள்.

எல்லாம் முடிய "நீங்க காதலிக்கவில்லை என்றால் எதுக்கு அன்று என்னை அணைத்தீர்கள்?" என்று கேட்டாள்.
"அணைத்தேனா ? எப்போது?" என்று .யோசித்தவன், உடனே நினைவு வர "ஒரு friend ஆக தான் உங்க கூட பழகினேன் " என்றவனுக்கு தெரியும் ஏற்கனவே தன் மீது மயக்கத்தில் இருக்கும் பெண்ணோடு அன்று நடந்து கொண்டது சற்று அதிகப்படி தான் என்று. மேலும் பேச வந்தவளை கை நீட்டி தடுத்தவன் "எனக்கு நிறைய வேலை இருக்கு அனாமிகா.. என் மனசில இருக்கிறத சொல்லிட்டேன் ... நீங்க போகலாம்" என்றவன் திரும்பி பார்க்காமல் தனது வீட்டுக்கு நடந்தான்.

"உங்களை அடையாம விடமாட்டன் " என்று மனதில் கருவியவளின் காதல் வெறியாக மாறி இருந்தது. வைஷ்ணவி சமைத்து

கொண்டிருந்தாலும் என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம் மட்டுமே அவளுக்கு மேலோங்கி இருந்தது.

கஷ்டப்பட்டு அவர்களின் நினைவை ஒதுக்கியவள் வேலையில் கவனம் செலுத்தலானாள். அடுத்த நாள் office meeting க்கு மிக கவர்ச்சியாக உடை அணிந்து வந்த அனாமிகாவை அனைவரும் ஆச்சரியமாக பார்த்தனர். அளவுக்கதிகமான உதட்டு சாயம் மிக உயர்ந்த ஹீல் என வித்தியாசமாக வந்திருந்தாள். "ஆ" வென வாய்பிளந்து அனாமிகாவை பார்த்த கார்த்திகை கண்டு கடுப்பாகிய அவனருகில் இருந்த கீர்த்தனா "போதும்... வழியுது" என்றாள் அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில். நிறைய நாட்களுக்கு பின் அவனுடன் இன்று தான் பேசி இருக்கிறாள். அவள் பேசியது அவனுக்கு சுவாரசியத்தை கூட்ட சாறி கட்டி இழுத்து போர்த்தி இருந்த கீர்த்தனாவை திரும்பி உச்சி முதல் பாதம் வரை பார்த்தவன் உதட்டை பிதுக்கி தலையை ஆட்டியபடி அனாமிகாவை பார்த்து மீண்டும்

ஜொள்ளு விட தொடங்கினான்.

அவனது பார்வையில் கோபமடைந்தவள் யாருக்கும் தெரியாதவாறு கையை கீழே கொண்டு போய் அவன் கையில் வலிக்குமாறு கிள்ளி விட்டாள் . meeting இல் கத்த முடியாமல் கொடுப்புக்குள் சிரித்து கொண்டிருந்த அவளை பார்த்து முறைத்தபடி திரும்பி கொண்டான் கார்த்திக்.

இவையனைத்தையும் பார்த்த வைஷ்ணவியோ "க்கும் க்கும் ...." என்று கூறியவள் கீர்த்தனாவை பார்த்து கண்ணடித்து சிரித்தாள். ஆத்ரேயன் வர தாமதமானதால் தான் இவ்வளவும் நடந்து கொண்டிருந்தது.

வெண்ணிற முழுக்கை ஷர்ட் அணிந்து அதை முழங்கை வரை மடித்து விட்டிருந்த படி வந்தான் ஆத்ரேயன். மற்றைய கம்பனிக்கு சென்று வந்ததால் சற்று தாமதமாக வந்தவன் அனாமிகாவின் உடையும் மேக்கப் உம் அருவருப்பை அளிக்க அதை முகத்தில்

காட்டாமல் " good morning ladies and gentlemen , sorry for the delay " என கம்பீரமாக கூட்டத்தை தொடங்கினான். அவன் கம்பீரமும் குரலும் எதிரிகளை அடக்கி விடும் வலிமை உள்ளது.

அதில் மயங்கி எல்லா பெண்களும் அவன் பேசுவதையே பார்த்து கொண்டிருந்தனர் வைஷ்ணவியை உட்பட வைஷ்ணவியின் பார்வை அவன் மீதிருந்தாலும் அவள் யோசனை முழுதும் அனாமிகா பற்றியே இருந்தது. poor performance வார்னிங் பெற்றவர்களிடம் விளக்கம் கேட்க தொடங்கினான்.

"next வைஷ்ணவி" என்று அவன் அழைத்தும் அவள் தன்னிலை அடையாமல் அவனையே பார்த்து கொண்டிருந்தாள். புருவத்தை சுருக்கி யோசித்தவன் அவளருகில் வந்தவன் சொடக்கிட திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து "என்ன சார்" என்றாள். எல்லோரும் அவளையே பார்க்க தர்மசங்கடப்பட்டு நெளிந்தவளிடம் "நீங்க உங்க poor performance க்கு ரீசன் சொல்லவே தேவையில்லை. practical ஆக செய்தே

காட்டிட்டீங்க " என்று நக்கலாக சிரித்தபடி கூறினான். அவன் சிரிக்க அனைவரும் அவனுடன் சேர்ந்து சிரித்தனர். "என் மானத்தை வாங்கிறானே,,,, அவன் ஏதோ பெரிய ஜோக் சொன்ன போல இவங்களுக்கு சிரிப்பு வேற " என்று மனதுக்குள் திட்டியபடி உணர்ச்சி துடைத்த முகத்துடன் உக்காந்திருந்தாள்.

மீட்டிங் முடிந்ததும் எழும்பி வெளியேற போன ஆத்ரேயனின் கையை பிடித்த அனாமிகா "உங்க கூட பேசணும்" என்றாள். அவளை பார்த்தவன் சலித்தபடி மீண்டும் உட்கார்ந்தான். இதை கவனித்த வைஷ்ணவியின் இதயம் தாறு மாறாக துடிக்க தொடங்கியது. அதை கட்டு படுத்துவதற்காக அவசரப்பட்டு முதலாவதாக வெளியேறினாள்.

அனைவரும் சென்றதும் "உங்களுக்கு என்னை உண்மையாவே பிடிக்கலையா?" என்று ஆத்ரேயனை பார்த்து கண் சிமிட்டி கேட்டாள். அவள் ஏக்கம் கலந்த குரல் கோபத்தை கிளற அதை கட்டுப்படுத்தியபடி எழுந்தவன் "நான்

உங்க கிட்ட சொல்லிட்டேன்.. அப்போ சொன்னது தான் இப்போ சொல்லுறன் ... எனக்கு உங்களை கல்யாணம் பண்ண இஷ்டமில்லை" என்றான்.

"ஏன் இஷ்டமில்லை. யாரையாச்சும் காதலிக்கிறிங்களா?" என்று கேட்க அவனுக்கு வைஷ்ணவி முகம் கண் முன்னே வந்து போனது. இல்லை என்று தலையாட்டியவன் "எனக்கு கல்யாணத்துல interest இல்லை." என்று சொல்லியபடி மேசையில் சாய்ந்து கைகட்டி அவளை பார்த்தபடி நின்றான். அவன் நின்ற தோரணை அவன் மீதான மயக்கத்தை கூட்ட தன்னிலை மறந்தவள் அவனருகில் நெருங்கி அவன் தோளை பற்றி எம்பியவள் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். அதிர்ச்சியடைந்து கன்னத்தை துடைத்தவன் "ஏய் " என்று அவளை திட்ட போகும் போது வாசலை பார்த்தவனுக்கு மயக்கம் வராத குறைதான்.

அதிர்ச்சியடைந்த படி வைஷ்ணவி அங்கு நின்று கொண்டிருந்தாள். அவளின் வருகை இருவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

வைஷ்ணவியை கூர்ந்து நோக்கியவனிடம் "phone சார்" என்றபடி அவசரத்தில் விட்டு சென்ற தொலைபேசியை எடுத்தபடி தலையை குனிந்தவாறு வெளியேறினாள். எவ்வளவு கட்டுப்படுத்தியும் அவளால் தன் கண்ணீரை நிறுத்த முடியவில்லை. வெளியே வந்தவள் கீழே செல்ல மனமில்லாமல் அங்கிருந்த balcony யில் வந்து நின்றாள்.

"shit " என்று நெற்றியை நீவியவன் "behave your self " என்றபடி வாசலை நோக்கி நடக்க தொடங்க. அவன் மிக கடினமாக நடந்து கொள்ளாதது அனாமிகாவுக்கு தைரியத்தை வரவழைக்க அவன் முன்னே ஓடி சென்று அவனை மறித்தவள் அவன் முகத்தை பற்றி எம்பி அவனுதட்டில் முத்தமிட சென்றாள். அதுவரை தன்னை கட்டுப்படுத்தி இருந்தவனுக்கு மேலும் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் போக அவள் உதட்டில் கை வைத்து தள்ளியவன் தன் கோபம் முழுவதையும் சேர்த்து அவள் கன்னத்தில் அறைந்திருந்தான். கண்களில் கோபம் கொப்பளிக்க நின்ற அவன் அனாமிகாவுக்கு

புதியவன். மேலும் பேசாமல் சுண்டு விரலை காட்டி எச்சரித்தவன் விறு விறு வென வெளியேறினான்.

அவன் அறைந்து உதாசீனப்படுத்தியதில் சிறிது நேரம் அழுத்தவள் தானாக சமாதானமானாள். அவள் காதலித்து ஒன்றாக வாழ்ந்து நிறைய பேரை ஏமாற்றி இருக்கிறாள்.ஆனால் அவளை முதல் முறை வேணாம் என்ற ஆண்மகன் ஆத்ரேயன் தான். அவள் அழுதது ஏமாற்றத்தினால் ஒழிய காதலினால் இல்லை. அவள் நிறைய பேரை காதலித்தாலும் கல்யாணம் பண்ண ஆசைப்பட்டது இவனை தான்.

அதற்கு காரணம் அவன் தொழில் வெற்றியும் அளவுக்கதிகமான பணம் மற்றும் செல்வாக்கும், கம்பீரமான உடல்கட்டுடன் கூடிய பெண்களை அசரடிக்கும் அழகும். அவள் பார்த்த ஆண்களில் அனைத்து திறன்களும் ஒன்றாக பெற்றிருந்தது ஆத்ரேயன் தான். அதனாலேயே அவனை இழக்க விரும்பாதவள் அவனை அடைய அடுத்த

திட்டத்தை யோசித்தபடி தனதறைக்கு சென்றாள். கோபத்துடன் கீழே தனதறைக்கு செல்ல விரும்பாதவன் balcony க்கு மனதை சாந்தப்படுத்த வந்திருந்தான்.

வந்தவன் அப்போது தான் பார்த்தான் வெளியழகை ரசித்தபடி வைஷ்ணவி நின்றிருந்தாள். அவளருகில் வந்து நெருங்கி நின்றவனை கலங்கிய கண்களுடன் திரும்பி பார்த்தாள். அவள் மனம் முழுதும் வேதனை சூழ்ந்திருந்தது. அதை அறிந்து கொண்டவன் மனதிலும் அதே வேதனை இருந்தது.

சுதாகரித்து கொண்டு அங்கிருந்து கிளம்ப வெளிக்கிட்டவளை மறித்தபடி முன்னே வந்து நின்றவன் அவள் முகத்தை பற்றி கண்களினூடு தன் கண்களை காதலுடன் கலக்க விட்டான். தளம்பிய பாரமான மனதிலிருந்த இருவருக்கும் அந்த நொடி மனதுக்கு நிம்மதியை அளிக்க இருவரும் அதை கலைக்க விரும்பாமல் நின்றிருந்தனர்.

<u>யுகம்-22</u>

அவள் கண்களினூடு கலந்த அவன் காதல் அவள் இதயம் வரை ஊடுருவி சென்றது. ஆத்ரேயனின் மூச்சு காற்றின் உஷ்ணத்தில் அவள் தன்னிலை மறந்தாள். அவள் அருகாமையில் அவன் உலகத்தையே மறந்தான். அவள் காயப்பட்ட மனதுக்கு அவன் காதல் மருந்தாக இருந்தது. அவன் தன்னை விட்டு சென்று விடுவானோ என்ற பதட்டம் அதிகரித்ததால் தன்னை அறியாமலே கலங்கிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவள் கண்ணீரை தன் இரு கை பெருவிரல்களால் துடைத்தவன், அதே மோன நிலையுடன் தனது இதழை அவள் நெற்றியில் பதித்தான். அவன் ஸ்பரிசத்தில் நெகிழ்ந்தவளின் கைகள் தானாக அவன் கழுத்தை வளைத்து கொண்டன. இருவர் கண்களும் கலந்திருந்த சமயம் , கீழிறங்கிய அவன் அதரங்கள் அவள் நாசியையும் அவள் பட்டு போன்ற கன்னங்கள்

இரண்டையும் தீண்டின.

அவள் இதழருகில் வந்தவன் அவளின் வார்த்தைகள் நினைவு வர சற்று தயங்கி நின்றான். அவன் தயக்கத்தை கண்டு கொண்டவள் அவன் கழுத்துக்கு பின்னால் இருந்த கைகளால் அவனை முழுதாக தனது பக்கம் இழுத்து அவனுயரத்துக்கு எம்பி அவன் இதழில் தன் இதழ்களை பதித்தாள்.

அவளால் வழங்கப்படும் முதல் முத்தம் அது. முதலில் அதிர்ந்தவன் பின் அதில் மூழ்கி போனான். இருவரும் கண்களை மூடி நீண்ட நேரம் இதழ்கள் தீண்டியபடி நின்ற சமயம் வைஷ்ணவிக்கு ஆத்ரேயன் கன்னத்தில் முத்தமிட்ட அனாமிகா நினைவுக்கு வந்தாள் . உடனே சுயநினைவுக்கு வந்தவள் , தான் நின்ற நிலை கண்டு அதிர்ச்சியடைந்தபடி தனது இதழ்களை அவன் இதழ்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்தெடுத்து அவன் மார்பில் கை வைத்து தள்ளினாள். அவள் தள்ளிய வேகத்தில் விழாமல் இருக்க கால் குற்றி

தன்னை சமநிலைப்படுத்தியவனுக்கு அவளது விலகல் எரிச்சலை ஏற்றப்படுத்த அவளை மீண்டும் இழுத்து முத்தமிட தோன்றிய உணர்வுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு தலையை கோதியபடி தன்னை சமன் செய்ய மறுபக்கம் திரும்பி நின்றான்.

அவன் முகத்தை பார்க்க சங்கடப்பட்டவளுக்கு அவன் திரும்பி நின்றது நிம்மதியளிக்க " i am சாரி ஏதோ தெரியாம " என்றவளுக்கு அடுத்த வார்த்தைகள் வரவில்லை. இதுக்கு மேல் அங்கு நிற்பது உசிதமாக படாததால் விறு விறுவென தனது கேபினுக்குள் சென்று உட்கார்ந்தாள்.

கதிரையில் இருந்தவளுக்கு தான் செய்த செயலின் வீரியம் அப்போது தான் புரிய தொடங்கியது " லூசா நீ ... என்ன காரியம் பண்ணி வச்சிருக்க?. இனி எப்படி அவன் முகத்தில முழிக்கிறது ? சும்மாவே நான் அவன் பின்னாடி அலையிற போல சீன் போடுவான்.. இப்போ என்ன எல்லாம் பேச போறானோ " என்று புலம்பியபடி யோசித்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் மனதை கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறியவன் தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து புகைக்க தொடங்கினான். தன்னை சமநிலைப்படுத்திய பின் கீழிறங்கியவன் தனதறைக்குள் செல்லும் வரை வைஷ்ணவியை உணர்ச்சி துடைத்த முகத்துடன் பார்த்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவன் வருவதையும் தன்னை துளைத்தெடுப்பது போன்று பார்ப்பதையும் உணர்ந்தவள் கணணியிலிருந்து கண்ணை எடுக்காமல் அப்படியே இருந்தாள் . அவன் சென்றதும் நிம்மதி பெரு மூச்சு விட்டவளுக்கு அவன் பார்வையின் அர்த்தம் புரியாமல் தவித்து போனாள். . இவையனைத்தையும் cctv வழியே பார்த்து கொண்டிருந்த அனாமிகாவுக்கு கோபம் தலைக்கு மேல் எகிறியது. . "நான் பக்கத்துல வந்தாலே அறைகிறான் ஆனா அவ கூட ரொமான்ஸ் கேக்குதா? என் கிட்ட இல்லாதது அப்படி அவகிட்ட என்ன தான் இருக்கு. பணம் அந்தஸ்து அழகு எல்லாத்திலும் என்னை விட அவள் மட்டம் தானே " என்று முணுமுணுத்தவள்

வைஷ்ணவியின் குணம் தன்னை விட மிக உயர்ந்தது என்பதனை மறந்து போனாள். அவள் தனது அடுத்த இலக்கை வைஷ்ணவிக்கு வைத்தாள்.

இருவருக்குமிடையில் ஏதோ சம்பந்தம் இருக்கு என்று சந்தேகப்பட்டவள், வைஷ்ணவியின் பூர்வீகம் அறிய அவளின் personal file ஐ வாங்கி பார்த்தாள். அப்போது தான் அவளிடமிருந்து application வராமலே appointment letter ஐ அர்ஜுன் sign பண்ணி அனுப்பி இருந்தான். எங்கேயோ இடிக்க அர்ஜுனுக்கு call பண்ணியவள் " அண்ணா ... application போடாமலே appointment letter அனுப்புற பழக்கம் நம்ம ஆபீஸ்ல இருக்கா ??" என்று கேட்டாள்.

அதற்கு அர்ஜுனோ " அப்பிடி எல்லாம் இல்லையே " என்றவனிடம் . " அப்போ எப்படி அண்ணா வைஷ்ணவிக்கு appointment கொடுத்தீங்க " என்று கேட்க முதலில் யோசித்தவனுக்கு பிறகு ஆத்ரேயனின் நினைவு வந்தது.

" ஓ அதுவாம்மா ஆத்ரேயன் தான் அவருக்கு தெரிஞ்ச பொண்ணு என்று ரெகமெண்ட் பண்ணினார். அவர் கம்பெனில vacant இல்லையாம் என்றார். so அவருக்காக அனுப்பி இருந்தோம் " என்றவரிடம் மேலும் எதுவும் கேட்காமல் தொலைபேசியை வைத்தாள். கதிரையில் சாய்ந்து இருந்தவள் பேப்பர் வெயிட்டை உருட்டியபடி " So வைஷ்ணவிக்கு வேலை வாங்கி கொடுத்தது ஆத்ரேயன் தான்.. ஆனா எல்லாருக்கும் முன்னுக்கு தெரியாத போல நடிக்கிறாங்க... சம்திங் ராங் " என்று நினைத்து கொண்டிருந்தவளுக்கு அந்நேரம் எதுவும் பிடிபடவில்லை.

இதனை ஆத்ரேயனிடம் கேட்க முடியாது, கேட்டாலும் பதில் வராது என்று அறிந்தவள் வைஷ்ணவியை விசாரிக்கலாம் என்று அவளை கூப்பிட்டனுப்பினாள்.

மனதில் ஒரு வித கலக்கத்துடன் வந்தவளை நக்கி " இங்கே நீ வேலைக்கு அப்ளை

பண்ணினியா ?? " என்று கேட்க, அவளின் ஒருமை விழிப்பில் சற்று தடுமாறியவள் சுத்தகரித்துக்கொண்டு ' இல்லை " என்றாள். "அப்போ எப்படி உனக்கு இங்கே வேலை கிடைத்தது " என்று வினவினாள்.

" அர்ஜுன் சார் தான் அப்பொண்ட்மென்ட் லெட்டர் அனுப்பி இருந்தார் " என்றாள். அவள் பதிலில் எரிச்சலடைந்தவள் " யார் எங்கே கூப்பிட்டாலும் போய் விடுவாயா? " என்று ரெட்டை அர்த்தத்தில் கேட்டாள்.

அவள் கேட்டதன் அர்த்தம் புரிந்தாலும் அதனால் ஏற்பட்ட கவலையை மறைத்து கொண்டு. " இல்ல " என்று தலையை ஆட்டினாள். " உனக்கு ஆத்ரேயனுக்கும் என சம்பந்தம் அவர் எதுக்கு உனக்கு இங்கே வேலை வாங்கி தரணும் ?? " என்ற அடுத்த கேள்வியில் அதிர்ச்சியடைந்தாள்.

. " என்ன?? ஆத்ரேயன் வேலை வாங்கி தந்தாரா ,? " என்று அவளிடமே கேட்டாள் . " சும்மா நடிக்காதடி ...இப்போ தான் balcony ல நீங்க

பண்ணின சில்மிஷத்தை பார்த்து கடுப்புல இருக்கிறேன் . என்னை கல்யாணம் பணிக்க போறதா பொய் சொல்லி என் வயித்துல குழந்தையையும் கொடுத்துட்டு இப்போ உன் பின்னாடி சுத்துறான். எனக்கு திணற திணற மீட்டிங் ரூம்ல கிஸ் பண்ணிட்டு வெளிய வந்திய உனக்கும் தந்தானா ? " என்று பொய்களை கோர்த்து அவள் தலையில் ஒரு குண்டை தூக்கி போட்டாள்.

அவள் கூறியதை கேட்டதும் அவள் உடல் அருவருக்க தொடங்கியது. "என்ன மனுஷன் அவன்.. பெண்கள் என்றால் அவனுக்கு கேவலமா போய் விட்டோமா? சீ இப்படி பண்ணுவான் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.... அவன் குழந்தை இவ வயிற்றில் வளர்கிறதா? இப்படி எத்தனை பேர் வாழ்க்கையை சீரழிச்சிருப்பான்? கடவுள் இவனையெல்லாம் தண்டிக்கவே மாட்டாரா? பெண்கள் விஷயத்தில் உன்னை உத்தமன் என்று நினைத்தேனே இப்படி என்னை ஏமாற்றி விட்டாயே. என் வாழ்க்கையை சீரழித்து விட்டாயே " என்று மனதுக்குள் புலம்பியவள்,

அவனின் கண்ணியம் கட்டுப்பாடு அனைத்தையும் மறந்தாள். குழந்தை விஷயத்தில் பெண்கள் பொய் சொல்ல மாட்டார்கள் என நம்பினாள். அவளுக்கு தெரியவில்லை அனாமிகா பெண் உருவத்திலிருக்கும் ராச்சசி என்று.

மனதில் சுமை கனக்க அவள் கண்களில் அவளையும் அறியாமல் நீர் கோர்த்தது. . யாரோ தனது இதயத்தில் உயிருடன் வைத்து ஆணி அடிப்பது போன்ற உணர்வில் செயலிழந்து நின்றாள்.

" சொல்லுடி நீ அவனுக்கு யாரு? " என்று சினம் தெறிக்க அவள் தோளை பிடித்து உலுக்கினாள். அதில் மருண்டவள் "அவர் என் மாமன் மகன் " என்று பாதி உண்மையை மட்டும் கண்களில் நீர் வழிய கூறினாள். "ஓ முறை பொண்ணு மேல் காதலா?? " என்று நக்கலாக கெட்டவள், இதை எவ்வாறு சமாளிப்பது என்று கண நேரத்தில் திட்டம் போட்டாள்.

கண நேரத்தில் தனது பாவனையை மாற்றியவள் சற்று பண்பாக கதைப்பது போல நடித்தாள் . அவளுக்கு தெரியும் இவள் மேல் கை வைத்தால் ஆத்ரேயன் சும்மா இருக்க மாட்டான் என்று. அதனால் வார்தைகளால் அவள் மனதை கரைக்க முடிவெடுத்தாள்.

அவ்வளவு நேரமும் நின்று கொண்டு இருந்தவளை தன் முன்னால் இருந்த கதிரையை காட்டி இருக்கும் படி சைகை செய்தவள் " இங்கே பாருங்க வைஷ்ணவி ... நீங்களும் பொண்ணு தான். நான் இப்போ 2 மாசம் pregnant .. அதுக்கு கரணம் ஆத்ரேயன் தான்.. ஏதோ உணர்ச்சி வசப்பட்டு தப்பு பண்ணிட்டோம் .. இப்ப கல்யாணம் பண்ண முடியாது என்று நிற்கிறார்... என்ன கரணம் என்று எனக்கும் தெரியல என் நிலைமையில் இருந்து கொஞ்சம் யோசித்து பாருங்க ப்ளீஸ். நீங்க தான் எப்பிடியாச்சும் அவரை கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கணும்... நான் உங்க கிட்ட personal விஷயத்தை சொன்னது அவருக்கு தெரிஞ்சா என்ன உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்.

என்னை கல்யாணம் பணிக்கவும் மாட்டார். அதனால நான் சொன்னதை யார் கிட்டயும் சொல்லாம அவரை எப்படியாச்சும் இதுக்கு சம்மதிக்க வைக்க வேணும். சொந்த கார பொண்ணு உங்களால முடியும் என்று நினைக்கிறேன் " என்று வராத கண்ணீரை துடைத்து கொண்டு கெஞ்சினாள். இது நடக்குமா நடக்காதா என்று நிச்சயமில்லா விட்டாலும் தன் முதல் காயை வைஷ்ணவியை வைத்து நகர்த்த தொடங்கினாள்.

மென்மையான மனம் கொண்ட வைஷ்ணவியை கரைப்பது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. அவள் கஷ்டங்களை கேட்டு அவளிடத்திலிருந்து யோசித்து உருகியவள் " நானா" என்று முதலில் அதிர்ந்தாலும் தன் கவலைகளை மறைத்து கொண்டு " நீங்க கவலை படாதீங்க நான் பேசி பார்க்கிறேன் " என்று ஆறுதல் கூறினாள்

. " நான் ஏண்டி கவலை பட?.. நீ எனக்கு ஆறுதல் கூறிய நிலையில இருக்கிறது தான் எனக்கு கவலையாக இருக்கு " என்று மனதில்

நினைத்தவள் வெளியில் நடிப்புக்காக விரக்தியாக சிரித்தாள்.

அனாமிகா அறையிலிருந்து வெளியேறிய வைஷ்ணவிக்கு நிலை கொள்ள சற்று நேரம் தேவைப்பட்டது.

இருக்கையில் வந்து இருந்தவளுக்கு தன்னை சுற்றி என நடக்கிறது என்று புரியவில்லை.. விடாமல் கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது. அலுவலகம் என்பதால் அதை கட்டுப்படுத்தியவள் அடுத்து என்ன செய்வது என்று திட்டமிட தொடங்கினாள்.

எல்லாவற்றுக்கும் முதல் விவாகரத்து பெற வேண்டி இருந்தது. இந்தியா செல்ல முடியாததால் தொலைபேசி மூலம் ஆத்ரேயனின் வக்கீலை தொடர்பு கொண்டாள். வக்கீல் சரவணன் என்று அவர் பெயர் தான் ஆத்ரேயன் சொன்னதாக அவளுக்கு ஞாபகம். வேறு வக்கீலை தெரியாததால் அவர் நம்பரை தேடி எடுத்து அவரையே தொடர்பு கொள்ள

வேண்டி இருந்தது. "ஹெலோ சரவணன் சார், நான் வைஷ்ணவி கதைக்கிறேன் " என்று தொடங்க அவர் மறு புறத்தில் இருந்து "எந்த வைஷ்ணவி என்று தடுமாற தொடங்கினார்.

ஆத்ரேயன் பெயரை தான் அடையாளமாக பயன்படுத்துவது எரிச்சலாய் இருந்தாலும் வேற வழி இல்லாமல் "Mrs . வைஷ்ணவி ஆத்ரேயன் " என்றாள். "ஓ நீங்களா ? சொல்லுங்கம்மா?" என்று கேட்டவரிடம். "நான் சிங்கப்பூரில் இருக்கிறேன், எனக்கு விவாகரத்து வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்க.. சற்று அதிர்ச்சியடைந்தவர் "அங்கே இருந்து கொண்டு apply பண்ண முடியாது. உங்க sign வேணும். இந்தியா வரும் சந்தர்ப்பத்தில் வேணுமென்றால் செய்ய முடியும். " என்றார். "இதென்ன சோதனை " என்று மனதில் நினைத்தவள் "சரி சார் நான் இந்தியா வந்ததும் தொடர்பு கொள்கிறேன் " என்று தொலைபேசியை வைத்து விட்டாள்.

சரவணனும் கண நேரம் தாமதிக்காமல் ஆத்ரேயனுக்கு எடுத்து விஷயத்தை சொல்ல

அதிர்ச்சியடைந்தவன் "ஓகே, நான் பார்த்துகிறேன் " என்றவனுக்கு கோபம் தாறு மாறாக எகிறியது." இப்போது தான் முத்தமிட்டாள். முத்தமிட்டு ஒரு நாள் கூட தாண்டவில்லை, அதற்குள் விவாகரத்தா? இவளுக்கு என்னாச்சு? என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை" என்று தலையை பிடித்தபடி யோசித்தவன், "அவளாக வரட்டும்... இந்தியா போக வேண்டுமென்றால் லீவுக்கு என்னிடம் தானே வர வேண்டும் அப்போ இருக்கு அவளுக்கு கச்சேரி" என்று முடிவெடுத்தபடி வேலையை தொடர்ந்தான்.

வைஷ்ணவிக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. "குழந்தைக்கு இப்போவே ரெண்டு மாசம்.. வெளியில் தெரிய முதல் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் ... அதுக்கு முதல் இந்தியா போக வேண்டும் .. இவன் கிட்ட எப்படி போய் permission எடுப்பது? அவன் முகத்தை பார்க்கவே எனக்கு பிடிக்கல.. கல்யாணத்தை முடித்து வைத்து விட்டு இந்த நாட்டை விட்டு கிளம்பி விட வேண்டும்." என்று பல திட்டங்களை

ஒரே நேரத்தில் போட்டாள். அவள் மனசை நிலைப்படுத்த நேரம் தேவைப்பட்டதால் இன்று பேச தேவையில்லை நாளை பேசலாம் என்று முடிவெடுத்தவளுக்கு மனசு வலி தாங்க முடியாமல் கண்ணீர் பெருக்கெடுத்து கொண்டே இருந்தது. யாரும் பார்த்துவிடுவார்கள் என்று பயந்தவள் wash room க்கு சென்று மனசு விட்டு சிறிது நேரம் அழுதாள். அதன் பிறகு முகத்தை நன்கு குளிர்ந்த நீரால் கழுவி விட்டு வந்தாள். ஆனாலும் சிவந்திருந்த கண்கள் அவள் அழுததிற்கு சான்றாக இருந்தது.

அவள் காதல் தோல்வியடைந்த வருத்தம், ஆத்ரேயனின் நடந்தவாடிக்கையால் அவன் மீது வந்த வெறுப்பு என பல விதமான கவலைகள் அவளை வேலை செய்ய விடாமல் தடுத்தன. ஆத்ரேயனின் எத்தனையோ கொடுமைகளை சகித்து கொண்டவளுக்கு அவனுக்கு இன்னொரு பெண்ணுடன் தொடர்பு என்பதை மட்டும் பொருத்து கொள்ள முடியாமல் தவித்தாள். சற்றுமுன் அவனின் தீண்டல்கள் தணலை வாரி இறைத்தது போல் இருந்தது. அவனிடம் அதனை

கேட்டு கொள்ள முடியாத சூழ்நிலையில்
மனதுக்குள்ளேயே மருகினாள்.

அலுவலகம் முடிந்து செல்லும் போதும்
யாருடனும் பேசாமலே இருந்தவள்
கீர்த்தனாவிடம் தலைவலி என்று
சமாளித்திருந்தாள்.

கீர்த்தனாவும் கார்த்திக்கும் சில வார்த்தைகள்
பேச தொடங்கி இருந்தனர். காரில் ஏறியதும்,
கார்த்திக் "ஏன் எனக்கு கிள்ளினாய்?" என்று கேட்க
கீர்த்தனவோ "ரொம்ப வழிஞ்சுது அதான்"
என்றாள்.

"அவங்களும் நம்ம கிட்ட பேச மாட்டாங்களாம்,
மற்ற பொண்ணுங்களையும் நாம பார்க்க
கூடாதாம். கார்த்திக் நீ கொடுத்து வச்சது
அவ்வளவு தாண்டா" என்று அவன் வாய்விட்டு
புலம்ப வந்த சிரிப்பை கீர்த்தனா கஷ்டப்பட்டு
கட்டுப்படுத்தி கொண்டாள்.

"புலம்புனது போதும் காரை எடுத்தா நல்லா

இருக்கும்" என்றவளை பார்த்து கண்ணடித்தவன் சிரித்தபடி வண்டியை எடுத்தான். கீர்த்தனாவுக்கு அவன் கண்ணை அடித்தது அவளுக்கு புதுவித சிலிர்ப்பை உண்டாக்க அதை மறைப்பதற்காக வெளியில் பார்த்தபடி வந்தாள். வைஷ்ணவியும் கடமைக்கு சிரித்து விட்டு வெளியில் நோட்டமிட தொடங்கினாள்.

வீட்டுக்கு வந்தவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. அந்நேரம் பார்த்து கீர்த்தனா "வாடி பாட்மிண்டன் விளையாடுவோம் " என்று அழைக்க, மனதை சமாதானப்படுத்தும் நோக்கத்தோடு "சரி" என்றவள் கார்த்திக்கையும் அழைத்து கொண்டு கீழே உள்ள badminton court க்கு சென்றனர்.

அவளின் கஷ்டகாலத்துக்கு அங்கு ஆத்ரேயன் court ஐ சுற்றி ஜோக்கிங் போய் கொண்டிருந்தான். யாரை மறக்க அவள் அங்கு வந்தாளோ அவனே கண் முன் ஓடி கொண்டிருக்க விளையாட மனமில்லாமல் "நீயும் கார்த்திக்கும் முதலில் விளையாடுங்க ,... நான் கொஞ்சம் rest எடுத்துட்டு

வாறன் " என்றபடி அங்கிருந்த படியில் அமர்ந்தாள்.

"வைஷ்ணவி நீ செய்ற உதவிக்கு நான் உனக்கு கோவில் கட்டி கும்பிடுவேன் " என்று மனதில் நினைத்த கார்த்திக் "விளையாடலாமா?" என்று கீர்த்தனாவை கேட்டான். அவன் துளைத்தெடுக்கும் பார்வை அவளை ஏதோ செய்ய அதை கட்டுப்படுத்தியவள் விளையாட சென்றாள். ஓடி கொண்டிருந்த ஆத்ரேயனின் கண்கள் முழுதும் வைஷ்ணவி மேலேயே நிலைத்து இருந்தது. அவன் தன்னை கண் வெட்டாமல் பார்ப்பதை உணர்ந்தவள் "பொம்பள பொருக்கி " என்று மனதுக்குள் திட்டியபடி விளையாட்டை கவனிக்கலானாள்.

கீர்த்தனவால் கார்த்திக்குடன் ஒழுங்காக விளையாட முடியவில்லை.ஒரு தடவை கூட திருப்பி அடிக்க முடியாமல் அவஸ்தை பட்டாள். குனிந்து குனிந்து பாட்மிண்டன் பூவை எடுத்தே காலம் தள்ளினாள். இதை பார்த்த ஆத்ரேயனுக்கே எரிச்சலாய் இருந்தது.

கீர்த்தனாவை நோக்கி வந்தவன் "shall we play gentlemen ?" என்று கார்த்திக்கை கேட்க அவனும் "sure sir " என்றபடி கீர்த்தனாவை பார்த்தான். கீர்த்தனாவும் இது தான் சந்தர்ப்பம் என்று ராக்கெட்டை அவனிடம் கொடுத்து விட்டு வைஷ்ணவி அருகில் அமர்ந்து கொண்டாள்.

"செம game ,, நான் ஆத்ரேயன் சார் க்கு தான் சப்போர்ட். " என்றபடி குதூகலமான கீர்த்தனாவை முறைத்தவள் தலையை திருப்பி விளையாட்டை பார்த்தாள். கல்லூரியிலேயே சாம்பியன் ஆன ஆத்ரேயனை ஜெயிக்க முடியுமா? கார்த்திக் தான் ஓடி ஓடி அடிக்க அவன் நின்ற இடத்திலேயே சாதாரணமாக அடித்து கொண்டிருந்தான். ஐந்து தடவை பாட்மிண்டன் பூவை miss பண்ணுகிறவர்கள் தோல்வியடைந்தவர்கள் என நிர்ணயிக்க பட்டது. ஆரம்பத்தில் நன்றாக விளையாடிய ஆத்ரேயன், கார்த்திக் தனது காதலி முன்னால் அவமான பட கூடாது என்று அவனுக்கு சார்பாக புன்னகைத்தபடி விளையாடினான். இது கார்த்திக்குக்கு நன்கு விளங்கியது. ஆனால்

வைஷ்ணவிக்கோ கீர்த்தனாவுக்கோ தெரியவில்லை. 4-4 என்ற நிலையில் இருக்கும் போது கார்த்திக்கே ஜெயிக்கட்டும் என்று நினைத்தவன் அடுத்து தன்னை நோக்கி வந்த பூவை அடிக்காமல் விட யோசித்தான். அந்த சந்தர்ப்பத்தில் வைஷ்ணவி பொறுமை இழந்து "come on கார்த்திக் beat him " என்று கத்த தன்னை நோக்கி வந்த பூவை பார்க்காமல் வைஷ்ணவியை பார்த்து முறைத்தபடியே அடித்தான். அதை மீண்டும் கார்த்திக்கினால் அடிக்க முடியாமல் போய் விட்டது.

தான் அடித்ததை கார்த்திக் திரும்ப அடிக்க மாட்டான் என்று அறிந்தவன் அவளை பார்த்து உதட்டை பிதுக்கியவன் சொடக்கிட்டு கார்த்திக்கை பார்க்குமாறு அவளுக்கு சைகை காட்டினான். கார்த்திக் தோல்வியடைந்ததில் கீர்த்தனாவை விட கூடுதலாக கவலைப்பட்ட வைஷ்ணவி ஆத்ரேயனை முறைத்து கொண்டு இருந்தாள்.

கார்த்திக் களைப்பினால் வந்து தள்ளி இருக்க

அவனை நோக்கி தண்ணீர் போத்தலுடன் கீர்த்தனா சென்றாள். தனியே இருந்த வைஷ்ணவி அருகில் வந்தவன் "do you want to play with me ?" என்று கேட்க அவளோ "ஜெயிச்சா என்ன பெட்?" என்று திரும்ப கேட்டாள். "நீயே சொல் " என்றவனிடம் "நான் கேட்டதை தரணும் " என்றாள்.

அவனோ மனதுக்குள் "நீ விவாகரத்து தான் கேட்க போகிறாய் " என்று யோசித்தவன். "anything other than divorce " என்றான் கண் அடித்தபடி . மனதுக்குள் "நீங்க தரா விட்டாலும் எனக்கு divorce எடுக்க தெரியும்... அனாமிகாவை கல்யாணம் பண்ண வைக்கிறதுக்கு இதை விட நல்ல சந்தர்ப்பம் அமையாது " என்று யோசித்தவள் "சரி " என்றாள். "அப்போ நான் ஜெயிச்சா நான் கேக்கிறத தருவியா " என்றவனின் கண்கள் அவள் இதழில் நிலைத்து நின்றது.

அவனின் பார்வை அவளுக்கு கோபத்தை தூண்ட "பொம்பள பொருக்கி " என்று முணுமுணுத்தாள். அவள் வாயசைவை வைத்து அவள் சொன்னதை

கண்டு பிடித்தவனுக்கு முதல் போல் கோபம் வரவில்லை, சிரிப்பு தான் வந்தது. "உன் விஷயத்தில் நான் பொம்பள பொறுக்கி தான்" என்று சிரித்தபடி கூறியவன், விளையாட தொடங்கினான்.

ஓரளவு விளையாட கூடிய கார்த்திக்கே அவனுக்கு துரும்பாய் தெரிந்தவன், வைஷ்ணவியோ கத்து குட்டியாக இருந்தாள். அவளின் விளையாட்டை பார்த்து எரிச்சலடைந்தவன் "worst player " என்று மனதுக்குள் சொல்லி கொண்டான். சமாளித்தபடி அவள் வேகத்துக்கு இணையாக வேகத்தை குறைத்து விளையாடியவன், விரைவாக 4-0 என்ற நிலையை அடைந்ததும் அவள் முகம் கோணியதை பார்த்து பரிதாபப்பட்டான். "சரி வின் பண்ணி தொலை ' என்று மனதுக்குள் நினைத்தவனுக்கு தெரியவில்லை, அவள் கேட்க போவது தனது வாழ்க்கையையே பிரட்டி போட கூடிய விஷயம் என்று.

அவன் விளையாட்டை பார்த்த கார்த்திக்

கீர்த்தனாவிடம் "ஆத்ரேயன் சார் போல இதுக்கு மேல யாராலயும் விட்டு கொடுத்து விளையாட முடியாது " என்று கூறி சிரித்தான்.
வைஷ்ணவியை வின் பண்ண வைத்தவன். அவளின் குதூகலத்தினால் தானும் சிரித்து கொண்டான். ஏதோ கஷ்டப்பட்டு வின் பண்ணியது போல் அவனை பெருமிதமாக அவள் பார்த்தது அவனுக்கு இன்னும் சிரிப்பை கூடியது. சிரித்தபடியே வீட்டுக்கு வந்தவன் களைப்பில் தூங்கி போனான்.

காதல் மலரும்.....

யுகம்-23

அறைக்கு வந்த வைஷ்ணவிக்கு தூக்கம் வரவில்லை. நாளை என்ன பேசுவது என்று நினைத்தபடியே கண்ணயர்ந்து போனாள்.
அடுத்த நாள் அலுவலகத்துக்கு சென்றதும் ஆத்ரேயனை சந்திக்க காத்திருந்தாள். ஆனால் ஆத்ரேயன் ஒரு முக்கியமான client meeting க்கு

வெளியே சென்றவன் அலுவலகம் முடியும் நேரம் வரையும் வந்து சேரவில்லை.

அலுவலகம் முடிந்து வீட்டுக்கு சென்றவள் அவன் வீட்டை தட்டியும் திறக்காமல் இருக்க அவனுக்காக தனது வீட்டில் காத்திருந்தாள். சில மணி நேரங்களுக்கு பின் ஜன்னலினூடு பார்த்தவள் அவனின் வெள்ளை நிற ஜாகுவார் அப்போது தான் பிளாட்டின் வளாகத்துக்குள் வந்து கொண்டிருந்தது. அவனுக்காக கொஞ்சம் நேரம் கொடுக்க நினைத்தவள் அரை மணி நேரம் களைத்து அவன் வீட்டு கதவை தட்டினாள் . அப்போது தான் குளித்து இரவுடைக்கு மாறியவன் கதவை திறந்தான். சிறிய காற்சட்டையும் arm cut உம் அணிந்து முறுக்கேறிய புஜங்கள் வெளியில் தெரிய கதவை திறந்தவனை பார்த்தவள் "இவன் எப்போதும் முழுசா உடுப்பு போட மாட்டானா? எப்போவும் அரைகுறையாக... சீய் " என்று மனதில் நினைத்து கொண்டாள்.

அவளை கண்டு சலிப்படைந்தவன் " வந்துட்டா..

இன்னைக்கு இந்தியா போக லீவு கேக்க வந்திருப்பா ... இருடி உனக்கு இருக்குது. முத்தமும் வேணுமாம் டிவோர்ஸ் உம் வேணுமாம். " என்று அவனாகவே யூகித்து முணு முணுத்தபடி " உள்ளே வா "என்றான். கதவை சாத்திவிட்டு வந்ததில் கொஞ்சம் பதட்டமடைந்தாள். அவன் கால் மேல் கால் போட்டு இருந்ததும் அவளையும் இருக்கும் படி சைகை செய்ய அவனுக்கு முன்னாள் இருந்த சோபாவில் அவனை முறைத்தவாறே உட்கார்ந்தாள்.

" இப்போ எதுக்கு என்ன முறைக்குறா?? நான் தான் இவ பண்ணின வேலைக்கு முறைக்கணும் " என்று நினைத்தவன் பேச சொல்லி சைகை செய்தான்.

எப்படி பேச தொடங்குவது என்று முதலில் தடுமாறியவள், கொஞ்சம் தைரியத்தை வரவழைத்து கொண்டு " நேற்று நான் கெட்டதை தருவதாக சொன்ன ஞாபகம் " என்றாள்.

" இப்படி பழைய புராண கதைகளிலே வாற போல கதைக்கிறத விட்டிட்டு straight ஆ விஷயத்துக்கு வா " என்றான் அடக்கப்பட்ட சிரிப்புடன் கையை கட்டி இருந்தவாறே.

அவன் கிண்டலில் கோபம் எகிற அதை கட்டுப்படுத்தியவள் " நீங்க அனாமிகாவை கல்யாணம் பண்ணிக்கணும் " என்றாள் ..

" what?? come again " என்று தனது காதில் சுண்டு விரலை விட்டு ஆட்டியபடி அதிர்ச்சியாக கேட்டான். ஏதும் தனக்கு பிழையாக விளங்கி விட்டதா என்று பரிசோதிப்பதத்திற்காக.

அவன் செயலால் பயத்தில் எச்சிலை முழுங்கியவள் தைரியத்தை வரவழைத்து கொண்டு. " நீங்க அனாமிகாவை கல்யாணம் பண்ணிக்கணும் " என்றாள்.

" நம்ம காதில கோளாறு இல்ல அவ மூளைல தான் கோளாறு " என்று யோசித்தவன் சாவகாசமாக சாய்ந்திருந்தபடி அவளை

துளைத்தெடுக்கும் பார்வை பார்த்தான்.

அவன் பார்வையில் சங்கடப்பட்டவள் " நேற்று நீங்க தந்த வாக்கு படி நீங்க இதை செய்யணும்" என்று சொல்ல வாய் விட்டு சிரித்தான். சிரித்தவன் முகத்தை கடினமாக்கி கொண்டு " என்ன பார்த்தா தசரதன் மாதிரி இருக்கா??? இல்ல உனக்கு தான் கைகேயி என்ற நினைப்பா?? நீ சொல்றது எல்லாம் செய்ய முடியாது போடி " என்று சீறினான்.

அவன் சீரலில் பயந்தாலும் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்தவளாக " இப்படி சொன்ன சொல் காப்பாத்த தெரியாத மனுஷனா இருக்கிறது நல்லதில்லை " என்று ஏதேதோ உளறினாள்.

அவளை கூர்ந்து பார்த்தவன் " நான் மனிஷனே இல்ல " என்றான்.

அதை கேட்டவள் " அது தெரியும் தானே " என்று மனதுக்குள் சொன்னாலும் வெளியில்

சொல்லாமல் முழுங்கினாள்.

எப்படியாவது அவனை சம்மதிக்க வைக்க வேண்டும் என்ற முனைப்பில் " நீங்க சொன்னதை செய்விங்க என்ற நம்பிக்கைல தானே நான் கஷ்டப்பட்டு வின் பண்ணினேன்" என்றவளை நினைத்து தலையில் அடித்து கொள்ளலாம் போல இருந்தது.

வந்தா சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கியவன் " யாரு நீ??? கஷ்டப்பட்டு?? ... வெளிய சொல்லாத சிரிக்க போறாங்க " என்றான்.

அவளை மட்டம் தட்டுவது கோபம் வர " தோல்வி அடைஞ்சிட்டு பேச்சை பாரு " என்றாள்.

அவளை நிதானமாக பார்த்தவன் கேலி குரலில் " சரி பாட்மிண்டன் சாம்பியன்... உங்க அளவுக்கு என்னால விளையாட முடியுமா?? " என்றவன் வெளியில் போகும் படி வாசலை நோக்கி கை காட்டினான்.

அவமானபட்டாலும் பரவாயில்லை இவ்வளவு

தூரம் வந்து எப்பிடியாச்சும் அவனை சம்மதிக்க வைக்க வேண்டிய முனைப்போடு.. " முடிஞ்சா என்னை வின் பண்ணி இருக்க வேண்டியது தானே " என்றாள்.

" இவ அடங்கவே மாட்டாளா " என்று யோசித்தவன் " நீ நம்ம காலேஜ் தானே.. நான் இருக்கும் வரைக்கும் யாரு பாட்மிண்டன் சாம்பியன் என்று கேட்டு பாரு... அதுக்கு பிறகு வந்து பேசு... பாவம் என்று விட்டு தந்தா .... வந்துட்ட பெருசா பேசுறதுக்கு " என்று கடினமாக முகத்தை வைத்தபடி கூறினான்.

அவன் கூறிய தோரணையில் அவன் தான் சாம்பியன் என்று தெரிந்தாலும் அதை காட்டி கொள்ள விரும்பத்தவள் " சாம்பியன் என்றால் வின் பண்ணி இருக்கனும் ... எனக்கு விட்டு தர வேண்டிய அவசியம் இல்லை. " என்றாள் .

" இப்போ தோணுது உனக்கெல்லாம் விட்டு தராம இருந்திருக்கணும்.. நீ இப்படி கேட்கப்போகிறாய் என்றால் கண்டிப்பாக விட்டு தந்திருக்க

மாட்டேன் " என்றான்

அவன் பேச்சு திசை மாறி போவதை அறிந்தவள் " தேவையில்லாத பேச்சு எதுக்கு? அனாமிகாவை கல்யாணம் பண்ணிக்கோங்க " என்றாள் . அவள் திரும்ப திரும்ப கூறியது கோபத்தை பெருக்க " இங்க பாரு வைஷ்ணவி .. நீ டிவோர்ஸ் கேட்டது ஓகே.. அது நீயும் நானும் சம்பந்த பட்ட விஷயம் ... நான் யாரை கல்யாணம் பண்ணிக்கணும் என்று decide பண்ண உனக்கு ரைட்ஸ் இல்ல. இப்போ நான் எதுக்கு அவளை கல்யாணம் பண்ணிக்கணும் என்று என்னை இப்படி கஷ்டப்படுத்துறா என்று எனக்கு புரியல " என்றான் அடக்கப்பட்ட கோபத்துடன்.

அப்போதும் அடங்காதவள் " அது உங்கள் தனிப்பட்ட விஷயமா இருக்கலாம் ஆனா நீங்க எனக்கு தந்த வாக்குப்படி அவளை கல்யாணம் பண்ணிக்கணும் " என்றாள் தீர்மானமாக..

அதற்கு மேல் கோபத்தை கட்டுப்படுத்த முடியாதவன் தனது முழங்காலில் கையை

ஊன்றி எழுந்து நின்று " லூசா நீ?? உடைந்த ரேடியோ.போல எதையெடுத்தலும் திரும்ப திரும்ப சொல்லிட்டே இருக்கிறா. .. ஒண்ணு விவாகரத்து வேணும் என்று சொல்லுறா இப்போ அனாமிகாவை கல்யாணம் பணிக்கோ என்று உளறுகிறாய் ... உனக்கு என்ன தான் பிரச்சனை ?? என்ன பிடிக்காவிட்டால் விவாகரத்து பண்ணிட்டு போ.. அத விட்டிட்டு யாரை கல்யாணம் பண்ணிக்கணும் என்று எனக்கு advice பண்ண தேவையில்லை " என்று சிம்ம குரலில் சீறினான்.

அவளறியாத அவன் கோபமா??? அதற்கு சளைத்தவளா அவள்? அவனின் கோபம் அவளையும் சினமூட்ட அனாமிகாவுக்கு அவன் பண்ணிய துரோகத்தை பற்றி கேட்க வாய் வரை வந்த வார்த்தைகளை முழுங்கியவள்.. அவனை சம்மதிக்க வைக்கும் நோக்கத்தோடு " எனக்காக இது கூட செய்ய மாட்டிங்களா ?? " என்றாள் கெஞ்சும் குரலில். .

" உனக்காக நான் எதுக்குடி அவளை கல்யாணம் பண்ணிக்கணும் ??? " என்று கேட்டதற்க்கு

அவளிடம் பதிலில்லை. ஒரு பெரு மூச்சு எடுத்தவள்,
" அவளை நீங்க கல்யாணம் பண்ணிக்கணும் என்றாள் நன் என்ன பண்ணனும்?? " என்று கேட்டாள்.
அவளின் வாயை அடைக்க யோசித்தவன் " இந்த dealing நல்லா இருக்கே" என்றபடி அவளருகில் வர பதறி எழுந்தாள்.

"என்ன கேட்க போறானோ?" என்று பயந்தபடி நின்றவளருகில் அவன் மூச்சு காற்று படுமளவுக்கு நெருங்கி நின்றவன்அவள் கன்னத்தை பெரு விரலால் வருடியபடி " நீ என் கூட ஒரு மாதம் என் மனைவியாக வாழ் .. அதுக்கு பிறகு நான் அவளை கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லையா என்று தீர்மானிக்கிறேன் " என்றான் ஏக்கமாக.

அவன் தோட்ட இடம் செந்தணலை வாரி இறைத்தது போல் இருக்க அவன் கையை அகங்காரத்துடன் வேகமாக தட்டி விட்டவள் , " பொம்பள பொறுக்கி,,,, அதுக்கு வேற ஆளை பாரு

" என்று அவனை நேரே பார்த்து சீறியவள்
அருகில் நின்றவன் மார்பில் கைவைத்து
தள்ளிவிட்டு விற்று விறு என வெளியேறினாள்.

எதிர் பாராமல் அவள் தள்ளி விட்டதில் விழாமல்
இருக்க காலை நிலை குத்தி நின்றவன் "
இவளுக்கு எப்போ பார்த்தாலும் என்னை தள்ளி
விடுறதே வேலையா போச்சு .... இப்போ எதுக்கு
இவ்ளோ சீன் பொட்டிட்டு போறா?? அப்பிடி நான்
என்ன கேட்டிட்டேன்? ... இவ கிட்ட தானே கேட்க
முடியும்... எல்லார் கிட்டயும் கேட்கிற போல
என்ன பொம்பிளை பொறுக்கி என்று சொல்லிட்டு
போறா..இவளுக்கு என்னாச்சு? " என்று
மனதுக்குள் குழம்பியபடி நின்றான் ஆத்ரேயன்

வீட்டுக்கு வந்தவளுக்கு ஆத்ரேயன் மேல் கோபம்
கோபமாக வந்தது. வந்து சோபாவில் உட்கார்ந்து
நகத்தை கடித்து கொண்டிருந்தவளிடம் " என்ன
புருஷன் கூட ரொமான்ஸ் ஆ ??" என்று கீர்த்தனா
கேட்க. " லூசா நீ?? இன்னொரு தரம்
இப்பிடியெல்லாம் பேசின நான் மனுஷியா

இருக்க மாட்டேன் " என்று கத்திய வைஷ்ணவி கீர்த்தனாவுக்கு புதியவள்.

அவள் திட்டியதால் அப்படியே அதிர்ந்து நின்றவள் " இவளுக்கு என்னாச்சு ?? " என்று யோசித்தபடி அவளிடம் மேலும் கேட்க மனமில்லாமல் போய் படுத்து விட்டாள்.

அடுத்து என்ன செய்வது என்று யோசித்து யோசித்து குழம்பியவளுக்கு "ஒரு மாசம் தானே மனைவியாக இருப்போமா ?? " என்று கூட எண்ணம் வந்தது . உடனே சுதாகரித்தவள் " ச்ச என்ன நினைப்பு இது ... அந்த பொறுக்கிக்கு மனைவியாகவா ??? " என்று தன்னை கடிந்தவளுக்கு எந்த வழியும் புலப்படவில்லை\

கார்த்திக் கீர்த்தனா மீண்டும் நண்பர்களாக பழக தொடங்கி இருந்தனர் . இருவருக்கும் காதல் இருந்தாலும் அடுத்த கட்டத்துக்கு போக பயமாக இருந்தது.

ஆத்ரேயன் வைஷ்ணவியை பார்ப்பதையே

முற்றிலும் தவிர்த்திருந்தான்.வழமை போல் சாதாரணமாகவே நாட்கள் உருண்டோட சில வாரங்கள் கழித்து அனாமிகா வைஷ்ணவியை கூப்பிட்டனுப்பினாள் .

" இப்போ என்ன சொல்வது இவங்க கிட்ட ??" என்று யோசித்தவள் அனாமிகாவின் தோற்றத்தை பார்த்து அதிர்ந்தாள். இறுக்கி போடப்பட்ட கவர்ச்சி உடையில் வயிறு மட்டும் சற்று மேடிட்டிருந்தது. அது பீர் வயிறு என்று தெரியாதவள் அவள் கர்ப்பமாக இருப்பதால் வந்தது என்று நினைத்து கொண்டாள்.

அவள் பார்வை செல்லும் இடம் பார்த்த அனாமிகாவுக்கு ஒரு வித மகிழ்ச்சி உண்டாக.. அதை மறைத்து கொண்டு முகத்தை சோகமாக வைத்து கொண்டாள் . " ஆத்ரேயன் கிட்ட கேட்டீங்களா ??? " என்று கேட்க

சற்று தடுமாறிய வைஷ்ணவி " கேட்டேன் மேடம்.. ஆனா அவர் முடியாது என்று சொல்கிறார் .. நீங்க கவலை படாதீங்க நான்

எப்படியாச்சும் உங்க இருவரையும் சேர்த்து வைக்கிறேன்" என்றாள்.

" நீ என்னடி சேர்த்து வைக்கிறது??? " என்று மனசுக்குள் வன்மையாக நினைத்தவள். "எனக்கு சாகிறத விட வேற வழி இல்ல.. இந்த குழந்தை பிறந்து அப்பா பேர் தெரியாம வளர்ந்து என் மானம் மரியாதை என் குடும்ப மானம் எல்லாம் போறத விட நான் சாகிறது மேல்.... இந்த பிஞ்சு குழந்தையை அழிக்க எனக்கு மனசு வரவில்லை " என்று நீலி கண்ணீர் விட்டாள் ஏற்கனவே பல கருக்கலைப்புகள் மேட்கொண்டவள். அவளுக்கு இப்பொது வைஷ்ணவியை ஆத்ரேயனிடமிருந்து பிரிக்கணும் அதே நேரம் அவனை கல்யாணம் பண்ணனும். அதுக்கு

வைஷ்ணவியை வைத்து தான் ஆட்டத்தை ஆரம்பிக்கணும் என்று அறிந்திருந்தாள். வைஷ்ணவியின் இளகிய மனதினை அறிந்தவள் அதனை தனக்கு சாதகமாக்கி கொண்டாள்.

அனாமிகா குழந்தை மேல் வைத்திருக்கும்

பாசத்தை கேட்டு மெய் சிலிர்த்த வைஷ்ணவிக்கு ஆத்ரேயனை நினைக்க நினைக்க ஆத்திரமாக இருந்தது. " நீங்க எதுக்கு சாகனும் உங்கள இந்த நிலைமைக்கு ஆளாக்கியவன் தான் சாகனும் " என்று சினம் பொங்க பேசியவளை புருவம் உயர்த்தி பார்த்த அனாமிகா மனதுக்குள் " இவ தான் நம்ம காரியம் சாதிக்க சரியான பீஸ் " என்று நினைத்து கொண்டாள்.

" சரி வைஷ்ணவி நீங்க போய் வேலைய பாருங்க. எனக்கு மனசு சரி இல்ல " என்றவளை பரிதாபமாக பார்த்தபடி வெளியேறினாள் . " நீ பரிதாபப்படும் நிலையிலா நன் இருக்கிறேன் " என்று மனதுக்குள் சீறியவள் அடுத்த திட்டத்தை போட்டாள்
அடுத்தநாள் அலுவலகமே பரபரப்பாக இருந்தது. அப்போது தான் வந்த வைஷ்ணவிக்கு எதுவும் புரியாமல் விசாரிக்க அவள் கேள்விப்பட்ட விடயம் தலையில் குண்டு போட்டது போல் இருந்தது.

அனாமிகா தற்கொலைக்கு முயற்சி செய்து வைத்தியசாலையில் அனுமதிக்க பட்டிருப்பதாக கேள்விப்பட்டவளின் ரத்தம் கொதித்தது. வெகுண்டெழுந்த சினத்துடன் ஆத்ரேயன் அறைக்கு சென்றாள் . அவளின் கோபத்தையும் ஆக்ரோஷத்தையும் பார்த்த கீர்த்தனவே ஒரு கணம் பதறி போனாள் . அவளை தடுக்க அவளுக்கே பயமாக இருந்தது.. அவள் முன் போல் இல்லை என்று அறிந்தவள் தள்ளி நின்றே நட்பு பாராட்டினாள். .

உள்ளே நின்ற clients யாரையும் சட்டை செய்யாதவள் விறு விறு வென அவன் முன்னே வந்து நின்று " இப்போ சந்தோஷமா ?? " என்று கேட்டாள் .

அவளின் கோபத்தில் அவனும் ஆடி தான் போனான் .எதுக்கு கோபப்படுகிறாள் என்று அவனுக்கும் விளங்கவில்லை. clients ஐ பார்க்க அவர்கள் அவன் பார்வையின் அர்த்தத்தை புரிந்து வெளியேறினார்கள்

அவளை புருவம் சுருக்கி பார்த்தவன் " என்ன சந்தோசம்?? " என்று கேட்டான்.

" நடிக்காதடா ... " என்ற அவளின் ஒருமை விளிப்பில் சற்று அதிர்ந்தவனுக்கு அவள் தனது கையை வெட்டி கொண்ட போது நின்ற நிலை ஞாபகம் வந்தது. மீண்டும் விபரீதமாகாமல் தடுக்க நினைத்தவன்

" சொன்னால் தானே தெரியும் " என்றான் அலட்சியமாக அதே நேரம் தாழ்வான குரலில்.

அவன் அலட்சியத்தில் பொறுமை இழந்தவள் " எதை சொல்ல சொல்கிறாய்??? நீ அனாமிகாவை காதலிக்கிற போல நடித்ததையா ?? அவ கூட குடும்பம் நடத்தி அவ வயிற்றில் ஒரு குழந்தையை கொடுத்ததையா ?? இப்போ அவளை கல்யாணம் பண்ண முடியாது. என்று மறுப்பதையா ?? உன்னால் அவ தற்கொலை முயற்சி பண்ணி செய்து ஹாஸ்பிடல்ல இருக்கிறதையா ??? இப்படி எத்தனை

பெண்களின் வாழ்க்கையை.. " என்று தொடர்ந்தவளை கோபம் கொப்பளிக்க " that's enough you shut up damn it " என்று கர்ஜித்தவாறே மேசையை தனது இரு கைகளாலும் பலமாக தட்டியபடி எழும்பி நின்றவனை பார்த்து ஒரு கணம் அரண்டு தான் போனாள்.

அவன் கண்ணில் கோபம் கொப்பளிக்க " நானும் பாவம் போனா போகுது என்று விட்டா ரொம்ப ஓவரா தான் பேசுற ?? யு *********" " என்று கெட்டவார்த்தைகளில் ஆங்கிலத்தில் சீறியவனை தைரியமாக எதிர்த்து நின்றாள்.

கோபம் கொப்பளிக்க அவளை ஏதும் செய்து விடுவேனோ என்று பயந்தவன் " dont irritate me , just get out " கையால் சைகை செய்துவிட்டு . கோபத்தை கட்டுப்படுத்த இரு கைகளையும் பாண்ட் பாக்கெட்டில் விட்டபடி மறுபக்கம் பார்த்து நின்றான்.

" உண்மையை சொன்னா கோவம் வருதா Mr.

ஆத்ரேயன் " என்றவளை நோக்கி வேகமாக எட்டுக்களில் வந்தவன் பொறுமையிழந்து அவன் கழுத்தை தன் கையால் பிடித்து தள்ளி சுவருடன் சாத்தினான்.

" i said You to shut up... you idiot ... நீயா கற்பனை பண்ணி பேசுற.... you stupid woman " என்று சீறியவன் அவள் வலியால் முனகுவதை கண்டு கழுத்திலிருந்து கையை எடுத்தான் . அவன் கையை எடுத்ததும் கழுத்தை பிடித்து கொண்டு இருமியவள் அவன் கோபத்துக்கு சற்றும் பயப்படாமல் " நான் ஒன்றும் கற்பனை பண்ணல. நடந்ததை தான் சொல்றன்.. u cheated அனாமிகா .. அவ இப்போ pregnant .. " என்றாள்.

" what the *** You are talking ?? " என்று கேட்டவன் மீசை துடிக்க தொடங்கியது. தன்னை சமநிலைப்படுத்த முடியாமல் தவித்தவன் மூடிய அறை என்றும் பார்க்காமல் சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தபடி மற்ற பக்கம் திரும்பி நின்றான்..

சிகெரெட் புகையால் அவள் இரும தொடங்க

அதை அணைத்து குப்பை கூடைக்குள்
போட்டவன் மனம் கொதித்தாலும் அதை
அடக்கியப்படி அவள் பக்கம் திரும்பினான்.
அவளும் அவனிடம் நீதி கேட்காமல்
போவதில்லை என்ற தோரணையில்
அவ்விடத்திலேயே சுவரில் சாய்ந்து நின்றாள்.

இதை நிதானமாக கையாள வேண்டும் என
யோசித்தவன். " உட்கார்." என்று சோபாவை
காட்டியவன் . " give me a minute " என்றபடி தனது
அறையுடன் சேர்ந்து இருந்த குளியலறைக்குள்
புகுந்தவன் நன்றாக முகத்தை அடித்து
கழுவினான்.

தனது உருவத்தை கண்ணாடியில் சிறிது நேரம்
கண்ணாடியில் பார்த்தான். சீராக ஜெல் வைத்து
சீவியிருந்த கேசமும் அரும்பிய தாடியும்,
பாண்ட்டுக்குள் விடப்பட்ட இள நீல நிற ஷர்ட் உம்
டையும் என் டிப் டாப் ஆக இருந்தவன் மனதில்
"காதல் இல்லாதவனுக்கு அழகொரு கேடா"
என்று மனசாட்சி கேட்க வெறுமையை
உணர்ந்தவன் என்ன நினைத்தானோ

தெரியவில்லை தண்ணியை தொட்டு முடியை கலைத்து விட்டான். அதன் பின் ஷிர்ட்டை எடுத்து வெளியில் போட்டு விட்டு முழுக்கை shirt லிருந்த பொத்தான்களை கழட்டி அதை முழங்கை வரை மடித்து கொண்டான். டையை கழட்டி hanger இல் போட்டவன் ஷிர்டின் முதலிரு பட்டன் களையும் கழட்டி விட்டான். தன்னை அசிங்கமாக்க செய்த அவன் செய்கைகள் கூட அவன் கம்பீரமான அழகை கூட்டி காட்டியது.

தலையை கோதியபடி வெளியில் வந்தவனின் தோற்றத்தை பார்த்து வைஷ்ணவி அதிர்ச்சியடைந்தாலும் அதை காட்டி கொள்ளாமல் இருந்தாள்

அவள் முன்னால் இருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு சாய்ந்து உட்கார்ந்தவன் " இப்போ சொல் " என்றான்.

" அன்று முத்தம் கொடுத்ததை நான் பார்த்தேன் " என்றாள். "தொடங்கி விட்டாள் புரியாமல் பேசுறதுக்கு " என்று மனதில் நினைத்தவன் "

யாரு? யாருக்கு? " என்று சாதாரணமாக கேட்டான். " நடிப்பை பாரு " என்று முணுமுணுத்தவள் " அனாமிகா உங்களுக்கு " என்றாள் . " சோ வாட் ??" என்று அலட்சியமாக கெட்டவனை பார்க்க அவளுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது.

" அதனால தான் நான் சொல்றன் அவ pregnancy க்கு நீங்கதான் காரணம் "என்று சொன்னவளை இளக்காரமாக பார்த்தவன் " முத்தம் கொடுத்தா அதுவும் கன்னத்தில கொடுத்தா pregnant ஆயிருவாங்க என்று நான் படிக்கவில்லை ... நான் அறிந்த வரையிலும் to become pregnant we should make love " என்றான்.

அவனின் இளக்காரமா பதிலில் கொதிப்படைந்தவள் " யாருக்கு தெரியும் அதுவும் நடந்திருக்கலாம் " என்றாள் .

" என் அனுமதி இல்லாம kiss பண்ணலாம் ஆனால் நீ சொல்றது நடக்க சான்ஸ் இல்ல.. " என்றான்

கடின குரலில். " இவன் கிட்ட மறச்சு இனி பயனில்லை நேரடியாவே கேட்டு விடுவோம் " என்று நினைத்தவள்

"என் கிட்ட பொய் சொல்ல வேணாம். அன்னைக்கு மீட்டிங் ரூம்ல அனாமிகாவை kiss பண்ணிட்டு தான் என்னை கிஸ் பண்ணினீங்க என்று கேள்விப்பட்டேன். கொஞ்சம் கூட பெண்களை ஏமாத்துற குற்ற உணர்ச்சி இல்லையா?? எனக்கு இதெல்லாம் தெரிய வராது என்று நினைச்சீங்களா??? அவ conceive ஆகிறதுக்கு நீங்க தான் கரணம் என்று அவ என் கிட்ட சொல்லிட்டா. இனி நீங்க தப்ப முடியாது.. கட்டின பொண்டாட்டிக்கும் உண்மை இல்ல தொட்ட பொண்ணுக்கும் உண்மை இல்ல.. அந்த பொண்ணு இப்போ சாக கிடக்குறா உங்களால.... . உங்க பொறுக்கி தனத்தால " என்றவளை அவன் பேசி முடிக்கும் வரை தாடையில் கை வைத்தபடி பார்த்து கொண்டிருந்தவனுக்கு இப்பொது தான் விளங்கியது அவள் இவ்வளவு நாளும் பொம்பள பொறுக்கி என்று திட்டியதன் அர்த்தம்.

" சோ இது அனாமிகாவின் பிளான் " என்று மனசுக்குள் சரியாக கணித்தவனுக்கு பொய் சொல்லிய அனாமிகாவை விட அவள் சொல்லியதை நம்பிய வைஷ்ணவி மேல் கோபம் எகிறியது.

கோபத்தை கட்டுப்படுத்தியபடி அவளை கூர்மையாக பார்த்தவன் " நீ அத நம்புறியா??? " என்று கேட்டான்.

அவள் கேட்ட தோரணை அவளுக்கு கலக்கத்தை கொடுத்தாலும் " ஆம் நான் நம்புறேன்.. என்ன கூட நீங்க பலாத்காரம் பண்ணினீங்க... சோ இப்படி பண்ணி இருக்கமாட்டீங்க என்று எந்த சான்றும் இல்ல.. அதுக்கும் மேல எந்த பொண்ணும் தான் கல்யாணத்துக்கு முதல் கர்ப்பமாக இருப்பதாக பொய் சொல்ல மாட்டா . " என்றாள்

அவளை விரும்பியவரை பேச விட்டவன் " எதுக்கும்.எதுக்கும் முடிச்சு போடுறா பாரு " என்று எரிச்சலடைந்தான்.

" so நான் பொம்பள பொருக்கி.. எனக்கு பார்க்கிற எல்லா பொண்ணுங்க கூடவும் love make பண்ணனும் என்று நீ சொல்ல வாரியா ??" என்று நிதானமாக அதே நேரம் அழுத்தமாக வினவினான்.

அவனை காயப்படுத்தும் நோக்குடன் " ஆமா கண்டிப்பா.. " என்ற பதிலில் அவன் கடைசி நம்பிக்கையும் உடைந்து போனது.. மனதில் இனம் புரியுதா வலி தோன்ற அதை கஷ்டப்பட்டு மறைத்தவன்.. " சரி நீ போகலாம்... " என்று அவளை பார்க்க அவள் தயங்கி நின்றாள்..

" இப்போ என்ன ??" என்று சோர்வாக கெட்டவனிடம் " எனக்கு டிவோர்ஸ் வேணும் நீங்க அனாமிகாவை கல்யாணம் பண்ணிக்கணும் " என்றாள்

"சரியான இம்சடி நீ " என்று நினைத்து பெரு மூச்சு மூச்சு விட்டவன் "உன் விருப்பப்படி உனக்கு டிவோர்ஸ் தந்திடுறன்... ஒரு மனைவியா

என்னோட பொம்பள பொறுக்கி தனத்தை கண்டிக்க உனக்கு உரிமை இருக்கு.. டிவோர்ஸ் எடுத்த உடனே அந்த உரிமையை நீ இழந்து விடுவாய் .. so அதுக்கு பிறகு நான் யாரை கல்யாணம் பண்ணிக்கணும் என்று நீ சொல்ல தேவையில்லை . இப்போ நீ போகலாம் " என்று கறாராக கூறியவன் "இப்போ நீ இங்கிருந்து கிளம்பா விட்டால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. என் பொறுமைக்கும் எல்லை இருக்கு.. so please get out " என்று அடக்கப்பட்ட கோபத்துடன் உறுமினான்.

மேலும் பேச வந்தவளிடம் வாயில் சுட்டு விரலை வைத்து பேச வேண்டாம் என்று எச்சரித்தவனின் கண்களில் கோபமும் கவலையும் சேர்ந்து இருந்தது.

அவன் தோரணையில் கொஞ்சம் பயந்தவள் "பிறகு பேசலாம்... இப்போ நிலவரம் சரியில்லை " என்று நினைத்தபடி கிளம்பினாள் . அவள் போகும் வரை தன் முழங்காலில் இரு கைகளையும் வைத்து கோர்த்தபடி அவளை

துளைத்தெடுக்கும் பார்வையை பார்த்து கொண்டிருந்தான்.

காதல் மலரும்.....

<u>யுகம்-24</u>

அவள் சென்றதும் அவன் மனதிலிருந்த கவலைகள் அனைத்தும் கோபமாக வெளிப்பட்டது . கோபத்தை கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் மேசையிலிருந்த பூவாசை தூக்கி சுவரில் எறிந்து உடைத்தவன் குளியலறைக்குள் சென்று நன்றாக முகத்தில் தண்ணீர் அடித்து கழுவினான்.

சிறிது நேரம் கழித்து வெளியில் வந்தவன், சிற்றூழியரை அழைத்து clients ஐ நாளை சந்திப்பதாக சொல்லி அனுப்பியவன். மேலும் யாரையும் உள்ளே வர வேண்டாம் என்று சொல்லி ஷிர்ட்டை திறந்துவிட்டு இரு கைகளையும் தலைக்கு வைத்தபடி காலை நீட்டி சோபாவில் சாய்ந்து கண் மூடி படுத்தான்.

தனது கேபினுக்குள் சென்றவளுக்கு அவன் மேல் கோபம் தீர்ந்த பாடில்லை. " கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாதவன். அந்த குழந்தை மேலே கூட பாசம் இல்லையா அவனுக்கு.. செய்றதெல்லாம் செய்திட்டு இருக்கிறத பாரு " என்று பொரிந்து தள்ளினாள்.

அலுவலகத்தில் ஓய்வாக இருந்து பழக்கமில்லாத ஆத்ரேயனுக்கு அன்று ஓய்வு தேவைப்பட்டது. படுத்தவனுக்கு தூக்கம் வரவில்லை. மனம் பதட்டமாகவே இருந்தது. வீட்டுக்கு செல்வதற்காக கார் கீயை எடுத்து கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

எப்போதும் tip top ஆக இருப்பவன். அன்று கலைந்த கேசத்துடனும் கோபத்தினால் சிவந்த முகத்துடனும், ஷிர்டின் முன் பக்கம் முழுதாக திறந்திருக்க வெற்று மார்புடன் வெளியேறியவனை பார்த்து அதிர்ந்த ஒட்டு மொத்த கம்பெனி ஊழியர்களும் எழுந்து நின்றனர். அவன் செல்லும் வரை குண்டூசி

விழுந்தால் கூட கேட்குமளவுக்கு நிசப்தமாக இருந்தது. அவன் கதவை திறந்ததும் எல்லாரும் குசுகுசு என பேச தொடங்க அது அவன் காதில் விழுந்து தொலைத்தது. ஏற்கனவே கோபத்தில் இருந்தவன் ஆத்திரமாக கதவை மீண்டும் திறந்து "shut up and do your works " என்று சிம்ம குரலில் கர்ஜித்தவன் எல்லோரயும் ஒரு தடவை நோட்டமிட்டுவிட்டு விறுவிறுவென வெளியேறினான்.

காரில் விரைவாக வீட்டுக்கு சென்றவன் பிரிட்ஜ்லுள்ள பீரை எடுத்து குடித்தான். போதை ஏற ஏற அவன் காதல் கொண்ட மனம் வெதும்ப தொடங்கியது. அனாமிகா சொன்னதில் அவள் மேலுள்ள கோபம் அனைத்தும் அதை நம்பிய வைஷ்ணவி மேல் திரும்பியது. கோபம் என்பதை விட ஆதங்கம் கவலை மன உளைச்சல் என்று கூறலாம். மித மிஞ்சிய போதையில் " ஏண்டி நான் பொம்பள பொறுக்கியாடி ?? உன்னை தவிர யாரையாச்சும் கண்ணக்கு கீழ பார்த்து பேசி இருப்பனாடி ?? என் மேல உனக்கு கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லையா??? என் காதலை

புரிஞ்சுக்காத நீ எனக்கு வேணாம் " என்று அகங்காரமாக கத்தியவன் கோபம் முழுவதையும் கையிலிருந்த க்ளாசில் காட்ட அது வெடித்து சிதறியது..

இடது கையில் ரத்தம் வடிய அப்படியே படுக்கையில் படுத்தவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவனால் கண நேரத்தில் நிரூபிக்க முடியும் அவன் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் ஆனால் அப்படி தன்னை நிரூபித்து அவள் தன்னை நம்புவது அவனுக்கு பிடிக்காமல் இருந்தது.

கட்டிலில் படுத்தவன் கையில் ரத்தம் வடிய அப்படியே தூங்கி போனான். வேலை முடிந்ததும் கார்த்திக் கீர்த்தனா மற்றும் வைஷ்ணவி மூவரும் அனாமிகாவை பார்க்க வைத்தியசாலைக்கு விரைந்தனர். போகும் பொது " எதுக்கு suicide attempt பண்ணி இருப்பாங்க?? " என்று கார்த்திக் கேட்க கீர்த்தனவோ " தெரியல " என்றாள். அனைத்துமறிந்த வைஷ்ணவி வாயை மூடி

கொண்டு மனதுக்குள் ஆத்ரேயனை திட்டியபடி வந்து சேர்ந்தாள்.

வைத்தியசாலையில் கட்டிலில் படுத்தவாறு இருந்தவள் முகத்தில் சோகத்தை தேடி பிடிக்க வேண்டி இருந்தது. ஸ்லீப்பிங் பில்ஸ் போட்டதாக வீட்டில் நடித்து ஹொஸ்பிடலுக்கு வந்து சேர்ந்தவள் டாக்டரை கைக்குள் போட்டு கொண்டு தனது நாடகத்தை அரங்கேற்றி இருந்தாள்.

அர்ஜுனும் தர்மேந்திரனும் ஆத்ரேயன் அவளை நிராகரித்தது தான் கரணம் என்று யூகித்திருந்தார்கள். வேற மாப்பிளை பார்த்து கல்யாணம் பண்ணலாம் என்று சொன்னதை காது கொடுத்து கேட்காதவள் ஆப்பிள் ஒன்றை சாப்பிட்டபடி காலை ஆட்டி கொண்டு கட்டிலில் படுத்திருந்தாள். வைஷ்ணவி வந்ததும் கண நேரத்தில் முகத்தை சோகமாக மாற்றி கொண்டாள்.

மூவரும் அவளை நலம் விசாரித்து விட்டு

வெளியே செல்ல இருந்த சமயம் " வைஷ்ணவி உங்க கூட தனியா பேசணும் " என்றதும் கார்த்திக்கும் கீர்த்தனாவும் வெளியேறினர்.

" இப்போ கூட என்னை வந்து பார்க்கவில்லை பார்த்திங்களா ?? அவருக்கு என் குழந்தையை பற்றி கொஞ்சமும் அக்கறை இல்லையா?? " என்று சோகமான குறளில் கேட்டாள்.

அவளின் சோகம் வைஷ்ணவியையும் தாக்க "ராட்சசன் " என்று ஆத்ரேயனை மனதுக்குள் திட்டியவள் " கவலை படாதீங்க உங்க கல்யாணத்தை நான் முடிச்சு வைக்கிறேன் " என்றபடி வெளியேறினாள்.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக கீர்த்தனாவை அனுப்பி விட்டு ஆத்ரேயன் வீட்டு கதவை தட்டினாள். ஏதோ சரி இல்லை என்று கீர்த்தனாவுக்கு புரிந்தாலும் அதை கேட்க பயத்தில் வாய் மூடி நடப்பதை வேடிக்கை பார்த்தாள். தூங்கி எழுந்தவன் இடது கையில் ரத்த கறையுடன் கதவை திறந்தான். அவனின்

அலங்கோலத்தை பார்த்து அதிர்ந்தவள் ரத்தத்தை பார்த்ததும் அனைத்தையும் மறந்து " ஐயோ என்னாச்சு" என்று அவனருகே ஓடி சென்று அவன் கையை பிடித்து காயத்தை பார்த்தாள்.

"வந்துட்டா over acting பண்ணுறதுக்கு " என்று நினைத்தவன் , அவளின் அக்கறை அவனுக்கு எரிச்சலை கூட்ட " விடுடி கையை " என்று அவளிடமிருந்து கையை பிரித்தெடுத்தான். " இப்போ எதுக்கு இங்க வந்த??? உனக்கு என்ன வேணும்??? ப்ளீஸ் போயிடு .. ஏற்கனவே கோபத்துல இருக்கிறேன் .. இன்னும் என்னை சீண்டாதே " என்று விடாமல் உறுமினான்.

அவன் கையை உதறியதால் வந்த கவலையை மறைத்தவள் . " ஏன் நீங்க ஹாஸ்பிடல் போய் அனாமிகாவை பார்க்கவில்லை? " என்று கேட்டாள்.

" லூசாடி நீ?? எனக்கு வாயில நல்லா வருது.. வேணாம் .. இப்போ போகப்போகிறாயா?

இல்லையா? " என்று கர்ஜித்தவனை கண்டு பயப்படாமல் " நீங்க ... " என்று தொடங்கியவளை இடை மறித்தவன் " கொஞ்சம் நிறுத்து ... நீங்க அனாமிகாவை கல்யாணம் பண்ணிக்கணும் ... இத தானே சொல்ல வாற ??? ஓகே பண்ணிக்கிறேன் .. அதுக்கு முதல் அவ என் கூட கதைக்கணும் " என்றான்.

அவன் ஒத்து கொண்டதில் வைஷ்ணவிக்கு முறைக்கு மனதில் சந்தோஷம் பரவி இருக்க வேண்டும். ஆனால் அவள் மனதில் இனம் புரியாத வலி தோன்றியது.

மேலும் போகாமல் தயங்கி நின்றவளை பாய்த்தவன் " now what ?? " என்று கேட்டான்.

" உங்க கைக்கு first aid பண்ண வேணாமா??? "என்று தயங்கியபடி கெட்டவளிடம்

" நீ தந்த காயத்தை விட இதெல்லாம் பெரிய காயமே இல்ல.. இப்போ போறியா ப்ளீஸ் " என்றவன் வாசலை சுட்டி காட்டினான்.

அவன் கூறியது அவளுக்கு மனதுக்குள் உறுத்த தொடங்கியது. வீட்டுக்கு வந்தவளுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது.. குளியலறைக்கு சென்று அழுத்தவள் அனாமிகாவுக்கு தொலைபேசியில் நடந்ததை கூறினாள்..

" உண்மையாவா?? நாளைக்கே போய் பார்க்கலாம் " என்று குதூகலித்து அனாமிகாவை நினைத்து விரக்தியாக சிரித்து கொண்டாள்.

தான் கூறிய பொய்களை வைஷ்ணவி ஆத்ரேயனுக்கு சொல்லி இருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையில் அடுத்தநாள் அலுவலகத்தில் காத்திருந்தாள். ஆத்ரேயன் அன்று விடுமுறை என்றதும் வைஷ்ணவியை கூட்டி கொண்டு அவன் வீட்டுக்கு புறப்பட்டாள். அவளுக்கு தெரியவில்லை சிங்கம் வெறி கொண்டு வேட்டையாட காத்திருக்கின்றது என்று. வைஷ்ணவி எத்தனையோ தடவை மறுத்தும் அவளை வற்புறுத்தி அழைத்து சென்றாள்.

வீட்டுக்கு வைஷ்ணவியுடன் வந்தவள் கதவை

தட்ட "come in " என்றபடி மடியில் லப்டோப்பில் வேலை செய்தவாறு சோபாவில் உள்ளங்கையில் கட்டுடன் அமர்ந்திருந்தான். "என்னாச்சு?" என்று கேட்ட அனாமிகாவை சட்டை செய்யாமல் அவள் பின்னால் நின்ற வைஷ்ணவியை எட்டி பார்த்தவன் " அது தான் கொண்டு வந்து விட்டாச்சே. இடைல நீ எதுக்கு நந்தி மாதிரி,....ஆபீஸ் time ல நீ ஏன் வெளிய வந்தாய்?.... நாங்க கட்டி பிடிச்சிப்போம் கிஸ் பண்ணிப்போம்... அதெல்லாம் ஆ என்று வாய பிளந்து பார்க்கவா நிக்கிறாய்? ... வெளிய போடி " என்றான்..

அவன் வார்த்தையில் மனசுடைந்த வைஷ்ணவி கண்களில் கோர்த்த நீரை உள்ளிழுத்த படி பஸ்ஸில் ஆபீஸ்க்கு சென்றாள். அவன் தன்னை கிஸ் பண்ண போறான் என்று நினைத்து பூரித்த அனாமிகாவுக்கு வைஷ்ணவியை அவமான படுத்தி துரத்தியது ரெட்டை சந்தோஷமாக இருந்தது.

அவளின் தாப பார்வை அவனுக்கு எரிச்சலை

இருந்தாலும் ஆத்திரத்தை அடக்கி கொண்டு லப்டோப்பை மூடியவன் வாசல் கதவை காலால் சாத்திவிட்டு கண்கள் பளபளக்க அவளை நெருங்கி வந்தான்..

அவன் தன்னை முத்தமிட போகிறான் என்று நினைத்தவள் சுவரில் சாய்ந்து நிக்க, அவளருகில் துளைத்த பார்வையுடன் கடினமான எட்டுக்களுடன் வந்தவனை பார்த்து அவளுக்கு சிலிர்ப்பு உண்டானது. வெட்கப்பட்டு கொண்டே சுவரில் சாய்ந்து கொண்டாள் . அவளை மூச்சு காற்று படுமளவுக்கு நெருங்கி நின்றவன் தனது வலது கையை அவள் கன்னத்தில் வைத்து பெருவிரலால் கோலம் போட்டான்

அதை கண்மூடி அனுபவித்து நின்றாள் அனாமிகா. கையை காதுக்கு அருகில் கொண்டு சென்று முடியை அலைந்தவன் அப்படியே காற்றாக முடியை பற்றி அவளை இழுத்து கீழே தள்ளி விட்டான்.

இந்த தாக்குதலை எதிர் பாராத அனாமிகா கீழே

விழுந்தாள். நிலை கொள்ள சிறிது நேரம் எடுத்தவள் எழ முடியாமல் அப்படியே இருந்தபடி அவனை பயத்துடன் திரும்பி பார்த்தாள்.

அவளருகில் அழுத்தமான காலடிகளுடன் வந்தவன் கீழே குந்தியபடி அவள் தலைமுடியை ஆக்ரோஷமாக பிடித்தான் " நானே வில்லன்டி .. என் கிட்டயே வில்லி வேலை பார்க்கிறாயா ??? உன் வயிற்றில் என் குழந்தை வளருதா ?? யு.. *** "என்று கெட்ட வார்த்தையில் திட்டியவன். மேலும் " நீ எத்தனை பேரோட இருந்திருக்க எத்தனை abortion பண்ணி இருக்க என்கிற list என்கிட்ட இருக்குடி. இப்போ கூட உன்னை அடிச்சு துவம்சம் பண்ண முடியும். உன் அப்பனால கூட என்னை ஒண்ணும் பண்ண முடியாது ... ஒரு பொம்பள கிட்ட என் வீரத்தை நான் காட்ட விரும்பல அதோட உன் அண்ணனுக்காக உன்னை நான் சும்மா விடுறன் " என்று சினம் பொங்க கர்ஜித்தான்.

அவன் முடியை இழுத்த வலி தங்க முடியாமல் கதறியவளை பார்த்து " வலிக்குதாடி .. நல்லா

வலிக்கட்டும் .. இப்படி தான் எனக்கும் வலிச்சுது நீ சொன்ன பொய்யை நம்பி வைஷ்ணவி என் கிட்ட பேசின போது ... அவள் யார் என்று உனக்கு தெரியுமா ?? நான் தொட்டு தாலி கட்டுன என் மனைவி.. அவ கிட்டயே என்ன பத்தி தப்பா பேசி இருக்க.. உன்ன எல்லாம் கொல்லணும்டி .,, இத வச்சு அவ மேல ஒரு தூசு பட்டாலும் நான் மனுஷனா இருக்க மாட்டேன் . mind it ... நீ கடைசியா ஹொஸ்பிடல்ல நடிச்சது கூட எனக்கு தெரியும் " என்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தவள் " இவனுக்கெப்படி எல்லாம் தெரியும் ??? வைஷ்ணவி இவன் மனைவியா? அப்போ அவளும் என்ன ஏமாற்றி இருக்காளா ? உன்னை விடமாட்டேன்டி " என்று மனதுக்குள் வன்மமாக நினைத்து கொண்டாள் .

அப்போதும் கோபம் அடங்காதவான் அவள் முடியை பிடித்தவாறே எழும்பி தர தரவென இழுத்து வெளியே தள்ளி விட்டு சொடக்கிட்டு கவனம் காட்டியபடி காலால் கதவை அடித்து சாத்தினான்.

அவன் தலைமுடியை பிடித்து இழுத்த வலி ஒரு பக்கம் அவன் பேசியதால் அவமானம் ஒருபக்கம் என எல்லாம் சேர்ந்து அனாமிகா மனதில் கோபம் திகு திகு என பற்றி எரிந்தது. யாரும் பார்க்க முதல் எழுந்து வீட்டுக்கு வந்தவள் அவனை பழி வாங்க அடுத்த திட்டம் போட்டாள்.

அவன் மேல் கை வைக்க முடியாது. ஆனால் வைஷ்ணவி மேல் இலகுவாக கை வைக்கலாம்.. அவன் வாழ்நாள் முழுக்க கதற கதற வைஷ்ணவியை தாக்க வேண்டும் என யோசித்தவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது.

தன் எண்ணம் நிறைவேற லீவு நாளை எதிர் பார்த்திருந்தாள். லீவு நாளன்று வைஷ்ணவியை தொடர்பு கொண்டு பேசவேண்டும் என கூறியவள் அவர்கள் கம்பனிக்குரிய கட்டி கொண்டிருக்கும் building site பெயரை சொல்லி அங்கு வர சொன்னாள். காவலாளியை தவிர அங்கு யாரும் இருக்க வில்லை. முதல் மாடிக்கு ஏறிய வைஷ்ணவி கதிரையில் இருந்த அனாமிகாவை

நோக்கி சிரித்தபடி வந்தாள் . அனாமிகா பின்னால் இரு தடியன்கள் நின்றனர்.. வைஷ்ணவி வருவதை பார்த்து முறைத்த அனாமிகா "welcome Mrs .வைஷ்ணவி ஆத்ரேயன் " என்றாள். அதில் அதிர்ந்த வைஷ்ணவி அவளிடம் " நான் டிவோர்ஸ் எடுத்துருவன் சீக்கிரம் " என்றாள்.

" ஓ அப்போ நீ உன் புருஷனை எனக்கு பிச்சை போடுறியா " என்ற கேள்வியில் அதிர்ந்தவள் " அப்படியில்ல " என்று சொல்ல வந்தவளை கை நீட்டி தடுத்து " வாயை மூடு " என்றாள்.

அவளின் விசித்திரமான செய்கையில் பயந்தவள் " ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க ... நீங்க pregnant என்று தான் அவரை உங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்க யோசிச்சன் " என்று கூறியவளை பார்த்து சத்தமாக வாய் விட்டு சிரித்தாள் அனாமிகா. மேலும் " யாரு ??? நான் pregnant ஆ ?? .. உனக்கு கொஞ்சம் கூட அறிவில்லையா??? யாரு என்ன சொன்னாலும் நம்பிடுவியா??? " என்று கேட்டவள்.

மேலும் முகத்தை கடினமாக்கியபடி " அவன் முத்தம் கொடுக்க போனதுக்கே மீட்டிங் ரூம்ல வச்சு அறைஞ்சவன்.... அவனால நான் pregnant ஆகிறதா? அது மட்டுமா அவன் வீட்டில என்னை வெளிய தள்ளி அவமானபடுத்தினான்.. இதுக்கெல்லாம் சேர்த்து அவன் அனுபவிக்க வேணாமா?? உன்னில கை வச்சா அவன் மனுஷனா இருக்க மாட்டானாமே .. வச்சு பார்த்துருவோமா? " என்று சொன்னதை கேட்டவளுக்கு தலை சுற்றி விழாத குறைதான்.

" என்னது?? இவ pregnant இல்லையா??? ஆத்ரேயன் அறஞ்சானா ??" என்று அடுக்கடுக்கான கேள்விகளை யோசித்தவள். " ஐயோ என்ன காரியம் பண்ணி வச்சிருக்கன் ,,,, கொஞ்சம் கூட மூளை இல்லாம அவரை இப்படி கஷ்டப்படித்திட்டேனே.." என்று மனதுக்குள் மறுகியவள். அனாமிகாவை நோக்கி "ச்சீ நீயெல்லாம் ஒரு பொண்ணா " என்று சீறினாள்

"இல்ல தான் " என்றவள் " உன்னை சாகடிக்க கூடாது நீ வாழ்ந்துட்டே இருக்கனும் ஆனா

அவன் உன்ன பார்க்கும் போதெல்லாம் சாகனும் " என்றவள் அந்த தடியர்களை பார்த்தள்.

அவளை மானபங்க படுத்தும் வெறியுடன் ஒருத்தன் அவளை நோக்கி வர அடுத்தவன் அதை வீடியோ எடுத்து கொண்டிருந்தான். " ப்ளீஸ் அனாமிகா இதெல்லாம் வேணாம் " என்றவள் ஓட தொடங்க ஒரே எட்டில் அவள் தலைமுடியை பிடித்தவன் கீழே தள்ளி அவள் மேல் படர தொடங்கினான்.

" கடவுளே என்ன காப்பாத்துப்பா " என்று கண்ணீர் விட்டு அழுத்தவள் தன் பலம் முழுவதையும் கொண்டு அவனை நகர்த்த முனைந்தவளால் முடியவில்லை. அவள் போட்டிருந்த ஷிர்ட்டை கழட்ட அவள் மார்பில் கை வைத்த சமயம் அவள் கையில் ஒரு கம்பி தட்டு பட்ட அதை எடுத்து அவன் தலையில் அடிக்க அவன் நிலை குலைந்து போனான்.

.இது தான் சந்தர்ப்பம் என்று அவனை தள்ளி விட்டு ஓட முயச்சி செய்தவளை அடுத்த தடியன்

போனை கீழே போடு விட்டு பிடிக்க ஓடி வந்தான்.

ஒரு கட்டத்தில் மேலும் ஓட முடியாமல் கட்டடத்தின் ஓரத்தை அடைந்தவளுக்கு அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. சிரித்தபடி அவளை நெருங்கியவனது பார்வையில் மருண்டவள் , உயிரா மானமா என்று யோசிக்க மானமே பெரிதாக பட்டது. அடுத்த கணம் யோசிக்காமல் "என்னை மன்னிச்சிடுங்க ஆத்ரேயன் " என்று கண்ணீர் மல்க கூறியபடி கீழே விழுந்தாள்.

அவள் குதித்ததை பார்த்து ஓடி வந்த அனாமிகா அவள் குற்றுயிராய் கிடக்க இறந்து விட்டாளோ என்று பயந்து தன்னுடன் வந்த இருவரையும் கூட்டி கொண்டு காரில் பறந்தாள்.

விழுந்த சத்தம் கேட்டு முன்னல் நின்ற காவலாளி அவ்விடத்துக்கு விரைந்தான். அனாமிகா காரை எடுத்து கொண்டு போவதை கண்டவன் சற்று நேரம் முன் உள்ளே வந்த பெண் கீழே விழுந்து உயிருக்கு போராடியதை பார்த்து

பயந்து உடனே சைட் மேனேஜர்க்கு call பண்ணி விஷயத்தை சொல்லி விட்டு அம்புலன்ஸ க்கும் சொன்னான்.

அவள் விழுந்த அந்த நொடி தூங்கி கொண்டிருந்த ஆத்ரேயன் பதட்டத்துடன் எழுந்தான். வைஷ்ணவிக்கு ஏதோ ஆகிவிட்டது என்று மனம் சொல்லி கொண்டே இருந்தது.

எழுந்தவன் விறு விறு வென சென்று வைஷ்ணவியின் வீட்டு கதவை தட்டினான். கதவை திறந்த கீர்த்தனா , கலைந்த தலையும் தூங்கி எழுந்த முகமுமாக நின்ற ஆத்ரேயனை கண்டு சங்கடப்பட்டவள், வந்த காரணத்தை கேட்க முதலே " வைஷ்ணவி எங்கே ? " என்று கேட்டான்.

" ஒரு call வந்திச்சு அப்போவே பொய்ட்டா " என்றதும் கையிலிருந்த அலைபேசியில் அவளுக்கு அழைத்தான். 10 தடவைக்கு மேல் தொடர்ந்து அழைத்தும் அவள் எடுக்காமல் இருக்க அவன் பதட்டம் அதிகமானது. அந்நேரம்

பார்த்து சைட் மேனேஜர் ஆத்ரேயனுக்கு call பண்ணி யாரோ site இல் விழுந்து கிடப்பதாக கூற எரிச்சலைந்தவன் " இவங்களுக்கு suicide பண்ண நம்ம சைட் தான் கிடைச்சுதா ??? " இன்று பொரிந்து தள்ளினான்.

தனது வீட்டுக்கு சென்றவன் ஆயத்தமாகி காரில் சைட்டை நோக்கி புறப்பட்டான். காரில் செல்லும் பொது ப்ளூ டூத் ஐ காதில் மாட்டியபடி தொடர்ச்சியாக வைஷ்ணவிக்கு அழைத்து கொண்டிருந்தான். "எங்க போய் தொலைஞ்சா ?" என்று திட்டியபடி சைட்டுக்கு வந்து சேர்ந்தான்.

விழுந்து கிடந்தவளின் கைப்பை முதல் மாடியில் இருந்ததால் அவள் தொலைபேசி சிணுங்கியது யாருக்கும் கேட்கவில்லை.. அவன் வர முதலே ஆம்புலன்ஸ் வந்ததால் அங்கு கூடி இருந்தவர்கள் அவளை ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பினர்.

வந்து சேர்ந்தவனுக்கு ரத்த கரை மட்டுமே கண்ணில் பட்டது.. " oh god .. " என்றவன்

காவலாளியிடம் நடந்ததை விசாரிக்க , அனாமிகா இரு தடியன்களுடன் வந்ததையும் விழுந்த பெண் அவர்களை தேடி சென்றதையும் கூறினான். அனாமிகா என்றதும் அவனுக்கு பொறி தட்ட இரு படிகள் தாண்டி ஏறியபடி முதல் மாடிக்கு வந்து சேர்ந்தான்.

சுவர் கட்டுப்படாத அந்த மாடியில் தனியாக ஒரு கதிரை மாத்திரம் போடப்பட்டு இருந்தது. சுத்தி சுத்தி ஏதும் கிடைக்குமா என்று தேடியவன் கண்ணில் பட்டது கைப்பை .... பதட்டத்துடன் சென்றவன் அதை எடுக்க போக அதற்கருகில் விழுந்து கிடந்த தொலைபேசி கண்ணில் பட்டது. தொலைபேசியை எடுத்து பார்த்தவன் அதில் வீடியோ recording mode இல் இருந்தது. அதை நிறுத்தியவன் அந்த விடியோவை play பண்ணியதும் கோபத்தில் அவன் கண்கள் துடிக்க தொடங்கியது. " how dare you to touch my wife ? " என்று கத்தியவன் அப்போது தான் உணர்ந்தான் விழுந்து கிடந்தது வைஷ்ணவி என்று..

" oh shit " என்று கத்தியவன் கண்களில் கண்ணீர்

வழிய பதறியபடி தாவி இறங்கினான். கீழே ஓடி வந்து அவளை கொண்டு சென்ற வைத்தியசாலையை கேட்டு விட்டு அதே வேகத்தில் பாய்ந்து காரில் ஏறினான். அவன் வேகத்தையும் கண்ணீரையும் பார்த்து அங்கிருந்த அனைவரும் அதிர்ந்து நின்றனர்.

காற்றை கிழித்து கொண்டு அவன் கார் செல்லும் போது உள்ளுக்குள் இருந்தவன் " வைஷு நீ எனக்கு வேணும்டி " என்று முணுமுணுத்து கொண்டிருந்தான்.

வைத்தியசாலையை அடைந்ததும் reception இல் விசாரித்தவன் அவளுக்கு சிகிச்சை அளிக்கும் ICU க்கு முன்னே வந்து நின்றான். மேலேயிருந்து விழும் பொது ஒரு பக்கம் சரிந்து விழுந்ததால் வலது கையில் என்பு முறிவும் வலது காலில் தசை கிழியலும் உடலில் கற்கள் குத்து பட்ட சீராய்வும் வலது பக்க நெற்றியில் அடிபட்டு ரத்தமும் போயிருந்தது.

முதலாம் மாடி என்பதால் உயிர் தப்பியவள்

சரிவாக விழுந்ததால் தலையில் அடிபடாமல் தப்பி இருந்தாள். விழுந்த அதிர்ச்சியும் வலியும் சேர்ந்ததால் மயக்கத்தில் இருந்தவளுக்கு சிகிச்சை மேற்கொள்ளபட்டிருந்தது

" எப்போவும் நீ என்ன விட்டு போறதிலேயே இருக்கியேடி " என்று வாய் விட்டு கூறியவன் கண்களில் கண்ணீர் மட்டும் நின்ற பாடில்லை.

நிறைய நேரமாக வைஷ்ணவியை காணாமல் தேடிய கீர்த்தனா கடைசியாக ஆத்ரேயனுக்கு அழைத்திருந்தாள் . அவளிடம் நடந்ததை கூறியவன் வைத்தியசாலையின் பெயரை சொல்லியபடி வைத்து விட்டான். சிறிது நேரம் கழித்து வெளியே வந்த டாக்டர் "உயிருக்கு பயமில்லை .... ஒரு மாதம் பெட் ரெஸ்ட் இல் இருக்க வேண்டும்" என்று கூறினார். அவர் அவ்வாறு சொன்னதும் தான் அவனுக்கு போன உயிர் திரும்ப வந்தது. அந்நேரம் பார்த்து வந்த கீர்த்தனாவிடமும் கார்த்திக்கிடமும் " வைஷ்ணவியை பார்த்து கொள்ளுங்க எனக்கு வெளியில் நிறைய வேலை இருக்கு " என்று

கூறியவன் வெறி கொண்ட கண்களுடன் வைத்தியசாலையை விட்டு வெளியேறினான்.

காதல் மலரும்.....

யுகம்-25

வெளியில் வந்தவன் முதலில் சென்றது அனாமிகா வீட்டுக்கு தான். .. வீட்டுக்கு வந்த அனாமிகா பதட்டத்துடன் வாசலில் நின்று தொலைபேசியில் அந்த தடியன்களுடன் கதைத்து கொண்டிருந்தாள். உள்ளே சீறி கொண்டு பாய்ந்து வந்த அவன் காரை அவளை மோதுவது போல் கொண்டு நிறுத்தியவன் பாய்ந்து இறங்கினான். அவனின் அதிரடியில் சற்று தடுமாறியவள் பயந்தபடி பின்னால் சென்றாள். கரை விட்டு இறங்கியவன் அவளை துளைத்தெடுக்கும் பார்வையுடன் நெருங்கி வந்தான்.

அவன் வருவதை பார்த்து பயந்து உள்ளே ஓடி

சென்று, விடுமுறை தினமாதலால் ஹாலில் பத்திரிகை வாசித்து கொண்டிருந்த அர்ஜுன் அருகில் போய் நின்றாள். அவன் தான் யாருக்கும் பயப்பட்டதாக சரித்திரம் கிடையாதே. " என்ன ஆத்ரேயா " என்று கேட்டு கொண்டே எழும்பிய அர்ஜுனை பார்த்து முறைத்தவன் அவன் பின்னால் நின்ற அவள் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளினான்.

கண பொழுதில் அவனிடுப்பில் இருந்த பெல்ட்டை கழட்டியவன் அவள் முகம் தவிர்த்து உடலெங்கும் அடிக்க தொடங்கினான்.

அவனடியை தங்க முடியாமல் அனாமிகா கதற உள்ளேயிருந்து ஓடி வந்த தர்மேந்திரனும் அவர் மனைவியும் திகைத்து நின்றனர். முகம் சிவந்து ஆக்ரோஷமாக நின்றவனின் பக்கத்தில் செல்ல கூட பயந்து போய் நின்றனர். அவனின் ஆள் பலம் பண பலம் தெரிந்தவர்கள். அதனால் கையாளாக தனத்துடன் நிக்க, முதலில் சுதாகரித்தவன் அர்ஜுன் தான்.

தங்கை ஏதோ பெரிய தவறு செய்திருக்கிறாள் என்று யூகித்தவன், தங்கை அழுவதை தாங்க முடியாமல் ஓடி சென்று "ஆத்ரேயன் ப்ளீஸ் ஸ்டோப் இட் " என்றபடி ஆத்ரேயனை பின்னால் இழுத்து பிடித்தான்.

தன்னை பிடித்த அர்ஜுனை உதறி தள்ளியவன் அவனை நேராக பார்த்து " உன் தங்கை என்ன செய்திருக்கிறாள் தெரியுமா?" என்று கேட்டான். அர்ஜுனும் புருவம் சுருக்கி யோசிக்க, " என் மனைவியை ஆள் வைத்து rape பண்ண பார்த்திருக்கிறாள். அத்துடன் அவள் மேலிருந்து கீழே விழுந்ததும் அவளை அப்படியே விட்டு விட்டு வந்திருக்கிறாள். இப்போ அவ ஹொஸ்பிடலில் கையும் காலும் உடைந்து படுத்த படுக்கையில் இருக்கிறாள். .. இந்த ராட்சசிக்கு நீ சப்போர்ட் பண்றியா ?? " என்று சினம் தெறிக்க கேட்டான்.

அவன் திருமணம்ஆனவன் என்பது அர்ஜுனுக்கு புதிய விஷயமாக இருந்தாலும் தங்கை செயலை நினைத்து ஆத்திரம் பொங்கி வந்தது. ஒரு

பெண்ணை மானபங்க படுத்தி சாகடிக்கும் அளவுக்கு கொடூரமானவள் என்று அவனுக்கு அன்று தான் தெரியும். அவளை நினைத்து வெட்கம் கொண்டவன் அவனை விட்டு தள்ளி நின்று கை கட்டி கொண்டு அவளை அடிக்குபடி கையால் சைகை காட்டினான்

அண்ணனின் நடவடிக்கையில் அதிர்ந்தவள் அனாமிகா மட்டுமில்ல அனாமிகாவின் தாயும் தர்மேந்திரனும் தான். போலீசுக்கு போனால் அனாமிகா தான் முதலில் ஜெயிலுக்கு செல்ல வேண்டி இருக்கும் என்று நினைத்தவர்கள் அமைதியாக இருந்தனர். பெல்ட்டை எடுத்து கோபம் தீரும் வரை எல்லா இடமும் அடித்தவன் தந்தைக்கு தப்பாத மகன் என்று நிரூபித்தான். ஒரு கட்டத்தில் மகள் அடிவாங்குவதை பொறுக்க முடியாத அனாமிகாவின் தாய் தான் அவன் காலை பிடித்தவாறே விட்டு விடுமாறு கெஞ்சினாள். அவற்றில் சொல்லுக்கு கட்டுப்பட்டு அடிப்பதை நிறுத்தியவன் வலியால் முனகியவளை பார்த்தவாறே கீழே குந்தியவன் " உன்கிட்ட ஏற்கனவே சொன்னேன் என்

மனைவியில கை வச்சா நான் மனுஷனா இருக்க மாட்டேன் என்று... இப்போ கூட நீ செய்த வேலைக்கு உன்னை arrest பண்ணி காலம் பூரா ஜெயிலுக்குள்ள போட்டிருப்பன். ஆனா அவள் உயிரோட இருக்கிறதால இப்போ தப்பிச்சிட்டா... " என்று கோபம் கொண்டு உறுமியவன் , தர்மேந்திரனை நோக்கி திரும்பி " உங்களுக்காகவும் அர்ஜுனுக்காகவும் தான் நான் இவளை சும்மா விடுறன் .. இனி இவை என் கண்ணில பட கூடாது " என்று சீறியபடி வெளியேறினான்.

தர்மேந்திரன் அனாமிகாவை நோக்கி வந்து அவளின் மேல் காறி துப்பியவர். "நீயெல்லாம் பொண்ணே இல்ல ராட்சசி" என்று திட்டினார். அர்ஜுனை கூப்பிட்டவர் உன் அத்தைக்கு போன் போடு "இவளை உன் அத்தை மகனுக்கு கல்யாணம் பண்ணி அமெரிக்காவுக்கு அனுப்பி விடுவோம்" என்றார்.

இது அனைவருக்கும் அதிர்ச்சி தான். அவன் அனாமிகாவை விட 16 வயது மூத்த தபுதாரன்.

அதிர்ச்சியடைந்தாலும் இனி அவளை இங்கு வைத்திருப்பது ஆத்ரேயனுக்கு கோபத்தை அதிகரிக்கும் என்று அறிந்த அர்ஜுன் தந்தையின் முடிவுக்கு சம்மதித்தான். அனாமிகாவின் தாய்க்கு விருப்பமில்லா விட்டாலும் ஒன்றும் பேச முடியாமல் அமைதி காத்தார்.

.வலியுடன் எழும்பியவள் "எனக்கு அந்த கிழவன் வேணாம்" என்று சொல்ல திரும்பி பார்த்து முறைத்தவர் " நான் சொல்றத கேட்கா விட்டாள் வெளிய போடி உனக்கு சொத்தில் பங்கில்லை." என்று கூறி அவள் கழுத்தை பிடித்து வெளியே தள்ளினார். வேற வழி இல்லாமல் பயந்தவள் " மன்னிச்சிருங்க அப்பா ... நீங்க சொல்றத கேக்கிறேன் " என்று கண நேரத்தில் சொத்துக்காக மாறினாள்.

காரில் வரும் போது பிரேக்கிங் நியூஸ் இல் திடீரென கார் வெடித்து சிதறியதால் இருவர் பலி என்று ஒலிபரப்பாகி கொண்டிருந்தது. செய்தியை கேட்டு மனசு விட்டு திருப்தியாக சிரித்தவன் " that's my boy " என்றபடி வண்டியை

வைத்தியசாலைக்கு விட்டான்.

வைத்தியசாலையில் ஆத்ரேயன் வைஷ்ணவி மேல் காட்டிய அக்கறையில் திகைத்த கார்த்திக் " சார் ரொம்ப நல்லவர் என ... அவர் கீழ வேலை செய்ற நமக்கு ஏதும் என்றால் இப்படி துடிச்சு போகிறார் .. எனக்கு ஏதும் நடந்தா கூட இப்படி தான் அழுவாரோ ?? " என்று கெட்டவனை முறைத்து பார்த்த கீர்த்தனா " உன்னை எல்லாம் பெற்றாங்களா இல்ல செஞ்சாங்களா ??? " என்று கேட்டாள்.

" ஏண்டி நான் ஏதும் தப்பா கேட்டு விட்டேனா ??? " என்று கெட்டவனிடம் " அட அரை லூசே வைஷ்ணவி தான் ஆத்ரேயன் சாரோட wife . " என்றாள் .

அவள் சொன்னதில் அதிர்ந்தவன் " என்னடி சொல்ற??? உண்மையாவா?? ஒரு வேளை நம்மள கண்காணிக்க வந்த spy ஆ இருப்பாளோ??? நீ ஆத்ரேயன் சாரோட கதைக்கிற கடுப்புல அவரை பற்றி வைஷ்ணவிட்ட சொல்லி

திட்டி வேற இருக்கிறேன் " என்று படபட வென கதைத்தான்

" ஆமா நீ பெரிய president பாரு உனக்கு spy வைக்க. உன் மூளையில தீய வைக்க... spy யும் இல்ல ஒண்ணுமில்ல ரெண்டு பேருக்கும் misunderstanding அதுவும் உன்னால தான் " என்றாள்.

" என்னாலயா ?? நான் என்ன பண்ணினேன் ?? " என்று கெட்டவனிடம்.. " அவர் முன்னாடியே வைஷ்ணவியை கொஞ்சி குலவலயா ?? " என்று பொறாமையுடன் கேட்க.. " ஐயோ இப்போ தான் எனக்கு எல்லாம் நினைவு வருகிறது. .. ஓமடி .. அவர் முன்னாலேயே என்ன எல்லாம் பண்ணி இருக்கிறேன் . ச்சீ .. என்ன நினைத்தாரோ தெரியல . " என்றவன் ஏதோ நினைவு வந்தவனாக " ஆ அன்று அது தான் கேட்டவரா நான் காதலிக்கிற விஷயம் வைஷூட கணவனுக்கு தெரியுமா என்று??? இப்போ நான் என்ன செய்வேன்.. எனக்கு ஒரே தர்ம சங்கடமா இருக்கு " என்று புலம்ப தொடங்கினான்..

" ஐயோ கொஞ்சம் நிறுத்துறியா ?? உன்ன கட்டிட்டு நான் என்ன பாடு படபோறனோ தெரியல " என்று தன்னிலை மறந்து சலித்து கொண்டாள்.

' நீ சலிச்சுக்கிற அளவுக்கு நான் மக்கு இல்ல .. எனக்கும் எல்லாம் தெரியும் " என்று கண்ணாடிக்க, அதன் பின்பு தான் அவளுக்கு கார்த்திக்குடன் அளவு தாண்டி பேசியது நினைவு வந்தது. அதுவும் அவனருகில் நெருக்கமாக.இருந்து கொண்டு.

அப்படியே மெதுவாக எழும்பியவள் எதுவும் பேசாமல தள்ளி இருந்த கதிரையில் போய் இருந்தாள். "ரொம்ப ஓவரா தான் பண்ணுறா" என்று மனதுக்குள் சலித்தவன் தொலைபேசியை நோண்ட தொடங்கினான்.

வைத்தியசாலையை அடைந்த ஆத்ரேயன் கீர்த்தனா மற்றும் கார்த்திக் இருக்குமிடத்துக்கு விரைந்தான். அவன் வருகையை அறிந்து எழும்பி நின்ற கார்த்திக்குக்கு அருகில் வந்தவன்

அவன் தோளில் கை போட்டபடி அவனருகில் தொய்ந்து அமர்ந்தான்.

பேச தொடங்கியவர்கள் சற்று நேரத்தில் நண்பர்களாகி போனார்கள். ஆத்ரேயன் முதன் முறை வாயை திறந்து தன வாழ்க்கையை பற்றி கார்த்திக்குக்கு கூறினான்.

சிறிது நேரம் கழித்து வைஷ்ணவியை போய் பார்க்கும் படி டாக்டர் கூற உள்ளே சென்ற ஆத்ரேயன் கட்டிலில் மயக்கத்திலிருந்த வைஷ்ணவியை பார்த்த மனவருத்தத்தில் "என்னை நம்பமாட்டியாடி ?" என்று முணுமுணுத்தவன் கண்களில் இருந்து கண்ணீர் துளி உருண்டோடியது.

அதை கையால் துடைத்தவன் அவளருகில் வந்தான். கைகளில் காலில் கட்டுகளுடனும் உடலில் காயங்களுடனும் படுத்திருந்தவளை பார்க்க அவன் நெஞ்சம் பதறியது..

அவளருகில் குனிந்தவன் அவளுக்கு

வலிக்குமோ என்று பயந்து அவளிதழ்களில்
மென்மையாக முத்தமிட்டு விட்டு
வெளியேறினான்.

அவளை தனியறைக்கு மாற்ற ஒரு
கிழமையானது. கண் விழித்தவளுக்கு
ஆத்ரேயன் கண்ணில் படவே இல்லை.
பொறுமையிழந்து கீர்த்தனாவிடம் " எனக்கு
அடிபட்டது அவருக்கு தெரியுமா??? " என்று
கேட்டாள்... அவளருகில் புத்தகம் படித்து
கொண்டிருந்தவள் " எவருக்கு ? " என்று கேட்க..
அவளை பார்த்தவள் தர்மசங்கடமாக "
ஆத்ரேயன்க்கு " என்றாள்.

" தெரியாது " என்றவளிடம் " ஏன்
சொல்லவில்லை ?? " என்று கேட்க.. " பொம்பள
பொறுக்கிக்கு நான் எதுக்கு சொல்லணும்?? "
என்று பதிலைத்தவளுக்கு வைஷ்ணவியின்
வாழ்க்கையை பற்றி கார்த்திக் மூலம்
தெரிந்திருந்தது.

கலங்கிய கண்களுடன் இருந்த வைஷ்ணவியை

பார்த்து கார்த்திக் தான் பரிதாபப்பட்டு " கொஞ்சம் சும்மா இரு கீர்த்தனா " என்றவன் முதல் நாள் வந்து பார்த்து விட்டு போனதையும் அனாமிகாவுக்கு என்ன ஆனது என்றும் கூறினான்.

வைஷ்ணவியை பார்த்து விட்டு வந்த ஆத்ரேயனுக்கு அவள் மேல் கோபம் குறையவில்லை.. " சந்தேக பிசாசு. " என்று திட்டியவன்.. மனதுக்குள் " உனக்கு பிடிக்காம நீ என்னோட வாழ தேவையில்லை வைஷ்ணவி.. நீ ஆசைப்பட்ட டிவோர்ஸ் கண்டிப்பா கிடைக்கும் " என்று சொல்லி கொண்டான். அவளை பார்க்க உந்துதல் எழுந்தாலும் கீர்த்தனாவும் கார்த்திக்கும் நன்றாக பார்த்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அவன் வைத்தியாசாலை பக்கமே தலை வைத்து படுக்கவில்லை... அடிக்கடி கார்த்திக்குக்கு எடுத்து நிலவரத்தை கேட்பான்.. ஒரு கிழமையில் டிஸ்சார்ஜ் ஆன பிறகு வீட்டில் வைத்து பார்க்க சொல்லி இருந்தார்கள் வைத்தியர்கள் ..

டிஸ்சார்ஜ் ஆகும் நாளில் எல்லா பணமும் கட்ட பட்டிருந்தது. " யார் கட்டினார்கள் ?? " என்று கேட்க.. கீர்த்தனா " உன் புருஷன் தான் " என்றாள் அலட்சியமாக.

அவன் தன்னை பார்க்க வரவில்லை என்ற ஆதங்கத்தில் " மற்றையவர்களின் பணத்தில் நான் வாழ வேண்டும் என்ற அவசியமில்லை .. எல்லாத்தையும் செட்டில் பண்ணனும் " என்றதும் அவளை புருவம் சுருக்கி பார்த்தவள் இளக்காரமாக சிரித்தாள். " இப்போ எதுக்குடி சிரிக்கிற ??? " என்று கேட்க... ஆத்ரேயன் சொல்ல வேண்டாம் என்று சொல்லியும் பொறுமை இழந்த கீர்த்தனவோ " அப்போ நீ உன் 1st year இல் இருந்து settle பண்ணனும் " என்றாள் " " what ??? " என்று அதிர்ச்சியடைந்தவளிடம்.

. " நீ 2nd year இலிருந்து உன் படிப்பு செலவு , நீ தனியா தங்கி இருந்த பொது உன் செலவு, ஏன் நீ பார்க்கும் வேலை கூட அவர் தயவால் தான் .." என்று சினம் பொங்க கூறியவள் " நீ இப்படி சந்தேகப்பட்டே அந்த மனுஷனுடைய மனசை

உடைச்சிட்ட .... இனி அதை ஒட்ட வைக்க முடியும் என்று எனக்கு தோணல ... " என்றவள் மேலும் நின்றாள் அவளை காயப்படுத்தி விடுவோமோ என்ற பயத்தில் வெளியேறினாள்.

அவள் சொன்னதை கேட்டு கண்ணீர் விட்டவள் கார்த்திக்கை பரிதாபமாக பார்த்தாள்

"அப்போ என் அப்பாவின் பணமில்லையா அது?? " என்று நினத்தவளுக்கு எங்கயாவாது சென்று இடித்து கொள்ளலாம் போல இருந்தது.

" கார்த்திக் நான் அவரை பார்க்கணும் " என்றாள். .. தலையை ஆட்டியவன் ஆத்ரேயனுக்கு எடுத்து விபரத்தை சொல்ல அவளிடம் கொடுக்க சொன்னவன் " என்ன ?? " என்று ஒற்றை வரியில் கேட்டான்.

" என்ன மன்னிச்சிருங்க " என்றவளிடம் " வேற ஏதும் இருக்கா ? " என்று கேட்க.. அவன் உதாசீனத்தில் மனமுடைந்தவள் " இல்லை " என்றபடி தொலைபேசியை கார்த்திக்கிடம்

கொடுத்தாள்.

கார்த்திக்கிடம் பேசியவன் தொலைபேசியை வைத்து விட்டான். வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டவளுக்கு எந்த வேலையும் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டவாறே . கையிலும் காலிலும் தலையிலும் கட்டுகளுடன் படுத்த படுக்கையாக இருந்தவளுக்கு அவசர வேலைக்கு கூட குளியலறை வரை செல்ல உதவி தேவைப்பட்டது.

கீர்த்தனாவும் வைஷ்ணவிக்காக அலுவலகத்துக்கு செல்லாமலிருக்க கார்த்திக்கை கூப்பிட்டு விசாரித்தவன் யோசனையில் ஆழ்ந்தான். வேலையிலிருந்து இடையில் தனது வீட்டுக்கு சென்றவன் கோர்ட்டை எல்லாம் கழட்டி எரிந்து விட்டு வைஷ்ணவியை தேடி சென்றான்

கீர்த்தனாவும் எதுவும் பேசாமல் வழி விட அவளறைக்குள் சென்றவன் அவளை நோக்கி அழுத்தமான காலடிகளுடன் நடந்தான். அவன்

அருகில் வருவதை பார்த்து மருண்டவள் அவன் கண்களை பார்த்த படியே இருந்தாள். அருகில் நெருங்கி வந்தவன் அவளை கைகளில் குழந்தை போல தூக்கியபடி தனது வீட்டை நோக்கி நடந்தான்.. போகும் போது கீர்த்தனாவிடம் " wheel chair ஐயும் medicines ஐயும் கொண்டு வந்து தரமுடியுமா ?? " என்று கேட்க அவளும் அதேயெல்லாம் எடுத்து கொண்டு அவன் பின்னால் விரைந்தாள்.

அவளை தனது கட்டிலில் படுக்க வைத்தவன் கீர்த்தனாவிடம் அனைத்தையும் பெற்று கொண்ட படி ." நான் இனி பார்த்துகிறேன் .. நீங்க வேலைக்கு போகலாம் " என்றான்.

கீர்த்தனா சென்றவுடன் வைஷ்ணவி பயந்தபடி " உங்களுக்கெதுக்கு சிரமம்? " என்று தொடங்க அவளை பார்த்து அவன் முறைத்ததில் அவள் குரல் தானாக அடங்கியது. அவளை முறைத்தபடியே ஷிர்ட்டை கழட்டியவனை பார்த்து பயந்தவள் அவன் பெல்ட்டில் கை வைக்க " ஐயோ" என்று கண்ணை மூடி கொண்டாள் ..

" இப்போ இவை எதுக்கு இப்பிடி சீன் போடுறா?? இந்த நிலையிலும் நான் உன்னை ஏதும் பண்ணி விடுவேன் என்று பயப்படுறியே..... என் மேல உனக்கு எப்போவும் நம்பிக்கையே இல்லையா " என்று மனம் வெறுக்க உதட்டை சுளித்து யோசித்தவன் குளிப்பதற்காக towel ஐ எடுத்து கொண்டு குளியலறைக்குள் புகுந்தான். கொஞ்ச நேரம் எந்த அரவமும் இல்லாமல் இருக்க கண்ணை திறந்தவள் குளியலறை கதவை அவளை பார்த்தபடி அடித்து சாத்தியவனின் சினம் கொண்ட பார்வையில் ஒரு கணம் உறைந்து போனாள்.

கட்டிலில் இருந்தவளுக்கு அவசரமாக இயற்கை அழைத்தது .. " ஐயோ இந்த கொடுமைக்கு நான் கீர்த்தனா கூடவே இருந்திருப்பேனே.. இப்போ என்ன பண்றது??? " என்று யோசித்தபடியே கட்டிலில் அவஸ்தை பட்டு கொண்டிருந்தாள். குளித்து முடித்து வெளியே வந்தவனுக்கு அவள் முகத்தை சுளித்தபடி இருப்பது வித்தியாசமாக தோன்ற அருகில் வந்தவன் அவள் உடலசைவை

வைத்து கண்டு பிடித்து விட்டான்.. அவளை உடனடியாக தூக்கி கொண்டு குளியலறைக்குள் விட்டவன் திரும்பி நின்று கொண்டான். " நீங்க வெளிய போங்க ப்ளீஸ் " என்று கெஞ்ச தலையிலடித்தபடி வெளியே வந்து நின்றான். சிரித்து நேரம் கழித்து " கொஞ்சம் வாரீங்களா?? " என்றழைக்க உள்ளே சென்றவன். அவளை நெருங்கி அவளை குளிப்பாட்டும் பொருட்டு அவள் போட்டிருந்த ஷிர்ட்டை கழட்ட button இல் கை வைத்தான்.

அவனின் இந்த செயலை எதிர்பாராதவள் "என்ன செய்ய போறீங்க?" என்றபடி தனது இரு கைகளாலும் அவன் கையை பிடித்து தடுக்க, கோபத்தில் நிமிர்த்து பார்த்தவனின் கண்களை பார்த்து தனது கைகளை தானாக விலக்கி கொண்டாள் .

குளிப்பாட்டி உடையை அணிவித்தவன், அவளை கட்டிலில் படுக்க வைத்தான். அவளுக்கு தான் எல்லாம் அவஸ்த்தையாகி போனது. அவள் வாய் திறந்து கேட்காமலே அவள் அனைத்து

தேவைகளையும் பூர்த்தி செய்தான். அவளை குளிப்பாட்டுவது தொடக்கம் சாப்பாடு ஊட்டுவது வரை அவளுக்குரிய அனைத்து வேலைகளையும் அவனே செய்தான். செய்வதற்கு அருவருக்கும் விஷயங்களை கூட முகம் சுளிக்காமல் செய்தான். அவன் பார்வையில் காமம் இருக்கவில்லை அருவருப்பு இருக்கவில்லை.. ஒரு குழந்தையை தாய் கவனிப்பது போல் கவனித்து கொண்டான். அவன் கவனிப்பில் அவளின் குற்ற உணர்வு தான் கூடி கொண்டு போனது .. இப்படி பட்டவனை சந்தேகப்பட்டு மனதை உடைத்து விட்டேனே என்று தினமும் கவலைப்பட்டாள். . அவன் காதலை புரிந்து கொள்ளாமல் விட்டதை நினைத்து வெம்ப தொடங்கினாள் .. வீட்டிலிருந்தே கம்பெனிகளை கவனித்தவன் அதுக்கு மேலாக வைஷ்ணவியை கவனித்தான். இது வரைக்கும் அவன் அனாவசியமாக ஒரு வார்த்தை அவளுடன் பேசவில்லை. அவள் கேட்கும் கேள்விகளுக்கு தலை ஆடுவான் அல்லது ஒரு வரியில் பதில் சொல்லுவான்.

எப்போதும் அவள் முன்னே இறுக்கமாக முகமாகவே இருப்பவன் மற்றவர்களிடம் மட்டும் சிரித்து பேசினான்.

" நம்ம கிட்ட சிரிச்சா பல்லு கொட்டிருமா என்ன ?? " என்று எப்போதும் அவனுக்கு திட்டியபடி இருந்தவள். ஒரு நாள் அவனுடன் மனசு விட்டு கதைக்க முடிவெடுத்தாள்.

அன்று அவளை கட்டிலில் இருத்தி வைத்து கீழே இருந்து அவள் கால் பாதத்தை தனது தொடையில் வைத்து மருந்து கட்டி கொண்டிருந்தான். இது தான் சந்தர்ப்பம் என்று நினைத்தவள் " என்னை மன்னிக்க மாட்டிங்களா? என் கூட பேச மாட்டிங்களா?" என்று கேட்க. ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தவன் குனிந்து தனது வேலையை தொடர்ந்தான். அவனை நினைத்து குற்ற உணர்ச்சி பெருக இடது கையை அவன் கேசத்துக்குள் கொண்டு சென்று வருடியவள் அவன் தலையை மெதுவாக இழுத்து கொஞ்சம் குனிந்து அவன் நெற்றியில் இதழ் பதித்தாள். அவளின் முத்தத்துக்கு எதிர்ப்பு காட்டாமல்

அவனும் அவள் இழுத்த இழுப்புக்கு இசைந்து போனான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்கவில்லை. அப்படியே கையை அவன் சொர சொரப்பான கன்னத்தில் வைத்தவள் அதை வரு டியபடி அடுத்த கன்னத்தில் முத்தமிட்டாள். எதுவும் சொல்லாமல் அவளை பார்த்த படி இருந்தவன், அவள் இதழ்களை நெருங்க அவள் இதழில் கை வைத்து தடுத்தவன் " மருந்து கட்டியாச்சு ,,,,நான் போகலாமா? " என்று கேட்டான். அவனின் இந்த உதாசீனம் மனதில் கவலையை கூட்ட சரி என்று தலை ஆட்டியவளை நேராக படுக்க வைத்தவன் அறையிலிருந்து வெளியேறினான்.

அதன் பிறகு அவனுடன் பேசுவதை அவளும் தவிர்த்து விட்டாள். சில வாரங்கள் கழித்து குணமாகிய பின் வைத்தியசாலைக்கு கூட்டி சென்று விட்டு வீட்டுக்கு கூட்டி வந்தவன் அவளை கீர்த்தனா வீட்டுக்கு கொண்டு போய் விட்டான்.

இதனை எதிர் பாராமல் அதிர்ச்சியடைந்தவள்

அவன் பின்னால் சென்றாள் . கதவை திறந்து உள்ளே சென்றவனுக்கு பின்னால் அவளும் உள்ளே சென்றாள் . " பச் .. " என்று சலித்தவன் " என்ன " என்பது போல் பார்க்க.. " உங்க கூட பேசணும் " என்றாள்

பின்னால் நகர்ந்து சுவரில் சாய்ந்து ஒரு காலை சுவரில் குற்றியபடி கை கட்டி நின்றவன் " பேசு " என்பது போல சைகை செய்ய.. " என்ன மன்னிக்கமாட்டீங்களா ?? " என்று கேட்டாள் .

ஒரு பெரு மூச்செடுத்து விட்டவன் " இங்கே பாரு வைஷ்ணவி.. என் மேல் உனக்கு நம்பிக்கை இல்ல.. அப்பிடி நம்பிக்கை இல்லாத வாழ்க்கை எனக்கு வேணாம்.. அதோட நீ கேட்ட விவாகரத்து விரைவாக கிடைச்சிரும் .. அடுத்த கிழமை அண்ணா கிட்ட பத்திரத்தை கொடுத்து அனுப்ப சொல்லி இருக்கிறேன் . அதில நீயும் நானும் கையெழுத்து போட்டால் பொதும்.... . உடைந்த மனசை எப்போதும் ஒட்ட வைக்க முடியாது .. " என்றான் தீர்மானமாக.

விவாகரத்து என்றதும் அதிர்ச்சியடைந்தவள் கண்ணீருடன் .. " ஏன் இப்படி ... " என்று தொடங்கியவளை கை காட்டி நிறுத்தியவன் " இதுக்கு மேல் பேசி என் time ஐ waste பண்ணாதே .. உன்னால ஒரு மாசமாக நான் office போகல.. இனியாச்சும் என்னை வேலை செய்ய விடுறியா ப்ளீஸ்.. " என்றவனை மீறி அவளால் எதுவும் பேச முடியவில்லை

பெருமூச்செடுத்தவள் " ஓகே சார்.உங்க இஷ்டபடியே என்ன விவாகரத்து பண்ணி உங்க தகுதிக்கு ஏற்ற போல் யாரையும் கல்யாணம் பண்ணி கொள்ளுங்க " என்றவளிடம் " விவாகரத்து நீ கேட்டது " என்றான்.. " கல்யாணம் முடித்த ஆரம்பத்தில் நீங்க கேட்டதாக ஞாபகம் " என்றவளை துளைத்தெடுக்கும் பார்வை பார்த்தான் . " இனி உங்கள டிஸ்டர்ப் பண்ண மாட்டேன் .. உங்க இஷ்டப்படி வாழுங்க .... என்னை பார்த்து கொண்டதுக்கும் எனக்கு இது வரைக்கும் செலவு செய்ததுக்கும் ரொம்ப நன்றி.. எவ்வளவு என்று கணக்கு போட்டு சொன்னால் நான் திருப்பி தருவேன் " என்றவள் அவனை

எப்படியாவது சீண்டி பேச வைக்க வேண்டுமென்று யோசித்தாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்ததை அவன் செய்தால் அவன் ஆத்ரேயன் அல்லவே ... . அவளை கூர்ந்து பார்த்தபடி " நாளைக்கு ஆபீஸ்ல வந்து details வாங்கிக்கோ " என்றான்.

அவன் பதிலை கேட்டு அதிர்ந்தவள் இந்த நெட்டையனுக்கு இது சரி வராது என்று யோசித்தபடி " ஓகே. " என்றபடி அவனை நெருங்கி நடந்தாள்.

" என்ன செய்ய போகிறாள் ?" என்று புருவத்தை சுருக்கி யோசித்தவன் காலை கீழே இறக்கி கட்டிய கைகளை பாக்கெட்டில் விட்டபடி நிமிர்ந்து நின்றான். . அவனை நெருங்கி வந்து அவன் உயரத்தை பார்த்து மலைத்தவள் " இவனை யாரு இப்படி நெட்டையா பிறக்க சொன்னது.?? இதுக்குள்ள நிமிர்ந்து வேற நிக்குறான். மனுசனுக்கு இவனால் எவ்வளவு கஷ்டமப்பா " என்று மனதுக்குள் புலம்பியபடி

அவனை ஒட்டி நின்று அவன் காலில் தன் காலை வைத்து ஏறி அவன் இதழை தன் இதழால் சிறை செய்தாள்.

அதிர்ந்து நின்றவன் நெகிழாமல் தன்னை கட்டுக்குள் கொண்டுவர சிரமப்பட்டு போனான். அவளை அணைத்து கொள்ள பரபரத்த கையை பாக்கெட்டில் வைத்து அடக்கியவன் , விறைத்தபடி நின்றான். அவனின் விறைத்த தோற்றம் அவளுக்கு மனவலியை கொடுக்க "தன்னை உண்மையாகவே வெறுத்து விட்டான்" என்று நினைத்தவள் கீழிறங்கி "thank you .எல்லாத்துக்கும்... இனி உங்கள தொந்தரவு பண்ண மாட்டேன் " என்று சொல்லி விட்டு தன் வீட்டுக்கு சென்றாள்.

அவள் சென்றதும் தான் அவனுக்கு மூச்சு விட கூடியதாக இருந்தது. " ராட்சசி " என்று திட்டியவன் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் குளிக்க சென்றான்.

காதல் மலரும்.....

யுகம்-26

அடுத்த நாள் அலுவலகத்துக்கு சென்றவள் நேரடியாக ஆத்ரேயன் அறைக்கு சென்றாள்.

"வந்துட்டா தொந்தரவு செய்ய.... இன்னைக்கு செலவு லிஸ்ட் கேட்டு கொடுமை படுத்த போறா " என்று சலித்தவன் அவளை பாராமுகமாகவே இருந்தான். அவளும் "க்கும் க்கும்..." என்றதும் "கேக்குது சொல்லு.." என்றான். "எங்கே நான் கேட்டது?" என்றவளை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தவன்.

"உனக்கு புரியும்படி கதைக்கவே தெரியாதா?" என்று கேட்க, வாயை சுளித்தவள் " எனக்கு இது வரைக்கும் செலவு செய்த லிஸ்ட் " என்றாள்.

ஒரு பெருமூச்சு எடுத்தவன் " கட்டின பொண்டாட்டிக்கு செலவு செய்ததுக்கு கணக்கு போட நான் ஒன்றும் கையாலாகாத புருஷன் இல்ல. " என்று அவளை கூர்ந்து பார்த்தபடி

கூறினான். அவனது உரிமையான பேச்சு அவள் உயிர் வரை ஊடுருவி சென்றது. "அப்போ நெட்டையனுக்கு நம்ம மேல இப்போவும் ஒரு கண் இருக்கு " என்று மனதுக்குள் நினைத்தவள் அவனை சீண்டும் முகமாக "அப்போ நேற்று சொன்னிங்க?" என்று கேட்டாள்.

"இவ நம்மள விட மாட்டா போல" என்று நினைத்தவன் "அது நேற்று இது இன்னைக்கு " என்று சொன்னான். அவன் பேச்சில் சிரிப்பு வந்தாலும் அதை கட்டுப்படுத்தியவள் " அதெப்பிடி..." என்று தொடங்க போக... அவளை நிமிர்ந்து சினம் கொண்டு பார்த்தவன் "என்ன கொஞ்சம் வேலை செய்ய விடுறியாப்ளீஸ்.. நீயும் ஒண்ணும் செய்ய மாட்டே... என்னையும் இப்போ செய்ய விடுறா இல்ல" என்று சீறினான். "ஓகே, சிங்கத்துக்கு கோபம் வந்திடுச்சு... " என்று நினைத்தவள் கழுத்தை நெடித்தபடி அறையை விட்டு வெளியேறினாள்.

நிறைய நாள் களைத்து வந்திருப்பதால் கூட்டமொன்றுக்கு ஆயத்தப்படுத்தி இருந்தான் ஆத்ரேயன். கூட்டத்துக்கு வந்தவளை அவன்

திரும்பி கூட பார்க்கவில்லை.. " என் கிட்டயேவாடா ? " என்று நினைத்தவள். கையிலிருந்த புத்தகத்தை கீழே வேணுமென்று போட்டாள் . சந்தம் கேட்டு அவள் பக்கம் திரும்பியவனை யாருக்கும் தெரியாமல் பார்த்து கண்ணடித்து உதட்டை குவிக்க. அவளை முறைத்த படியே பேச தொடங்கினான்.
அவள் எங்கே இனி கூட்டத்தை கவனிப்பது?? அவனை கன்னத்தில் கை வைத்து " அழகானடா..நீ.. " என்று மனதுக்குள் கூறியபடி ரசித்து கொண்டிருக்க இருக்க அதை கடைக்கண்ணால் கண்டு கொண்டவனுக்கு ஒரு சிலிர்ப்பு உண்டாக்கியது.
அவள் தன்னை பார்த்து கொண்டிருப்பது அவனுக்கு பல பல கற்பனைகளை உருவாக்க அவனுக்கு கவனம் சிதறியது. அவளை அடிக்கடி பார்க்க சொல்லி மனம் கட்டளையிட அதை தவிர்க்க நினைத்தவன் " இருடி உனக்கு வைக்கிறேன் ஆப்பு " என்று நினைத்தபடி " வைஷ்ணவி நீங்க என்ன நினைக்கிங்க ?" என்று கேட்டான்.

அவன் எதை பற்றி கேக்கிறான் என்று புரியாதவள் கொஞ்ச நேரம் திரு திரு வென முழிக்க. இது தான் சந்தர்ப்பம் என்று நினைத்தவன் " இங்க வந்தா கொஞ்சமாச்சும் வேல செய்யணும்.. உங்க கனவு கற்பனை எல்லாம் வீட்ட வச்சுகொங்க.. understand ??" என்று குரலில் கஷ்டப்பட்டு கோபத்தை தேக்கி உறுமினான்.

அவள் சலித்தபடி " என்ன சார் பண்றது எனக்கு என் husband நினைவாவே இருக்கு " என்றால் ஏக்கமாக.. அவனிடம் அதுவரை யாரும் இப்படி தைரியமாக பேசியதில்லை. வந்த சிரிப்பை கீர்த்தனாவும் கார்த்திக்கும் கட்டுபடுத்தி கொண்டனர். அவள் அடிபட்டு வைத்தியசாலையில் இருந்தது அனைவர்க்கும் தெரியும் அனால் யாருக்கும் ஆத்ரேயன் வைஷ்ணவியின் உறவு முறை தெரியவில்லை.. அனைவருக்கும் முன்னால் அவளின் சலித்த பேச்சில் கோபம் எட்டி பார்க்க " ஜஸ்ட் கெட் அவுட் " என்றான். " இதுக்கு மட்டும் குறைச்சல் இல்ல எப்போ பார்த்தாலும் என்ன வெளியே

துரத்துறதே வேலையா போச்சு " என்று நினைத்தவள் விறு விறுவென வாசலை நோக்கி நடந்தாள் . அனைவரும் அவனையே பார்த்திருக்க அவனோ வைஷ்ணவியை துளைத்த பார்வை பார்த்து கொண்டிருந்தான்.

வாசலுக்கு சென்றவள் திரும்பி அவனை பார்த்து முத்தம் கொடுப்பது போல் உதட்டை குவித்து விட்டு சிரித்தபடி சென்று விட்டாள் . " என்ன கொல்லுறாடி ராட்சசி " என்று மனதுக்குள் திட்டியவன் கூட்டத்தை தொடர்ந்தான். அவன் மனம் முழுதும் ஏதொ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி இருந்தது.
புது பெரிய ப்ராஜெக்ட் ஒன்று வந்ததால் அனைவரும் அதில் மூழ்கினர். வைஷ்ணவிக்கு தான் இருப்பு கொள்ளவில்லை. ஆத்ரேயன் நினைவாகவே இருந்தது. ஆனால் ஆத்ரேயனோ வேலையில் மும்முரமாக இருந்தான். அனைத்தையும் மறந்து வேலையில் ஈடுபடுவது அவனுக்கே உரிய கொடையாகும்.
கொடுத்த வேலையை முடிக்காதவள் பகலில் கூட அவனை பற்றியே நினைத்து

கொண்டிருந்தாள். அனைவரின் கோப்புகளும் ஆத்ரேயன் மேசைக்கு வந்தாலும் வைஷ்ணவியின் கோப்பு மட்டும் வரவில்லை. வேலை என்றல் புலியாய் சீறுபவனுக்கு எரிச்சல் முண்ட அறையில் சில ஊழியர்களுடன் கலந்துரையாடி கொண்டிருந்தவன் வைஷ்ணவியை வர சொல்லி இருந்தான். முதல் என்றால் பயத்துடன் உள்ளே நுழைபவள் இப்போது தனது உள்ளம் கவர் கள்வனை பார்க்க ஆர்வத்துடன் உள்ளே சென்றாள் . அவளை கண்டதும் பொரிய தொடங்கினான். " stupid ... time கு கொடுத்த வேலையை முடிக்காட்டி எதுக்கு இங்க வாரிங்க.. வீட்டில் வேலை செய்ய வேண்டியது தானே... நீங்க எல்லாம் இன்ஜினியரிங் படிக்க தகுதி இல்ல... .. idiot " என்று திட்ட அவளுக்கோ சிரிப்பு தான் வந்தது. இதழ்களுக்கிடையில் அவளின் அடக்கப்பட்ட சிரிப்பை கண்டு கொண்டவனின் bp எகிற.. " இட்ஸ் நோட் எ ஜோக்.. நாளைக்கு காலைல எனக்கு ப்ராஜெக்ட் முடிச்சிருக்கணும் ... இல்லாவிட்டால் you will see different me " என்றான்.

அதுக்கும் அவள் அசராமல் வேணுமென்றே
கம்பீரமாக நின்று " ஓகே சார் I will do my best "
என்றாள் அவளின் நடவடிக்கை அவனின்
கோபத்தில் நீரை ஊற்றி அணைக்க சிரிப்பை
கட்டுப்படுத்தியபடி " you can go " என்றான்.
வரும் பொது " என்னடி இன்னைக்கு செம டோஸ்
போல " என்று கீர்த்தனா கேட்க. " ஆமாடி.. எனக்கு
வேல செய்யவே விருப்பமில்லாம இருக்கு "
என்று சளைத்தவள் வீட்டுக்கு வந்தும் எதுவும்
செய்யவில்லை.. கீர்த்தனாவுக்கும் முடிக்க
வேண்டிய சில வேலைகள் இருந்ததால்
அவளையும் தொந்தரவு படுத்த விரும்பாததால்
கார்த்திக்கை அழைத்தாள் . அவனோ அன்று
அக்காவின் குடும்பத்துடன் வெளியே
சென்றிருக்க அவளுக்கு ஆத்ரேயன் நினைப்பு
வந்தது . லேப்டாப் ஐ தூக்கி கொண்டு
செல்பவளை பார்த்த கீர்த்தனா
" எங்கடி போற?? " என்று கேட்க.. " புகுந்த
வீட்டுக்குடி " என்று கண்ணடித்து சிரித்தபடி
அவன் வீட்டின் முன்னே நின்றாள்.
கதவை தட்டியதும் கதவை திறந்தவன் வேற்று

மார்புடன் காட்சட்டை மட்டும் இருந்தவனை ஏக்கமாக பார்த்த அவள் கண்கள் அவனின் முறுக்கேறிய மார்பில் நிலைத்தது. காதல் போதையில் தள்ளாடியவள் தன்னிலை மறந்து அப்பிடியே லேப்டாப் உடன் கண்ணை அசைக்காமல் நின்றாள்..அவள் பார்வை செல்லும் இடத்தை கவனித்தவனுக்கு சிரிப்பு வர அதை கட்டுபடுத்தியப்படி அவள் முன் சொடக்கிட்டு அவளை தன்னிலைக்கு கொண்டு வந்தவன். புருவத்தை உயர்த்தி "என்ன ?" என்று கேட்டான். " சீய்ய். என்ன நினைச்சிருப்பான் " என்று அவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்ன, சற்று சுத்தகரித்தவள் " உள்ளே வரலாமா?? " என்று கேட்டாள். கதவு நிலையில் சாய்ந்து கையை கட்டியபடி நின்றவன் பைஜாமாவும் ட்ஷிர்டும் போட்டிருந்தவளை மேலிருந்து கீழ் வரை பார்த்தவன்"செமயா இருக்காடி " என்று மனதுக்குள் நினைத்துவிட்டு "எதுக்கு ?? " என்று கேட்டான்.

" எனக்கு ஒரு சந்தேகம் " என்றாள். " அதுக்கு உள்ள வரணும் என்று அவசியமில்லை

இங்கேயே கேட்கலாம் " என்றான். ஏனென்றால் அவனுக்கு அவன் மேலயே நம்பிக்கை இல்லை. " நின்று கொண்டே கேட்க எனக்கு கஷ்டமா இருக்கு ... எனக்கு உட்காந்தா தான் கேட்க வரும் " என்றவளை முறைத்து கொண்டே " உள்ள வா " என்றபடி முன்னோக்கி நடந்தான். பின்னால் வந்தவள் கதவை அடித்து சாத்த கதவையும் அவளையும் ஒரு மார்க்கமாக மாறி மாறி பார்த்தவன் சோபாவில் இருந்தபடி அவளையும் உட்கார சொன்னான். அவன் பார்வையின் அர்த்தம் உணர்ந்தவள் "உங்க கற்புக்கு நான் guarantee " என்றாள். "oh god " என்று தாடையில் கை வைத்தவன் "இப்போ சொல்லு" என்றான். லப்டப்பை டீபாயில் வைத்தவள் " என் ஆபீஸ்ல ஒரு சிடு மூஞ்சு ஒருத்தன் இருக்கான்பா.. எப்போ பார்த்தாலும் என்ன திட்டிகிட்டே இருக்கான்.. இந்த பேரொஜெக்ட் இன்னைக்கே முடிக்கணுமாம்.. நானே தப்பி பிழைச்சு pass பண்ணி இருக்கன்.. ரொம்ப கஷ்டமா இருக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்றிங்களா ப்ளீஸ்.. " என்று முகத்தை பாவமாக வைத்து கொண்டு கை கூப்பி

கெஞ்சினாள்.. தன்னை அவள் சிடு மூஞ்சு என்றதும் எழுந்த கோபம் அவள் கெஞ்சிய தோரணையில் அணைந்தது.
சிரித்தவன் " உனக்கு என்ன செய்து தரணும் ??? " என்று உடலை முன்னால் கொண்டு வந்து நாடியில் கை குற்றியபடி கேட்டான்.
லேப்டாப் ஐ அவன் புறம் திரும்பியவள் " எல்லாம் " என்றாள் .. அவளின் பதிலில் அதிர்ந்தவன் புருவத்தை உயர்த்தி " ப்ராஜெக்ட் உனக்கா இல்ல எனக்கா" என்று கேட்க.. " ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ் செய்து தாங்க " என்று கேட்டாள் .
அவளை பார்த்து பெருமூச்சு விட்டவன் லப்டோபை எடுத்து அவள் இதுவரை செய்ததை ஆராய்ந்தான். . ஓரளவுக்கு செய்திருந்தவளை மனதுக்குள் மெச்சியவன் மிகுதியை செய்ய தொடங்கினான்.
அவன் செய்து தர முடிவெடுத்ததால் சந்தோசம் எழ சோபாவிலிருந்து எழும்பியவள் " அவனருகில் வந்து அவன் கன்னத்தை கிள்ளி " தட்ஸ் மை பாய் " என்றால்.
அவள் பார்த்து முறைத்தவன் " நீ போ செய்து

விட்டு கூப்பிடுறேன் " என்று கூற " இல்ல நான் இங்கேயே இருக்கிறன்.. "என்றபடி முன்னால் இருந்த சபாவில் படுத்து தனது தொலை பேசியை நோண்ட தொடங்கினாள். கை மட்டும் தான் தோலைபேசியிலிருந்தது கண் முழுக்க அவனை சைட் அடித்து கொண்டிருந்தது. அதனை அறிந்தவன் " எவ்வளவு நேரத்துக்கு இப்பிடி சைட் அடிக்கிறதா உத்தேசம் ?? " என்று கேட்டான் லப்டோபிலிருந்து கண்ணை விலக்காதபடி.

அவன் தன்னை கண்டு கொண்டதில் அவமானம் வர அதை மறைக்கும் பொருட்டு... " நீங்க எப்போதும் இப்படி தான் அரை குறையாக தான் இருப்பிங்களா.?? " என்று தனது நீண்ட நாள் சந்தேகத்தை கேட்டே விட்டாள்.
அவள் கேட்டதில் வாய் விட்டு சிரித்தவன் விடை சொல்லாமல் தனது வேலையை தொடர்ந்தான். சும்மாவே அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தவள் அவன் சிரிப்பில் சொக்கி போனாள் . " இப்படி சிரிச்சு என கொள்ளதடா.. " என்று மனதுக்குள் நினைத்தவள் "இப்போ கேக்கிறதுக்கு பதில் சொல்ல போறிங்களா இல்லையா?"

என்றவளின் கண்களை ரசனையாக பார்த்தவன். "உனக்கு முன்னால் இப்படி இருப்பது எனக்கு தவறாக தெரியவில்லையே"என்று உதட்டை பிதுக்கி சொன்னான். அவன் கூறியது அவளுக்கு சங்கடத்தை கொடுக்க, அதை சமாளிக்கும் பொருட்டு கண்ணை மூடி படுத்து கொண்டாள். படுத்தவளை பார்த்தவன் மென்மையாக சிரித்து கொண்டான். படுத்தவள் கண நேரத்தில் தூங்கி போனாள் .

நிமிர்ந்து பார்க்காமல் அவளது வேலையை அரை மணி நேரத்தில் முடித்தவன் அவளை பார்க்க அவள் தூங்கி கொண்டிருந்தாள்.. " இம்சைடி நீ " என்று சலித்தவன் அவளை அணைத்து தூக்கும் போது எழுந்த உணர்ச்சிகளை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்த நினைத்தவன் அது முடியாமல் போக அவளை அப்படியே படுக்க வைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டவன் அவள் இதழ் நோக்கி குனிய அந்த சந்தர்ப்பத்தில் அவள் கண்களை திறந்து கொண்டாள்.

அவள் கண்களை மெதுவாக திறந்ததில் ஒரு கணம் ஆடியவன், அவளை கூர்ந்து பார்க்க

அவளோ தூக்க கலக்கத்தில் கண்களை மறுபடி மூடி மீண்டும் தூங்க தொடங்கி விட்டாள். அவளின் செய்கையால் சிரித்தவன் அவளை குழந்தை போல தூக்கியபடி கீர்த்தனா வீட்டில் கொண்டு படுக்க விட்டான். லப்டப்பையும் கொண்டு கீர்த்தனாவிடம் கொடுத்தவன் வீட்டுக்கு வந்து அவளை நினைத்தபடியே தூங்கிபோனான்.
அடித்த நாள் அலுவலகத்துக்கு வந்தவள் கெத்தாக லப்டப்பை தூக்கியபடி அவன் அறையில் இருந்தவர்களுக்கு முன்னால் கொண்டு வந்து ஆத்ரேயனிடம் கொடுத்தாள் .

" நீங்க சொன்ன போல எல்லாம் முடிச்சுடன் சார் " என்றவளை பார்த்து சிரிப்பதா அழுவதா என்ற நிலையில் நின்றவன். ""lets see " என்றான். லப்டப்பை ஓபன் பணியவளுக்கு அவன் எங்கே save பண்ணி இருக்கிறான் என்று கூட தெரியவில்லை. ஒவ்வொரு போல்டேராக திறந்தவள் அடிக்கடி எல்லாரையும் பார்த்து சமாளிக்கும் முகமாக " ஹி ஹி " என்று வேற சிறிது கொண்டாள் . பொறுமை இழந்த

ஆத்ரேயன் அவளிடம் லப்டப்பை வாங்கி பைலை திறந்து பார்த்தான்.
" ஓ இங்கேயா இருக்கு " என்று யோசித்தவள். அவன் அடுத்து என்ன செய்ய போகிறான் என்று பார்த்து கொண்டிருந்தாள். " இருடி வாறன்,,, என்னையவே உன் வேலையை செய்ய வைக்கிறாயா? " என்று மனசுக்குள் கருவியவன், லப்டோப்பினை அவள் பக்கம் காட்டி " வைஷ்ணவி இதுக்கு ஏன் இந்த போர்ஸ் போட்டீங்க ??" என்று கேட்க அப்போது தான் முதல் முறையாக அவன் செய்த டிசைனை பார்த்தாள்.
" என்ன கருமம்டா இது.. ஏதேதோ கேட்கிறானே " என்று யோசித்தவள் .. " எதுக்கு சார் " என்று கேட்டாள் .. " இதுக்கு " என்று அவன் தெளிவாக சுட்டி காட்ட , திரு திரு என முழித்தவள் " அது வந்து... " என்று தலையை சொறிந்தபடி அவனை கண்களால் கெஞ்சினாள்.
வந்த சிரிப்பை கொடுப்புக்குள் அடக்கி சிரித்தவன் " ஓகே.. நீங்க போங்க " என்றான்.. " அப்பாடா ."என்றவள் ஓட்டமும் நடையுமாக தனது

இருக்கையை அடைந்திருந்தாள்
இப்படியே ஒரு கிழமை கழிய, சுற்றுலா செல்லும் பொருட்டு ஆத்ரேயனின் குடும்பத்தினர் அனைவரும் அவன் வீட்டுக்கு வந்திருந்தனர். வர விருந்த கோகிலாவும் மலர்வேந்தனும் கோவில் திருவிழாவின் பொருட்டு ஒரு கிழமை கழித்து வர இருப்பதாக இருந்தது. சுற்றுலாவை விட எல்லாம் கேள்வி பட்டவர்களுக்கு வைஷ்ணவியை பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அனைவரும் அவள் தங்களை தொடர்பு கொள்ளவில்லை என்று கொலை வெறியில் இருந்தனர்.
ஆத்ரேயன் அனைவரையும் வரவேற்க சென்றதால் அவன் அன்று அலுவலகத்துக்கு வருகை தரவில்லை. வைஷ்ணவி அவனை காணாமல் ஏங்கி போனாள். வீட்டுக்கு வரும் போது அவன் வீட்டிலிருந்து பெரிய சத்தங்கள் கேட்க யாரோ வந்திருப்பதை அறிந்தவள், அங்கு செல்வதற்கு அவள் கால்கள் பரபரத்தது.

ஆட்களுக்கு முன் தனியாக செல்ல அந்திரமாக இருந்ததால் கீர்த்தனாவிடமும் கார்த்திக்கிடமும்

கெஞ்சி கூத்தாடி அங்கு செல்ல அவர்களையும் கூட்டி சென்றாள். கதவை தட்டியதும் திறந்தது வர்ஷினி. சந்தோஷத்துடன் வைஷ்ணவி "அக்.." என்றழைக்க போக, "ஆத்ரேயன் உங்களை தேடி யாரோ மூன்று பேர் வந்திருக்காங்க" என்றபடி உள்ளே சென்று விட்டாள். "மூன்று பேரா?" என்று கேட்டபடி வந்தவன் இவர்கள் மூவரையும் கண்டதும் "வாங்க " என்று வரவேற்று உட்கார சொன்னான். யாரும் வைஷ்ணவியை கண்டுக்கவே இல்லை. அது அவளுக்கு பெரும் வலியாக இருந்தது. நடுவில் கீர்த்தனா இருக்க இரு புறமும் மற்றைய இருவரும் இருந்து கொண்டனர்.

அவர்களுக்கு முன்னாள் ஆதி லேப்டாப் உடனும் நடுவில் கார்த்திகேயன் பேரனை தூக்கி கொஞ்சியவாறும் இருக்க தனி இருக்கையில் ஆத்ரேயன் இருந்து கொண்டான். ஆதி அனைவரையும் பார்த்து சினேகமாக சிரித்து விட்டு குனிந்து கொண்டான். கார்த்திகேயன் பேரனுடன் விளையாடியதில் நிமிர்ந்து பார்க்கவே இல்லை. அக்காவின் மகனை தூக்க

வேண்டும் என்ற ஆர்வத்தை
கட்டுப்படுத்தியவாறே குற்ற உணர்ச்சி பொங்க
தலை குனிந்து இருந்தாள் வைஷ்ணவி.
"வராமலே இருந்திருக்கலாமோ " என்று கூட
யோசித்தாள். "என்ன :விஷயம்
என்று கேட்ட ஆத்ரேயனிடம் கார்த்திக் "சும்மா
தான்" என்றான். அந்நேரத்தில் மூவருக்கும்
குலாபிஜாமூனும் பழரசமும் எடுத்தபடி வந்த
மாலதி அனைவரையும் பார்த்து புன்னகைத்தாள்.
வர்ஷினியும் அங்கு வந்தபடி "எல்லாரையும்
அறிமுக படுத்த மாட்டிங்களா?" என்று
ஆத்ரேயனிடம் கேட்க "sure " என்றபடி "இது
கார்த்திக் , எங்க ஆபீஸ் ல chief design என்ஜினீயர்"
என்று கூற ஆதி எழுந்து கை குலுக்கினான். இது
"கீர்த்தனா , எங்க ஆபீஸ் ல டிசைன் என்ஜினீயர்
ஆக இருக்கிறா" என்று கூற அவளும்
அனைவரையும் பார்த்து தலையாட்டினாள்.
கடைசியாக வைஷ்ணவியை காட்டி "இது ... "
என்று தொடங்க , மாலதியோ "யார்டா இந்த
பொண்ணு சர்க்கஸ் காரி போல" என்று கேட்க
அனைவருக்கும் சிரிப்பு பொத்து கொண்டு

வந்தது. சிரிப்பை அனைவரும் கட்டுப்படுத்த வர்ஷினி முடியாமல் சிரித்து விட்டாள். அவள் சிரித்தது வைஷ்ணவிக்கு கோபத்தை கூட்ட அவளை முறைத்தபடி நின்றாள்.

கீர்த்தனவோ ஷல்வாரில் நீள முடியுடன் மூக்குத்தி குத்தி மகாலட்சுமி போல இருக்க, வைஷ்ணவியோ நீண்ட முடியை கழுத்து வரை வெட்டி அதுக்கு கலர் பண்ணி பைஜாமாவும் டீஷர்டும் போட்டிருந்தாள். தாலியும் இல்லாமல் பொட்டும் இல்லாமல் அவள் நின்ற நிலை மாலதிக்கு எரிச்சலை உருவாக்கவே அப்படி கேட்டு விட்டார். அவருக்கு தெரியவில்லை அவர் மகன் வைஷ்ணவி எப்படி இருந்தாலும் அவள் மேல் பைத்தியமாக இருக்கிறான் என்று. இவங்க பெயர் "வைஷ்ணவி " என்று கூற அவள் யாரையும் பார்க்காமல் விட்டத்தை பார்த்து கொண்டிருந்தாள்.

அவளின் நடவடிக்கையை சிரித்தபடி ஒருவருக்கொருவர் பார்த்து கொண்டு நின்றனர். அனைவரையும் இருக்க சொன்ன ஆத்ரேயன் தானும் அமர்ந்து அதனை சாப்பிட சொன்னான்.

வைஷ்ணவிக்கு கோபம் தலைக்கேற எதையும் தொடாமல் குனிந்தபடியே இருந்தாள். அவளை சீண்டுவதற்காக கீர்த்தனாவிடம் "மஹாலட்சுமி போல இருக்காம்மா ,.. கல்யாணம் ஆகிடுச்சா?" என்று கேட்க கீர்த்தனா "இல்லை" என்று தலை ஆட்டினாள். "என் மகனை கட்டிக்கிறியா?" என்று கேட்க அதிர்ந்தது வைஷ்ணவி மட்டுமல்ல கார்த்திக்கும் கீர்த்தனாவும்.

ஆத்ரேயன் அன்னையின் திருவிளையாடலை கால் மேல் கால் போட்டு ரசித்து கொண்டிருந்தான். ஆதியும் லப்டப்பை மூடிவிட்டு வைஷ்ணவியையே பார்த்து கொண்டிருந்தான். வைஷ்ணவி மாலதியை அனல் பறக்க பார்க்க. கீர்த்தனவோ கார்த்திக்கின் கையை பிடித்து "இல்ல ஆண்ட்டி நான் இவரை தான் காதலிக்கிறேன் " என்று கூற, வைஷ்ணவி அவரை பார்த்து நக்கலாக சிரித்தாள். ஆத்ரேயன் அவள் சிரிப்பை ரசித்து கொண்டிருந்தான். அவன் கண்கள் வைஷ்ணவியின் இதழ்களை தாபத்துடன் நோக்கியது. அதை கண்டு கொண்ட

ஆதியோ "நாங்களும் இருக்கோம்டா கொஞ்சம் அடக்கி வாசி " என்று கூற ஆதியை பார்த்து சிரித்து கொண்டான். அவள் சிரிப்பை சட்டை செய்யாத மாலதி "என் பையன் கொடுத்து வச்சது அவ்வளவுதான் " என்று சலித்து கொண்டார்.

காதல் மலரும்.....

<u>யுகம்-27</u>

சலித்தவரை பார்த்தவள் எப்போது போகலாம் என்பது போல் இருந்தாள். தனது கையை பிடித்து காதலை சொன்ன கீர்த்தனாவை ஏதேதோ செய்ய மனம் துடித்தாலும் அதை அடக்க அவள் கையிலேயே அழுத்தத்தை கொடுத்தான் கார்த்திக். அவன் அழுத்தம் புரிய மெதுவாக தனது கையை விலக்கி கொண்டாள்.

மாலதி வைஷ்ணவிக்காக தான் குலாபிஜாமூனை செய்தார். அவள் சாப்பிடாததை கண்டு கொண்டவர் " என்னமா நீ சாப்பிடாலயா ?? டயட்ல இருக்கியா " என்று

நக்கலாக கேட்க. அவரை அனல் பறக்க பார்த்தவள் குலாபிஜாமூனை எடுத்து சாப்பிட தொடங்கினாள்.

காதலின் உச்ச நிலையிலிருந்த ஆத்ரேயனுக்கோ அவள் சாப்பிடும் குலாபிஜாமூனை சாப்பிட வேண்டுமென்கிற தாபம் எழுந்தது. கீர்த்தனா கார்த்திக் இருவரும் அங்கே இருப்பதால் எழுந்து செல்ல முடியாமலும் தன்னை கட்டு படுத்தி கொண்டும் இருக்க பெரும் பாடு பட்டு போனான்.

தன்னை சமப்படுத்த அவன் ஆதியின் புதல்வனை கார்த்திகேயனிடம் இருந்து வாங்கியவன் அவனுடனேயே நேரத்தை செலவளித்தான். வைஷ்ணவியை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

சாப்பிட்டு முடித்ததும் கிளம்ப வெளிக்கிட போனவர்களிடம் மாலதி "அடிக்கடி வாங்கோ " என்று கூறி அனுப்பினாள். அப்போது கூட வைஷ்ணவியை பார்க்கவில்லை.. கடுப்புடன்

அவரை நிமிர்ந்து பார்த்தவள் முகத்தை திருப்பி கொண்டு யாரிடமும் சொல்லாமல் முதலில் வெளியேறினாள். பின்னால் வந்த கார்த்திக் சிறிது தூரம் சென்றதும் கீர்த்தனாவை பார்க்க அவளுக்கோ வெட்கம் வெட்கமாக வந்தது.. அவனை விலகி ஓடி வந்து வீட்டுக்குள் புகுந்து கொண்டாள். " நம்மள காய விடுறதுல அப்பிடி ஒரு சந்தோசம் " என்று சலித்தவன் தனது வீட்டுக்கு சென்றான்.

யார் கதைக்காவிட்டாலும் தாங்கியவளுக்கு அக்காவின் பையனை தூக்க கை பரபரத்தது.. அங்கு போய் அவமான பட விரும்பத்தவள் ஆத்ரேயனுக்கு அழைத்தாள். அவன் தொலைபேசியை எடுத்ததும் என்ன பேசுவதென்று முதலில் தடுமாறியவள்

" ஹெலோ எப்பிடி இருக்கீங்க ??? " என்று உளற சிரித்தவன் " இப்போ தானே பார்த்த போல இருந்ததே.. " என்றான் நக்கல் தொனியில். " மண்டு மண்டு " என்று தனக்கு தானே மனதுக்குள் திட்டி கொண்டவள். " எனக்கு அக்ஷித்தை

பார்க்கணும் போல இருக்கு " என்றாள் தட்டு தடுமாறி. அக்ஷித் அவள் அக்கா மகன். .

" என் ரூமுக்கு வா" என்றவனிடம் " ஆ எதுக்கு உங்க ரூமுக்கு??? உங்க வீட்டுக்கே வரமாட்டேன் உங்க அம்மா பேசுற பேச்சை பார்த்தீங்க தானே " என்று கெட்டவளிடம் " நீ என்னை கல்யாணம் முடிக்க முதலே அவங்க உன் மாமியாரடி ... " என்றான். அவனுக்கு உங்க அம்மா என்று அவள் சொன்னது பிடிக்கவில்லை போலும்.. " சரி என் மாமியார் தான் . அவங்க தேவையில்லாம பேசுவாங்க நான் வரமாட்டேன் " என்று சொல்ல.

" நீ யாரையும் பார்க்காமல் நேரே என் அறைக்கு வா " என்றான். " முடியாது " என்றவளிடம் " அப்போ சரி உன் இஷ்டம்.. உனக்காக தான் வர சொன்னேன் அக்ஷித்தை பாக்கிறதுக்காக .... அப்போ நான் வைக்கிறேன் .. I hope no more to talk " என்று அவள் பதிலை எதிர் பாராமல் வைத்து விட்டான்.

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தவளுக்கு

மனசு குடும்பத்தை நினைத்து அலை பாய ,
அதுக்கு மேல் பொறுமை இல்லாதவள்
கீர்த்தனாவிடம் சொல்லி விட்டு போய்
ஆத்ரேயன் வீட்டை தட்டினாள்.

அவள் வரமாட்டாள் என்று சொன்னதால்
அவனும் அதை பற்றி யாரிடமும் கூறாமல்
குழந்தையை ஆதியிடம் கொடுத்து விட்டு
குளிக்க சென்று விட்டான்.

தட்டியதும் திறந்தது மாலதி. அவளை
கேள்வியாக பார்க்க அவரை முறைத்தபடி
ஆத்ரேயன் அறைக்கு செல்ல முனைந்தாள்.
அவளை கை நீட்டி தடுத்தவர் " எங்கம்மா போற ??
" என்று கேட்க... " ஆத்ரேயன்.. " என்றவள் அவரை
அழுத்தமாக பார்த்து "என் புருஷன் அறைக்கு"
என்றாள். அவள் பதிலில் மனம் மகிழ அதை கட்டி
கொள்ள விரும்பாதவர் அவளை போக விட்டார்.

அறைக்கு வந்ததும் தான் அவன் அங்கு
இல்லமல் குளிக்க சென்றதை கண்டு
கொண்டாள். அலுப்பாக இருக்க கதவை திறந்து

வெளியே வந்தவள் வர்ஷினியை தேடி போனாள் .. அவளோ சமயலறையில் மாலதியுடன் சேர்ந்து சமைத்து கொண்டிருந்தாள்.

கேரட் வெட்டி கொண்டு இருந்தவளிடம் கேரட்டை பறித்தவள்" நான் வெட்டுகிறேன் " என்ற படி வெட்ட தொடங்க சிரித்தபடியே வர்ஷினி அடுத்த வேலையை பார்க்க போனாள்.

மாலதியும் வர்ஷினியும் பார்த்து சிரித்ததை கண்டு கொண்டவள் " என்னை பார்த்தது போதும் சமைச்சு முடிங்க ரொம்ப பசிக்குது " என்றபடி வேலையை தொடர்ந்தாள். வர்ஷினியை நோக்கி "எங்கடி உன் சீமந்த புத்திரன்?" என்று கேட்க.. அவன் ஆதியுடன் வெளியே சென்று இருப்பதாக கூறினாள் வர்ஷினி.

மாலதி தன்னுடன் சீண்டியதை தாங்கி கொண்டவளுக்கு கார்த்திகேயனின் பாரா முகம் கவலையை அளித்தது. balcony யில் பத்திரிகை பிடித்து கொண்டு இருந்த அவரை நோக்கி சென்றவள் " மாமா என் மேல ஏதும் கோபமா ?? "

என்று கேட்க நிமிர்ந்து பார்த்தவர் பெரு மூச்சை விட்டு " இல்லம்மா வருத்தம் " என்றார்.. அவரின் ஒதுக்கம் அவளுக்கு மேலும் அழுகையை கூட்ட அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. அதை கண்டு பதறியவர் " ஏன் மா இதுக்கெல்லாம் அழுதுகிட்டு.. நீ எப்போ என் புருஷன் அறைக்கு போறதாக சொன்னியோ அப்போவே அந்த வருத்தம் கூட மறைந்து போய் விட்டது .. " என்றவர் கதிரையிலிருந்து எழும்பி அவள் தலையை தடவி கொடுத்தார்.

" உங்க பாசமலர் சீன் தங்க முடியவில்லையப்பா " என்றபடி அங்கு வந்து சேந்த மாலதி அவளை அணைத்து ஒரு குலாபிஜாமூனை அவள் வாயில் திணித்தார்

" அப்போ இதுக்கு பெயர் என்ன " என்றபடி வந்த வர்ஷினியும் அவளை அணைக்க எல்லாரும் சிரித்து கொண்டனர்.

மாலதி சொன்னதை கேட்டு ஆத்ரேயன் அறைக்கு சென்றவள் அப்போதும் அவன் குளித்து

முடித்து வராமலிருக்க கட்டிலில் படுத்து மேசையிலிருந்த புத்தகத்தை எடுத்து மல்லாந்து படுத்து படித்து கொண்டிருந்தாள் . அவன் குளித்து ஈரம் சொட்ட வெண்ணிற டவலை மட்டும் இடுப்பில் கட்டிக்கொண்டு வந்தவனை பார்த்தவள் புத்தகத்தை மூடி பக்கத்தில் போட்டுவிட்டு பக்கவாட்டாக சாய்ந்து தலையில் ஒரு கையை முட்டு கொடுத்தபடி அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருந்தாள்.

அவளை அங்கு எதிர் பார்க்காதவன் அதிர்ந்தபடி " வெளியே போடி நான் உடுப்பு மாத்தணும் " என்றான்.

" மாத்தலாமே " என்றவள் கண் மட்டும் அவனை விட்டு அகலவில்லை. " நீ செய்றதெல்லாம் பார்த்தா நீ பொம்பிளையா இல்லை ஆம்பிளையா என்று சந்தேகமா இருக்குடி " என்றவனை குறும்பாக பார்த்தவள் " ஏன் உங்களுக்கு தெரியதாக்கும் " என்று கூறி கண்ணடித்தாள்.

ஏற்கனவே அவளில் மயங்கி இருந்தவன் அவளின் பேச்சில் தன்னை முழுமையாக இழந்தான். அவள் இங்கே இருந்தால் ஏதும் விபரீதம் நடந்து விடும் என்று அறிந்தவன் அவளை எப்பிடியாவது வெளியே அனுப்ப வேண்டும் என்று நினைத்தான். " நீ போகாவிட்டால் உன் முன்னாலேயே " என்றபடி டவலில் கை வைக்கவும் அவள் அசையவில்லை. அவள் ஓடிவிடுவாள் என்று எதிர் பார்த்தவன் அவள் அசையாமல் இருக்க கடைசியில் அவன் தான் இறங்கி வர வேண்டியதாக போய்விட்டது. " என்னடி வேணும் உனக்கு " என்று கெட்டவனிடம் எழுந்து அருகில் வந்தவள் அவன் நாடு மார்பில் சுட்டு விரலை வைத்தாள்.

அவளை கூர்ந்து பார்த்தவன், தனது கைகளை கட்டியபடி அவளை விட்டு இரண்டடி பின்னால் நடந்தான் " சொன்னா கேளு என்னை சீண்டாதே .... பிறகு சேதாரம் உனக்கு தான் " என்றவனை நோக்கி இரண்டடி முன்னால் வந்து அவன் மூச்சு

காற்று படுமளவுக்கு நெருங்கி நின்றாள்

பொறுமை இழந்தவன் வேகமாக இழுத்து அவளை சுவருடன் சாத்தி அவள் முகத்தை பற்றி தன்னை நோக்கி இழுத்தவன் அவள் இதழ்களுக்குள் தன் இதழை ஆழமாக புதைத்து கொண்டான்.

நீண்ட நாள் இருவரின் சொல்லாத காதலை உணர்த்தும் பொருட்டு நீண்ட நேரம் இதழ் யுத்தத்தில் இணைந்தவர்கள். அடுத்து ஆத்ரேயன் தனது இதழ்களை அவள் கழுத்து வளைவில் புதைத்து கொண்டான். அவன் முத்த தாக்குதலில் உணர்ச்சியின் பிடியில் இருந்தவளின் கைகள் அவன் கேசத்திலும் வேற்று முதுகிலும் கோலம் போட்டன. மீண்டும் இதழ்களில் தேனை உறிஞ்ச உந்துதல் எழ தனது இதழ்களை மீண்டும் அவள் இதழுடன் இணைத்து கொண்டான்..

இருவரும் தம்மை மறந்து அடுத்த கட்டத்துக்கு ஆத்ரேயன் கை முன்னேற இருந்த சமயம், எதிர் பாராத விதமாக ஆதி தனது மகனுடன் கதவை

திறந்து கொண்டு உள்ளே நுழைந்திருந்தான்.

வெளியில் மகனுடன் சுற்றி விட்டு வீட்டுக்கு வந்தவனுக்கு சமையலறையிலிருந்த மாலதியும் வர்ஷினியும் மற்றும் balcony யிலிருந்த கார்த்திகேயனையும் சந்திக்க கிடைக்கவில்லை.

நேரே ஆத்ரேயன் ரூமை திறந்தவனுக்கு ஆத்ரேயனின் முதுகு கண்ணில் பட, கண்ட காட்சியில் பதறி " சாரி " என்று கூறியபடி மறு பக்கம் திரும்பி நின்று வெளியேறினான்.

கதவு திறக்கப்பட்ட சத்தத்தில் பதறியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மூச்சு வாங்கியபடி தர்ம சங்கடமாக விலகி நின்றனர். முழுதாக வாசலை நோக்கி திரும்பிய ஆத்ரேயன் வைஷ்ணவியை மறைத்தபடி நின்றிருந்தான். அவனுக்கு தெரியும் அவளால் விரைவில் சுதாகரிக்க முடியாது என்று.

ஆதி வெளியே போகும் பொது " கதவை தாழ்பாள்

போட்டுக்கோ " என்றுரைக்க இருவருக்கும் வெட்கம் பிடுங்கி தின்றது. கதவை சாதி விட்டு அவன் சென்றதும் வெட்கத்தில் குனிந்திருந்த அவளை திரும்பி பார்த்தவன் அவளின் தர்மசங்கடத்தை அறிந்தபடி உடைகளை எடுத்து கொண்டு குளியலறைக்குள் நுழைந்தான் உடை மாற்ற.

இனியும் அங்கு இருந்தால் வெளியில் இருப்பவர்கள் தவறாக நினைக்ககூடும் என்று தர்மசங்கடமாக சமையலறையை நோக்கி சென்றாள் . மறந்தும் ஹாலில். மகனுடன் அமர்ந்திருந்த ஆதியை நிமிர்ந்து பார்க்கவில்லை.

உடை மாற்றி விட்டு வந்த ஆத்ரேயன் ஆதியிடமிருந்து குழந்தையை வாங்கி கொண்டு வைஷ்ணவியிடம் சென்றான்.

அவனருகில் போய் குழந்தையை வாங்க சென்ற வைஷ்ணவியை பார்த்த குழந்தை மருட்சியுடன் ஆத்ரேயனை கட்டி பிடித்தது. அந்த செய்கையை

பார்த்து மனம் பதைக்க.. அப்போது தான் விளங்கியது குடும்பத்தை விட்டு முழுதாக தள்ளி இருந்ததன் தாக்கம். அவள் வலியை அவள் கண்ணில் கண்டு கொண்டவன். " இங்க பாருப்பா சித்தி வந்திருக்காங்க " என்று காட்ட குழந்தை தயங்கி தயங்கி திரும்பி பார்த்தது.

அவன் சொன்னதை கேட்டு திரும்பி பார்த்த குழந்தை மெல்ல மேலுள்ள அவளுடன் ஒட்டி கொண்டான். அவளிடம் குழந்தையை கொடுத்து விட்டு ஆதி அருகில் பொய் சங்கடத்துடன் இருந்தவனை இயல்புக்கு கொண்டு வரும் பொருட்டு தொழில் சம்பந்தமாக பேச தொடங்கினான் ஆதி . ஆத்ரேயனும் தொழில் பேச்சில் அனைத்தையும் மறந்து போனான்.

சாப்பிட உட்காந்தவர்கள் ஆத்ரேயனுக்கு முன் வைஷ்ணவி உக்காந்திருக்க அவளுக்கு பக்கத்தில் மாலதி உக்காந்திருந்தாள். அவளை முத்தமிட்டதில் இருந்து அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவள் நினைப்பாகவே இருந்தது. ஆனால் ஆதி பார்த்ததால் இனி

கவனமாக நடக்க வேண்டும் என்று பெண் மனம் யோசித்தது. சாப்பிட்டபடியே தனது காலால் வைஷ்ணவியின் காலை வருடினான். அதிர்ச்சியுடன் நிமிர்ந்து ஆத்ரேயனை பார்க்க அவனோ அவளை விழுங்குவது போல் பார்த்தான். அவன் வருடலில் தர்ம சங்கடப்பட்டவள் காலை நன்றாக உள் இழுத்து கொண்டாள் .எது நடந்தாலும் அவன் முகத்தில் காதலை தவிர வேறு எந்த உணர்ச்சியும் வெளிப்படவில்லை.

காலை நன்றாக போட்டு தேடியவன் காலுக்கு மறுபடி ஒரு கால் அகப்பட்டது. அது மாலதியின் பாதம் என்று அறியாமல் அதை வருட சங்கடப்பட்டபடி மாலதி அவனை முறைத்து பார்த்தார். "அம்மா எதுக்கு இப்படி முறைக்கிறாங்க?" என்று யோசித்தவன் அவரை கேள்வியாக பார்க்க பொறுமை இழந்த மாலதி "நீ வருடுவது என்னோட கால்" என்றார் சபையில். சடாரென தன் காலை உள்ளே இழுத்தவனுக்கு வெட்கம் வெட்கமாக வந்தது. அவரின் கூற்றில் எல்லாரும் சிரிக்க அவனும் வெட்கப்பட்டு

வைஷ்ணவியை பார்த்தான். அவளும் குனிந்தபடி சிரித்து கொண்டிருந்தாள்.

சாப்பிட்டு முடிந்ததும் மாலதி அவளை தங்களுடன் நிக்க சொல்ல, கீர்த்தனா தனியாக இருப்பதாக சாட்டு சொன்னவள் கிளம்ப போனாள். அவள் தன்னுடன் நிக்க வேண்டும் என எதிர் பார்த்த ஆத்ரேயனுக்கு அவளின் செய்கை ஏமாற்றமாக போக அவளை எரித்து விடுவது போல் பார்த்து கொண்டிருந்தான். அவன் பார்வையில் பயத்தில் அவள் எச்சிலை விழுங்கியபடி வெளியேறினாள்.

காதல் மலரும்.....

28

<u>யுகம்-28</u>

வீட்டுக்கு வந்தவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. அவன் பார்வையை நினைத்து

பதறியபடி இருந்தவள் அவனுக்கு தொலைபேசியில் அழைத்தாள். அவள் அழைப்பை பார்த்தவன் தொலைபேசியை அணைத்து விட்டு தனது வேலையை பார்க்க தொடங்கினான்.

"நெட்டையன் தொடங்கிட்டான் " என்று சலித்தவள் தூங்க தொடங்கினாள். அடுத்த நாள் அலுவலகத்துக்கு சென்றவள் வேலை செய்ய மனமில்லாமல் ஆத்ரேயனை தேடி வம்பிழுக்க சென்றாள். வேலை பழுவில் இருந்தவன் அவளை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்துவிட்டு தனது வேலையை தொடங்கினான். தன்னை அவன் கவனிக்கவில்லை என்று கோபமுற்றவள் விறு விறு வென நடந்து வந்து அவன் முன்னால் இருந்த கதிரையில் இருந்தாள். அவன் அதுக்கும் அசைந்தான் இல்லை. அவன் கையிலிருந்த கோப்பை பறிக்க அவனோ "ஏய் " என்று திட்ட வந்து திட்டாமல் மேசையிலிருந்த அடுத்த கோப்பை எடுத்து படிக்க தொடங்கினான்.

பொறுமை இழந்த வைஷ்ணவி "இப்போ என்ன

பண்ணிட்டேன் என்று இப்படி மூஞ்ச தூக்கி வச்சிட்டு இருக்கீங்க?" என்று கேட்டாள். பெருமூச்சு ஒன்றை எடுத்தவன் "ஏன் உனக்கு தெரியாதா?" என்றான். "கீர்த்தனா பாவம் தானே " என்றவளை கேலியாக பார்த்தவன் "அவளுக்கு கல்யாணம் ஆன பிறகும் அவ கூட இருக்கிற உத்தேசமா ?" என்று கேட்டான்.

இவனுக்கு பதில் சொல்லி மாளாது என்று நினைத்தபடி "ஆதி அத்தான் வேற பார்த்துட்டார்" என்றாள் தலையை குனிந்த படி . வந்த சிரிப்பை கட்டு படுத்தியவன் "எதை பார்த்தார்?" என்று கேட்க அவனை முறைத்தவள் "எனக்கு சங்கடமா இருக்கு " என்றாள்.

"அவன் ஒரு பையனுக்கு அப்பா ம்மா " என்று கேலியாக கூறியவனை பார்த்தவள் "சரி,இப்போ என்ன பண்ணனும்?" என்று நிதானமாக கேட்டாள். "ஒண்ணும் பண்ண தேவையில்லை.. நான் தந்த வேலையை பார்த்தா மட்டும் போதும்" என்று மறுபடி கோப்புக்குள் நுழைந்து விட்டான்.

பொறுமை இழந்தவள் அவனருகில் செல்ல வர கோப்பை தூக்கி போட்டவன் சாய்விருக்கையை பின்னால் தள்ளி உந்தி எழுந்தவன் மேசையிலிருந்த நீண்ட மீட்டர் கோலை எடுத்து அவள் வயிற்றில் ஒரு முனையை வைத்து தள்ளி நிப்பாட்டினான். அவளோ அவன் செய்கையை விசித்திரமாக பார்க்க, "தயவு செய்து பக்கத்தில் வராதே. என்னை வேலை செய்ய விடு ப்ளீஸ். நீ சீண்டி விட்டு போக நான் தான் தனியா கஷ்டப்படணும்" என்றவனை அவள் கூர்ந்து பார்த்தவள் விறு விறு வென வெளியேறிவிட்டாள்.

பெருமூச்செடுத்தவன் கதிரையில் தோய்ந்து அமர்ந்தான். அவளோ தனது இருக்கைக்கு போய் இருந்தவள் "பெரிய உத்தமன் போல நடிக்கிறதை பாரு " என்று பொரிந்தபடி இருந்தாள். வீட்டுக்கு வந்தவள் அக்கா குடும்பத்துடன் விளையாட செல்ல அங்கிருந்த ஆத்ரேயன் அவளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. அவளும் முகத்தை சுளித்து கொண்டு மற்றைய அனைவருடனும் பேசியவள் தாயுடனும் தந்தையுடனும்

தொலைபேசியில் உரையாடி சமாதானமானாள்.

ஒரு முடிவு எடுப்பதற்காக தனியாக இருந்த கீர்த்தனாவை பார்க்க கார்த்திக் வைஷ்ணவி வீட்டுக்கு வந்திருந்தான். அவனை உள்ளே அழைக்க சங்கடப்பட்டவள் வாசலில் நின்று "வைஷ்ணவி இல்லை " என்று கூறி நெளிந்தாள். "அப்போ வசதியா போச்சு " என்றவன் அவளை தாண்டி உள்ளே செல்ல "எங்க போறீங்க " என்றபடி பின்னால் சென்றாள் கீர்த்தனா. சோபாவில் இருந்தவன் "இங்க பாரு கீர்த்தனா , நான் எங்க அம்மா அப்பா அக்கா அத்தான் எல்லாரிடமும் சம்மதம் வாங்கி விட்டேன். நீ உன் அம்மா கிட்ட பேசவில்லையா ?" என்று கேட்க "ஐயோ எனக்கு பயமா இருக்கு " என்றாள். அந்நேரம் பார்த்து அவளது அம்மா தொலைபேசியில் அழைக்க அதை உயிர்ப்பித்து காதில் வைத்தாள். "சொல்லுங்கம்மா " என்றதும் மறு முனையிலிருந்து "கீர்த்தனா , உன்னை பொண்ணு பார்க்க உன்னோட வேலை செய்யும் கார்த்திக் என்ற பையனோட அம்மா அப்பா வந்திருக்காங்க என்னம்மா சொல்ல?" என்று

கேட்க அடப்பாவி என்பது போல கார்த்திக்கை பார்த்தவள் "சம்மதம் என்று சொல்லுங்கம்மா " என்றாள்.

அவர் வைத்ததும் "எப்பிடி ஐயாவோட performance "என்று ஷிர்ட்டை உயர்த்தி காட்டி கேட்க "சூப்பர்" என்று சொல்லி கண்ணாடித்தாள். அதுக்கு மேல் நின்றால் ஏதும் விபரீதமாகி அவள் வாயால் திட்டு வாங்க வேணுமென்று பயந்தவன் "நான் வரேன் " என்றபடி வெளியேறிவிட்டான். அவன் வெளியேறியதின் அர்த்தம் விளங்க "சோ ஸ்வீட் கார்த்திக் " என்று மனதுக்குள் சொல்லி சிரித்து கொண்டாள்.

இரவானதும் வைஷ்ணவியும் கீர்த்தனாவுடன் வந்து விடுவாள். அடுத்த நாள் பின்னேரம் அனைவரும் விளையாட பாட்மிண்டன் கோர்ட்டுக்கு சென்றனர். ஆதியும் ஆத்ரேயனும் யார் ஜெயிக்கப்போவது என்று சொல்ல முடியாதளவுக்கு சளைக்காமல் விளையாட அவர்கள் இருவரையும் அனைவரும் கண் வெட்டாமல் பார்த்து கொண்டிருந்தனர். வர்ஷினி

ஆதிக்கு சப்போர்ட் பண்ண, வெளியில் காட்டா விட்டாலும் ஆத்ரேயன் வெற்றியடைய வேண்டும் என்று வைஷ்ணவி நினைத்து கொண்டாள். போட்டி முடிவே இல்லாமல் செல்ல அலுத்து போன கார்த்திகேயன் "வாங்கப்பா உங்க ஆட்டம் ஒரே அலுப்பாக இருக்கிறது " என்று கூப்பிட்டார். சிரித்தபடி இருவரும் கையை அடித்து விட்டு இளைப்பாற வந்தனர்.

ஆதிக்கு அருகில் வர்ஷினி குழந்தையுடன் தண்ணீர் போத்தலுடன் போய் இருக்க வைஷ்ணவி மாலதி பக்கத்திலேயே இருந்தாள். "ஏன்மா அங்க பாரு உன் அக்காவை நீயும் இருக்கியே " என்று மாலதி உதட்டை சுளிக்க "போதும் பொதும் " என்றவள் தண்ணீர் போத்தலை எடுத்து கொண்டு ஆத்ரேயன் அருகில் சென்றாள். "கிட்ட போனா நெட்டையன் திட்டுவான் போகாவிட்டால் இவங்க திட்டுவாங்க... என் வாழ்க்கையை பாரு ஆஞ்சநேயா" என்றபடி அவள் ஆத்ரேயன் முன்னால் போய் நின்றவள் வியர்த்து மூச்சு

வாங்கி கொண்டிருந்தவனிடம் தண்ணீர் போத்தலை நீட்டினாள்.

அவளிடமிருந்து தண்ணீர் போத்தலை வாங்கியவன் முகத்தை திருப்பி வேற எங்கோ பார்த்து கொண்டிருந்த வைஷ்ணவியை பார்த்த படியே நீரை அருந்தினான்.அருந்தி முடித்ததும் அவள் முன் சொடக்கிட்டு "ஹெலோ என்ன விளையாடலாமா? பாட்மிண்டன் சாம்பியன் " என்று நக்கலாக கேட்டவனை உறுத்து விழித்தவள், பழையபடியே "என்ன பெட்?" என்று கேட்டாள்.

அவளை இளக்காரமாக பார்த்தவன் "நீயே சொல் " என்று கூற "நான் சொல்றத செய்யணும் " என்றாள். அவளை நோக்கி கை கூப்பியவன் "இப்போ யாரை கல்யாணம் பண்ணிக்க சொல்ல போறதாக உத்தேசம் " என்று நக்கலாக கேட்க... அவள் மனதில் இனம் புரியாத கவலை குடி கொண்டு அது அவள் முகத்திலும் பிரதி பலித்தது.

அதை கண்டு பதறியவன் "ஹே நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன் " என்று அவளை பார்த்து கண்ணடித்தான். என்றாலும் மனம் ஆறாதவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. "இப்போ எதுக்கு அழுகிற? எல்லாரும் நம்மள தான் பார்க்க போறாங்க.. ப்ளீஸ் " என்று தர்ம சங்கடப்பட்டவனுக்காக கண்ணீரை துடைத்தவள் "நான் வாறன் " என்ற படி வெளியேறினாள். "பச் ..." என்றவன் அனைவரிடமும் சொல்லி விட்டு அவள் பின்னே சென்றான்.

கீர்த்தனா வீட்டுக்குள் நுழைய போனவளை கையை பிடித்து தடுத்தவன் விறு விறு என தனது வீட்டு தனது அறைக்குள் அழைத்து வந்து முதலில் அறையை தாழ்பாள் போட்டான். "கொஞ்சம் இரு குளிச்சிட்டு வறேன் " என்றவன் குளியலறைக்குள் நுழைந்து சிறிது நேரத்திலேயே வெளியேறினான். எதுவும் பேசாமல் கட்டிலில் இருந்தவளுக்கு கண்ணீர் மட்டும் நிக்கவில்லை. தான் செய்த அனைத்து தவறுகளையும் நினைத்து கண்ணீர் விட்டாள்.

வெளியே வந்தவன் கீழே மண்டியிட்டு இருந்தபடி அவள் முகத்தை நிமிர்த்தி "என்னடி?" என்று ஏக்கமாக கேட்க அவளும் அவனை நோக்கி "நான் செய்தது தப்பு தானே ?" என்று கேட்டாள். "நான் செய்ததை விடவா?" என்று கெட்டவனை கேள்வியாக பார்க்க.

பெரு மூச்செடுத்தவன் "உன் மனசை நிறைய தடவை காயப்படுத்தி இருக்கிறேன், உன்னை வெறி தனமாக பலாத்காரம் பண்ணி இருக்கேன். எல்லாத்துக்கும் மேலாக உன்னிடம் ஒரு தடவை கூட வாயை திறந்து மன்னிப்பு கேட்கவில்லை. இப்போ என்னை மன்னிப்பாயா?" என்று அவள் கரம் பற்றி மன்னிப்பு வேண்டிட அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளறியாமல் அவளுக்காக பல தடவை கண்ணீர் சிந்தியவன் முதல் முறை அவள் முன்னே அழுதான்.

இறுக்கமான சூழ்நிலையை தவிர்க்க "ச்சீய் த கிரேட் ஆத்ரேயன் அழுவது சகிக்கல " என்று முகத்தை சுளித்தாள். "போடி" என்றபடி முகத்தை

துடைத்து கொண்டு எழுந்தவன் "அடுத்து என்ன செய்வதாக உத்தேசம் " என்று கேட்க "நான் வீட்டுக்கு போக போறேன் " என்று எழும்பி சென்றவளை வெட்டவா குத்தவா என்று பார்த்தவன். "போடி போ... உனக்கு கல்யாணம் ஆகிருச்சு மறந்திராத " என்றவன் கட்டிலில் மல்லாந்து படுத்து கொண்டான்.

"சரி தான் போடா " என்றபடி கதவை திறக்க அனைவரும் அங்கு வந்திருந்தனர். எல்லோரிடமும் கதைத்து கொண்டிருந்தவள், ஆத்ரேயன் வெளியில் வரவில்லை என்று அவன் அறையை பார்த்து கொண்டிருந்தாள். சிறிய தூக்கம் போட்டு விட்டு வந்தவன் அவள் போகாமல் இருப்பதை பார்த்து கண்ணை விரித்தபடி அவளருகில் வந்து நெருங்கி அமர்ந்தான். அனைவர் முன்னிலும் அவன் நெருக்கம் ஏதோ செய்ய எழும்ப போனவளை கை பிடித்து தடுத்தவன் அவள் தோளில் கை போட்டு கொண்டான்.

அவன் காதருகில் சென்றவள் "எல்லோரும்

பார்க்கிறாங்க ப்ளீஸ் விடுங்க " என்று கெஞ்சியவளை நோக்கியன் "நான் உன் புருஷன்டி " என்றான். தான் சொல்லி கேட்கமாட்டான் என்று அறிந்தவள் அவன் கை வளைவிலேயே இருந்தாள்.

நேரம் ஆனதும் வீட்டுக்கு செல்ல போனவளை முறைத்தவன் விறு விறு வென தனது அறைக்குள் சென்று புகுந்தான்.அனைவரும் அதிர்ந்து பார்க்க "ஐயோ எல்லார் முன்னாடியும் என்ன இது " என்று நினைத்தவள் அனைவரையும் பார்த்து வலுக்கட்டாயமாக சிரித்து விட்டு அவன் அறையை நோக்கி நடந்தாள். திறந்திருந்த கதவை தாள் போட்டு உள்ளே நுழைந்தவள், கட்டிலில் தொலைபேசியை பார்த்து கொண்டு படுத்திருந்தவனை பார்த்து "என்ன இது எல்லார் முன்னாடியும்? என்ன நினைப்பாங்க ?" என்று கெட்டவளை முறைத்தவன். "இப்போ எதுக்குடி என் அறைக்கு வந்தாய்?இப்போ மட்டும் ஒண்ணும் நினைக்க மாட்டாங்களா?நீ என் பொண்டாட்டி அந்த நினைவு உனக்கு இருக்கா

இல்லையா " என்று கேட்க. "அதெல்லாம் இருக்கு " என்றவள் அவனருகில் கட்டிலில் உட்கார்ந்தாள்.

அவள் உட்கார பாய்ந்து எழுந்தவன் "நீ முதல் கிளம்பு " என்று சீறினான். "நான் போகமாட்டேன் " என்றபடி வேறு பக்கம் பார்த்து கொண்டிருந்தவளை கையை பிடித்து இழுத்தான் வெளியில் தள்ளும் பொருட்டு. "விடுடா ராட்சஸா " என்று கத்தியபடி கீழே இருந்து விட்டாள். "இம்சைடி நீ " என்று அவளை தூக்கி கொண்டு வெளியேற போனவனின் கழுத்தை இறுக்கி பிடித்தவள் அவன் கையிலிருந்த படியே அவன் இதழில் தன் இதழை பதித்தாள்.

அவளை தூக்கி வெளியேற போனவன் அவள் இதழ் முத்தத்தால் அவளை கொண்டு வந்து கட்டிலில் போட்டு அவள் மேல் படர தொடங்கினான். அவள் செயலை தனதாக்கி கொண்டவன் , அவளை இழுத்து தனது வன்மையான இதழ்களை அவள் இதழ்களுடன் இணைத்தான். அவனுக்கும் சளைக்காமல்

அவளும் இசைந்து கொடுத்தாள். இருவரின் உணர்ச்சிகளும் உடைப்பெடுத்ததில் இதழ் முத்தத்தில் தொடங்கிய காதல் கூடலில் முடிந்தது. சிறு வயதிலிருந்தே சேர்த்து வைத்த காதலை ஒரே நாளில் வெளிப்படுத்தும் பொருட்டு ஆத்ரேயன் அவளை மீண்டும் மீண்டும் நாடினான்.

இரவு இருவரும் சாப்பிடாமலே இருக்க மற்றயவர்களும் அவர்களை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. காலையில் அவளுக்கு முன்னே எழுந்தவன் அவளை தொந்தரவு செய்ய மனமில்லாமல் இருவருக்கும் காபீயை போட்டு கொண்டு அறைக்குள் சென்றான்.

"எந்திரிடி " என்று அவளை எழுப்ப அவளோ சத்தமாக "நீங்க என்ன நேற்று தூங்கவே விடல.. ப்ளீஸ் நான் தூங்கணும் " என்று கத்தியது பாதி திறந்த கதவினூடு வெளியிலிருந்த அனைவருக்கும் கேட்டது. கடைசியில் தர்மசங்கடப்பட்ட ஆத்ரேயன் கதவை அடைத்து விட்டு வந்து "இப்போ எதுக்குடி கத்துற?" என்று

கேட்க சத்தமாக அவனை பார்த்து சிரித்தவள் "அப்படி தான் கத்துவேன் " என்றாள். "உன் வாயை எப்படி அடைக்கிறேன் பாரு " என்றபடி அவளை நெருங்கி அவள் இதழை சிறை செய்திருந்தான்.

அவனை மார்பில் கைகளால் தள்ளியவள் "விடிஞ்சிடுச்சு" என்றாள். "அதுக்கு?" என்று கேட்டபடி அவளை நெருங்கியவனை பார்த்து வெட்கப்பட்டவள் கண நேரத்தில் ஓடி சென்று குளியலறைக்குள் தாழ்பாள் போட்டாள். "போடி போ.,.. எப்படியும் இங்கே தானே வரணும்" என்றவன் சிரித்தபடி வெளியேறினான். குளித்து வந்தவளுக்கு வெளியில் செல்ல தர்மசங்கடமாக இருக்க அறைக்குள்ளேயே தங்கி விட்டாள். நீண்ட நேரமாகியும் வெளியில் வராமலிருக்க "எப்போ வரைக்கும் இங்கே இருக்கிறதாக உத்தேசம் ?" என்றபடி வர்ஷினி உள்ளே நுழைந்தாள். தர்மசங்கடப்பட்டு சிரித்தவளை நோக்கிய வர்ஷினி "வா வந்து சாப்பிடு.. " என்றபடி அவளை இழுத்து சென்றாள். தான் கூப்பிட்டால் எப்படியும் முரண்டு பிடிப்பாள்

என்று தெரிந்த ஆத்ரேயன் தான் வர்ஷினியை அனுப்பி வைத்தான்.

இரு நாட்கள் கழித்து வைஷ்ணவியின் தாயையும் தந்தையையும் அழைக்க விமான நிலையத்துக்கு செல்ல அவன் ஆயத்தமாகியபடி தூங்கி கொண்டிருந்தவளை எழுப்பி "ஏய் நீ வரலையா?" என்று கேட்க, கட்டிலில் இருந்து பாய்ந்து எழுந்தவள் கீர்த்தனா வீட்டை நோக்கி ஓடினாள். "இவளுக்கு என்னாச்சு?" என்றபடி ஆயத்தமாக சிறிது நேரத்தில் சிவப்பு நிற சாறி உடுத்து அவன் முன்னால் நின்றாள்.

குட்டை முடியும் சாரியுமாக நின்றவளை மேலிருந்து கீழ் பார்த்தவன் "உனக்கு இது செட் ஆகல்ல .. என் வைஷு குட்டிக்கு ஜீன்ஸ் தான் செமயா இருக்கும் " என்று கூறி கண்ணடிக்க, உதட்டை சுளித்தவள் "இதெல்லாம் என் அம்மாக்கு புரியாது " என்றபடி கையிலிருந்த பெட்டியிலிருந்து தாலியை கொடுத்து கட்டி விட சொன்னாள்.

தாலியையும் அவளையும் பார்த்தவன் "முடியாது போடி " என்றபடி தனது வேலையை பார்க்க தொடங்கினான். "ஓய் ,,,என்னாச்சு ?" என்று கேட்க "நான் தாலி கட்டும் போது எப்படியும் அழுவ... அத பார்த்து எனக்கு கோபம் வரும்... ஒண்ணும் தேவையில்லை நீயே போட்டுக்கோ " என்றான்.

"ஐயோ அது அப்போ,,, இது இப்போ,,," என்றவள் அவன் கையில் தாலியை திணித்திருந்தாள். அவள் கண்ணை பார்த்தபடி தாலியை போட்டு விட்டவனுக்கு அவள் முகத்தில் படர்ந்திருந்த வெட்கமும் சிரிப்பும் இழந்த சந்தோஷத்தை மீட்டெடுத்த உணர்வை கொடுத்தது.

"சரி போ" என்றவனிடம் "ஹெலோ இதெல்லாம் யாரு போட்டு விடுவா?" என்று கேட்க மோதிரத்தையும் மெட்டியையும் போட்டவன் அவள் நெற்றி வகிட்டில் குங்குமத்தை வைத்து விட்டு வாயில் கை வைத்து சிரித்தான். அவன் சிரிப்பை விசித்திரமாக பார்த்தபடி கண்ணாடியில் அவள் முகத்தை பார்த்த

அவளுக்கே சிரிப்பு வந்தது. அவளின் ஸ்டைல் ஆன ஹேர் கட்டுக்கு எதுவுமே பொருந்தவில்லை.

"பூவும் வைக்கவா?" என்று நெருங்கி வந்து நக்கலாக கெட்டவனை முறைத்தவள் "ஒண்ணும் வேணாம் போடா" என்று அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளியபடி வெளியேறினாள்.

அவர்கள் இருவரின் மாற்றம் அனைவருக்கும் நிம்மதியளிக்க எல்லோரும் சந்தோஷமாக சுற்றுலாவை அனுபவித்தார்கள். ஒரு மாத முடிவில் அனைவரும் இந்தியா செல்ல ஆயத்தமாகும் போது அனைவரையும் அணைத்து அணைத்து ஒப்பாரி வைத்தாள் வைஷ்ணவி.

அவளின் ஒப்பாரியை முகம் சுருக்கி பார்த்தவன் அவளருகில் நெருங்கி "பேசாம நீயும் போ,.. சாத்தியமா முடியல உன் அலப்பறை" என்றவனை முறைத்தவள் அழுகையை

கட்டுப்படுத்தி கொண்டாள்.

அனைவரும் புறப்பட்டதும் சோகமாக இருந்தவளை நோக்கி வந்தவன் "உன் சோகத்தை எப்படி போக்க போறேன் பாரு " என்றபடி அவளை தன்னறைக்கு தூக்கி சென்றான்.

நாட்கள் மாதங்களாக வைஷ்ணவியும் கர்ப்பமுற்றாள். தாயிடம் செல்ல அடம்பிடித்தவளை கட்டாயப்படுத்தி தன்னுடன் நிக்க வைத்து அண்ணனுக்கு தப்பாத தம்பி என்று நிரூபித்தான். "நான் நல்லா உன்ன பார்த்துபேன்டி " என்று சொன்னவன் அவளை தாங்கு தாங்கு என்று தங்கினான்.

அவனுடனேயே அலுவலகத்துக்கு சென்றவள் எந்த வேலையும் செய்யாமல் நாவல், படம் என்று காலத்தை கடத்த அவள் வேலையையும் சேர்த்து அவனே செய்து முடித்தான். நிறை மாசமாக நடக்க முடியாமல் ஆத்ரேயன் அறைக்கு வந்தவள் சோபாவில் சாய்ந்து

உட்கார்ந்து மூச்சு வாங்கினாள். சட்டை போட்டு இருந்தவளின் கால் வீங்கி இருப்பதை பார்த்தவன் டையை கழட்டி எறிந்து விட்டு அவளருகில் வந்து கீழே உட்கார்ந்தபடி அவள் காலை தூக்கி தனது தொடையில் வைத்து மசாஜ் பண்ண தொடங்கினான்.

பதறியவள் "ஐயோ இது ஆபீஸ் " என்று சொல்ல அவளை வாயை மூட சொல்லி சைகை செய்தவன் தனது வேலையை தொடர்ந்தான். அந்நேரம் பார்த்து உள்ளே வந்த கார்த்திக் "சாரி" என்றபடி வெளியேற போக, ஆத்ரேயனோ "பரவாயில்லை வாடா, நீ வீட்டுல செய்றது தானே " என்று கண்ணடித்தான். கீர்த்தனாவும் அந்நேரம் கர்ப்பமுற்று இருந்தாள்.

"என்ன பொண்டாட்டி வேலையையும் சேர்த்து முடிச்சாச்சா?" என்று கேட்ட ஆத்ரேயனிடம் "அங்கே மட்டும் என்ன வாழுதாம் " என்று கேட்க வைஷ்ணவியோ "நான்தான் என் வேலைய செய்கிறேன் " என்றாள் கழுத்தை நெடித்தபடி."ஆ நீ இங்கே என்ன வேலை செய்யிறாய் என்று

எங்களுக்கு தெரியும் " என்று கார்த்திக் கூற அவனை முறைக்க முயன்று தோற்று சிரித்து வைத்தாள். காலை பிடித்து விடும் ஆத்ரேயனை கண் வெட்டாமல் பார்த்தவள் அவன் தலையை வருடி நெற்றியில் முத்தமிட்டாள் . சிரித்தபடியே அவனும் நெற்றியை அவளருகில் கொண்டு சென்றான். இதை பார்த்த கார்த்திக் தர்மசங்கடப்பட்டு "நானும் இங்கே தான் இருக்கிறேன் " என்று கூற, ஆத்ரேயன் அவனை பார்த்து கண்ணடித்து சிரித்தான்.

வைஷ்ணவியோ கார்த்திக்கை பார்த்து நக்கலாக சிரித்தபடி ஆத்ரேயன் கன்னத்தில் முத்தமிட அதையும் சிரித்தபடியே வாங்கியவன் அவள் காலை பிடித்து கொண்டிருந்தான்.
தர்மசங்கடபட்ட கார்த்திக் "நான் வாறன்பா.... புருஷன் பொண்டாட்டிக்கு இடையில நான் எதுக்கு?" என்றபடி வெளியேற போக "டேய் நில்லுடா ,..." என்று கூப்பிட வாசலில் நின்று திரும்பி "என்ன?" என்று கெட்டவனிடம் "இதையும் பார்த்துட்டே போ" என்று கூறியபடி அவள் முகத்துக்கு அருகில் சென்று

முழங்காலில் எழுந்து நின்றவன் அவள் இதழ்களில் தனது இதழ்களை பதித்தான்.

"ஐயோ கருமம் கருமம்" என்றபடி அவனும் புலம்பி கொண்டு வெளியேறினான். கார்த்திக். அவன் செல்வதை பார்த்து இருவரும் சிரித்து கொண்டனர்.

மாதங்கள் வருடங்களாக "எனக்கு இன்னொரு பொண்ணு வேணும் ப்ளீஸ் " என்று கெஞ்சியவளை பார்த்து முறைத்தவன் "ஏண்டி உனக்கு ரெண்டு பையன் ஒரு பொண்ணு காணாதா?" என்று பசங்களுக்கு சூ போட்டபடி கேட்டான். ":இல்லை " என்றவளிடம் நெருங்கியவன் "நீ வலியில அழுறதை பார்க்க முடியலடி " என்று அவள் முகம் தாங்கி சொல்லி கொண்டிருக்க "அப்பா... இந்த தத்தி யோட கதைக்காம அடுத்த ஷூவை போட்டு விடுங்கப்பா." என்ற மூத்த மகனை "டேய் " என்றபடி அடிக்க ஓடினாள் வைஷ்ணவி. அந்நேரம் பார்த்து அவளின் ஆறு மாத குழந்தை அழ "உனக்கு இருக்குடா" என்றபடி குழந்தையை

தேடி சென்றாள்.

அனைத்தையும் பார்த்து ரசித்தவன் தன்னிரு பையன்களையும் கார்த்திக்கின் இரு பொண்ணுங்களையும் கூட்டி கொண்டு பாடசாலைக்கு விட தயாரானான். இரு குடும்பங்களுக்கும் அழகான வாழ்க்கை அங்கு மலர்ந்திருந்தது.

முற்றும்.....

Let my life feel happy joining feet in your steps
Let me be satisfied getting along with you